1

# நீங்காத நினைவுகள்

டாக்டர் ந.சுப்புரெட்டியார்



**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✱✱✱

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✱✱✱

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

நீங்காத நினைவுகள் - I

தமிழ் வளர்ச்சிக்கான
சிறந்த நூல்களை வெளியிட
தமிழக அரசின் நிதியுதவி
வழங்கும் திட்டத்தின்கீழ்
நிதியுதவி பெற்று இந்நூல்
வெளியிடப் பெறுகின்றது

பேராசிரியர் டாக்டர். ந. சுப்புரெட்டியார்

## என்தேவையை நீஅறிவாய்

வேண்டத் தக்க தறிவோய்நீ
 வேண்ட முழுதும் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ
 வேண்டி யென்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தாய்
 யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
 அதுவும் உன்றன் விருப்பன்றே[1]

—மாணிக்கவாசகர்

---

1. திருவா, குழைத்த-6.

# நீங்காத நினைவுகள்

(ஆசிரியரின் 83-ஆம் அகவை நினைவாக)

(முதற்பகுதி)

*பேராசிரியர்*
*டாக்டர்* **N.** *சுப்புரெட்டியார்*
எம்.ஏ., பி.எஸ்சி., எல்.டி., வித்துவான், பி.எச்.டி

*விற்பனையுரிமை :*
**பால்நிலா பதிப்பகம்**
43/11, மீர்பக்ஷி அலி தெரு,
இராயபேட்டை, சென்னை - 600 014.

# நூல் விவரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | நீங்காத நினைவுகள் (முதற்பகுதி) |
| ஆசிரியர் | : | டாக்டர் N. சுப்புரெட்டியார் |
| பொருள் | : | பெரியோர்களைப் பற்றிய நினைவுகள் |
| © உரிமை | : | டாக்டர் N. சுப்புரெட்டியார் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு, மார்ச், 1999 |
| பக்கங்கள் | : | xii + 184 + viii = 204 |
| தாள் வகை | : | வெள்ளை, கிரவுன் 11 கி.கி |
| ஓவியம் | : | குமார் |
| அச்சுப் புள்ளி | : | 11.5 புள்ளி எழுத்து |
| ஒளி அச்சு | : | ஹைடெக் கிராஃபிக்ஸ் |
| அச்சிட்டோர் | : | இளங்கோ பிரிண்டர்ஸ் |
| வெளியீடு | : | VENKATAM PUBLICATIONS<br>AD-13 (Plot 3354)<br>Anna Nagar, CHENNAI - 600040 |

**விலை : ரூ. 40.00**

*"என் கடன் பணிசெய்து கிடப்பதே"*

-திருநாவுக்கரசர்

அறிவியல் வல்லுநர்

சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்

**பேராசிரியர் பெ.த. மனோகரன்**

அவர்கட்கு

# அன்புப் படையல்

**அறிவியல் அறிஞர்; நேர்மைசால் செம்மல்;**
**அளவிலாப் பெருமை சேர் அண்ணல்;**
**உறுபுகழ்ச் சென்னைப் பல்கலைக் கழகம்**
**உயர்வுறப் புத்திலக் கியத்தின்**
**துறைதனைக் கண்ட தனித்துணை வேந்தர்;**
**தூயநன் நெறிபடர் தோன்றல்;**
**நிறையுடை அறிஞர் மனோகரன் தனக்குஎன்**
**நேயமார் படையல் இப்பனுவல்!**

**இராம. வீரப்பன்**

*9, திருமலை சாலை*
*சென்னை-600 017*
*தொ.பே. 8266866*

7.1.1999

# அணிந்துரை

பேராசிரியர் டாக்டர் என். சுப்புரெட்டியார் அவர்கள் பெற்றுள்ள அறிவார்ந்த தமிழ்வளமும், அவர் ஆற்றிவரும் அளப்பரிய தமிழ்த் தொண்டும் நாடும், ஏடும் புகழ் பெற்றவை. ஒரு குறிப்பிட்ட கட்டத்திற்குள்ளேயே வட்டம் போடும் "கிணற்றுத் தவளை" அல்லர் அவர். இமயச் சாதனைகளைக் குறிவைத்து சாதகப் பறவையைப் போல் விரிவானம் ஊடுருவிப் பறந்து கொண்டிருப்பவர் - பாடுபட்டுவருபவர்...

இலக்கியத் துறையில் மட்டுமல்லாமல், தத்துவம், சமயம் - குறிப்பாக அறிவியல் - போன்ற பல துறைகளிலும் அவரது பணிகளும், படைப்புகளும் மலர்ந்துள்ளன. எல்லாவற்றிற்கும் மேலாக ஆராய்ச்சி அறிவுடன் ஆன்மிக, சமய இலக்கியத் துறைக்கு அவர் ஆற்றிவரும் அரும்பணிகள் வரலாற்றின் முத்திரை பெற்றவை.

இதுவரை பலதுறைகளில் 114 நூல்கள் எழுதியுள்ள பேராசிரியர் சுப்புரெட்டியார் அவர்கள் "நீங்காத நினைவுகள்" என்ற தலைப்பில் இந்த நூலைப் படைத்துள்ளார்கள்.

இருபது பெருமக்கள் தொடர்பான பல்வேறு நிகழ்ச்சிக் குறிப்புகளைச் சுவைபட எழுதியுள்ளார்கள். ஒரு முதல் அமைச்சர், ஒரு கல்வி அமைச்சர், மற்றும் பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள், பல்கலைக்கழகத் துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், நீதிஅரசர், கல்விநிறுவனங்களின் பொறுப்பாளர்கள், பொதுவாழ்க்கையில் ஈடுபட்டவர்கள், ஒரு மாணாக்கர் என்று சமுதாயத்தின் பலகூறுகளை விளக்கும் வகையில் நிகழ்ச்சிகளைத் தொகுத்துள்ளார்கள்.

மேலும் இந்த நூலில் ஒரு புதுமையைக் கையாண்டிருக்கிறார்கள். பொதுவாக பல பெருமக்களின் சிறப்புக்களை, பெருமைகளை எடுத்துச் சொல்லும் நூலாக அமைந்துள்ளது; என்றாலும், நாற்பது ஆண்டுகளுக்கு மேலான தனது வாழ்க்கை வரலாற்றையும் ஊடுபாவைப் போல இணைத்திருப்பது ஒரு அருமையான நெசவுத் திறனாக அமைந்துள்ளது.

துறையூர் உயர்நிலைப்பள்ளி துவங்கி முடிவில் திருவேங்கடம் பல்கலைக்கழகம் வரை - பின் 15 மாதங்கள் தமிழ்க் கலைக்களஞ்சிய தலைமைப் பதிப்பாளராகப் பணியாற்றியது உட்பட - பல்வேறு கல்வித் தளங்களில் அவரது ஆக்கமும், ஊக்கமும் செயற்பாடுகளும் நீக்கமற நிறைந்து பரிமளித்திருக்கின்றன.

இக்காலகட்டங்களில் அவரோடு தோழமை பூண்டவர்கள், அவர் தொண்டுக்குத் துணைபுரிந்தவர்கள், ஏன், தொல்லை கொடுத்தவர்கள் உட்பட, பலரின் குணச்சித்திரங்கள் இந்நூலில் அகச்சித்திரங்களாகத் தீட்டப்பட்டுள்ளன.

பேராசிரியர் சுப்புரெட்டியார் அவர்கள் அமைதியான ஒரு அறிவுப் பெட்டகம்... இலக்கியக் கருவூலம்... சிந்தனைச் சுரங்கம் என்ற சிறப்புகளுக்கு உரியவர் என்றாலும், இந்த நூலின் மூலம் மனிதர்களை எப்படி உணரவேண்டும், அவர்களை எப்படி ஆராயவேண்டும் என்ற மனிதநேய தத்துவத்தை உணர்த்தும் ஆய்வாளராகவும் விளங்குகிறார்கள்..

மனிதனின் சிறப்பியல்புகளை வெளிப்படுத்துகிற போதும், சில குறைகளைத் தெரிவிக்கின்ற போதும் எப்படிச் சொல்லவேண்டும், அதிலே அடக்கமும், அன்பும், நயமும் எப்படி இணைந்து வரவேண்டும் என்பதற்கு அருமையான தமிழ்நடையில் இலக்கணம் படைத்துள்ளது இந்த நூல்

இருளும், ஒளியும் கலந்த உலகம் போல நல்லதும் கெட்டதும் கலந்தவன்தான் மனிதன் என்ற எச்சரிக்கையோடு தாம் உறவாடிய

சான்றோர்களின் அருங்குணங்களை ஆழமாகத் தீட்டி, ஆகாத் தன்மைகளையும் மிக நாகரிகமாகப் புலப்படுத்தியுள்ளார்கள் அவரது இருவகை விமர்சனங்களிலும் அவரது மென்மையும், மனிதநேயமும், நட்பும், நன்றி உணர்வும் ஆதாரசுருதியாக விளங்குவதைச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். தம்மை மிகவும் பாதித்தவர்களைக் கூடப் "பாதகர்கள்" என்று கூறத் துணியாத அவரது "தருமநெறி" தகைமை மிக்கது

மேலும் இந்த நூலில் தமிழகத்தின் சுமார் 50 ஆண்டுகாலக் கல்வி வளர்ச்சியையும், அதற்கு வாய்ப்பளித்த சில களங்களையும் பேராசிரியர் ரெட்டியார் அவர்கள் தெளிவாகத் தொட்டுக் காட்டியுள்ளார்கள் திருவேங்கடம் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை, ஒருவகையில் அவரது தனிப்பட்ட சாதனையாகும். அதன் பரிணாமம் பற்றியும் பக்குவமாகக் கூறியுள்ளார்கள்.

கடந்த காலங்களில் கல்வித்துறையில் வாழ்ந்த பலவகை மனிதர்களைப் பற்றியும், அங்கே நிலவிய பல்வேறுபட்ட சூழ்நிலைகளைப் பற்றியும் சுவைசொட்டும் தமிழ்நடையில் இந்நூலில் அவர் நிரந்தரமாகப் பதிவு செய்துவிட்டார்

பண்பட்ட மனிதர்கள் எப்படி இருப்பார்கள் என்பதையும் இந்த நூலில் விளக்குகிறார். பண்பாளர்கள் எப்படி இலக்கியம் படைப்பார்கள் என்பதையும் இந்த நூல் விளக்குகிறது

பேராசிரியர் சுப்புரெட்டியாரின் ஏனைய தமிழ்ப்பணிகள் போன்றே, இவை நிலையான பதிவுகள், அழியாத இலக்கியப் பெட்டகங்கள்!

**இராம வீரப்பன்**

# நூல்முகம்

நாடிப் புலங்கள் உழுவார் கரமும்,
நயவுரைகள்
தேடிக் கொழிக்கும் கவிவாணர் நாவும்,
செழுங்கருணை
ஓடிப் பெருகும் அறிவாளர் நெஞ்சும்,
உவந்துநடம்
ஆடிக் களிக்கும் மயிலே! உன் பாதம்
அடைக்கலமே![1]

- கவிமணி

காலவெள்ளத்தில் தோன்றியும் மறைந்தும் வரும் மனிதர் கூட்டங்களில் யானும் ஒருவன், மூன்றாண்டுப் பருவத்தில் தந்தையை இழந்து என் அன்னையால் பராமரிக்கப் பெற்றவன். திண்ணைப்பள்ளி முதல் கல்லூரிப் படிப்பு வரையில் இறையருளால் எனக்கு வாய்த்த நல்லாசிரியர்களால் உருவாக்கப் பெற்றவன். சிற்றினம் சேராமல் இறையருளால் காக்கப் பெற்றவன். நல்ல நண்பர்கள் வாய்க்கப் பெற்றவன்.

என் நீண்டவாழ்வில் (அகவை 83) எத்தனையோ பெரியார்களுடன் பழகியவன். ஏற்கெனவே முப்பது பெரியார்களுடன் பழகியதால் நேரிட்ட நினைவுகளை "மலரும் நினைவுகள்" (1989) என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டுள்ளேன். இப்போது "நீங்காத நினைவுகள்" என்ற தலைப்பில் இருபது பெரியார்களுடன் பழகியதால் ஏற்பட்ட நினைவுகள் பதிவு செய்யப்பெற்று நூலாக வடிவம் பெறுகின்றன. இப்பெரியார்களில் நிலக்கிழார் ஒருவர்; தன வணிகர்கள் இருவர்; பேராசிரியர்கள் மூவர்;

---

1 மலரும்மாலையும் - 1

பள்ளித் தாளாளர் இருவர், அமைச்சர் இருவர்; வழக்குரைஞர்கள் இருவர்; ஆசிரியர் ஒருவர்; தமிழாசிரியர் ஒருவர்; மாணாக்கர் ஒருவர்; உச்சநீதிமன்ற நீதிஅரசர் ஒருவர்; துணைவேந்தர் நால்வர்

இந்த நூலுக்கு அணிந்துரை நல்கிய முன்னாள் அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்களின் அணிந்துரை பெற்றது இந்நூலின் பேறு; என் பேறும் கூட இவர் பெருமையைப் பேசுவது கொல்லத் தெருவில் ஊசிவிற்ற கதையாகும். சுதந்திரம் பெற்ற பிறகு நாட்டையாண்ட நல்லமைச்சர்கள் சிலருள் இவர் முன்னணியில் நிற்பவர். பொது அறிவு மிக்கவர். இவருக்கு என் நன்றி.

இந்தநூல் அச்சாகுங்கால் பார்வைப் படிகளை மூலப்படியுடன் ஒப்புநோக்கியும் பார்வைப்படிகளில் எழுந்த பிழைகளைக் களைந்தும் உதவிய என் அபிமான புத்திரி டாக்டர் மு.ப. சியாமளாவுக்கு என் அன்பு கலந்த நன்றி.

இந்நூலை புகழ்பெற்ற அறிவியலறிஞரும் சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தருமாகிய, பேராசிரியர் பெ.த. மனோகரன் அவர்கட்கு அன்புப் படையல் செய்து அவர்பால் யான்கொண்ட அன்பையும் மரியாதையும் புலப்படுத்திக் கொள்கின்றேன். இவர்தம் நேர்மையான பணியால் முன்னாள் துணைவேந்தர் தாமரைச் செல்வர் நெ.து. சுந்தரவடிவேலுவை ஒப்ப புகழ் எய்துவர் என்பது என் கணிப்பு. அப்பெருமைப் பேறுபெற இறையருள் துணைநிற்க அவன் திருவடிகளை இறைஞ்சுகின்றேன்

இவ்வரிய நூல் வெளிவருவதற்கு தமிழ் வளர்ச்சி இயக்ககத்தின் மூலம் ரூ. 8000/= நிதிஉதவி புரிந்த தமிழக அரசுக்கும் இதனை சிறந்த முறையில் வெளிவர ஒல்லும் வகையெலாம் உதவிபுரிந்த பால்நிலா பதிப்பகத்தாருக்கும் என் உளம்கனிந்த நன்றி.

என்னையும் ஒரு கருவியாகக் கொண்டு இருபது பெரியார்களுடன் யான்கொண்ட தொடர்புகளை நினைவிற்குக்

கொணர்ந்து அவை இலக்கியமாவதற்கு திருவருள் புரிந்த தருமமிகு சென்னையில் கந்த கோட்டத்து வளர்தலம் ஓங்கும் கந்தவேளை - சண்முகத்துய்ய மணி, உண்முகச் சைவமணி, சண்முகத் தெய்வமணியை - வாழ்த்தி வணங்குகிறேன். இந்நூல் நன்முறையில் வெளிவருவதற்குத் துணையாக இருந்த திருவருளையும் சிந்திக்கின்றேன்.

**புல்லும் பசுவிற்காம்; பூண்டும் மருந்திற்காம்;**
**கல்லும் திருக்கோயில் கட்டுதற்காம்;**
**ஏழை - எளியேன் எதற்காவேன்? செந்திநகர்**
**வாழும் வடிவேல வா![2]**

**-கவிமணி**

அடியேன்
**ந. சுப்புரெட்டியார்**

சென்னை-40
வைகுண்ட ஏகாதசி

2 மலரும் மாலையும் - முருகன் புகழ் மாலை-1

# உள்ளுறை

அன்புப் படையல் v
அணிந்துரை vi
நூல்முகம் ix

1. திரு. குணம் K.N. நல்லப்ப ரெட்டியார் 1
2. திரு. K. இராமச்சந்திர அய்யர் 18
3. வழக்குரைஞர்
   P. அரங்கசாமி ரெட்டியார் 32
4. பேராசிரியர் மு. நடேச முதலியார் 56
5. தலைமையாசிரியர்
   V. சொக்கலிங்கம் பிள்ளை 65
6. திரு. P. முத்துவேங்கடாசல துரை 79
7. திரு. எஸ். ஆர். நாகரெட்டியார் 107
8. திரு. தி.சு. அவினாசிலிங்கம் செட்டியார் 116
9. தாமரைச் செல்வர்
   டாக்டர் நெ.து. சுந்தர வடிவேலு 136
10. செம்மல் டாக்டர் வ.சுப. மாணிக்கம் 157

# 1

# குணம் K.N. நல்லப்ப ரெட்டியார்

நான் பிறந்த ஊர் கோட்டாத்தூர் (முசிறி வட்டம்); இப்போது துறையூர் வட்டம். சாதாரணமாக எல்லாச் சிற்றூர்களில் உள்ளதைப் போலவே இவ்வூரிலும் ஊர்ப்பெயருடன் வீட்டுப் பெயர்கள் இணைந்தே வழங்குகின்றன. அரும்பாவூரார் வீடு, வேப்பூரார் வீடு, பரளியார் வீடு, கணவாயார் வீடு, சிறுகுடியார் வீடு, சிறுகனூரார் வீடு, ஒக்கரையார் வீடு என்று வழங்குகின்றன. என்றோ ஒரு காலத்தில் - நினைத்துப் பார்க்க முடியாத காலத்தில் அரும்பாவூர், வேப்பூர், பரளி, கணவாய், சிறுகுடி, சிறுகனூர், ஒக்கரை என்ற ஊர்களிலிருந்து இவர்களின் மூதாதையர் ஒருவர் இந்த ஊருக்குக் குடி வந்திருத்தல் வேண்டும். இப்படிப் பேர் வழங்கும் அரும்பாவூரார் குடும்பத்தில் மூவர் உடன் பிறந்தவர்கள். அவர்களுள் பெரியவ்ர் குடும்பத்தின் தலைவர் குணம் நல்லப்ப ரெட்டியார். அவர்தம் முதல் மனைவி வழியாக வந்தவர் K.N. நல்லப்பரெட்டியார். இவர் 25-12-1908 இல் பிறந்தார். அடியேனை விட சுமார் எட்டு வயது மூத்தவர். நடுவலவர் குடும்பத்தில் பிறந்தவர் சிதம்பரம்; சின்னவர் குடும்பத்தில் பிறந்தவர் நல்லப்பரெட்டியார். இம்மூவரும் செல்வச் செழிப்புள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்தாம். எல்லோருமே சிற்றூரில் கிடைத்த ஐந்து வகுப்புக் கல்வியை முடித்துக் கொண்டனர். ஒரு குடும்பத்தினருக்காவது வெளியூர் சென்று உயர் கல்விபெற வேண்டும் என்ற உந்தலே இல்லை. அக்காலத்தில் (1920களில்) நிலக்கிழார்களின் மனப்பான்மை இதுதான். ஆனால் வறுமையையே குலதனமாகக் கொண்ட நான் அத்திபூத்தமாதிரி வெளியூர் சென்று உயர்நிலை, கல்லூரிக் கல்வி பெற்றது என் பூர்வ புண்ணியத்தால் வந்த இறையருள் என்றுதான் கருதுகின்றேன்.

**நினைவு - 1 :** நான் கல்விக்காக வெளியூர் செல்லும் இரண்டு மூன்று ஆண்டுகட்கு முன்னர் பல்லாண்டுகட்கு முன்பிருந்தே மார்கழி மாதத்தில் அதிகாலையில் பஜனை மடத்திலிருந்து (கிருஷ்ணன் கோவில்) அதிகாலை 4 மணிமுதல் பஜனைக் குழு இறைவனை வழுத்திதக் கொண்டு (ஹார்மோனியம், மிருதங்கம், தாளம், கஞ்சிரா) இவற்றுடன் ஊரின் முக்கிய வீதிகளில் வலம் வருதல் வழக்கமாக இருந்து வந்தது. இந்தக் குழுவில் அரும்பாவூர் வீட்டுச் சகோதரர்கள் மூவரும் கலந்து கொண்டு பாடல்கள் பாடுவர்; தாளங்கள் போடுவர். இரகுபதி ரெட்டியார் மத்தளம் வாசிப்பார். நான் ஒன்பது வயதுச் சிறுவன் மத்தளத்தின் வலப்பக்கத்திலுள்ள மாப்பசை உலர்ந்து போகாதிருக்க அடிக்கடித் தண்ணீரைத் தொட்டுக் கொண்டு அடிக்க நேரிடும். அதற்கு தகரக்குவளையில் நீரைத் தாங்கிக்கொண்டு செல்லும் கைங்கரியம் என்னுடையதாக இருக்கும். நானும் பஜனைக் குழுவில் ஒருவனாகக் கலந்து கொண்ட பெருமையுடையவனாகக் கருதிக் கொள்வேன். சிறுவர்களிடம் ஏதோ ஒரு வகையில் இத்தகைய, செம்மாப்பு இருக்க வேண்டியது இன்றியமையாமை என்று எனக்குப் படுகின்றது. இந்த உணர்வு பிற்காலத்தில் மேம்பாடு அடைவதற்கு ஊற்றுவாயாகவும், உந்துவிசையாகவும் இருக்கும் என்பது ஓர் உளவியல் உண்மை

**நினைவு - 2 :** உயர்நிலைக்கல்வி பெறாத - பெற முடியாத - இளைஞர்களில் சிலர் கோபால கிருஷ்ணன் என்ற இசையாசியரைக் (முசிறியிலிருந்து) கொணர்ந்து முறையாக இசை பயிற்சி பெற்றனர். இத்திட்டத்தில் முக்கியமாகப் பங்கு கொண்டவர் K.N. நல்லப்ப ரெட்டியாரும் அவர்தம் ஒன்றுவிட்ட சகோதரர்களும் அந்த இசையாசிரியர் என் இல்லத்திற்கு அருகில் குடியிருந்தார்; அவர் தம்பியும் அன்னையாரும் அவருடன் தங்கியிருந்தனர். இருவரும் திருமணம் ஆகாதவர்கள். அன்னையாரின் "நளபாகம்" அவர்கட்கு அமுதாக அமைந்தது.

இவர்கள் இசைப்பயிற்சி பெற்றகாலத்தில் K.N. நல்லப்ப ரெட்டியாரும் அவர்தம் தம்பிமார்களும் பங்குகொண்டதால் மார்கழி மாத பஜனைக் குழுவிற்கு நல்ல களை தட்டியது. படிப்பிற்காக

வெளியூர் செல்லுவதற்கு முன்பும் நான் உள்ளூரில் படித்த காலத்திலும் பஜனை மடத்தில் கிடைத்த இராமாயணம், பாரதம், பக்தவிஜயம் பெரிய எழுத்து விக்கிரமாதித்தன் கதை இவற்றையெல்லாம் உரைநடையில் படித்து மகிழ்ந்ததுண்டு. இசையாசிரியர் தொடர்பு ஏற்பட்ட காலத்தில் ரெங்கூன் ரங்காராஜு, வடுவூர் துரைசாமி ஐயங்கார், கோதைநாயகி அம்மையார் எழுதிய சில புதினங்களையும், வேறு சில துப்பறியும் புதினங்களையும் ஊன்றிப் படித்து அநுபவித்ததுண்டு. அக்காலத்தில் இசையாசிரியர் கோபால கிருஷ்ணனால் எழுதப்பெற்றுக் கைப்படிவடிவில் கிடந்த அழகிய புதினத்தையும் படித்து மகிழ்ந்ததாக நினைவு. இங்ஙனம் படித்த புதினங்களின் பெயர்களில் ஒன்றுகூட நினைவில் இல்லை. "ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணி" என்ற புதினத்தின் பெயர் மட்டிலும் நினைவில் உள்ளது. அதனை எழுதிய ஆசிரியர் பெயர் நினைவில் இல்லை.

**நினைவு - 3 :** K.N. நல்லப்ப செட்டியார் தந்தை 1935இல் இறந்ததாக நினைவு. 1926க்கு முன்னதாகவும் நல்லப்ப ரெட்டியார் திருமணத்திற்குப் பின்னரும் அவர் மேல்மாடியில் எப்பொழுதும் இளைஞர் கூட்டம் இருந்து கொண்டிருக்கும். வாசுதேவரெட்டியார், கிழக்கு வீதி ஞானியார் குடும்பத்தைச் சேர்ந்த சீநிவாசன் (இவர் இன்றில்லை; 1935க்கு முன்னரே காலகதி அடைந்துவிட்டார்.) பக்கத்து வீட்டு ஆழிக்கவுண்டன், இன்னும் ஒன்றிரண்டுபேர் (பெயர்கள் நினைவு இல்லை) ஆகியோர் நிரந்தர உறுப்பினர்கள். ஏதாவது அரட்டை அடித்துக் கொண்டிருக்கும் கூட்டம்; அரட்டை அரங்கம். அந்தக் காலத்தில் ஆனந்தவிகடன் (மாதம் இருமுறை), பிரசண்ட விகடன் (மாதம் ஒருமுறை)[2] என்ற இரண்டு இதழ்களும், வேறு ஏதோ ஒன்றிரண்டு இதழ்களும் வந்து கொண்டிருந்தன. எல்லோரும் சுவைக்கும் வண்ணம் சில கட்டுரைகளை நான்தான் படிப்பேன்; நான் படித்தால்தான் நன்கு சுவைமுடிக்க முடிகின்றது என்று கூறி என்னையே படிக்குமாறு வற்புறுத்துவார்கள். சில சமயம் வாசு

2 அப்போது திரு. நாரணதுரைக்கண்ணன் இதன் ஆசிரியர்

தேவரெட்டியாரும் (85 அகவையைத் தாண்டியவர்; செங்குணத்தில் தம் மகள் வீட்டில் வாழ்ந்து கொண்டிருந்தவர். அண்மையில் 1994 காலமானார்) படிப்பதுண்டு. இவர் நல்ல சுவைஞர். "கணீர்" என்ற குரலில் நன்கு படித்து அனைவரையும் மகிழ்விப்பார். அப்போது நான் கோட்டாத்தூர், துறையூர், முசிறியில் படித்துக் கொண்டிருந்த காலம். விடுமுறை காலங்களில் இந்த சோம்பேறி மடத்தில் (கீழுள்ள மகளிரால் சூட்டப் பெற்ற பெயர்) பிரசன்னமாவேன். மாலை மூன்று மணி சுமாருக்கு எல்லோரும் கூடுவர்; காலை 9 மணிக்கும் கூடுவதுண்டு. மாலை நேரமாக இருந்தால் சுமார் 4-5 மணிக்கு எல்லோருக்கும் காஃபி வழங்குவார். கறவை மாடுகள் நிறைய இருந்தன. விருந்தோம்பும் பண்பும் மகளிர் உட்பட அனைவரிடமும் நன்கு அமைந்திருந்தது. மனம் கோணாமல் மகளிர் காஃபியை மாடிக்கு அனுப்புவர். அல்லது குரல் கொடுத்தவுடன் மேல் மாடியிலிருக்கும் "சோம்பேறிகளில்" ஒருவர் சென்று பெரிய பாத்திரத்தில் காஃபியையும் நாலைந்து டம்ளர்களையும் எடுத்து வந்து வினியோகிப்பர். இப்படியாக K.N. நல்லப்பரெட்டியார் இல்லத்தின் மேல்மாடி விருந்துக்கூடமாகத் திகழும்.

இக்காலத்தில் நான் படித்த இரண்டு நகைச்சுவைக் கட்டுரைகள் இன்னும் பசுமையாக என் நினைவிலுள்ளன. ஒன்று, சென்னையில் ஏதோ ஒரு பள்ளியில் தமிழாசிரியரியாகப் பணியாற்றிய **ஆரியூர் பதுமநாபப் பிள்ளை**[3] அவர்கள் எழுதிய **"பில் கொண்டுவா"** என்ற கட்டுரையாகும். இஃது உணவு விடுதியில் பல்வேறு சுவைமிக்க தின்பண்டங்களைத் தயார் செய்து விற்கும். பாணியைச் சுவையாகக் கிண்டல் செய்வது. ஒரு சமயம் ஒருவர் உணவு விடுதியில் மாலை நேரத்தில் சிற்றுண்டி உண்ணச் சென்றார்.

---

3. இவர் சிறந்த வைணவர் என்று வி.பூதூர்ப் பெரும்புலவர் கி.வேங்கடசாமிரெட்டியார் மூலம் கேள்விப்பட்டதுண்டு. 1943க்குப் பிறகு பன்மொழிப் புலவர் வே வேங்கடராஜுலு ரெட்டியார் தொடர்பு ஏற்பட்ட பிறகு அவர் இல்லத்தில் திருபிள்ளையவர்களை ஒருமுறை பார்த்துப் பழகியதாக நினைவு. புலவர்களில் இப்படி அரிய நகைச்சுவைக் கட்டுரைகளை எழுதுபவர்கள் அரியர்.

அவர் கேட்டவற்றையெல்லாம் வினியோகிப்பவர் தந்து கொண்டிருந்தார். இவர் புதிய வகைகளின் பெயர்களைச் சொல்லிச் சொல்லி கேட்டுக் கொண்டே இருக்க விநியோகிப்பவரும் கொடுத்துக் கொண்டே இருந்தார். இறுதியாக "பில் கொண்டுவா" என்று உண்பவர் கேட்க விநியோகிப்பவர் பில் எழுதுபவர் உருவம் போல் செய்யப்பெற்ற ஓர் இனிப்புப் பொருளைக் கொண்டு வந்து வைத்தாராம். இப்படிக் கட்டுரை முடிகின்றது.

மற்றொன்று **தீபன்**[4] எழுதிய ''**முதலியார் வீட்டுக் கல்யாணம்**" என்ற நகைச்சுவைக் கட்டுரை. பல்வேறு திருமண நிகழ்ச்சிகளை - வரவேற்பு, திருப்பூட்டு, விருந்து, மணமக்களின் "பட்டணப் பிரவேசம்" (இரதம் போல் செய்யப் பெற்ற பல்லக்கில் முன்னிரவில் ஊர்வலம் வருதல்) - பல்வேறுபட்டவற்றைச் சுவையாக வருணிப்பது• பகல் உணவு உண்ட பிறகு ஒவ்வொரு இலையிலும் சிறிது விளக்கெண்ணெயை ஊற்றித் தடவி வெளியில் போடுவார்களாம். உணவில் அதிகமான நெய்யின் இருப்பைக் காட்ட' இதனால்தான் "முதலியார் ஜம்பம் விளக்கெண்ணெய்க்குக் கேடு" என்ற பழமொழியும் எழுந்ததாம். பட்டணப் பிரவேசத்தில் ஊர்வலத்திற்கு முன்னால் இரண்டு யானைகள் செல்ல ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்கும் என்று ஒருவர் யோசனை கூற, மற்றொருவர் கோயில் யானைகளை வாடகைக்கு அமர்த்திக் கொள்ளலாம் என்று கூறினாராம். அதற்கு கட்டுரையாளர். "அது வேண்டா, வீண் செலவு. நம் சோமயாஜி மாமாவையும் முத்தய்யா மாமாவையும் முன்னால் செல்ல ஏற்பாடு செய்து கொள்ளலாம்" என்று சொல்வதுடன் கட்டுரை முடிகிறது.

**நினைவு - 4** : K.N. நல்லப்ப ரெட்டியாருக்குத் திருமணம் (1928)இல் நடைபெற்றதாக நினைவு. நான்கு நாள் திருமணம். கோலாகலமாக நடைபெற்றது. தம் தாய் மாமன் சதாசிவ ரெட்டியாரின்

4 இவர் டி.கே.சியின் திருமகன் தீத்தாரப்பன். அனைத்திந்திய வானொலி யில் பணியாற்றிக் கொண்டிருந்து அற்ப ஆயுளில் திருநாடு அலங்கரித்தவர் - சிறந்த கற்பனை எழுத்தாளர்.

சீமந்த புத்திரி இரச்சமாள் என்ற பெண்மணியை மணந்து கொண்டார். சதாசிவ ரெட்டியார் என் ஒன்று விட்ட சகோதரர்;. என் தந்தையாரை விட மூத்தவர். அவருடைய மகன் கணபதி என் வயதையுடையவன். நாங்கள் இருவரும்தான் முதன்முதலாக ஊரைவிட்டு உயர்கல்விக்காக வெளியூர் சென்றவர்கள். இது கோட்டாத்தூர் வரலாற்றில் முதல் இடம் பெறவேண்டிய செய்தி.

அக்காலத்தில் வீட்டில்தான் திருமணம். திருமண மண்டபங்கள்பற்றிக் கேள்விப்படாத காலம். வாசல் முதல் தெரு வரையிலும் கொட்டகைகள் வேயப் பெற்றிருக்கும். உணவு பரிமாற வீட்டில் இடம் போதாது. வீடு, திண்ணை, வாசல் முதலிய எல்லாவிடங்களிலும் உண்ணும் இடங்களாகப் பயன்படுத்தப் பெறும். கொட்டகையின் தெருவாயில் குலைபோட்ட பெரிய வாழைமரங்களாலும், இளநீர்க் குலைகளாலும், கூந்தற் பனைகளாலும், மாவிலைத் தோரணங்களாலும் மிகச்சிறப்பாக அலங்கரிக்கப் பெற்றிருக்கும். கொட்டகைக்கால்கள் யாவும் பச்சிலைக் கொத்துகளால் மூடப்பெற்று அழகாகக் காட்சியளிக்கும்.

முகூர்த்தம் நடைபெறும். இடம் கூரை போன்ற அலங்காரக் கொட்டகையாகும். மழைபெய்தாலும் ஒழுகாமல் சிறந்த முறையில் இரட்டைத் தென்னங்கீற்றுகளால் வேயப்பெற்று அதற்குமேல் கோரைப்புல் அல்லது வைக்கோல் தாளரியால் மூடப்பெற்று மூங்கில் பிளப்புகளால் இறுகக் கட்டப்பெற்றிருக்கும். தரையும் நல்லமண்ணால் வழுவழுப்பாகச் செய்யப்பெற்றிருக்கும். தரை நாளடைவில் கெட்டுப் போனாலும் கூரை பத்து ஆண்டுகட்கு மேல் கெடாமல் இருக்கும். கூரையின் உட்புறம் வண்ணத்தாள்கள், குருநாதப் பட்டை இரவிவர்மாவின் இறைவனின் திருவுருவங்களால் (முருகன், இராமன், கண்ணன், திருமணங்கள் பற்றியவை) அலங்கரிக்கப் பெற்று அழகும் பொலிவும் பெற்றுவிளங்கும். K.N. நல்லப்பரெட்டியார் வீட்டு வாசலில் இக்கொட்டகை பத்தாண்டுகட்கு மேல் பொலிவுடன் திகழ்ந்ததாக நினைவு. பெரகம்பியிலிருந்து நான்கோட்டாத்தூர் வருவதற்கு முன்னர் சின்னப் பண்ணையார் வீட்டுத் திருமணத்தில் இத்தகைய கொட்டகை இருந்தது.

நான்கு நாட்களும் பகலில் இசைவிருந்து, நலுங்கு முதலியவை நடைபெற்ற வண்ணம் இருந்தன. உறவினர்களும் அன்பர்களும் ரொக்கம், பட்டாடைகள் மணமக்களுக்கு வழங்கி வரும் மரபும் நடைமுறையில் இருந்தது. செல்வர் வீட்டுத் திருமணத்தில் வழக்கமாக இருந்து வரும் சின்னமேளம் (தேவதாசி) இசை விருந்து, நலுங்கு முதலிய நிகழ்ச்சிகளில் பெரும்பங்கு பெற்றிருந்தாள் நான் முசிறி, திருச்சியில் பயின்று திரும்பும் வரை (1939) இந்த அலங்காரக் கொட்டகை சிதையாமல் இருந்ததாக நினைவு.

**நினைவு - 5 :** இத்தகைய நல்லுள்ளம் படைத்த திரு. K.N. நல்லப்ப ரெட்டியார் 1930 முதல் தீராத நோயால் துன்பப் பட்டார். புலிவலத்தில் (துறையூர் - திருச்சி சாலையில் உள்ள ஒரு சிற்றூர்) அக்காலத்தில் புகழோங்கியிருந்த டாக்டர் பட் (கன்னடப் பாப்பனர்) என்பார் குடும்ப டாக்டர் போலானார். 1930ல் ஒருமாதக் காலத்திற்கு மேல் புலிவலத்தில் தங்கி சிகிச்சை பெறவேண்டியிருந்தது. வீடு அமர்த்தி ஒரு குடும்பம் இவருக்காகவே இருந்தது. அப்போது இவர் தந்தையார் இருந்தார் நான் விடுமுறையில் ஒரு வாரத்திற்கு மேல் தங்கி உதவியாக இருந்தேன். ஒரு சமயம் நானும் இவருடைய தந்தையாரும் அம்மணிமங்கலம், சாத்தனூர் வழியாகக் கால்நடையில் திரும்பியது இன்னும் என் மனத்தில் பசுமையாக உள்ளது. இருவரும் பேசிக்கொண்டுவரும்போது தம்முடைய ,சீமந்த புத்திரனின் எதிர்காலம் என்னாமோ என்று கவலைப்பட்டது அவரது பேச்சின் அடிநாதமாக ஒலித்ததைக் கண்டேன். சில வாரங்களில் குணமாகி வீடு திரும்பினார். அப்போது நான் துறையூரில் 8-ஆம் வகுப்பு படிப்பை முடித்துக் கொண்டு விடுமுறையில் இருந்தகாலம்.

**நினைவு - 6 :** 1936-ஆம் ஆண்டு செப்டம்பர் என் திருமணம் நாமக்கல் அருகிலுள்ள பொட்டணம் என்ற சிற்றூரில் நடைபெற்றது கோட்டாத்தூரிலிருந்து பொட்டணம் போவதற்கும் அங்கிருந்து திரும்புவதற்கும் ஒரு பேருந்து, ஒரு மகிழ்வுந்து அமர்த்தப் பெற்றன. நெருங்கின உறவினர்கள் சிலர், நண்பர்கள் சிலர் பேருந்தில் வந்தனர். K.N. நல்லப்பரெட்டியார். அவர் மனைவி,

சதாசிவ ரெட்டியார் (ஒன்றுவிட்ட சகோதரர் - திருமணத்திற்கு எல்லாச் செலவுகளுக்கும் பணம் உதவியவர் - மகிழ்வுந்தில் சென்றதாக நினைவு). அப்போது K.N. நல்லப்பரெட்டியார் நல்ல உடல்நிலையில் இருந்தார்; ஆனால் நோய் அவ்வப்போது திடீரென்று தலைகாட்டும் டாக்டர் பட் தான் சமய சஞ்சீவியாக நின்று உதவுவார். திருச்சி டாக்டர் காளமேகமும் நோய்க் கடுமையாக இருந்தால் உதவுவார். திருமண ஆண்டில் எனக்கும் நீண்ட நாட்கள் வயிற்றுப் போக்கு ஏற்பட்டு முதல் ஆண்டு பி.எஸ்சி படிப்பைத் தொடராது நிறுத்திக் கொள்ள வேண்டியதாயிற்று. ஓராண்டுப் படிக்கும் காலம் பாழ்பட்டது

**நினைவு - 7 :** 1939-இல் பி எஸ்சி தேர்வில் முதல் வகுப்பில் (மூன்றாம் நிலையில்) தேர்ச்சி பெற்றேன். 1939-40 ஆண்டு வேலை தேடும் படலமாக அமைந்தது. வேலை கிடைக்கவில்லை. இந்த நிலையில் என் மனைவிக்கு 1940-சனவரி வாக்கில் சிறுநீரகத்தில் ஏதோ கோளாறு ஏற்பட்டு திருச்சி தென்னூர் சாலையிலுள்ள காளமேக மருத்துவமனையில் சேர்க்கப்பெற்று சுமார் இரண்டுமாத காலம் விட்டுவிட்டு சிகிச்சை பெற்று வந்தாள். நான் துணைக்கு இருந்தேன். என் தாயார் உணவு தயாரிப்பதற்காக கோட்டாத்தூரி லிருந்து வந்திருந்தார்கள். அப்போது நல்லப்பரெட்டியாரும் சிறுநீர் அடைப்பு ஏற்பட்டு காளமேகத்திடம் சிகிச்சை பெற்று வந்தார். மாலைநேரத்தில் சில சமயம் அருகிலுள்ள ஒரு சிறு உணவு விடுதிக்குச் கூட்டிச் சென்று சிற்றுண்டி காஃபி வழங்குவார். சிகிச்சை முடிந்து நாங்கள் பொட்டணம் சென்று விட்டோம். அங்கு அடிக்கடி கால் வீக்கம், முகத்தில் நீர் சுரத்தல் தலைகாட்டும். சிகிச்சைக்குப் போகாமல் இறைவன் கருணையை நம்பி வாளா இருந்துவிட்டோம்.

இந்த ஆண்டு (1940) ஏப்பிரல் வாக்கில் சைதையில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர முடிவு செய்து விண்ணப்பமும் அனுப்பப் பெற்றது. ரூ. 1000/= வேண்டுமே. மாமனார் வீட்டில் உதவுவதாக இல்லை. கோட்டாத்தூரில் யாரும் கடனாகக்கூட உதவ முன்வரவில்லை. அக்காலத்தில் சிற்றூரில் பணப்புழக்கத்தில் அதிகத் தடுமாற்றம். ஆகவே ஆலத்துடையம் பட்டியிலிருந்த ஒன்றரை

குழிநிலத்தை ரூ.800/= க்கு (மிகவும் ஈனக்கிரயம் என்று தெரிந்தும்) விற்று சைதையில் பயிற்சி பெற்று எல்.டி. பட்டமும் பெற்றேன்.

**நினைவு - 8 :** 1941 - ஜூன் முதல் நான் புதிதாகத் தொடங்கப் பெற்ற நடுநிலைப் பள்ளியின் முதல் தலைமையாசிரியன். K.N. நல்லப்ப ரெட்டியார் தம் தம்பி நல்லுசாமியைத் தொடக்க காலத்தில் இலால்குடி உயர்நிலைப் பள்ளியில் சேர்த்துப் படிக்க வைத்தார். அப்போது நல்லுசாமி சிறுவன். மாணவர் உணவு விடுதி துறையூரில் தொடக்கக் காலத்தில் இல்லை. சில ஆண்டுகட்குப் பின்னர் தமிழாசிரியர் திரு. V.C. கிருட்டிண சாமி ரெட்டியார் முயற்சியால் பள்ளி நிர்வாக அனுமதியுடன் தொடங்கப்பெற்றது. (சில ஆண்டுகள் இயங்கிய பின் மூடப்பெற்றது). அக்காலத்தில் நல்லுசாமியைத் துறையூரில் கொண்டு வந்து சேர்த்தார். அவர் தமையனார். அவன் ஐந்தாவது படிவத்தில் படித்துக் கொண்டிருந்தபோதே (1944) திருமணம் உறுதி செய்யப் பெற்றது. தந்தை பெரியார் தலைமையில் கோட்டாத்தூரில் திருமணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. கடவுள் பக்தி மிக்கவராக இருந்தாலும் காந்தியடிகள்மீது மிக்க மரியாதை கொண்டிருந்தாலும், திராவிட இயக்கக் கொள்கைகள்தாம் அவர் மனத்தை அதிகமாகக் கவர்ந்தன. தந்தை பெரியார்பால் மிக்க ஈடுபாடு கொண்டவராக இருந்தார். பல ஆண்டுகள் நல்லுசாமிக்குக் குழந்தைப் பேறு ஏற்படவில்லை. தமக்கும் அப்பேறு இல்லை; தம் தம்பிக்கும் இல்லையே என்று மிகவும் மனம் கவன்றார். இறையருளால் முதற் பெண் எடுத்த குடும்பத்திலேயே மற்றொரு பெண்ணை எடுத்துத் திருவரங்கத்தில் (நான் காரைக்குடியில் பணியாற்றிய போது) வைதிக முறைப்படி திருமணம் நடத்தினார். இரண்டாவது பெண்ணுக்கு அவர் வாழ்ந்த காலத்திலேயே மூன்று ஆண்குழந்தைகள் பிறந்தன. குலம் விளக்கம் பெற்றது என்ற மகிழ்ச்சி கடலில் ஆழ்ந்திருக்க வேண்டும்.[5]

5 வைதிக முறையில் திருமணம் நடைபெற்றதால்தான் இரண்டாவது பெண்ணுக்கு மக்கட்பேறு ஏற்பட்டது என்று கருதுவது தவறு. முதற் பெண்ணுக்கு உடற் பொருத்தக் கோளாறினால்தான் மகப்பேறு வாய்க்கவில்லை என்று கருதுவதுதான் அறிவுடைமை.

**நினைவு - 9 :** (1941-50) ஆண்டுகளில் நான் துறையூர்ப் பள்ளியில் தலைமையாசிரியனாகப் பணியாற்றி வந்தேன். பள்ளியிலேயே ஒருபுறம் என் "சிறு குடில்" அமைந்திருந்தது. அப்போது அடியிற் கண்டவற்றிற்காக திரு. நல்லப்ப ரெட்டியார் வருவதுண்டு: சில சமயம் ஒன்றிரண்டு நாட்கள் தங்குவதும் உண்டு. நானும் துறையூருக்கு வந்த நான்கு ஆண்டுகட்குப் பிறகு பாலுக்காக ஒரு பசுமாடு பராமரித்தேன். அதில் முழுக் கவனம் என்னுடையதாக இருந்தது.

(1) புலிவலத்தில் இருந்த டாக்டர் பட் நான் இருக்கும் பள்ளிக்கருகிலேயே வீடு கட்டிக் கொண்டு குடியேறிவிட்டார். துறையூர் பாலக்கரையருகில் ஒரு சிறு மருத்துவமனையையும் தொடங்கியிருந்தார். அவரிடம் சிகிச்சை பெறுவதற்காக வருவதுண்டு: என்வீட்டில் தங்குவதும் உண்டு.

(2) மாணவர்களைச் சேர்க்கும் தொடக்கக் காலத்தில் சில மாணவர்களைச் சேர்ப்பதற்குப் பரிந்துரைக்காக வருவார். என்னால் இயன்ற வரை தோழ ஆசிரியர்களின் துணை கொண்டு உதவுவேன். அவரும் மனநிறைவுடன் திரும்புவார்.

(3) ஆண்டு இறுதியில் மாணவர்களை வகுப்பு மாற்றம் செய்யும் சந்தர்ப்பங்களிலும் வருவார். தொல்லைகட்கெல்லாம் மகுடமாக இருப்பது இதுதான். மாணவர்களை வகுப்பு மாற்றம் செய்வதற்காக அவர்களின் மதிப்பெண் பட்டியலை ஆய்வதற்காக ஆசிரியர்களின் இரகசியக் கூட்டத்திலும் "கலந்து கொள்ள" வந்துவிடுவார். இது எனக்கு "**தர்ம சங்கடமாக**" இருக்கும். எல்லைக்குள்ளும் எல்லைக்குச் சற்றுக் கீழும் மதிப்பெண் பெற்ற மாணவர்களின் தேர்வு பற்றிப் பேச வேண்டியிருக்கும். ஆசிரியர்கள் "முகம் சுளிப்பார்கள்" என்ன சொன்னாலும் கேட்பதில்லை. இல்லத்தில் மைத்துனர் முறையில் உறவாடுவதுபோல் பள்ளியிலும் "அதுவும் "இரகசிய கூட்டத்தில்" சலுகையுடன் உறவாடுவது தகாது என்பது அவருக்குப் புரிவதில்லை. என்ன செய்வது? "மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல்" திண்டாடுவேன். என்

மனத்திற்குள்ளும் ஆசிரியர் மனத்திற்குள்ளும் நடைபெறும் போராட்டங்களை அவர் எப்படி அறிய முடியும்? அவற்றை நாங்கள்தாம் வாய்விட்டுப் பேச முடியுமா?

(4) பள்ளிக்கு எதிரில் மாவட்ட முனிசீப் மன்றம் உள்ளது. எங்கள் வீட்டு நிலைமை தெரியும். வாழை இலை கிடைக்காது; திடீர் என்று தயிர் கிடைக்காது; இதனால் வாழை இலைக்கட்டு, தயிர் முதலியவற்றை எடுத்துக் கொண்டு வில் வண்டியில் வந்து இறங்கி வண்டியையும் மாடுகளையும் வீட்டருகில் விட்டுவிட்டு நீதிமன்றத்திற்கு ஏகுவார்கள். 12 மணிக்கு வழக்கு தள்ளிப் போடப்படும் வீட்டில் உணவு தயாரிப்பு அறை குறையாக இருக்கும். இருந்து உண்ணாமல் போய்விடுவார்கள். என் மனைவியின் உழைப்பு, உணவுப் பொருள் நட்டம். இவைதான் கண்கண்ட பலன். வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றால் பகல் 2 மணிக்கு வந்து உண்பார்கள். இப்படிப் பல தொல்லைகள் K.N நல்லப்பரெட்டியாரால் நிகழ்ந்து கொண்டே இருக்கும். ஆனால் அவையெல்லாம் அவர் எங்கள்மீது வைத்திருக்கும். அன்புக்கும் பாசத்திற்கும் முன் "தீயினில் தூசாகும்" என்றவாறு மறைந்துவிடும்.

(5) 1949-இல் திருமணம் ஆகி 14 ஆண்டுகட்குப் பிறகு எங்கட்கு மகப்பேறு ஏற்பட்டது. 10-ஆம் நாள் நடைபெற்ற விருந்தில் கலந்து கொண்டு குழந்தையை ஆசீர்வதித்துப் பரிசளித்து ஊர் திரும்பியதாக நினைவு.

(6) 1950-இல் காரைக்குடி சென்ற பிறகு எப்பொழுதோ ஓர் ஆண்டு காரைக்குடி வந்து எங்கள் இல்லத்தில் மூன்று நாட்கள் தங்கியிருந்தார். அப்போது அவரைக் குதிரை வண்டியை அமர்த்திக் கொண்டு கல்லூரி வளாகத்தில் வள்ளல் அழகப்பரால் நிறுவப் பெற்ற பல்வேறு பள்ளிகள், கல்லூரிகள் முதலியவற்றைக் காட்டினேன். அவற்றையெல்லாம் பார்த்து ஒரு தனிமனிதரின் முயற்சியையும் ஈடுபாட்டையும் கண்டு வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தார்.

**நினைவு - 10 :** 1952-பிப்ரவரியில் (நான் காரைக்குடியில் பணியாற்றிய காலம்). என் மூத்தமகன் இராமலிங்கத்திற்கு (மூன்று

வயது) எதுமலை காமாட்சியம்மன் கருப்பண்ண சுவாமி திருக்கோயிலில் சிவராத்திரியன்று முடி இறக்க எதுமலை செல்ல வேண்டிய நிலை என் அன்னையார் கோட்டத்தூரில் இருந்தமையால் அங்குச் சென்றோம். நல்லப்ப ரெட்டியார் எதுமலை செல்ல மாட்டு வண்டி ஏற்பாடு செய்தார். இரவு உண்டி கொண்டு வந்தமையால் நேராகக் கோயிலை அடைந்தோம். பெரகம்பியிலிருந்து என் தாய்மாமன் வந்திருந்தார். பெரகம்பியிலிருந்து வேறு பல இளைஞர்களும் வந்திருந்தனர். இவர்களில் குறிப்பிடத்தக்கவர் பூனையார் வீட்டுத் தம்பு சிரம்பரம் என்பவர். இவர் முன்னிரவில் காத்தவராய சுவாமியின் கதையை இசையுடன் பாடி அனைவரையும் மகிழ்வித்தார். சிவராத்திரியில் உறங்காமலிருக்க இவர் காலட்சேபம் துணை செய்தது. விடியற்காலையில் மகனுக்கு முடி இறக்கப்பட்டது. வெந்நீரில் என் அன்னையார் பேரனைக் குளிப்பாட்டினார்கள். காணிக்கை செலுத்தி சுவாமி தரிசனம் செய்து கொண்டோம். பின்னர் எதுமலை[6] வந்து என் நண்பர் பெத்துசாமி இல்லத்தில் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு கோட்டாத்தூர் திரும்பினோம்.

**நினைவு - 11 :** என் அன்னையார் கோட்டாத்தூரில் தனியாக வேளாண்மை செய்து கொண்டு வருவது எனக்கு உடன்பாடில்லை. நான் விற்க வேண்டிய சொத்துகளை 1946இலும் 1952இலும் விற்றுவிட்டேன். என் தாயார் விற்க வேண்டிய நிலத்தை ரூ. 3500/=க்கு K.N. நல்லப்ப ரெட்டியாருக்கு விற்றுவிட்டு (1953) என்னை வந்து அடைந்துவிட்டார்கள். (ஐந்து ஆண்டுகள் எங்களுடனும் பேரப் பிள்ளைகளுடனும் வாழ்ந்து 1959ல் காலகதி அடைந்துவிட்டார்கள்). K.N.நல்லப்ப ரெட்டியார் தம் தந்தையார் இறந்தபிறகு புதிய புன்செய் நிலங்களை வாங்கி நன்செய் நிலமாகவும், தரிசு நிலங்களை வாங்கி நன்செய் நிலங்களாகவும் விருத்தி செய்தார். தம் நிலங்களை யொட்டியிருந்த நிலங்களையும் வாங்கி ஒரு பெரிய சொத்தாக்கிப் பண்ணையைப் பெருகச் செய்தார். வீட்டிலும் புதிய கட்டடங்களைக் கட்டி வசதிகளைப் பெருக்கிக்

6 திருக்கோயில் ஊரிலிருந்து 3 கி.மீ தொலைவிலுள்ளது.

கொண்டார் தாம் நிரந்தர நோயாளியாக இருந்தமையால் தாம் தங்கும் மாடியிலேயே நவீனமுறை கழிப்பறையை ஏற்படுத்திக் கொண்டார். பண்ணையும் பெருகியது. வருமானமும் பெருகியது. விருந்தோம்பலும் அதிகமாயிற்று.

**நினைவு - 12 :** நான் திருப்பதி சென்ற பிறகு (1960) கோட்டாத்தூர் தொடர்பு அதிகம் இல்லை. இக்காலத்தில் அவர் ஊராட்சித் தலைவராக இரண்டு மூன்று முறைகள் தேர்ந்தெடுக்கப் பெற்றார். சிற்றூரிலும் அரசியல் தலைதூக்கிற்று. காங்கிரஸ், திராவிட முன்னேற்றக் கழகம் என்ற கட்சிகளின் பெயர்களில் தேர்தல்கள் நடைபெற்றன. நல்லப்ப ரெட்டியார் இறுதிவரையிலும் தி.மு.க கட்சியில் இருந்ததாக நினைவு. செலவுகள் அதிகம். கையூட்டு இல்லை. விருந்தோம்பலில்தான் செலவுகள் தண்ணீராய் ஓடின.

**நினைவு - 13 :** நான் திருப்பதியிலிருந்தபோது வேப்பூர் முத்து வேங்கடசல ரெட்டியார் நோய்வாய்ப்பட்டிருந்தார். இவர் நல்லப்ப ரெட்டியாரின் பெரிய தாயாரின் மகன். தவிர, இவர் ஒரு மகான். வெள்ளை வேட்டி சாமியார். சத்துவகுணம் மிக்கவர். இவரைப் பார்க்க திருப்பதியிலிருந்து வந்ததாக நினைவு. காரணம் இளமைக் காலத்திலிருந்தே என் உள்ளத்தைக் கவர்ந்தவர்; வீரவழிபாட்டிற்குரியவராய் இருந்தவர்.

இவர் திருநாடு அலங்கரித்தபோதும் வந்தேன். K.N. நல்லப்ப ரெட்டியார்தான் அனைத்துக்காரியங்களையும் முன்னிருந்து நடத்தினார். முத்துவேங்கடாசலரெட்டியார் தம்காலத்தில் தம்மூரில் சிவப்பேறு அடைந்த ஒரு மகான் சமாதியில் ஒரு திருக்கோயில் எழுப்பி சிவலிங்கப் பிரதிட்டை செய்து நாள்தோறும் வழிபாடுகள் நடைபெற ஏற்பாடுகள் செய்திருந்தார். சேந்தமங்களத்திலிருந்து வந்திருந்த பெரியவர் ஒருவரைக் கொண்டு அன்றாட வழிபாடுகள் நடைபெறச் செய்தார். இத்திருக்கோயிலின் முன்வாயிலில் இடப்புறமாக முத்து, வேங்கடாசல ரெட்டியாரின் திருமேனி அடக்கம் செய்யப் பெற்றது. ஒரு மகான் திருவடியிலேயே இன்னொரு மகான் இருக்கட்டும் என்ற உயர் எண்ணத்தில் ஏற்பாடு செய்தவர் K.N.

நல்லப்பரெட்டியார் அப்போது அங்கிருந்த பெரியவர்களில் சிலர் இந்த ஏற்பாடுகள் செய்த K.N. நல்லப்ப ரெட்டியாருக்கும் அவர் காலகதி அடையும்போது அவர் திருமேனியை வலப்பக்கமாக அடக்கம் செய்தால் பொருத்தமாயிருக்கும் என்று சொன்னது நினைவிற்கு வருகின்றது

**நினைவு - 14** : 1955-பங்குனி மாதத்தில் செட்டிகுளத் திருத்தலப் பயணம் மேற்கொள்ளப் பெற்றது. இப்போது என் அன்னையார் காரைக்குடிக்கு வந்துவிட்டார்கள். என் அன்னையார் செட்டிகுளக் குமரனுக்கு நேர்ந்து கொண்ட கடனைத் தீர்ப்பதற்காகவும், இளைய மகன் இராமகிருட்டிணனுக்கு முடிஇறக்குவதற்காகவும் இப்பயணம் மேற்கொள்ளப்பட்டது. இப்பயணம் வெற்றியுடன் நிறைவு பெறுவதற்கு K.N. நல்லப்ப ரெட்டியார் பெருந்துணை புரிந்தார். இவர் துணையின்றேல் செட்டிக்குளம் நிகழ்ச்சி வெற்றியுடன் நடைபெற்றிருக்க முடியாது. இரண்டு மூட்டை நெல்லை வேகவைத்து புழுங்கல் அரிசி தயார் செய்யவும், அதற்கு வேண்டிய மளிகை சாமான்கள் சேகரிக்கவும், பாத்திரங்கள் வாழை இலைக்கட்டு இவற்றை வண்டியில் கொணர்வதற்கும் ஒரு வாரத்திற்குமுள்ளதாகவே என் அன்னையாரைக் கோட்டாத்தூருக்கு அனுப்பி வைத்தேன். இவற்றிற்கெல்லாம் நல்லப்பரெட்டியார் முன்நின்று உதவினார்கள். ஒருகுறிப்பிட்ட நாளில் சாமான்கள் விறகுக்கட்டு, சமையல் ஆட்களுடன் செட்டிக்குளம் மலைக்கருகிலுள்ள ஒரு தோப்பை வந்தடைந்தன.

காரைக்குடியின் ஐம்பது ரூபாய் எடையில் செய்யப் பெற்ற வெள்ளிக்காவடியுடன் நானும் என் மனைவியும் குழந்தைகளுடன் மூன்று நாட்கள் முன்னதாகவே காரைக்குடியிலிருந்து இருப்பூர்தி, பேருந்து மூலம் செட்டிக்குளம் வந்தோம். தியாகராச ரெட்டியார் வீட்டில் (எலுமிச்சை தோட்டக்காரர் வீடு) ஒருநாள் தங்கினோம். செட்டிகுளத்திற்கு மூன்று கல் தொலைவிலுள்ள பெரகம்பி என்ற ஊரிலிருக்கும் என் தாய்மாமன் பண்ணை நல்லப்ப ரெட்டியாரைப் பார்ப்பதற்காகக் குதிரைவண்டி அமர்த்திக் கொண்டு பெரகமபி

சென்றோம் இராமலிங்கத்திற்கு அப்போது வயது ஏழு; இராமகிருட்டிணனுக்கு வயது மூன்று இந்தச் சமயத்தில் நான் சிறிது நோயால் தாக்குண்டேன். உண்ணும் உணவு அளவில் குறைந்துவிட்டது. இரண்டு நாள் நான் பிறந்து ஏழு வயதுவரை வளர்ந்த ஊரிலுள்ள பல உறவினர்களையும் நண்பர்களையும் பார்த்து மகிழ்ந்தேன்.

குறிப்பிட்ட நாளில் நானும் மனைவியுடனும் குழந்தைகளுடனும் பெரகம்பியிலிருந்து மாட்டு வண்டியில் தோப்பை அடைந்தேன்; என்னுடன் என் அம்மான், சிற்றப்பாமுறையிலுள்ள நெருங்கின உறவினர் (என் தாயாரைப் பெற்ற பாட்டி பிறந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்) வந்தார்கள் செட்டிக்குளத்திலிருந்து தியாகராச ரெட்டியார், அவர் தந்தையார் இவர்களும் வந்து சிறப்பித்தார்கள். கோட்டாத்தூரிலிருந்து குதிரை வண்டியில் நல்லப்பரெட்டியாரும் வந்திருந்தார். என்தம்பி கணபதி துணைவியுடன் வந்திருந்தான். இராமலிங்கத்திற்குக் கிராப்புத்தலை; இராமகிருட்டிணனுக்கு தலைவாரி இரட்டை சடைகள் போடப் பெற்று ஆரஞ்சுவண்ண நாடாக்கள் சூட்டியிருந்தோம். இருவருக்கும் தோப்பில் முடி இறக்கப் பெற்றது. இராமகிருட்டிணன் முடிதுறந்த இளவரசல்போல் திகழ்ந்தான். வெந்நீரால் இருவரையும் குளிப்பாட்டினோம். எல்லோரும் மலைக்குச் சென்றோம். குழந்தைகளால் ஏற முடிடியவில்லை; தூக்கிக் கொண்டோம். முருகனை அருச்சனை செய்து வழிபட்டோம். வெள்ளிக்காவடியை முருகன் திருவடியில் வைத்து வணங்கினான் இராமலிங்கம். சுமார் முற்பகல் 11-30க்குக் கீழே இறங்கிவிட்டோம்.

தோப்பில் குமரன் வழிபாட்டுடன் சம ஆராதனை தொடங்கியது. ஏழைகள் உட்பட சுமார் 75 பேர் உண்டனர். உண்ட பின் மேலும் வந்த ஏழைகட்குச் சாம்பார் சாதம் உருண்டை உருண்டையாக வழங்கப்பெற்றது. மாலை நான்கு மணிக்குக் கோட்டாத்தூருக்குத் திரும்ப ஏற்பாடு. நான் சிறுவர்களுடன் குதிரை வண்டி புறப்பட்டதால் மாலை ஆறுமணிக்கே கோட்டாத்தூர் வந்தடைந்தேன். மற்றவர்கள் வந்த வண்டி மீதி சோற்றுடன் மாலை

ஏழு மணிக்கு வந்து சேர்ந்தது. மீதி சோறு பண்ணையாட்களுக்கு வினியோகிக்கப் பெற்றது. நாங்களும் உண்டோம்

மறுநாள் காலையில் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு என் மனைவி குழந்தைகளுடன் பேருந்து மூலம் திருச்சி வந்து, நிலையத்தில் உணவு கொண்டு 1-30 புறப்படும் இருப்பூர்தியில் ஏறி மாலை 4.45க்கு காரைக்குடி வந்தடைந்தோம்.

**நினைவு - 15 :** 1968 ஆம் ஆண்டு ஜுன் 1 குடும்பத்துடன் சோழநாட்டுத் திருத்தலம் பயணம் தொடங்கி சிதம்பரம், திருவாரூர், கும்பகோணம், தஞ்சை இந்த இடங்களில் சில நாட்கள் தங்கி சுற்றுபுற திவ்விய தேசங்களையெல்லாம் சேவித்துக்கொண்டு ஒருநாள் கோட்டாத்தூர் சென்று உறவினர்களை சந்தித்து அளவளாவலாம் என்று திட்டமிட்டுக் கோட்டாத்தூர் சென்றேன். நல்லப்ப ரெட்டியார் மனைவி நோய்வாய்ப்பட்டு காலகதி அடைந்தார் என்ற செய்தி தான் முதலில் எங்களை எட்டியது. நாங்கள் திருத்தலப் பயணத்திலிருந்த போது திருப்பதிக்கு அஞ்சலில் அனுப்பிய செய்தி எங்களை எட்டவில்லை. குடும்பத்துடன் கேதம் விசாரிக்க வந்தது போலாயிற்று எங்கள் நிலை! என் தம்பி கணபதி வீட்டிலும் நல்லப்ப ரெட்டியார் வீட்டிலுமாக இரண்டிரண்டு நாட்கள் தங்கி திருச்சி வந்து திருப்பதி திரும்பினோம்.

**நினைவு - 16 :** 1981-ஆகஸ்டு வாக்கில் திருச்சிப்பக்கம் ஏதோ அலுவலாக வர நேர்ந்தது. கோட்டாத்தூர் சென்று K.N. நல்லப்ப ரெட்டியாரைப் பார்க்க நினைத்தேன்; வந்தேன். திரு ரெட்டியார் படுத்த படுக்கையாக இருந்தார்; சிறிதளவே பேச்சு இருந்தது. சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தேன். எல்லாம் அரை நினைவில்தான் பேசினார். சென்னை திரும்பினேன். சில நாட்கள் கழிந்தன. சிவப்பேறு அடைந்த செய்தியைத் தெரிவித்தனர். திருமேனியைச் சென்று பார்க்கும் நேரம் போத வில்லை. சென்னையிலிருந்து போக வேண்டுமல்லவா? திடீர்ப் பயணம்-முரட்டுப் பயணம்-என் உடலுக்கு ஒத்துக்கொள்வதில்லை ஆனால் அவருடைய திருமேனி அவர்

வாங்கி விருத்தி செய்த நிலப்பகுதியிலேயே (பரளியான் தரிசு) அடக்கம் செய்யப்பெற்றதாக அறிந்து மகிழ்தேன்

K.N. நல்லப்ப ரெட்டியார் நல்லவர்; வல்லவர்; மனத்துக்கண் மாசில்லாதவர். குடிப்பண்பு காத்து வாழ்ந்தவர். சிற்றினம் சேராத சீர்மையர் ஒரு சிற்றூரில் பிறந்து நேர்மையும் நேசமும் பாசமும் மிளிரப் ''பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்'' என்ற பொன்மொழிக்கிணங்க வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தவர். இத்தனைக்கும் மேலாக பல்வேறு நோய்களை குலதனமாகக் கொண்டு அவை தரும் துன்பங்களை இன்முகத்தோடு சகித்துக் கொண்டு "எல்லாம் இறைவனது சித்தம்" என நினைத்து பக்தியநுபம் போல், இறையநுபவம் போல், நோயநுவத்தையும் மகிழ்ச்சியுடன் அநுபவித்த "ஆச்சரிய பூதன்" என்றும் சொல்லி வைக்கலாம். இஃது அவருடைய பிராரப்தம் - நுகர் வினையால் - விளைந்தது. என் இளமைகாலத்திலிருந்தே என்மீது பரிவும் பாசமும் காட்டிய பெருமகனார். அன்னவர் பிரிவு உற்றார் உறவினர் அடைந்த வருத்தத்தை விடச் சற்று அதிகமாக சீவோன் அடைந்ததை நினைவு கூர்கின்றேன்.

**நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை உடைத்துஇவ் வுலகு**[7]

*பிறப்பு 25.12.1908* *சிவப்பேறு 1.9.1981*

7. குறள் - 336

# 2

# திரு. K. இராமச்சந்திர அய்யர்

கல்வி புகட்டுவதில் இருமுறைகள் வழக்கத்திலுள்ளன. ஒன்று: பழைய முறை இதன்படி பாடத்தை மையமாகக் கொண்டு குழந்தைக்குக் கற்பித்தல். மற்றொன்று புதியமுறை: இதன்படி குழந்தையை மையமாகக் கொண்டு கல்வி புகட்டுதல். புதியமுறைக்கு வித்திட்டவர் ரூசோ (கி.பி. 1712-1778). இதனால் இவர் கல்விமுறையின் காபர்னிகஸ் என்று கூறுவர். பண்டையோர் பூமியை நடுவாகக் கொண்டு கதிரவன் முதலிய கோள்கள் இயங்குகின்றன என்று கருதிவந்தனர். காபர்நிகஸ் கதிரவனை நடுவாகக் கொண்டு பூமி முதலிய கோள்கள் இயங்குகின்றன என்ற உண்மையை உலகிற்கு உணர்த்தினார். இவரைப் போலவே ரூசோ கல்வி ஏற்பாட்டினைக் (Curriculum) நடுவாகக் கொண்டு கற்பிக்கப் பெற்ற முறையைத் தவறு எனக் கண்டித்துக் குழந்தையை நடுவாக வைத்துக் கற்பிக்கும் முறைதான் ஏற்றது என்று கூறினார் இவர் கொள்கை உளவியல் உண்மைகளை ஒட்டியும் உள்ளது திரு. இராமச்சந்திர அய்யர் (1931-34) இரண்டு முறைகளையும் தெளிவாகப் புரிந்து கொண்டவர். மாணவனைத்தான் இவர் முக்கியமாகக் கொண்டார்; பாடத் திட்டத்தை அவனது மனத்திற்கேற்றவாறு பக்குவப்படுத்திக் கொள்வார். இன்று பால், கேழ்வரகு, கோதுமை அரிசி மாவைக் குழந்தைகளின் செரிமானத்திற்கேற்றவாறு பக்குவப்படுத்தி விற்கப் பெறுகின்றன அல்லவா? அவைபோல் இன்று பாட நூல்கள் எவ்வளவு கவனமாக எழுதப்பெற்ற போதிலும் அவற்றைப் பல ஆசிரியர்கள் சரியாகக் கையாளத் தெரியாதலால் எல்லாப் பாடங்கட்கும் வெற்றித் துணைவன் என்பது போன்ற பாடக் குறிப்புகள் (Notes) புத்தகச் சந்தையில் வெள்ளம் போல் பெருகி

வருவதைக் காணலாம் அந்தக் காலத்தில் ஆங்கிலம். தமிழ் ஆகிய பாடங்கட்கு மட்டிலும், அதுவும் பள்ளியிறுதித் தேர்வுகள், இடைநிலைத் தேர்வுகள், இளங்கலைப் பட்டத் தேர்வுகள் - ஆகியவற்றுக்கு மட்டிலும், பாடக்குறிப்பேடுகள் தலைகாட்டின

பயிற்றும் முறையைக் குறித்து நச்சினிர்க்கினயர்,

**ஈதல் இயல்பே இயல்புறக் கிளப்பின்**
**பொழிப்பே அகலம் நுட்பம் எச்சமெனப்**
**பழிப்பில் பல்லுரை பயின்ற நாவினன்**
**புகழ்ந்த மதியிற் பொருந்தும் ஓரையில்**
**நிகழ்ந்த அறிவினன் தெய்வம் வாழ்த்திக்**
**கொள்வோன் உணர்வகை அறிந்தவன் கொள்வகை**
**கொடுத்தல் மரபெனக் கூறினர் புலவர்**

என்று காட்டும் நூற்பாவினால் அறியலாம்.

**ஈதல் இயல்பே இயம்பும் காலைக்**
**காலமும் இடமும் வாலிதின் நோக்கிச்**
**சிறந்துழி இருந்துதன் தெய்வம் வாழ்த்தி**
**உரைக்கப் படும்பொருள் உள்ளத் தமைத்து**
**விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து**
**கொள்வோன் கொள்வகை அறிந்துஅவன் உளங்கொளக்**
**கோட்டமில் மனத்தின்நூல் கொடுத்தல் என்ப.**[1]

என்பது நன்னூலாசிரியரின் கூற்று.

"ஈதல் இயல்பு" என்பது பண்டையோர் குறிப்பிடும் பயிற்று முறையாகும். "காலமும் இடமும்" என்பதைத்தான் இக்காலத்தார் "தகுந்த சூழ்நிலை" (Proper environment) என்று கூறுவர் "உரைக்கப்படும் பொருள் உள்ளமைத்தல்" என்பது பாட ஆயத்தத்தைக் (Lesson planning) குறிக்கும். "கொள்வோன் கொள்வகை அறிந்து" என்பது ஹெர்பார்ட் என்ற கல்வி வல்லுநர் கூறும் "மனத்தைத் தயாரித்தல்" (Preparation) என்ற படியில்

1 நன்னூல் - நூற் 36

அடங்குகின்றது[2] சிலர் இதை "ஆசிரியர் பாடம் தயாரித்தல்" என்று கூறுவது பொருந்தாது. பி.ஏ., பி.எட். படித்த ஆசிரியர் "இலாப நட்டம்" கணக்கைத் தயாரித்துக் கொண்டு வந்து போதித்தல் என்பது தவறு. அவர் இதனை மாணாக்கர் மனத்தில் ஏற்றுவதற்கு எப்படி அவர்தம் மனத்தைப் பக்குவப்படுத்தி ஏற்ற வேண்டும் என்று கொள்வதே பொருத்தமாகும்.

நான் துறையூர் உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியனாக ஒன்பதாண்டுகள் (1941-1950) பணியாற்றியபோது முதற் படிவத்தி லிருந்து பள்ளியிறுதித் தேர்வு வரை பொது அறிவியலும், நான்காம் படிவத்திலிருந்து பள்ளியிறுதித் தேர்வு வரை ஆரம்ப கணிதமும், ஐந்து ஆறு படிவங்களில் இயற்கணிதமும் (Algebra) வடிவ கணிதமும் (geometry), பள்ளியிறுதித் தேர்வு (ஆறாம் படிவம்) மாணாக்கர்கட்கு ஆங்கிலமும் கற்பித்தேன். இக்காலத்தில் எ-பிரிவு சி-பிரிவு பாடங்கள் யாவும் தமிழிலேயே கற்பிக்கும் முறை நடைமுறைக்கு வந்துவிட்டது. ஒன்பதாண்டுகள் துறையூரிலிருந்த போது இடைநிலைப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், பி.டி. தேர்வு பெற்ற ஆசிரியர்கள், தமிழ் கற்பித்த தமிழாசிரியர்கள் இவர்கள் கற்பிக்கும் முறையைக் காணும் வாய்ப்பும் இருந்தது.

ஒன்பதாண்டுகட்குப் பிறகு காரைக்குடி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிப் பேராசிரியனாகப் பத்தாண்டுகள் (1950-60) பணியாற்றியபோது தமிழ் பயிற்றும் முறைகளைப் பற்றிச் சிந்திக்கவும், சிந்தித்தவற்றைப் பயிற்சி பெறும் பி.டி. வகுப்பு மாணாக்கர்கட்குச் சொல்லவும் வாய்ப்பு ஏற்பட்டது. இது தவிர, உள்ளூர் சுற்றுப்புற ஊர்களிலுள்ள உயர்நிலைப் பள்ளிகட்கு பி.டி. மாணாக்கர்களை இட்டுச் சென்று அப்பள்ளிகளில் பாடங்களைப் பயிற்று முறைகளைக் கவனிக்கச் செய்யவும், கவனித்தவற்றைப் பயிற்சி மாணவர்களிடம் கலந்தாயவும் வாய்ப்புகள் இருந்தன.

2 ஆசிரியர் பாடத்தை விளக்குதலை Preparation, Presentation, Comparison, Generalisation, Application என்று ஹெப்பார்ட் ஐந்து படிகளாகக் காட்டுவர்

இக்காலத்தில் பயிற்றுமுறைகள், கல்வி உளவியல்பற்றிய பல்வேறு நூல்களைப் பயிலவும் பயின்றவற்றைச் சிந்திக்கவும், சிந்தித்தவற்றை மாணாக்கர்கட்கு எடுத்துச் சொல்லவும், அவர்களுடன் கலந்தாயவும் வாய்ப்புகள் இருந்தன[3]

பத்தாண்டுகள் இங்குப் பணியாற்றிய பிறகு திருப்பதி பல்கலைக் கழகத்தில் பதினேழு ஆண்டுகள் (1960-77) பணியாற்றிய போது பி ஏ, எம் ஏ., எம் பில், பிஎச் டி. மாணாக்கர்கட்குத் தமிழ் கற்பிக்கவும் ஆராய்ச்சிக்கு வழி காட்டவும் வாய்ப்புகள் நேரிட்டன நீண்ட என் கல்வி வாழ்வில் ஓய்வு பெற்ற பிறகு உயர் நிலைப் பள்ளிகளில் எனக்குக் கற்பித்த முறைகளைப்பற்றி நினைவு கூரும் போது சில சமயம் சில நாட்கள் தமிழ் இலக்கியம், தமிழ் இலக்கணம் இவற்றில் பாடம் சொன்ன பெரும் பேராசிரியர்களும் நினைவிலி ருந்து பேசுவதையும் உணர முடிகின்றது. ஆசிரியரே இன்றி குருபக்தியுடன பயின்ற ஏகலைவனின் வரலாறும் சிந்தனையில் எழத்தான் செய்கின்றது. சுமார் முப்பது ஆண்டுகட்கு மேல் வைணவ தத்துவம் பயின்ற நிலையில் ஆசாரியன் சீடனுக்குக் கற்பிக்கும் போது ஆசாரியன் தன் ஆச்சாரியனை நினைவில் கொண்டு அவர் கற்பித்த பாங்கில் கற்பிக்க வேண்டும் என்பதையும் அறிந்து கொள்ள வாய்ப்புகள் கிடைத்தன. இந்த அநுபவ அடிப்படையில் திரு கே. இராமச்சந்திர அய்யரை நினைவுகூர்கின்றேன்.

**நினைவு - 1 :** ஆரம்ப கணிதம் இயற்கணிதம், வடிவகணிதம் இவற்றைக் கற்பித்த முறைகள் நினைவில் எழ, இவற்றைக் கற்பித்த ஆசிரியர் என் உள்ளத்தில் குறிக்கோள் ஆசிரியராக நிரந்தர இடத்தைப் பெறுகின்றனர். கற்றலில் அக்கறையை உண்டாக்கல் கற்பிக்கும் முறையின் உயிர்நாடி என்பதை நன்கறிந்தவர் திரு. கே. இராமச்சந்திர அய்யர். "அக்கறை

3 இந்தப் பட்டறிவின் அடிப்படையில் (1) தமிழ் பயிற்றும் முறை, (2) அறிவியல் பயிற்றும் முறை, (3) கல்வி உளவியல், (4) கவிதை பயிற்றும் முறை (5) கவிதையநுபவம் ஆகிய நூல்களை எழுதி வெளியிட வாய்ப்புகள் ஏற்பட்டன.

கற்றலின் ஈர்ப்பு விசை" என்பதை நன்கு அறிந்து பணியாற்றியவர் திரு. கே.ஆர். அவர்கள் (கே.ஆர். என்றே நாங்கள் அவரைக் குறிப்பிடுவோம்). சிறார்களின் வயதுக்கேற்றவாறு மனவளர்ச்சி இருக்குமென்றும், இதற்கேற்றவாறு அவர்களின் விருப்பமும் மாறக்கூடியதென்றும் உளவியல் அறிஞர்கள் கூறுவதைத் தம் அநுபவத்தால் நன்கு தெளிந்தவர். ஹெர்பார்ட் கூறும் மனத்தைத் தயாரித்தல், எடுத்துக்கூறல், ஒப்பிடல் பொதுவிதி காணல், விதியைச் செயற்படுத்தல் என்ற ஐந்து படிகளையும் தம் அநுபவமாக்கிக் கொண்ட நல்லாசிரியர்.

ஹெர்பார்ட்டின் ஐந்து படிகளில் மனத்தைத் தயாரித்தல் மிகவும் முக்கியமானது. அறிவு மூன்று விதமாக வளர்ச்சியைடகின்றது; பழைய அறிவுடன் புதிய பொருள்கள் சேர்வதாலும் இவ்வாறு பெறும் செய்திகள் அநுபவமாக மாறுவதாலும், புதிய செய்திகளின் தொடர்புகளை மேலும் மேலும் கண்டறிவதாலும் அறிவு வளர்ச்சியடைகின்றது என்று கல்வி வல்லுநர்கள், உளவியல் சான்றோர்கள் கூறுவர். இவற்றுள் மூன்றாவது முறையே முக்கியமானது. ஏற்கெனவே அறிந்துள்ளவற்றுடன் புதிய செய்திகளை இணைத்தால்தான் அவை நன்கு பொருந்திய அநுபவமாகும். எனவே கற்பிக்கும், ஆசிரியர் மாணாக்கர்களின் முன்னறிவினைச் சில வினாக்களால் சோதித்து அறிதல் வேண்டும். இதனை அறியாது கற்பிக்கும் ஆசிரியரின் முயற்சி கொன்னே கழியும். கற்பிக்கும் பாடத்தையொட்டி ஒரு சில தேர்ந்தெடுத்த வினாக்களை விடுத்தால் மாணாக்கர்கள் ஏற்ற விடைகள் பகர்வர். அவ்விடைகளிலிருந்து அவர்களின் முன்னறிவுத் திரளையை (Apperceptive mass) தெரிந்து கொள்ளலாம். இந்தப் படியைச் "சிக்கனப் பிடித்துக் கொண்டு" திரு. கே.ஆர். கற்பித்தார் என்பதை இப்போது நினைவுகூர முடிகின்றது.

**நினைவு - 2 :** இந்த நல்லாசிரியர் வகுப்பிற்குள் நுழைவதே அற்புதமாக இருக்கும். பஞ்சகச்சம், மூடிய நிலையிலுள்ள மேலங்கி (Close coat) அணிந்திருப்பார்; சாதாரணமாக பிஸ்கோத்து நிறம், பாலாடை (Cream) நிறம் கொண்ட துணிகளாலேயே இவை செய்யப்

பெற்றிருக்கும் முல்லைமலர் போன்று நல்ல வெளுப்பான துணியாலான தலைப்பாகை இவர் தலையை அணி செய்யும். நெற்றியில் திகழும் திருநீற்றுப் பட்டையும், சந்தனப் பொட்டும் இவர்தம் பொன்னிற முகத்திற்குப் பொலிவூட்டும்; புன்முறுவல் பூத்தமுகம் அறிவொளியை வீசி நிற்கும். இவர் வகுப்பில் அமர்வதே இல்லை; இவர் அங்கவஸ்திரம் அணிவதில்லை. வகுப்பில் நுழையும் போதே கரும்பலகைத் துடைப்பான் (சாம்பல் நிறத் துணியாலானது), நாலைந்து சுண்ணக்காம்புகள் கொண்டு வருவார், வரலாற்று ஆசிரியர் கதை சொல்லுவது போல் ஆரம்ப கணிதத்திலுள்ள கணக்கின் சூழ்நிலையை உண்டாக்கி விடுவார். இலாப-நட்டம், கூட்டு வாணிகம், வட்டிக் கணக்கு, கூடுவட்டி (Compound Interest) இவற்றைக் கற்பிப்பது அற்புதமாக இருக்கும் வகுப்பறையிலி ருப்பதை மறந்து அங்காடித் தெருவில் இருப்பது போன்ற சூழ்நிலையை உண்டாக்கிவிடுவார் நாங்களே முதல் போட்டுக் கூட்டு வாணிகம் நடத்துவது போலவும், கந்து வட்டிக் கந்தாமிக் கடையில் வட்டிக்குக் கடன் வாங்குவது போலவும், காஃபிப் பொடிக் கடையில் காஃபித்தூளில் சிக்கரித் தூளைக் கலப்பது போலவும், மண்டியில் தேங்காய் சருக்கரை மூட்டைகள் வண்டியில் வந்து இறங்குவது போலவும் உணர்ச்சியை எழுப்பி விடுவார். கற்பிக்கும் செய்திகள் அன்றாட வாழ்க்கையில் இணைந்து விடுவதால் கணக்கு பற்றிய புள்ளி விவரங்கள் கரும்பலகையில் மணிமணியான எழுத்துகளால் பொறிக்கப் பெறும்போது கருத்துகள் மனத்தில் ஆழப்பதிந்து விடுகின்றன.

**நினைவு - 3** : "காலமும் தூரமும்" (Time and Distance) என்ற ஆரம்ப கணிதப் பாடப் பகுதியை மிகுந்த உற்சாகத்துடன் கற்பித்தமை இப்போது நினைவில் குமிழியிடுகின்றது. (1) 900 அடி நீளமுள்ள சரக்கு இரயில் மணிக்கு 20 மைல் வேகத்தில் வருகிறது; அதன் எதிர்த் திசையிலிருந்து 660 அடிநீளமுள்ள விரைவு இரயில் வண்டி 40 மைல் வேகத்தில் வந்து கொண்டிருக்கின்றது இரண்டு வண்டிகளும் ஒன்றையொன்று கடக்க எவ்வளவு நேரம் ஆகும்? (2) 800 அடிநீளமுள்ள பயணிகள் வண்டி மணிக்கு 30 மைல் வீதம்

செல்கிறது. இது இரயில் வண்டி மேடையை 2 நிமிடங்களில் கடந்து சென்றால் மேடையின் நீளம் என்ன? இம்மாதிரியான கணக்குகளைக் கற்பிக்கும்போது மாணாக்கர்கள் இரயில் வண்டிகள், இரயில் நிலையம், எதிர்த் திசையில் வரும் வண்டிகள், ஒரே திசையில் வெவ்வேறு வேகங்களில் செல்லும் வண்டிகள் இவற்றை மானசீகமாப் பார்த்தல் வேண்டும். அக்காலத்தில் நாட்டுப்புறங்களிலி ருந்து வரும் மாணாக்கர்களில் பெரும்பாலோர் இரயிலைப் பார்க்காதவர்கள். நகர்ப்புறங்களிலிருந்து வரும் மாணாக்கர்கள் இரயிலைப் பார்த்திருந்தபோதிலும், இத்தகைய கணக்குகளைச் செய்யும்போது மானசீகப் பார்ப்பது அருமை; நேரில் பார்க்கும்போது ஒருவித தெளிவும் பெற வாய்ப்புண்டு ஆகவே, மாணாக்கர்களிடம் அக்கறை தோன்றவும், கணக்கு போடுவதற்கு அவர்கள் மனத்தைத் தயாரிக்கவும் திரு கே. இராமச்சந்திர அய்யர் தம் வகுப்பு மாணாக்கர்களை முசிறியிலிருந்து படகுகள்மூலம் குழித்தலைக்கு இட்டுச் செல்வார். காலை உணவு உண்டு, கையில் சிற்றுண்டியை எடுத்துக் கொண்டு சுமார் பத்து மணிக்குப் புறப்படுவோம். குழித்தலை இரயில் நிலையத்தில் எதிர்த்திசையில் வண்டிகள் வருவதைப் பார்ப்பதற்கும், வண்டிகள் நிலைய மேடையைத் தாண்டுவதை நேரில் காண்பதற்கும், பல மணி நேரம் “தவம்” கிடப்போம் வண்டிகள் வராதபோது, வண்டிகள் மேடையைக் கடப்பதைபற்றி விளக்குவார் கணக்கு ஆசிரியர் நிலையத்தின் ஒரு கோடியை இஞ்சின் தொட்டு, மறு கோடியை வண்டியின் கடைசிப் பெட்டி கடப்பதைத்தான் வண்டி மேடையைக் கடந்தது என்ற உண்மையை விளக்குவார். வண்டிக்காகக் காத்திருக்கும் நேரத்தில் கணக்குபற்றிய பல்வேறு குறிப்புகளைத் தந்து விளக்குவார்.

இவர் இயற்கணிதத்தில் வாய்பாடுகளைக் (Formulae) கற்பிப்பதிலும் அவற்றின் அடிப்படையில் கணக்குகள் செய்யும்போது ஒவ்வொரு படியிலும் இந்த வாய்பாடுகள் விரிந்து செல்வதைப் பொருத்திக் காட்டுவதிலும் அற்புதமான கைவரிசைகளைக் காட்டுவர். வடிவகணிதத்தில் கடாத் தீர்வுக் (Riders) கணக்குகள் போடும்போது மாணாக்கர்கள் ஒவ்வொரு

படியிலும் சிந்திக்க வாய்ப்புகள் தருவார் இக்கணக்கைச் செய்யும்போத முதலில் கரும்பலகையில் வரைபடத்தைப் போட்டு மாணாக்கர்களை சிந்திக்க வைப்பார், துப்புத் துலங்காமல் விழிக்கும் எங்களை வரைபடத்தில் வினைவழியை (Construction) வரைந்து மேலும் சிந்தனையைத் தூண்டுவார் திருக்கோயிலில் அலங்கார தீபம் காட்டும்போது கருவறையில் ஆண்டவனின் திருவுருவம் நன்கு புலப்படுவதுபோல் வரைவழி வரைந்து காட்டியவுடன் கணக்கின் தீர்வு (Solution) பளிச்சென்று பலருக்குத் தட்டுப்படும் வினாக்களை விடுத்துக் கொண்டே படிப்படியாகக் கணக்கின் தீர்வை எழுதிக் காட்டுவார், எங்கட்கெல்லாம் இராமலிங்க அடிகள் காட்டும் “ஜோதி”யைத் தரிசித்தது போன்ற உணர்வு கிளர்ந்தெழும்.

திரு. கே. ஆர். நல்ல அநுபவம் பெற்ற தெலுங்குப் பார்ப்பனர். கருவிலே திருவுடையவர். அதாவது பிறவியிலேயே ஆசிரியர்க்கூறு வாய்க்கப் பெற்றவர். பயிற்சிக் கல்லூரியில் தாம் பெற்ற பயிற்சியும், நீண்ட நாள் கற்பித்த அநுபவமும் அவரைச் சிறந்த ஆசிரியராகச் செய்து விட்டன. தவிர, இவர் கல்வி புகட்டுதலில் மாணாக்கன்தான் மையமேயன்றி புகட்டப்பெறும் பாடம் அல்ல என்ற ரூசோவின் கொள்கையை மறையாகக் கொண்டு கற்பித்த பெருமகனார். முலைப் பாலையும் விலைப் பாலையும் குழந்தையின் செவ்வியறிந்து ஊட்டும் அன்னையைப் போலவே, மாணக்கர்களின் மனநிலை தெரிந்து விதி வருமுறையையும் (Inductive method) விதி விளக்கு முறையையும் (Deductive method) கலந்து கையாளும் வித்தகர். இவர் கற்பித்த முறைதான், ஊட்டிய உணர்வுதான் பட்டப் படிப்பு முடியும் வரையிலும் என்னைக் கணிதத்தில் தலையாய மாணாக்கனாகத் திகழச் செய்தது என்பதைப் பக்தியுடனும் நன்றியுடனும் நினைவு கூர்கின்றேன்.

**நினைவு - 4** : நான் முசிறியில் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்த போது (ஜூன் 1931) பள்ளி புதிதாக கட்டப் பெற்ற கட்டத்திற்கு வந்து விட்டது. பழைய கட்டடம் (வட்ட அலுவலகத்திற்கு எதிரிலுள்ளது) ஐயம்பாளையம் தாண்டவராய பிள்ளையவர்கட்குச் சொந்தமானது. பள்ளி இதில் நடைபெற்றபோது மாவட்ட வாரியம்

வாடகை தந்திருக்க வேண்டும். இப்போது இக்கட்டடம் மாணாக்கர் விடுதியாக மாறியிருந்தது. இஃது திரு. கே.ஆர் அவர்களின் தன்னலமற்ற பணியின் விளைவு. சுற்றுப்புற ஊர்களிலிருந்து கல்வி பயிலும் மாணாக்கர்கள் உணவு விடுதிகளில் உண்டு தங்குவதற்கு இடவசதியின்றித் தொல்லையுறுவதையும், ஐந்தாறு கல் தொலைவு நடந்தே பள்ளிக்கு வரும் மாணாக்கர்கள் அல்லலுறுவதையும் கவனித்த திரு. கே.ஆர். உள்ளத்தில் இப்படி மாணாக்கர் விடுதி (Students Hostel) ஒன்றைத் தொடங்கவேண்டும் என்ற எண்ணம் கால் கொண்டது. ஐயம்பாளையம் பிள்ளையவர்களிடமிருந்து கட்டடத்தை வாடகையின்றி இலவசமாகப் பெற்றார். இந்தக் கட்டடத்தில் சுமார் முப்பது மாணாக்கர்களைக் கொண்டு விடுதி தொடங்கப் பெற்றிருந்தது. இவர்கட்குத் தேவையான முப்பது மேசைகள், கையில்லாத முப்பது நாற்காலிகள், நூல்கள் வைத்துக் கொள்ள சுவர்நிலைத் தட்டுகள் (Shelves) இவற்றைப் பள்ளிக் கட்டடத்தை ஒப்பந்த வேலையாக ஏற்று முடித்த நாரணமங்கலம் (பெரம்பலூர் வட்டம்) திரு. கணபதி ரெட்டியாரிடம் இலவசமாகப் பெற்றார். அதேபோல் விடுதி அலுவலகத்திற்குத் தேவையான மேசை, நாற்காலி, பீரோக்களையும் இலவசமாகவே பெற்றார். விடுதி பொறுப்பு முழுவதும் இவர் வசத்திலிருந்தது. வரவு செலவு கணக்குகளைத் தயாரிக்க, கறிகாய்கள் வாங்க சந்தை சென்று வர, மளிகை சாமான்கள் வாங்கும் ஏற்பாடுகளைக் கவனிக்க திரு. சிவராம கிருஷ்ணய்யர் என்ற ஓர் இடைநிலை ஆசிரியர் இவருக்கு உதவி செய்து வந்தார். அக்காலத்தில் மாதச் செலவு ரூ. 12, 13க்கு மேற்படாமல் மாணாக்கர்கள் எல்லா வசதிகளையும் பெற்றனர்.

**நினைவு – 5 :** அந்தக் காலத்தில் திரு. கே.ஆரின் தொண்டு பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பெற வேண்டியதாக இருந்தது. நாட்டுப்புறங்களிலிருந்து நகர்ப்புறத்திற்குக் கல்வி பயில வரும் சிறுவர்கள் சீர்கெட்டுத் "தான் தோன்றிகள்" ஆகாமல் ஒழுங்காகப் படித்து முன்னேற்றம் அடைவதற்கு கே.ஆர். நிறுவிய "மாணாக்கர்கள் விடுதி" ஒரு புகலிடமாக இருந்தது. கே.ஆருக்கு ஓர் ஆண் பிள்ளையும் இரண்டு பெண் பிள்ளைகளும் இருந்தனர்.

தம் குடும்பத்தைக் கூட அதிகம் கவனிக்காமல் தாம் நிறுவிய சுமார் முப்பது மாணாக்கர்கள் அடங்கிய மாணாக்கர் விடுதியான "பெருங்குடும்பத்தில்"தான் அதிக அக்கறை செலுத்தி வந்ததை அக்கால மக்கள் நன்கு அறிவார்கள்; விடுதியில் தங்கியிருந்த நாங்கள் நன்கு அறிவோம்.

அதிகாலையில் நாலரை ஐந்து மணிக்கு வந்து எல்லோரையும் "திருப்பள்ளிஎழுச்சி" செய்து விடுவார். அவர் இல்லம் முசிறி அக்கிரகாரத்தில் இருந்தது. அக்கிரகாரத்தின் கீழ்க்கோடியில் மாணாக்கர் விடுதி இருந்தது. அவர் இல்லத்திற்கும் மாணாக்கர் விடுதிக்கும் சுமார் 100/= கெ. தொலைவுதான் இருக்கும். காலையிலும் மாலையிலும் மாணாக்கர் விடுதிக்கு வருகை புரிவதில் தவற மாட்டார், நாட்டுப்புறத்திலிருந்து வந்த சிறுவர்கள் உருப்படியாவதற்குக் கே.ஆர். மேற்கொண்ட பணி பெரியது; மிகப் பெரியது. அதிகாலையில் மாணாக்கர்கள் ஒரு மணிநேரம் படிக்க வேண்டும் என்பது கட்டாயம். அதன்பிறகு காவிரியில் நீராடப் போக வேண்டும் ஒரு மணி நேரத்தில் திரும்பி சுமார் ஒன்றரை மணி நேரம் வீட்டு வேலை (Home work) செய்ய வேண்டும். மாலையில் ஒரு மணிநேரம் மாணாக்கர்கள் கூடி இறைவழிபாட்டுப் பாடல்களை இசைக்க வேண்டும். கலைமகள் சந்நிதியில் வாரம் ஒருமுறை - சனிக்கிழமை அன்று - எல்லோருக்கும் எண்ணெய்க் குளியல். வெந்நீர் வசதி உண்டு அன்று.

**நினைவு - 6** : நான் சிறு வயதில் மோர், தயிர், நெய் ஏராளமாக உண்டதாக என் அன்னை சொல்வார்கள். "திருஷ்டியின்" காரணத்தால் இவற்றை உண்ணும் நிலை இல்லாது போயிற்று. ஆனால் பால் பருகும் பழக்கம் அன்றுமுதல் இன்றளவும் இருந்துவருகின்றது. எப்படியோ கே.ஆர். என்னைத் தயிர், மோர் உட்கொள்ளும் பழக்கத்தை ஏற்படுத்தி விட்டார். முதலில் பலவிதமான தயிர் பச்சடிகளை உட்கொள்ளும் பழக்கத்தை உண்டாக்கினார்; வெங்காயம், தேங்காய், காரட், வெள்ளரிக்காய், தக்காளி போன்றவை கலந்த தயிர்ப் பச்சடிகளின் சுவையைக் காட்டச் செய்தார்; அவற்றை உண்ணும் பழக்கத்தை ஏற்படுத்தினார். மோர்

நன்றாகக் கலந்து, எலுமிச்சை பழம், இஞ்சி, பெருங்காயம், கறிவேப்பிலை, கொத்தமல்லித் தழை முதலியவற்றைச் சேர்த்து மணமூட்டி உட்கொள்ளச் செய்துவிட்டார். இவற்றை உட்கொள்ளும் பழக்கம் கைவரப்பெற்ற பிறகு இன்றளவும் இவை இல்லாமல் உணவு கொள்வதில் மனநிறைவு ஏற்படுவதில்லை சுவையாகச் செய்யப் பெற்ற "ததியோதனம்" இப்போது வானமிழ்தம் போல் இனிக்கின்றது. அதனை மிகச் சுவைத்து உண்பேன்.

ஆனால் நெய் உண்ணச் செய்ய அவர் மேற்கொண்ட முயற்சி பலிக்கவில்லை. எவ்வளவோ சாணக்கியம் செய்து பார்த்தும் அது வெற்றியடையவில்லை. ஒரு சமயம் காலையில் இராகவேந்திரராவ் என்ற பரிமாறும் இளைய பரிசாரகரிடம் சோறு எடுக்கும் தட்டில் இரண்டு கரண்டி நெய்யை விடச் சொல்லி பரிமாறிக் கொண்டு வரும் போதே நெய் விட்ட பகுதியை என் இலையில் தள்ளி விடச் செய்தார். பருப்பு போட்டுப் பிசைந்த உணவை வாயில் வைத்ததும் உமட்டிக் கொண்டு வாந்தி பண்ணும் நிலை ஏற்பட்டது. உணவு கொள்ளாமல் எழுந்துவிட்டேன். பிறகு வேறு இலை போட்டு உண்டேன். பிறிதொரு சமயம் - ஞாயிறு இரவு - இதே முறை கையாளப் பெற்றது. வெங்காயச் சாம்பார் கலந்த உணவை வாயருகில் கொண்டு சென்றதும் உமட்டிக் கொண்டு வந்தது; உணவு கொள்ளாமல் எழுந்து விட்டேன். பிறகு வேறு இலை போட்டு உணவு கொண்டேன். "பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து"[4] என்னைக் கவனித்த கே.ஆரை. எப்படி நான் மறக்க முடியும்? அது நீங்காத நினைவாக என் மனத்தில் நிலைபெற்று விடுகின்றது.

உணவு வகைகளைப் பற்றியும் அவற்றிலுள்ள சத்துக்களைப் பற்றியும் அதிகமாகப் படித்தறிந்த பின்னரும் உணவில் நெய் கலந்து சாப்பிட முடியாத நிலையை எண்ணும்போது எனக்கே வியப்பாக உள்ளது. நானே விருப்பத்துடன் முயன்றாலும் முடியவில்லை. நெய்தோசை சாப்பிடுகின்றேன். நெய்யில் செய்யப் பெற்ற இனிப்பு வகைகளைப் பிரியமாக உண்கின்றேன். ஆனால் இட்லி சாம்பாரில்

4 திருவா. பிடித்த பத்து-9

நெய் கலந்து சாப்பிட்டால் உமட்டுகின்றது. இன்றளவும் நெய் கலந்த பருப்புச் சோறு, சாம்பார் சோறு உண்பதே இல்லை இஃது எனக்கே வியப்பாக உள்ளது.

**நினைவு - 7 :** நான் கல்லூரியில் படிக்கும் போது மாணவர் விடுதி விஷயமாக கே.ஆர். மிகவும் தொல்லைப்பட்டார் என்பதை அறிந்து வருந்தினேன். முசிறி மலபார் விடுதி இராமசாமி அய்யர் திருமகன் - வேங்கடாசலம் என்பார் - இவர் கே.ஆரின் மாணவர் - தான் இவர் பட்ட தொல்லைக்கெல்லாம் அடிப்படைக் காரணமாக இருந்தார் என்பதும் தெரிய வந்தது விவரம் என்னால் அறியக்கூட இல்லை. பின்னர் கே.ஆர். குழித்தலை கழக உயர்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றி வந்த சமயம். நான் அப்போது துறையூர் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியன். அப்போது மாவட்ட வாரியத் தலைவர் அறியலூர் வேங்கடாசலம் பிள்ளை என்பார். தலைவருக்கும், தலைமை ஆசிரியருக்கும் ஏதோ மனத்தாங்கல். குழித்தலையில் நடைபெற்ற திரு. கே.ஆரின் மகள் திருமணத்திற்கு நானும் தும்பலம் A. சுப்பையா (என் வகுப்புத் தோழர்)வும் சென்றிருந்தோம். சுப்பையா முசிறியில் ஒரு சிறிய கடை வைத்திருந்தார். அப்போது மாவட்ட வாரிய அலுவலகத்திலிருந்து தனியாள் மூலம் ஓர் ஆணை வந்தது அன்று முதல் அவர் ஓய்வு பெற்றுவிட்டார் என்பதாக. கே.ஆருக்கு இது எதிர்பாராத அதிர்ச்சி. நானும், சுப்பையாவும் துன்பப்பட்டோம். உடனே பழைய மாணவர்கள் சார்பில் ஒரு குழு அமைத்து அவருக்கு ஒரு "பொற்கிழி" தருவதாக முடிவு செய்தோம். நான்கு மாதத்தில் சுமார் ரூ. 900/= வசூலானது. முசிறி உயர்நிலைப் பள்ளியில் விழாவொன்று அமைத்து அப்பண முடிப்பை வழங்கினோம். இஃது ஓரளவு கே.ஆருக்கு மனஅமைதி பெறுவதற்குத் துணையாக இருந்திருக்கும். அக்காலத்தில் ரூ. 900/= என்பது ஒரு கணிசமான தொகை.

**நினைவு - 8 :** கே.ஆர் சென்னை வேப்பேரியில் சென்று ஏதோ ஒரு மகளிர் உயர்நிலைப் பள்ளியில் சில ஆண்டுகள் கணித ஆசிரியராகப் பணியாற்றினார். அப்போது நான் காரைக்குடி

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பேராசிரியன் (1950-60). 1953-54 என நினைக்கின்றேன். சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிப் பேரவைக் கூட்டத்திற்கு வந்திருந்தபோது அவரை வேப்பேரியில் சந்தித்து அளவளாவியதாக நினைவு. மகளிர் பள்ளியிலிருந்தும் ஓய்வு பெற்ற பின்னர் மயிலை மணியின் தனிப் பயிற்சிக் கல்லூரி (Mani's Tutorial College) யில் கணித ஆசிரியராகப் பல்லாண்டுகள் பணியாற்றினார். ஒரு சமயம் இவரை இக்கல்லூரியில் சந்தித்து அளவளாவினேன். அப்போது நான் திருப்பதியில் பணிபுரிந்து கொண்டிருந்த காலம். இந்தக் கல்லூரியின் முதல்வர் திரு. சுப்பிரமணியம் இவருடைய மாணாக்கராதலால் இறுதிவரை இவரைத் தம் தந்தை போல் பாராட்டி பாதுகாத்து வந்தார் இவருடைய சதாபிஷேகத்தையும் இவரே தம் செலவில் நடத்தி வைத்தார். நான் திருப்பதியில் பணியாற்றி வந்த காலம் அது (1960-77). ஏதோ முக்கியமானதொரு கருத்தரங்கு என் பொறுப்பில் நடைபெற்று வந்ததால் இந்த விழாவில் நான் கலந்து கொள்ள முடியாதநிலை நேரிட்டு விட்டது. வாழ்த்துச் செய்தி மட்டிலும் அனுப்பி வைத்தேன்.

**நினைவு - 9 :** திருப்பதியில் ஓய்வு பெற்று சனவரி (1978) சென்னையில் குடியேறினேன். அந்த ஆண்டு சூலையில் என் பேத்தியின் ஓராண்டு முடிந்து பிறந்த நாள் விழாவைச் சிறிய அளவில் கொண்டாடினேன். அவ்விழாவிற்கு கே.ஆர். வந்திருந்து குழந்தையை ஆசீர்வதித்தார். வேட்டி, அங்கவஸ்திரம் வழங்கி மரியாதை செய்தேன். அப்போது தமிழ்க் கலைக் களஞ்சியம் (இரண்டாம் பதிப்பு) முதன்மைப் பதிப்பாசிரியராகப் பணியாற்றி வந்த காலம் (பதினைந்து திங்கள்). வண்டி வைத்து துணையுடன் வீட்டிற்கு அனுப்பி வைத்தேன். அப்போது அவர்தம் முதல் மகளுடன் தியாகராயநகரில் (இரயில்வே பார்டர் சாலை) வாழ்ந்து வந்தார். என்ன காரணத்தாலோ அவர் மகனுடன் வாழவில்லை.

அதன் பிறகு ஓரிருமுறை இவரைச் சந்தித்து அளவளாவியதுண்டு. ஒரு முறை ரூ. 100/= தந்தால் உதவியாக இருக்கும் என்றார் (1980 என்பதாக நினைவு). அப்போது நான் கலைக் களஞ்சியப் பணியில் இல்லை. சென்னை வாழ்வில் பொருளாதார

நெருக்கடியில் தரமுடியாத நிலை ஒன்றிரண்டு திங்களில் பரமபதித்தார் சடங்குக்குப் போய் வந்தேன்.

☆ ☆ ☆

கல்வியின் முக்கிய நோக்கங்களுள் ஒன்று சால்பினை வளர்ப்பது. ஆசிரியர் இதில் கவனம் செலுத்தாவிடில் சால்பிற்கு எல்லைக் கோடுகளை யாவர்தாம் வரையறுப்பார்? சால்பினை வளர்க்கும் பொறுப்பு ஆசிரியரையன்றி வேறு எவரும் மேற்கொள்ளல் இயலாது. அப்படி மேற்கொண்டாலும் தக்க பலனைக் காணல் இயலாது. ஆசிரியர்களே மாணக்கர்களின் வீர வழிபாட்டிற்குரியவர்கள். ஆசிரியருக்கு அநுபவம் பெருகப் பெருகச் சால்பினை வளர்க்கும் பெருவழி மிகவும் வியப்பினைத் தருவதாக அமைகின்றது. அந்த வழியில் காணும் ஒவ்வொன்றும் புதியனவாகவே தோற்றமளிக்கும். நன்மையும் தீமையும் நல்கும் ஆற்றலும் இவர்கள் கையில்தான் உள்ளது. இதனை அவர்கள் சரியாக உணர்தல் கூடும். இந்தப் பொறுப்பினை இவர்கள் சரியாக உணர்வார்களாயின் அது சுமக்க முடியாத அளவிற்குப் பெரிதாக இருப்பது தெரிய வரும். கே.ஆர். இவற்றையெல்லாம் நன்கு உணர்ந்து பணியாற்றியவர். என்னிடம் பல நற்குணங்கள் அமைந்ததற்கு இவரே முக்கிய காரணராக அமைகின்றார். இன்று நான் சமூகத்தில் ஓர் அறிஞனாக, நல்லவர்களில் ஒருவனாக, மதிப்பும், மரியாதையும் பெற்று வாழ்பவனாக (வயது 83 இல்) வாழ்வதற்கு இவரும் இவர் போன்ற பல நல்லாசிரியர்களுமே காரணர்களாக அமைந்தனர் என்பது என் நீங்காத நினைவாக அமைகின்றது.

# 3

# வழக்குரைஞர் P. அரங்கசாமி ரெட்டியார்

"பழந்தோழர் தமைக் கண்டு பாசமுடன் அரவணைத்துப்" பேசும் பண்பும், 'நண்பர்களின் மத்தியிலே நகைத்து மகிழும்பேறும்' எனக்கு உண்டு என்று என்னைப் பற்றி திறனாய்வார் என் அரிய நண்பர் திரு. பூ. அமிர்தலிங்கம் (ஓய்வு பெற்ற தமிழ்ப் பேராசிரியர்). அது மட்டுமல்ல; என்னை விட்டு நிரந்தரமாகப் பிரிந்து மீளா உலகம் சென்ற நண்பர்களை அரவணைத்துப் பேசும் பண்பும் - நினைந்து அவர்களைப்பற்றி அசைபோடும் பண்பும் - என்னிடம் உண்டு. அந்தப் பண்பின் அடிப்படையில் என் அருமை நண்பரும் என்னை விட இரண்டாண்டு மூத்தவருமாகிய வழக்குவரைஞர் P. அரங்கசாமி ரெட்டியார் (வைகுந்தத்தில் வாழ்பவர்) பற்றிய நீங்காத நினைவுகளை நான் இங்குப் பதிவு செய்கின்றேன். இவர் துறையூருக்குச் சுமார் எட்டு கல் தொலைவிலுள்ள வேங்கடாசலபுரம் எந்த சிற்றூரில் பிறந்தவர். திருச்சியிலிருந்து 19 ஆண்டுகட்கு முன்னர் மீளா உலகம் சென்றவர்.

**நினைவு - 1** : 1934 ஏப்பிரல் திங்களில் முதன்முதலாக எங்கள் சந்திப்பு நிகழ்ந்தது. அப்போது அரங்கசாமி ரெட்டியார் பி.ஏ. இரண்டாம் ஆண்டு படிப்பில் இருந்தார். நான் பள்ளியிறுதித் தேர்வு எழுதி (முடிவு வெளிவராத நிலை) கல்லூரியில் சேர வேண்டிய நிலையில் இருந்தேன். கல்லூரியில் இடைநிலைவகுப்பில் கணிதம் இயற்பியல் வேதியியல் (MPC) பிரிவில் சேருமாறு பணித்ததார்; புனித சூசையப்பர் கல்லூரியில் சேருமாறும் யோசனை கூறினார். இந்த சந்திப்பு செங்காட்டுப்பட்டி அரங்கசாமி ரெட்டியார் திருமணத்தில் நிகழ்ந்தது நான்கு நாள் திருமணம் மூன்று நாள்

வரகூர் பாகவர்தர் இராமசாமி ரெட்டியாரின் "கதா-காலட்சேபம்" நடைபெற்றது. "சீதா-கல்யாணம்" "பக்த இராமதாஸ் சரித்திரம்" "உருக்குமிணி கல்யாணம்" நடைபெற்றன. சப்ளா கட்டையைத் தட்டிக் கொண்டும், கால்களிலும் கைகளிலும் சலங்களைகளைக் கட்டிக் கொண்டும் தமிழிலும் தெலுங்கிலும் பாடல்களைப் பாடிக் கொண்டும், சிறிது ஆடிக் கொண்டும், "காலட்சேபம்" (அக்.-1998) செய்த முறை இன்றளவும் மனத்தில் பசுமையாகவே உள்ளது. சுமார் பதினான்கு ஆண்டுகட்கு முன்னர் நாமக்கல்லில் நடைபெற்ற திருமணம் ஒன்றில் அவரைச் சந்தித்து மகிழ்ந்தேன். வயது 96ஐத் தாண்டியது என்றார். இன்று அவர் திருநாடு அலங்கரித்து விட்டார் என்பது தெரிந்தது.

பள்ளியிறுதித் தேர்வு வெளி வந்ததும் நானும் தும்பலம் A. சுப்பையாவும் (என் வகுப்புத் தோழர். முசிறிக்கு அருகிலுள்ள தும்பலத்தைச் சார்ந்தவர்) திரு. அரங்கசாமி ரெட்டியாரை வேங்கடாசலபுரத்தில் அவர் இல்லத்தில் சந்தித்து அளவளாவினோம். A. சுப்பையா கல்லூரிப் படிப்பைத் தொடரவில்லை. வாணிகத்தில் இறங்கிவிட்டார்.

சூன் இறுதிவாரத்தில் நான் திருச்சி சூசையப்பர் கல்லூரியில் சேர்ந்தேன். திருச்சி காசியப்பா ராவுத்தர் ஸ்டோர்ஸ் தங்கும் விடுதியில் (திருச்சி டவுன் ஹாலுக்கு அருகிலுள்ளது) அரங்கசாமி ரெட்டியார் தங்கியிருந்த அறைக்கு அடுத்த அறையில் (மாத வாடகை ரூ. 5/=) தங்கியிருந்தேன். இருவரும் காலை 8.30க்குப் புறப்பட்டு மேல் அரண் சாலையிலுள்ள ஆதிகுடிவேங்கடராம அய்யர் உணவு விடுதியில் (மாதம் இரண்டு வேளை உணவுக்கு ரூ. 10/=) உணவுண்டு கல்லூரிக்குப் போய் வருவோம். இரவு 7.30க்குப் புறப்பட்டு உணவு கொண்டு அறைக்குத் திரும்புவோம். அவர் பாடங்களைப் படிக்கும் முறைகளை விளக்கியது இன்றும் நினைந்து பார்க்கிறேன். இரவு 2 மணி நேரப் படிப்பு; அதிகாலை 4 மணிக்கு எழுந்து 3மணி நேரப் படிப்பு; ஒரு மணி நேரம் குளியல் முதலியன. கல்லூரியின் கண்டிப்பான ஒழுங்குமுறையும் என் திறனை வளர்த்தது. இன்றும்கூட (வயது 83இல்) நாடோறும் 10 மணி நேரம் படிக்கிறேன்; எழுதுகிறேன்.

தந்தை செக்யூரா என்ற பாதிரியார் இவரை ஆங்கிலம் (பகுதி-I) எழுதமுடியாமல் செய்துவிட்டதால் இவர் ஜூன் முதல் செப்டம்பர் வரை திருச்சியில் இருக்க வேண்டிய நிலை வந்தது. தெப்ப குளத்துக்கருகிலுள்ள ஒரு முதலியார் விடுதியில் தங்கியிருந்தார் நான் மட்டிலும் காசியப்பா ராவுத்தார் ஸ்டோர்சில் (ஜூன் முதல் செப்டம்பர் வரை) தங்கியிருந்தேன் இரண்டு பார்ப்பன மாணவர்கள் தொல்லை கொடுத்து வந்ததால் நானும் தெப்பகுளத்துக் கருகிலுள்ள மலபார் விடுதிக்கு வந்து விட்டேன். அரங்கசாமி ரெட்டியார் அருகில் இருந்திருந்தால் பார்ப்பன மாணவர் வாலை ஒட்ட நறுக்கியிருப்பார். மலபார் விடுதியில் நல்ல சூழ்நிலை, நன்றாகப் படித்து இடைநிலைத் தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றேன்

**நினைவு - 2 :** நான் சைதைக் கல்லூரியில் படித்து எல்.டி. தேர்வு எழுதியபின் (ஏப்பிரல் - 1941) திருச்சி வழியாகப் பொட்டணம் செல்லத் திட்டமிட்டுத் திருச்சி வந்தடைந்தேன். அரங்கசாமி ரெட்டியார் தொடர்பு கொண்டிருந்ததால், அவர் எழுதிய கடிதப்படி திருச்சி வந்தேன் அப்போது திரு ரெட்டியார் மிகு புகழ்பெற்ற கணபதி அய்யரிடம் வக்கில் பயிற்சி (Apprentice) பெற்று வந்தார். ஆண்டார் தெருவிலுள்ள மாதவ அய்யர் ஸ்டோர்ஸ் விடுதியில் தங்கியிருந்தார். நானும் அங்கு ஒருநாள் தங்கியிருந்தேன். அப்போது துறையூரில் பெருநிலக் கிழவர் நடுநிலைப் பள்ளி ஒன்று தொடங்கப் போவதாக அரங்கசாமி ரெட்டியார் என்னிடம் தெரிவித்து அதன் தலைமையாசிரியர் பதவிக்கு விண்ணப்பம் அனுப்புமாறு யோசனை கூறினார் நல்முறையில் விண்ணப்பம் தயாரிக்கப் பெற்றது. தட்டச்சு செய்யாமல் என் கையெழுத்திலேயே விண்ணப்பம் தயாரிக்கப் பெற்றது தட்டச்சு செய்யாமல் என் கையெழுத்திலேயே விண்ணப்பமும் அதன் இணைப்புகளும் இருக்கலாம் என்று யோசனை கூறினார் திரு. ரெட்டியார் அக்காலத்தில் என்னுடைய தமிழ்க் கை எழுத்தும் ஆங்கிலக் கை எழுத்தும் முத்துக் கோத்தாற் போல் மிக அழாக இருந்தமையால் தட்டச்சு வேண்டா என்று தீர்மானமாயிற்று விண்ணப்பமும் அதன் இணைப்புகளாக (1) பி.எஸ்சி பட்டசான்றிதழ் (2) புனித சூசையப்பர் கல்லூரி முதல்வர்

தந்தை ஜெரொம்டிசௌகாவின் சான்றிதழ் (3) சர்.டி. தேசிகாரியாரிடம் பெற்ற சான்றிதழ் (4) திரு K.C. சப்தரிஷி ரெட்டியார் (காட்டுப்புத்தூர்) அளித்த சான்றிதழ் (5) திரு தி.மூ. நாராயணசாமிப் பிள்ளை அளித்த சான்றிதழ் - இவற்றின் நகல்களும் பதிவு அஞ்சலில் திரு. P.M. வேங்கடாசல துரை, வழக்குரைஞர், துறையூர், திருச்சி மாவட்டம் என்ற முகவரிக்கு அனுப்பிட்டுப் பொட்டணம் (என் மனைவி ஊர்) சென்றேன். திரு. அரங்கசாமி ரெட்டியாருக்கும் அப்போது திருமணமாகியிருந்தது. மாமனார் ஊர் செந்தாரப்பட்டி.

**நினைவு - 3** : 1941-இல் ஜூன் மாதத்தில் அரங்கசாமி ரெட்டியார் துறையூரில் வழக்குரைஞர் தொழிலைத் தொடங்கினார். நானும் அதே ஆண்டில் அதே மாதத்தில் பெருநிலக் கிழவர் நடுநிலைப் பள்ளியில் தலைமையாசிரியர் பணியை ஏற்று என் வாழ்க்கையைத் தொடங்கினேன். நான் பணியாற்றிய பள்ளியும், அவர் பணியாற்றிய மாவட்ட நீதிமன்றமும் **(District Munsif's Court)** எதிரெதிரே இருந்தமையால் அடிக்கடிச் சந்திக்கும் வாய்ப்பிருந்தது. எனக்கு நூற்றுக்கணக்கான வழக்குரைஞர்கள் பழக்கமானவர்கள். ஆனால் தொழிலில் நேர்மையுடன் நடந்து கொள்ளும் இவரைப் போல் மற்றொருவரைக் காண்டல் அரிது. எழுத்தருக்கு மாதச் சம்பளமாக ரூ. 30/= உம் ஒரு கல நெல்லும் தந்தார். எந்த வழக்குரைஞர் அலுவலகத்திலும் ரூ. 10/= க்கு மேல் மாதச் சம்பளம் தருவதில்லை. இவர் அலுவலக எழுத்தருக்குப் பல்வேறுவாத எழுத்து வகைகட்கு (வழக்குப் பிராது, டிக்ரி நிறைவேற்றல் மனு, சாட்சி சம்மன் அனுப்புதல் போன்றவை) இவ்வளவுதான் வாங்க வேண்டும்; இதற்கு மேல் கட்சிக்காரர்களைத் தொந்தரவு செய்து அதிகமாக வாங்குதல் கூடாது. என்பது இவர்தம் கட்டளை. அக்காலத்தில் இவர்தந்த சம்பளம் அரசு அலுவலகத்தில் எழுத்தருக்குக் கிடைத்த ஊதியத்திற்குச் சமமாகும்., வக்கீல் அலுவலக எழுத்தர்கள் எட்டாவது (மூன்றாவது படிவம்) படித்திருந்தால் போதும். ஐந்தாவது வரை படித்தவர்களே பெரும்பாலும் அக்காலத்தில் இப்பணிகளை அநுபவத்தால் செய்து வந்தனர். வேறுவக்கீல் அலுவலகங்களில் பணியாற்றுவோருக்குக்

கட்டணம் வாங்குவதில் எந்தவித நிபந்தனைகளும் இல்லை. கட்சிக்காரர்களிடம் கறக்க முடிகிறவரை கறந்து கொள்ளலாம்.

**நினைவு - 4 :** தொடக்கக் காலத்தில் சில ஆண்டுகள் நீதி மன்றத்திற்கு வந்துபோக மிதிவண்டிதான் இவருக்கு ஊர்தியாக இரந்தது. டென்னிஸ் விளையாடுவதற்குப் போய் வரவும் இதே வாகனம்தான் பயன்பட்டது. நான்கைந்து ஆண்டுகள் கழிந்ததும் பன்னிரண்டு ஆயிரத்திற்கு "ஹில்மென்" (Hillman) என்ற மகிழ்வுந்து (Pleasure car) வாங்கி அதைத்தான் தன் வாகனமாகப் பயன்படுத்தினார். துறையூரில் யாரோ ஓர் அம்மையாருக்கு இந்த மகிழ்வுந்து பரிசுச் சீட்டில் முதல் பரிசாக விழுந்தது; அதனை விலை கொடுத்து வாங்கிக் கொண்டார்.

துறையூரில் அக்காலத்திலிருந்த 17 வழக்குரைஞர்களில் M.R. இராசகோபால் பிள்ளை, P. அரங்கசாமி ரெட்டியார், P.M. வேங்கடாசல துரை இவர்களைத் தவிர எல்லோரும் பார்ப்பனர்கள். நான் சாதி சமயங்கட்கு அப்பாற்பட்டவன் என்பதை அக்காலத்தாரும், இக்காலத்தாரும் நன்கு அறிவார்கள் எங்கள் குல வைணவப் பெரியார் பெ இராமாநுச ரெட்டியார்,

**தன்னிலைமைத் தானறியாத் தன்மையாளன்**
**சாதிவெறி சமயவெறி, சற்றுமில்லான்**
**துன்னியநல் சைவகுலத் தோன்ற லேனும்**
**தூயதிரு கச்சிநகர் அண்ணங்கரராம்**
**மன்னியவா சாரியரின் மலர்த்தாள் போற்றி**
**வைணவத்தின் வளமனைத்தும் உணரப் பெற்றோன்**[2]

என்று கூறியிருப்பதே இதற்குச் சான்றாக அமையும். அரங்கசாமி ரெட்டியாரும் இத்தகையவரே. நாங்களிருவரும் இறை நம்பிக்கையைத் தவிர அனைத்திலும் தந்தை பெரியார் கொள்கையைப் பின்பற்றுபவர்கள். எங்கள் இருவருக்கும் பல

2 டாக்டர் ந சுப்புரெட்டியார்-மணி விழா மலர் (1977)

பார்ப்பன நண்பர்கள் உண்டு - தந்தை பெரியாருக்கு இராஜாஜி உயிரனைய நண்பராக இருந்து போல!

**நினைவு - 5 :** அரங்கசாமி ரெட்டியாரின் இல்வாழ்க்கையை இறைவன் சரியாக அமைக்கவில்லை. செந்தாரப் பட்டியில் செல்வச் செழிப்புள்ள குடும்பத்தில் பிறந்த சத்தியபாமா என்ற மூன்றாவது பெண்ணைத் தமது வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொண்டு குடும்ப வாழ்க்கையைத் தொடங்கினார். ஆறு, ஏழு ஆண்டுகள்தாம் இவருடைய இல்வாழ்க்கை சீரும் சிறப்புமாய் நடைபெற்றது. தசரதனுக்கு நான்கு குமாரர்கள் தோன்றியதுபோல் இவருக்கும் நான்கு திருக்குமாரர்கள் தோன்றினார்கள். இந்நிலைமையில் சிறுவர்களையும், கணவனையும் விட்டு துணைவியார் திருநாடு அடைந்தார்கள். இவர்கள் மாணாக்கர்கள் விடுதிகளில் தங்கியே தங்கள் கல்வியை முடித்துக் கொண்டனர். இவருடைய அன்னையார் மட்டிலும் துறையூர் இல்லத்தில் தனியாக இருந்து வந்தார்கள். மாமியார் திருச்சி தில்லைநகர் இல்லத்தில் இருந்து வந்தார்கள். விடுமுறை நாட்களில் பேரப் பிள்ளைகள் நால்வரும் திருச்சியில் பாட்டியாருடன் சேர்ந்து கொள்வார்கள். எல்லோருமே பட்டப் படிப்பை முடித்துக் கொண்டவர்கள். மூவர் சட்டப் படிப்பையும் முடித்தனர். மூத்தவர் R. இராசாராம பேருந்துக் கம்பெனியைக் கவனித்து வருகின்றார். இரண்டாமவர் R. இராமராஜ் பி.ஏ., பி.எல்., திருச்சியில் அரசு வக்கீலாக இருந்தபோது தந்தையார் வாழ்ந்த காலத்திலேயே திருநாட்டை அலங்கரித்து விட்டார். இவரது அருமைச் செல்விக்குத் திருச்சியில் நடந்த திருமணத்திற்கு (1992) அடியேன் சென்று வாழ்த்தி வந்தேன் மூன்றாமவர் R. தர்மராஜ் அமெரிக்காவில் ஒரு பெரிய பதவியில் உள்ளார். நான்காமவர் R. சுந்தரராஜ் எம்.ஏ. ஆங்கிலத்தில் முதுகலையில் தேர்ந்தவர்; இவர் I.P.S தேர்வில் வெற்றுபெற்று நேர்மையான கடுமையான உழைப்பினால் படிப்படியாக பதவி உயர்வு பெற்று தற்சமயம் தில்லியில் தகவல் அளிப்பு அரங்கில் (Intelligence Bureau) இயக்குநராகப் பணியாற்றி வருகின்றார். அமெரிக்காவில் இருப்பவரைத் தவிர ஏனைய இருவரிடமும் எனக்கு நல்ல தொடர்பு இருந்து வருகின்றது.

நினைவு - 6 : இரண்டாவது தாரமாக ஒரு பெண்ணை மணக்க வாய்ப்பு இருந்தும் பிள்ளைகளின் நலனுக்காக மாணி வாழ்க்கையை மேற்கொண்டு வாழ்நாளைப் போக்கினார். இஃது ஓர் ஒப்பற்ற தியாகம் என்பதை உணர்ந்து பார்ப்போர் நன்கு அறிவர். நீதி மன்றங்களில் சாட்சிகள் நடந்து கொள்வதைப் பற்றி எண்ணற்ற எடுத்துக் காட்டுகள் தருவார். ஒரு சமயம் நான் துறையூர்ப் பணியிலிருந்தபொழுது (1945) அதிகாலையில் தம் வீட்டிற்கு வருமாறு பணித்தார். நானும் அங்ஙனமே சென்றேன். நான் நீதிமன்றத்திற்கு எதிரிலுள்ள ஒரு சிறு இல்லத்தில் குடியிருந்தேன். கிட்டத்தட்ட ஆறு ஃபர்லாங் போய் வரவேண்டும். என்னுடைய ஊர்தி மிதிவண்டிதான்; (ஓய்வு பெறும் வரையில் (1977) அதுதான் என் வாகனம்). நான் சென்ற எதிர்கட்சிச் சாட்சியாகக் கூண்டில் ஏறுபவரிடம் அரங்கசாமி ரெட்டியார் பேசிக் கொண்டிருந்தார். இவர் என் இல்லத்திற்கருகிலுள்ள வக்கீல் அவதானி அய்யர் வழக்காடும் எதிர்கட்சியினரின் சாட்சி. இவருக்கு முதல்நாள் இரவு 7-8 மணிக்கு அடுத்த நாள் கூண்டில் சொல்ல வேண்டியவைபற்றிப் பாடம் சொல்லப் பெற்றவர். இவரை நோக்கி "உங்கள் வக்கீல் உமக்கு நீர் நாளை சொல்ல வேண்டியவை பற்றி என்னென்ன சொல்லிக் கொடுத்தார்?" என்று கேட்க அவரும் அவற்றை விவரமாக ஒப்புவித்தார். "சரி; நீர் அப்படியே சொல்லிவிடும். நான் உம்மைக் குறுக்கு விசாரணை செய்யும்போது இன்னின்ன வினாக்கள் விடுப்பேன். அவற்றிற்கு இப்படிப் பதில் சொல்ல வேண்டும்" என்று பாடம் புகட்டினார் முதல் விசாரணையில் தரும் வாக்குமூலத்தைக் குறுக்கு விசாரணையில் உடைத்தெறிவதற்கு இத்திட்டம்

இங்ஙனம் எதிர்க்கட்சியின் சாட்சியை இரகசியமாகக் கொண்டுவந்து நிறுத்தியது தம் கட்சிக்காரர். "பார்த்தாயா சுப்பு? இப்படித்தான் நீதி மன்றத்தில் வழக்குகள் நடைபெறுகின்றன" என்றார். சாட்சி சொல்லுவதையே தொழிலாகக் கொண்டு பல சாட்சிகள் ஒவ்வொரு நீதிமன்றத்திலும் உள்ளனர். ஒரு சமயம் என் பள்ளிக்கு உள்ளூர் மாவட்ட நீதிபதி (District Munsif) ஓர் இலக்கியக்

கூட்டத்திற்குத் தலைமை வகிக்க வந்திருந்தபோது இத்தகைய கட்சிக் காரர்களைப்பற்றிக் குறிப்பிடடது நினைவிற்கு வந்தது குறுக்கு விசாரணையில் உண்மையை வாங்க முடியாத சாட்சிகளும் உள்ளனர் (Hard nut to crack). இதிலிருந்து ''சாட்சிக்காரன் காலில் விழுவதைவிட சண்டைக்காரன் காலில் விழுவது மேல்" என்ற "உலக வசனத்தின்" பொருள் எனக்குத் தெளிவாகப் புலனாயிற்று இருவரும் நீதிமன்றத்திற்கு வெளியே உடன்பாடு செய்து கொள்வதே சிறந்தது என்பதும் தெளிவாயிற்று எல்லாவித வழக்குகட்கும் இந்தப் படிப்பினை பொருந்தாது. இயன்ற வரை நீதிமன்றத்திற்குப் போகாதிருப்பது மேல் என்ற படிப்பினையைப், பின்பற்றவேண்டும் என்பதுதான் நான் கண்ட உண்மை நடைமுறையில் இது சாத்தியப்படுவதில்லை.

**நினைவு - 7 :** அரங்கசாமி ரெட்டியார் தொழில் தொடங்கிய சில ஆண்டுகளிலேயே கணிசமான அளவுக்குத் தொழிலில் வருவாய் இருந்தது. வருமான வரி (Income - tax) கட்டத் தொடங்கினார். துறையூர் வழக்கறிஞர்களில் யாரும் வருமானவரி கட்டியதில்லை. அரங்கசாமி ரெட்டியார் கட்டியவுடன் எல்லா வழக்குரைஞர்கட்கும் வருமான வரித் துறையினர் வரவு-செலவுக் கணக்கு தருமாறு அறிக்கை (Notice) அனுப்பினர். இஃது எல்லோருக்கும் தலைவலியைத் தந்தது உள்ளுக்குள் மனம் குமுறினர். அரங்கசாமி ரெட்டியார் வருமான வரி கட்டியதனால் ஏற்பட்ட விளைவுதான் இது என்ற முடிவுக்கும் வந்தனர். ஒருசிலர் வெளிப்படையாகவே "எதற்கு இந்தத் தலைவலியை வருவித்துக் கொண்டீர்கள்?" என்று கேட்டனராம். "எதிர்பாராத வகையில் நெஞ்சுவலி வருவதைத் தடுக்கும் பொருட்டுதான்" என்று மறுமொழி தந்ததாக ஒரு சமயம் என்னிடம் சொன்னதாக நினைவு.

**நினைவு - 8 :** அரங்கசாமி ரெட்டியார் 1950க்கு மேல் திருச்சியிலும் துறையூரிலும் இருந்து கொண்டு வக்கீல் தொழில் நடத்தி வந்தார். வக்கீல் தொழிலில் நல்ல வருமானமும் வந்து

கொண்டிருந்தது. இதனைக் கேள்வியுற்றார் மாவட்ட நீதிபதி ஒருவர் (1950–51). இவர் வைணவப் பார்ப்பனர். போர்த்துறையிலிருந்து வந்தவர். இராமாநுசம் என்ற திருப்பெயரினர் என்பதாக நினைவு. நான் காரைக்குடியில் பணியேற்பதற்கு சில திங்களுக்கு முன்னர் (1950 ஜூலை) தான் வந்தவராதலால் அதிகம் பழக வாய்ப்பு இல்லை. அரங்கசாமி ரெட்டியாரைப் பார்ப்பன விரோதி என்று தவறாகக் கருதிக் கொண்டு இவர் வாதிக்கும் வழக்குகளைக் கெடுக்கத் துணிந்தார். அந்தக் காலத்தில் சாட்சிகளின் விசாரணை தமிழில்தான் நடைபெறும். ஆனால் நீதிபதிகள் சாட்சிகள் கூறும் வாக்குமூலத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துப் பதிவு செய்வதுதான் வழக்கத்தில் இருந்து வந்தது. ஆனால் தலைமை எழுத்தர் மூலம் ஆங்கிலத்தி லிருப்பதைத் தமிழில் மொழி பெயர்த்துச் சொல்லி அது சரியாக இருந்ததாக எழுதிச் சாட்சிகளிடம் கையெழுத்து வாங்குவது வழக்கம். இப்படிச் செய்தால்தான் வாக்குமூலம் செல்லும். ஒரு சாட்சியின் வாக்குமூலத்தைச் சரியாக எழுதவில்லை என்பதைக் கண்டு கொண்டார் திரு. ரெட்டியார். சாட்சியிடம் "கையெழுத்துப் போடாதே" என்று சொல்லிவிட்டார். சாட்சியும் "நான் சொன்னபடி நீதிபதி பதியவில்லை. ஆகையால் கையெழுத்துப் போடேன்" என்று சொல்லிவிட்டார். இப்படித் தவறாக வாக்குமூலத்தைப் பதிவு செய்தோ அல்லது முக்கியமானவற்றை நீக்கிப் பதிவு செய்தோ வாக்கு மூலத்தைத் தயாரித்து விட்டால் இதைக் கொண்டு தீர்ப்பைப் பாதகமாகச் சொல்வது எளிது. முனிசீப்பு தான் இவ்வாறு பல வழக்குகளைக் கெடுத்தால், கட்சிக்காரர்கள் அரங்கசாமி ரெட்டியாரிடம் போகார், அவர் தொழில் பாதிக்கப்படும் என்று திட்டமிட்டதைக் கண்டு கொண்டதால் அரங்கசாமி ரெட்டியார் சாட்சி வாக்குமூலத்தில் கையெழுத்துப் போடாமலிருக்கத் திட்டமிட்டார்.

இந்த விஷயம்பற்றி நீதிமன்றத்தில் முனிசீப்பிற்கும் அரங்கசாமி ரெட்டியாருக்கும் பலத்த வாக்குவாதம் நடைபெற்றது. அரங்சாமி ரெட்டியார் நீதிபதி வாக்கு மூலத்தைச் சரியாகப் பதியாததைக் குறித்து வன்மையாக எதிர்த்துப் பேசினார். முனிசீப்பு சினங் கொண்டார். மதியை இழந்தார். அரங்கசாமி ரெட்டியாரை

"வெளியே நட" (Get out) என்று கூறிவிட்டார் முனிசீப்பு இவ்வாறு பொது மனிதரிடம் நடந்து கொண்டது தவறு; பெருந் தவறு. அன்று மாலையே வக்கீல் சங்கம் (Bar Association) கூடி முன்சீப்பின் அடாத செயலைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றி மாவட்டச் சங்கத்திற்கு அனுப்பியது மாவட்டச் சங்கமும் கூடி இத்தீர்மானத்தை உயர்நீதிமன்ற வக்கில் சங்கத்திற்கு அனுப்பி வைத்தது. சென்னை சங்கமும் முனிசீப்பின் அடாத செயலை வன்மையாக கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றி உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதிக்கு அனுப்பியது; முனிசீப்பிற்கு தண்டனை வழங்கவும் பரிந்துரைத்தது. இதில் விரைவான முடிவு ஏற்படவில்லை. பார்ப்பனர்கள் ஒன்று திரண்டு முனிசீப்பைக் காப்பாற்ற நினைத்தனர்.

"வெளியே நட" என்று முனிசீப்பு சொன்ன நாளிலிருந்து சுமார் ஓராண்டு அரங்கசாமி ரெட்டியார் துறையூர் நீதிமன்றத்திற்குப் போவதைத் தவிர்த்தார். உயர்நீதிமன்றம் நீதி வழங்க மெத்தனமாக இருந்ததால், அரங்கசாமி ரெட்டியார், இருபத்தையாயிரத்திற்குத் (ஓராண்டுத் தொழில் வருமானம்) திருச்சி மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடுத்தார். முனிசீப்பிற்கு அறிவிப்பு (Notice) அனுப்பிய பிறகே இந்த வழக்கு தொடுக்கப் பெற்றது. முனிசீப்பிற்கு கதி கலங்கியது. தாம் தவறாக இவருடன் மோதிக் கொண்டது பற்றி மிகவும் வருந்தியதாகக் கேள்வி. அரசியல் கலப்பு அதிகம் இல்லாத காலத்தில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது. இன்றைய நிலையில் நிர்வாகத்தில் நீதி வழங்குவதில் அரசியல் தாண்டவமிடுகின்ற நிலையில் நீதித் துறையிலும், நிர்வாகத் துறையிலும் என்னென்ன தவறுகள் நடைபெறுகின்றனவோ? இவற்றையெல்லாம் கண்மூடி மௌனியாகிக் கவனித்துக் கொண்டிருக்கும் இறைவனது குறுக்கீட்டால்தான் "கதிமோட்சம்" ஏற்படவேண்டும். திக்கற்றவருக்குத் தெய்வம்தானே துணை?

பார்ப்பன வழக்கறிஞர்களில் சிலர் முனிசீப்புமீது கருணை கொண்டு இருபத்தையாயிரத்துக்குத் தொடுக்கப் பெற்ற வழக்கைத் தொடராது திரும்பப் பெறுமாறு அரங்கசாமி ரெட்டியாரை

வேண்டினர். சில திங்கள் கழித்து வழக்கைத் திரும்பப் பெற்றார் ரெட்டியார். முனிசீப்புக்கு இதில் கிடைத்த தண்டனை அவர் ஊதியத்தில் மூன்று ஆண்டுகட்குப் படி ஏற்றம் (Increment) இல்லை என்பது. ஒரு பெரிய அதிகாரிக்கு இதுவே பெரிய தண்டனையாகும்.

இந்த முனிசீப்பு ஓர் அமீனாவுடன் தவறாக மோதி அவமானப்பட்டார். ஒவ்வொரு மாதத்திற்கும் முனிசீப்பு வீட்டிற்கு ஓர் அமீனா காவலாக இருப்பது வழக்கம். கோடை விடுமுறையில் எல்லா முனிசீப்புகளும் அவரவர் ஊருக்குப் போய்விடுவர். ஆனால் இராமாநுசம் இங்கேயே தங்கியிருந்தார். ஓர் அமினாவைக் காவல் வேலைக்குப் போட்டார். அவர் "விடுமுறையில் கூட எங்கள் உயிரை இப்படி ஏன் வாங்குகின்றீர்கள்?" என்று சொல்லி பணியை மறுத்தார். ஏதோ காரணம் காட்டி அமீனாவைப் பதவி நீக்கம் செய்தார். அமீனா உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து, வென்று, மீண்டும் பதவியில் வந்து சேர்ந்தார். முனிசீப்பின் கௌரவம் மலையேறி விட்டது. அவர் மாற்றல் இல்லாமல் துறையூரிலேயே பணியாற்றியது பரிதாபகரமாகவே இருந்தது.

**நினைவு – 9** : நான் துறையூரிலிருந்த காலத்தில் ஒரு சுவையான வழக்கு நடைபெற்றது. அதுவும் ஈண்டு நீங்காத நினைவாகப் பதிவு செய்யப்பெறுகின்றது. செகப்பிரியன் துன்ப நாடகத்திலும் சில இடங்களில் சிரித்து மகிழ இடம் உண்டு. துறையூருக்கருகிலுள்ள உப்பிலியபுரத்தில் இராமசாமி ரெட்டியார் என்ற ஒருவர் இருந்தார். இவரைப் பொதுவாக மக்கள் குறிப்பிடும் போது "குரங்கு ரெட்டி" என்று சொல்லுவார்கள். இஃது அவருக்கும் தெரியும். ஒல்லிய உடம்பு; தலையில் அதிக முடி இல்லை. இடுப்புக்கு மேல் திறந்த மேனியாக இருப்பவர். அவர் ஒரு மரத்தடியிலுள்ள கல்லின்மீது முன்பக்கம் சற்றுச் சாய்ந்த நிலையில் இருக்கும்போது குரங்கு தோற்றம் தென்படும். இதுவே மக்கள் அவருக்குக் "குரங்கு ரெட்டி" என்ற திருநாமம் சூட்டியதற்குக் காரணமாகலாம். குரங்கு ரெட்டி தோட்டத்தில் நல்ல மாம்பழங்கள் கிடைக்கும் என்று சொல்லும்போது இயல்பாகச் சொல்லுவதுபோல் இருக்கும். ஆனால்

அவரிடம் வாக்குவாதம் நடைபெறும் போது "குரங்கு ரெட்டி" என்று இழிவு தோன்றச் சொல்லும்போது மிளகாய்ப் பொடி காரம் தும்மலை விளைவிப்பதுபோல் அவருக்குக் கோபம் எழத்தான் செய்யும்.

நல்ல பழங்களை விளைவிக்கும் மாந்தோட்டம் வைத்திருந்ததன் காரணமாக அவருக்கு நற்புகழ் உண்டு; ஆனால் இவர் ஒரு "சிடு மூஞ்சி"; எளிதில் கோபத்திற்கு உள்ளாவார். இதே ஊரில் "குமரப்ப கவுண்டன்" என்ற ஒருவரும் இருந்தார். இவரைக் "கரடிக் கவுண்டன்" என்று மக்கள் குறிப்பிடுவது வழக்கம். கரு நிறம்; சற்றுக் குள்ளமானவர். தலைமுடி கலைந்து கிடக்கும். அடிக்கடி முகச் சவரமும் செய்து கொள்வதில்லை. முகத்திலும் அடர்த்தியான முடி. இதனால் இவரிடம் "கரடித் தோற்றம்" தெரியும். இதனால் மக்கள் "கரடிக் கவுண்டன்" என்ற சாட்டுப் பெயரிட்டு இருக்க வேண்டும். இது கவுண்டனுக்கும் தெரியும். இராமசாமி ரெட்டியாருக்கும் குமரப்பக் கவுண்டனுக்கு அடிக்கடி மோதல் நிகழும். இராமசாமி ரெட்டியார் தம்மைக் குமரப்பக் கவுண்டன் "குரங்கு ரெட்டி" என்று அடிக்கடி இழித்துக் கூறுவதால் தம் மானம் பறிபோவதாகக் கூறி ரூ. 2000/= க்கு "மான நட்டம்" கோரி துறையூர் மாவட்ட முனிசீப் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடுத்தார். குமரப்பக் கவுண்டனுக்கு வக்கீல் அரங்கசாமி ரெட்டியார். இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது.

இராமசாமி ரெட்டியார் (குறுக்கு விசாரணையில்) கூறியது : "என் பெயர் இராமசாமி ரெட்டியார். சிலர் என்னைக் "குரங்கு ரெட்டி" என்றும் குறிப்பிடுவார்கள் என்பதாகக் கேள்வி. அவர்கள் யாவர் என்பதையும் தெரிந்து கொள்வேன். அவர்கள்மீது யான் வழக்குத் தொடுக்க வில்லை. ஆளை அடையாளம் தெரிந்து கொள்வதாகக் குறிப்பிட்டிருப்பார்கள் என்று சும்மா இருந்து விட்டேன்."

குமரப்பக் கவுண்டன் (முதல் விசாரணையில்) கூறியது : "என் பெயர் குமரப்பக் கவுண்டன் என்னைக் கரடி கவுண்டன் என்றும் சிலர் அழைப்பார்கள் இதனால் எனக்குக் கோபம் வருவதில்லை. கோபம் கொள்வதற்கு இதில் என்ன இருக்கிறது? அடையாளம் நன்கு தெரிந்து கொள்வதற்கு என்னை அப்படி வழங்குகின்றனர் என்று

நினைத்துக் கொள்வேன். இராமசாமி ரெட்டியாரையும் மனத்தில் கெட்ட எண்ணமுமின்றி "குரங்கு ரெட்டி" என்று குறிப்பிட்டிருப்பேன். பலர் இவரை அவ்வாறு அழைப்பதால். இதில் தவறு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. எனக்கும் அவருக்கும் எந்த வித விரோதமும் இல்லை. அவரை நேரில் கூட "குரங்குத்தம்பு" என்றுகூட பலமுறை குறிப்பிட்டிருக்கின்றேன்"

நீதிபதி இரண்டு பேர்களின் வாக்கு மூலங்களைச் சீர்தூக்கி ஆராய்ந்தார். (வழக்கின் போக்கையும் அதனை நடத்திய அரங்கசாமி ரெட்டியாரின் நகைச்சுவைப் பண்பையும் எண்ணித் தம்முள் நகைத்திருக்க வேண்டும்) "வழக்கில் உப்பு சப்பு இல்லை" என்று கூறித் தள்ளுபடி செய்தார். அக்காலத்தில் துறையூரில் இந்த வழக்கு பொதுமக்களிடமே அம்பலமாகி அவர்கள் சொல்லிச் சொல்லி மகிழ்ந்ததை நான் நேரில் கேட்டிருக்கின்றேன்.

**நினைவு - 10 :** பதினோர் ஆண்டு வழக்குரைஞர் வாழ்வில் பொதுமக்களிடம் நல்ல பேர் வாங்கி விட்டார். சாதி வெறி சமய வெறி அற்றநிலையில் எல்லாச் சாதியாரிடமும் நன்கு பழகி நற்புகழ் பெற்றிருந்தார். தந்தை பெரியாரிடம் நெருக்கமாகப் பழகுபவர். இந்நிலையில் 1952இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக நின்று வெற்றி பெற்றார். இக்காலத்தில் பல்வேறு சமூகப் பிரச்சினைகைளைத் தீர்மானங்கள் மூலமாகவும் கேள்விகள் மூலமாகவும் அரசுக் கவனத்திற்குக் கொணர்ந்து அவற்றிற்குத் தீர்வு கண்டார். அவற்றையெல்லாம் இப்போது நினைவுகூர முடியவில்லை பெரும்பாலும் கோவாப்பரேட்டிவ் நிறுவனங்களிலுள்ள ஊழல்களை அம்பலப்படுத்தினார் என்பதை மட்டிலும் நினைவு கூரமுடிகின்றது. நம் அருமைமிகு இராஜாஜி முதலமைச்சராக இருந்தமையால் பெரும்பாலான பிரச்சினைகட்கு உடனுக்குடன் தீர்வு காண முடிந்தது என்பதைச் சொல்லிச் சொல்லி மகிழ்வார்.

**நினைவு - 11 :** இவர் சட்டசபை உறுப்பினராக இருந்த போது (1952-57) நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றினை மட்டிலும் நினைவுகூர முடிகின்றது. துறையூருக்கு நான்கு கல்

தொலைவிலுள்ளது சிக்கத்தம்பூர் என்ற சிற்றூர்; துறையூர் - ஆத்தூர் சாலையின்மீதுள்ளது அக்காலத்தில் சாதி இந்துக்களுக்கும் (பெரும்பான்மையானவர்கள் ரெட்டியார்கள்) திருக்குலத்தோர்க்கும் (அரிசன மக்கள்) வேளாண்மை சம்பந்தமாக அடிக்கடி மோதல் இருந்து கொண்டிருந்தது திருக்குலத்தோர் சார்பாக செக்காடுபவர் **(Oil-monger)** ஒருவர் தரகர்போல் இருந்து கொண்டு காவல் துறைக்குக் கையூட்டு செய்தும், தாம் அவர்களை அட்டைபோல் உரிஞ்சியும் பிழைப்பை நடத்தி வந்ததால் இருதரப்பினருக்கும் எந்தவித உடன்பாடும் ஏற்படாமல் இருந்து வந்தது அரங்கசாமி ரெட்டியார் இருசாராரையும் ஒன்று கூட்டி ஒரு சுமுகமான உடன்பாடு காண முயன்று வந்தார். அப்போது மாவட்டக் காவல்துறைத் தலைவராக (D.S.P) இருந்தவர் இதனை விரும்பவில்லை. தம் மாமூல் வருமானம் இதனால் பாதிக்கப்படும் அல்லவா?

எப்படியாவது சட்டமன்ற உறுப்பினரைக் குற்றம் சாட்டி உள்ளுக்குத் தள்ளத் திட்டம் போட்டிருந்தார் காவல் அதிகாரி. இதை அரங்கசாமி ரெட்டியாரும் எப்படியோ அறிந்து கொண்டார் இந்தக் காவல்துறை அதிகாரிமீது பொதுமக்களால் சாட்டப்பெற்ற குற்றச்சாட்டுகளும் ஏராளமாக இருந்தன. கையூட்டு, மகளிர் நேசம், அடாவடித்தனமான செயல்கள், அதிகாரத்தைத் தவறான முறையில் பயன்படுத்துதல் போன்றவை சில. இவற்றுள் தலையானது ஓர் துணை ஆய்வாளரின் **(Sub inspector)** துணைவியாரைக் கெடுக்க முய்ன்றது புதியவராகத் துறையில் சேர்ந்த இவரை ஒரு பந்தோபஸ்து வேலையாகத் தொலைவிடத்திற்கு அனுப்பிவிட்டு இலால்குடிக் கருகிலுள்ள வாளாடி என்ற சிற்றூரில் தந்தையாருடன் இருந்து வந்த அவர் துணைவியை நெருங்க முயன்றதில் அவர்தம் தோட்டத்துவேலையாட்கள் அவரை நையப்புடைத்துப் பாடம் கற்பித்தனர் மேலிடத்திற்குப் புகாரும் செய்தனர். இந்தப் பாடம் இவருக்குப் போதவில்லை ஆசை வெட்கம் அறியாதல்லவா?

ஒருநாள் அரங்கசாமி ரெட்டியாருக்கு ஒரு சிறுதுண்டுத்தாள் கிடைத்தது அஃது ஒரு காவல் துறைச் சேவகனால்தான் கிடைத்தது

அதில் மாவட்டக் காவல்துறைத் தலைவர் (D.S.P) "ஏதோ ஒரு காரணம் காட்டி சட்டமன்ற உறுப்பினரைக் கட்டுப்படுத்தி உள்ளே தள்ளு" என்று எழுதிக் கையெழுத்திட்டிருந்தார். அது வட்ட ஆய்வாளர் கைக்குப் போக வேண்டியது. தவறியதுபோல் காட்டிக் காவல் துறையினர் இவர் கைக்குக் கிட்டச் செய்தனர் மாவட்டக் காவல் துறையினர் பெரும்பாலோர் தம் தலைவரின் அடாத செயல்களை, தான்தோன்றித்தனமான போக்கை, விரும்பவில்லை. ஆதலால்தான் அரங்கசாமி ரெட்டியாரைக் கருவியாகக் கொண்டு இவரை ஒழித்துக் கட்டவேண்டுமென்று கருதித் துண்டுத்தாளை இவர் கைக்குக் கிட்டும்படிச் செய்தனர்

மாலை சுமார் நாலரைமணிக்கு டென்னிஸ் விளையாடப் போய்க் கொண்டிருந்த சமயத்தில்தான் இந்தக் காகிதத்துண்டு இவருக்குக் கிடைத்தது. உடனே மகிழ்வுந்தை இல்லத்திற்குத் திருப்பிக் கொண்டு வந்து மூன்று நாளைக்குத் தேவையான ஆடைகளை எடுத்துக் கொண்டு திருச்சி சென்று அன்றிரவே சென்னை செல்லும் இருப்பூர்தியில் ஏறி மறுநாள் சென்னை வந்தடைந்தார் காவல் துறைப் பெருந்தலைவரைச் (Inspector General) சந்தித்து விஷயத்தை விளக்கி புகார் விண்ணப்பம் தந்தார் சட்டமன்ற உறுப்பினரல்லவா? எந்தவிதத் தடையுமின்றி மாவட்டக் காவல்துறைத் தலைவரைத் தற்காலிகப் பதவி நீக்கம் செய்தார் பெருந்தலைவர். மாவட்டக் காவல்துறைத் தலைவர் இராவண வீழ்ச்சியை அடைந்தார். இராவண வீழ்ச்சியைக் கம்பநாடன்,

**அரக்கர் பாவமும் அல்லவர்**
**இயற்றிய அறமும்**
**துறக்க நல்லருள் துறந்தனன்**
**தூமொழி மடமான்**
**இரக்க மின்மையும்**[3]

என்று காரணம் காட்டி விளக்குவான் "சனகி என்னும் பெரு நஞ்சு உன்னைக் கண்ணாலே நோக்க போக்கியதே உயிர்; நீயும்

3 கம்ப அயோத் மந்தரை சூழ்சசி - 78

களப்பட்டாயே"[4] என்று இராவணன் மாண்ட செய்தியை நினைந்து மண்டோதரியும் புலம்புவாள் இந்த நிலையை மாவட்டக் காவல்துறைத் தலைவருடைய நிலைக்கு ஒப்பிடலாம். சீதையைத் தொடாமலேயே மடிந்தான் இராவணன் உதவி ஆய்வாளரின் துணைவிமேல் வைத்த ஆசையே அரங்கசாமிரெட்டியாரின் செயற்பாட்டாக நின்று மாவட்டக் காவலரின் பதவி நீக்கத்திற்குக் காரணமாயிற்று

நான் அப்பொழுது காரைக்குடியில் பணியாற்றிக் கொண்டிருந்தேன். சென்னைப் பல்கலைக் கழகப் பேரவை உறுப்பினராகவும் (1953-56) இருந்தேன். இந்தப் பேரவைக் கூட்டத்திற்கு வந்தபோது அரங்கசாமி ரெட்டியாரைச் சட்டமன்ற உறுப்பினர் - பழைய உணவு விடுதியில் சந்தித்தேன் (புதிய உணவு விடுதி அப்போது கட்டப் பெறவில்லை). அப்போது பதவி நீக்கம் செய்யப் பெற்ற மாவட்டக் காவல் துறைத் தலைவரும் அந்த விடுதிப் பக்கம் இன்னொருவருடன் யாரையோ பார்க்க அலைந்து கொண்டிருந்தார். அரங்கசாமி ரெட்டியாரும் நானும் தாழ்வாரத்தில் கைப்பிடிச் சுவர் அருகில் நின்று கொண்டிருந்தபோது காவல்துறைத் தலைவர் அரங்கசாமி ரெட்டியாரைத் தம் நண்பருக்குச் சுட்டிக் காட்டினார். ஆணவம் அடங்கியநிலையில் அவரைக் கண்டேன்: இரக்கப்பட்டேன் "தன் வினை தன்னைச் சுடும்" என்ற உண்மைக்கு எடுத்துக்காட்டாகத் தென்பட்டார் காவல்துறை அதிகாரி

**நினைவு - 12** : காரைக்குடியில் எனக்கு சைதைப் பயிற்சிக் கல்லூரியில் வகுப்புத் தோழராயிருந்த திரு V. சொக்கலிங்கம் பிள்ளை நகராண்மைக் கழக உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியாக இருந்தார். காரைக்குடி வந்தபிறகு மிகவும் நெருங்கிப் பழகிய நண்பர்களுள் இவர் முக்கியமானவர் சில ஆண்டுகள் கூட அவரது இல் வாழ்க்கை இனிது நடைபெறவில்லை தம்முடைய சுகதுக்கங்களை என்னிடம் மட்டிலுமே கலந்து பரிமாறிக் கொள்வார் பன்னிரெண்டு ஆண்டுகள் பிரிந்து வாழ்ந்த இவர்தம்

4 யுத்த - இராவணன் வதை - 220

துணைவியாரின் தந்தையார் (இவர் ஒரு செட்டி வீட்டுக் கணக்கப்பிள்ளை) தம் மருமகனிடம் "சுரப்பு" இருக்கிறதென்பதை நன்கு அறிந்து கறக்கும் வரையில் கறந்து பார்க்கலாம் என்று கருதித் தம் மகளைக் கொண்டு ஒரு வக்கீல் நோட்டிஸ் அனுப்பினார் தான் இவரை மணந்து கொண்டபோது கட்டில், மெத்தை, பீரோ, மேசை, நாற்காலி முதலியன கொண்டு வந்ததாகவும் அவை இவர் பொறுப்பில் இருப்பதாகவும், முப்பது சவரன் மதிப்புள்ள நகை முதலி யன இவர் வசத்தில் இருப்பதாகவும், இவற்றைத் தன்வசம் ஒப்படைக்க வேண்டும் என்றும்; இவை தவிர, மாதம் ஜீவனாம்சத்திற்கு ரூ 150/= தரவேண்டும் என்றும், தவறினால் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து இவற்றைப் பெற நடவடிக்கைகள் எடுக்கப் போவதாகவும் நோட்டீஸில் குறிப்பிடப் பெற்றிருந்தது. தம் தம்பி வீட்டில் உணவு கொண்டு அமைதியாகப் பள்ளிப் பணியில் ஈடுபட்டு வாழ்ந்து வரும் தம் துறவு வாழ்க்கையில் ஒரு புயல் எழுந்தது போன்ற அச்சம் கிளர்ந்தெழுந்தது இவரிடம். நோட்டீசை எடுத்துக் கொண்டு என்னிடம் வந்தார்; இதில் எப்படியாவது தமக்கு உதவவேண்டும் என்று வேண்டினார்.

நான் சிந்தித்தேன். திருச்சி வக்கீல் திரு அரங்கசாமி ரெட்டியாரைக் கலந்து பேசி இதற்கு வழிவகைகள் காணலாம் என்று எண்ணி அவருக்குக் கடிதம் எழுதினேன் எங்கள் வழக்கு ஒரு ஜீவனாம்சம் வழக்கு என்று குறிப்பிட்டும் எழுதியிருந்தேன். திரு அரங்கசாமி ரெட்டியார் ஒரு நாள் குறிப்பிட்டுத் தாம் அந்நாளில் புதுக்கோட்டைக்கருகிலுள்ள ஓர் ஊருக்கு ஒரு முக்கிய அலுவல் நிமித்தம் வருவதாகவும் (ஊர்ப் பெயர் இப்போது நினைவில் இல்லை) நாங்கள் அங்கு வந்தால் உதவுவதாகவும் பதில் தந்திருந்தார்

வக்கீல் ரெட்டியார் குறிப்பிட்ட நாளில் அந்த ஊருக்குச் சென்று அவரைச் சந்தித்தோம் சொக்கலிங்கம் பிள்ளை தம் கதையை வக்கீலிடம் ஆதியோடந்தமாக விவரித்து விளக்கித் தமக்கு வந்த நோட்டீசையும் அவரிடம் தந்தார். உடனே வக்கீல் பதில் நோட்டீசுக்குத் திட்டமிட்டு அதில் பன்னிரண்டு ஆண்டுகட்கு முன்னர்த் தம்மை நட்டாற்றில் விட்டதுபோல் கைவிட்டுச்

சென்றபோது தான் கொண்டு வந்த சாமான்களை எடுத்துப் போனதுமன்றி தாம் இல்லாதபோது தாம் போட்ட நகை தாலிக்கொடி இவற்றையும் (சுமார் நாற்பது சவரன் மதிப்பு), வேறு பல சாமான்களையும் எடுத்துச் சென்று விட்டதாகவும், தாம் பல தடவை தம் இல்லத்திற்கு வந்து வாழுமாறும் நேரில் கேட்டும் கடிதம் எழுதியும் சில பெரியோர்களை அனுப்பி வருமாறு வேண்டியும் வராமல் அலட்சியம் செய்துவிட்டபடியால் இனி முதுமைக் காலத்தில் தாம் அவளுடன் வாழ விரும்பவில்லை என்றும், ஜீவனாம்சம் கோருவது நியாயம் அல்ல என்றும், அப்படி ஏதாவது வழக்கு தொடர்ந்தால் தக்க வக்கீலைக் கொண்டு எதிர்க்கப்படும் என்றும் குறிப்பிட்டு பதில் நோட்டீஸ் அனுப்பினார். இந்த நோட்டீசைக் கண்டதும் அவர்கள் அடங்கிப் போனார்கள் எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

**நினைவு - 13** : காரைக்குடியில் நான் பணியாற்றியபோது கல்லூரி மாணவர்கட்குக் குடிமைப் பயிற்சி முகாம்கள் அமைக்கப் பெற்றன. பத்து நாட்கள் இம்முகாம்கள் நடைபெறும். இளையாற்றங்குடி, பிள்ளையார்பட்டி, மாற்றூர், இராமேசுவரம், சூரைக்குடி என்ற இடங்களில் இம்முகாம்கள் நடைபெற்றன. இளையாற்றங்குடியில் முகாம் நடைபெற்றபோது அரங்கசாமி ரெட்டியாரைச் "சிறப்பு விருந்தினராக" அழைத்தோம். அப்போது அவர் சட்டசபை உறுப்பினராகவும் இருந்தார் முகாமில் ஒரு "போலி நாடாளுமன்றம்" (Mock Parliament) ஏற்படுத்தினோம். எல்லாப் பயிற்சி மாணாக்கர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்கள். அரங்கசாமி ரெட்டியார் சபா நாயகர் (Speaker). இந்தமன்றத்தில் ஒரு சட்டமுன் வரைவு (Bill) எவ்வாறு கொண்டுவரப்பெற்று எவ்வாறு சட்டமாக்கப் பெறுகின்றது என்பது நன்கு விளக்கப் பெற்றது அரங்கசாமி ரெட்டியார் சபா நாயகராகப் பங்கேற்று சட்டம் ஆக்கப் பெறும் முறையை விளக்கினது இன்றும் என் மனத்தில் பசுமையாக உள்ளது

**நினைவு - 14** : நான் திருப்பதியிலிருந்தபோது நான் முன்னின்று நடத்திய கருத்தரங்குகளிலெல்லாம் பார்வையாளராகக்

கலந்து கொண்டு எங்களை மகிழ்வித்துப் பெருமை படுத்தியவர் எம் ஏ வகுப்பு தொடங்கியபிறகு (1970-71) நடைபெற்ற "திருக்குறள்" பற்றிய முதற் கருத்தரங்கில் திரு அரங்கசாமி ரெட்டியார் திருவள்ளுவர் படத்தைத் திறந்து வைத்து ஆங்கிலத்தில் உரையாற்றி அனைவரையும் மகிழ்வித்தார். அந்தப்படம் இன்றளவும் பேரவை மண்டபத்தை (Senate Hall) அணி செய்து கொண்டுள்ளது. பின்னர்தான் வேமனர் படம் இதற்கு எதிர்வரிசையில் வைக்கப்பெற்றது திரு ரெட்டியாரின் ஆங்கில உரை கருத்தரங்கு மலரை அலங்கரித்துக் கொண்டுள்ளது.

**நினைவு - 15** : என் மணிவிழாவை நான் பிறந்த நட்சத்திரப்படி திருமலையில் ஏழுமலையான் கல்யாண மண்டபத்தில் "அவன் கல்யாண உற்சவமாக" என் மக்கள் கொண்டாடினர். (ஆகஸ்டு 1976) இதற்கு வெளியூரிலிருந்து சிறப்பித்தவர் இவர் ஒருவரே. நான் யாருக்கும் அழைப்பு அனுப்பவில்லை ரெட்டியார் கூட இருந்து வாழ்த்தியது எங்கட்குப் பெருமகிழ்ச்சியைத் தந்தது. அடுத்து கல்லூரியில் தமிழ்த்துறையினரால் (என் செலவில்) மணிவிழா கொண்டாடப் பெற்றது திரு அனந்த சயனம் அய்யங்கார் அவர்கள் தலைமையில் இவ்விழாவிற்குப் பல்வேறு அன்பர்கள் - சமயத் தலைவர்கள், பல்கலைக் கழக மானிட ஆணையம் (தலைவர், துணைத்தலைவர்), துணை வேந்தர்கள், ஆட்சிக்குழு உறுப்பினர்கள், என்னுடைய ஆசிரியர்கள், உயர்நீதி, உச்சநீதிமன்ற நீதிபதிகள், *அரசியல் தலைவர்கள், உயர்நிலைப் பள்ளியில் உடன் பணியாற்றிய* தோழர்கள், நண்பர்கள் - நல்லெண்ணம் கொண்டவர்கள், திருவேங்கடவன் பல்கலைக் கழகப் பலதுறைப் பேராசிரியர்கள், பிற பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், என் பழைய - இன்றைய மாணவர்கள் ஆகியோர் அனுப்பிய வாழ்த்துச் செய்திகள் அடங்கிய மலர் ஒன்றும் வெளியிடப் பெற்றது. இவ்விழாவிற்கும் அரங்கசாமி ரெட்டியார் வந்திருந்து சிறப்பித்தார் என் சம்பந்திமார்கள் வருகை தந்திருந்தனர் மணிவிழா மலருக்கு திரு. ரெட்டியார் விடுத்த செய்தி

1 திரு சுப்புரெட்டியார் அவர்கள் ஆங்கிலமும் தமிழும், அறிவியலும் கற்றுப் பட்டங்கள் பெற்ற போதிலும், அவருக்கு கனவிலும் நனவிலும் சதா தமிழ் வளர்ச்சியைப் பற்றிய எண்ணந்தான்

2. பிற மொழிச் சாத்திரங்கள் முதலியவை தமிழ் மொழியில் உலவ வேண்டும் என்று பாரதியார் கண்ட கனவுப்படி ஆங்கிலத்தில் உள்ள பல அரிய அறிவியல் நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துத் தமிழ் மக்களின் அறிவு விரிவடைய உதவி உள்ளார்

3. "அரன் அதிகம் உலகளந்த அரி அதிகம்" என்ற சர்ச்சைகளுக்கு அப்பாற்பட்டவராய், நல்ல சைவக் குடும்பத்தில் பிறந்தும், இவர் பல வைணவத் திருப்பதிகளுக்குச் சென்று தரிசித்து அவற்றின் பெருமைகளையெல்லாம் மற்றவர்களும் அறியும்படி நூல் வடிவில் வெளியிட்டிருக்கிறார்

4 எளிய தோற்றம், தூய்மை நிறைந்த உள்ளம் அன்பு பொருந்திய ஒழுக்கம் உடையவர்.

5. மனிதன் அறுபது ஆண்டு - நாட்டிற்கும், மொழிக்கும், மக்களுக்கும் பயனுள்ளவனாக வாழ்ந்து, அறுபத்தோராவது ஆண்டு வாழத் துவங்கும் போது, ஒரு புதிய உணர்ச்சி ஏற்படத்தான் செய்கின்றது நண்பர் சுப்பு ரெட்டியார் இப்போது அத்தகைய தறுவாயில் இருக்கிறார். அவர் புதிய நிறைவாழ்வைத் துவக்க இறைவன் அருள் புரிவாராக.[5]

இந்த மணிவிழாவிற்கும் திரு P. அரங்கசாமி ரெட்டியார் வந்திருந்தார். கல்லூரி வாழ்வு தொடங்கி 40 ஆண்டுகளாக நெருங்கிப் பழகிய இப்பெருமகனார் என் அருமை மாணவர் திரு ஜார்ஜ் ஸ்டீபன் துறைக்கு அளித்த என்னுடைய ஒளிப்படத்தைத்

5 மணிவிழா மலர் (1977) - பக், 27

திறந்து வைத்தார் கல்லூரித் தமிழ்ச் சங்க மாணவத் தலைவர் திரு கிருபானந்தம் பெற்றுக் கொண்டார் இப்படம் இன்றளவும் துறையை அலங்கரிக்கின்றது

**நினைவு - 16 :** சாந்தினிகேதம் விசுவ பாரதி பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற அனைத்திந்திய கீழ்த்திசை மாநாட்டு - கருத்தரங்கிற்கு (1982) நானும் டாக்டர் N. கடிகாசலமும் சென்றோம் சற்றுத் தாமதமாக திரு அரங்கசாமி ரெட்டியாரும் அதில் கலந்து கொள்ள விரும்பினார் நாங்கள் அவரையும் இட்டுச் சென்றோம். மாநாடு நடைபெற்ற இடத்தை அடைந்த பிறகுதான் அவரைப் பேராளராகப் பதிவு செய்து கொள்ள முடிந்தது மூன்று நாட்களாகப் பல இடங்களைச் சுற்றிப் பார்த்தோம். இரவீந்திரநாத் தாகூருக்குப் பல நினைவுச் சின்னங்கள் எழுப்பப் பெற்றிருந்தன. அவற்றையெல்லாம் கண்ணுற்று மகிழ்ந்தோம். முன்னமே பதிவு கொள்ள முடியாததால், திரு ரெட்டியாருக்கு அறை கிடைப்பதில் சிரமம் இருந்தது

எனக்கும் கடிகாசலத்திற்கும் ஒதுக்கப் பெற்ற அறையோ, “ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்கலாம், மூவர் நிற்கலாம்” என்ற நிலையில் இருந்தது அறையை அரங்கசாமி ரெட்டியாருக்குத் தந்துவிட்டு நாங்கள் வெளியில் உறங்கினோம் அவர் அரங்கநாதர் போல் “அறிதுயில்” கொள்வார். நாங்கள் மூவரும் முதலாழ்வார்களை நினைவு கூர்ந்து பரவசப்பட்டோம். ஆழ்வார்களை நெருக்கிய முதல்வன் எங்களை நெருக்க வரவில்லை! நாங்கள் அநுபூதி நிலையை அடைந்தவர்களல்லவே அப்பேறு பெற!

பல பகுதிகட்குச் சென்று பல்வேறு ஆய்வுக் கட்டுரைகள் படிக்கப் பெற்றதைக் கேட்டு மகிழ்ந்தோம் இந்த மாநாட்டில் நாங்கள் அறிவுபூர்வமாக அதிகப் பயன் பெறாவிடினும், உலகப் பெரியார் இரவீந்திரநாத் தாகூர் வாழ்ந்த இடத்திற்கு நாங்கள் புனித யாத்திரையாக வந்த உணர்வைப் பெற்றுப் புளகாங்கிதம் அடைந்தோம்.

**நினைவு - 17 :** ஆண்டு 1983 இந்த ஆண்டுத் தொடக்க காலத்தில் இரண்டு முறை சென்னை காஸ்மாபாலிடன் விடுதியில் சந்தித்ததாக நினைவு. உடல் நன்றாக இருந்ததாகத் தென்பட்டது. மனம் தெளிவாகப் பேசும் நிலையில் இல்லை. மூப்படைந்த நிலையில் (Senile) காணப் பெற்றது. சொன்னதையே பலமுறை திரும்பத் திரும்பச் சொல்லும் நிலையிலிருந்தார். "நீங்கள் இனி திருச்சியில் மகனுடன் இருப்பதுதான் உகந்தது" என்று யோசனை கூறிவந்தேன். அளவுக்கு மீறிய தொப்பை இருந்தது. காஸ்மா பாலி டன் விடுதிக்குள்ளேயே 4½ - 5½ மணிக்கு ஒரு மணிநேரம் நடக்குமாறு சொல்லி வந்தேன். அவர் அதைச் செய்யவில்லை.

அக்டோபர் வாக்கில் திருச்சி சென்று அங்கேயே தங்கிவிட்டதை அறிந்து மகிழ்ந்தேன். "இரண்டாவது குறுக்குத் தெருவில்" (தில்லை நகர்) அதிகாலையில் ஒரு மணிநேரம் நடக்குமாறு கடிதம் எழுதினேன். இப்போது உடல் தளர்ச்சியும் இருந்ததாக அறிந்தேன். டிசம்பர் 3ம் நாள் திருநாடு அலங்கரித்த செய்தியை அறிந்தேன் (என் சம்பந்தி M.R. துரைசாமி ரெட்டியார் மூலம்) உடனே கிளம்ப முடியவில்லை. அப்படிப் போய்தான் என்ன பயன்? ஆன்மா பிரிந்த திருமேனியைத் தானே பார்க்க முடியும்? இதை விரும்பவில்லை. 17, 18 நாட்களில் நடைபெற்ற பூப்பந்தல், இறுதிச் சடங்கில் கலந்து கொண்டேன்.

**நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை உடைத்திவ் வுலகு**[6]

என்ற குறளுக்கு இதுகாறும் மறைந்த எல்லோர்போல் இவரும் ஓர் எடுத்துக்காட்டு போல் திகழ்கின்றார். நிலையாமையை நிலைத்து நின்று காட்டும் வள்ளுவப் பெருமானின் மணியான வாக்காகும் இது.

*பிறப்பு 10.9.1914* *சிவப்பேறு 3.12.1983*

6 குறள் - 336

நினைவு - 18 : பதினாறு கட்டுரைகள் அடங்கிய "ஆன்மீகமும் அறிவியலும்" என்ற ஏன்நூல் (ஆகஸ்டு, 1985) வெளிவந்தது. இந்த நூலை 1934 முதல் 1983 வரை அடியேனுக்கு, பாரதியார் வாக்கில் கூறினால்,

**"நண்பனாய், மந்திரியாய்**
**நல்லா சிரியனுமாய்**
**பண்பிலே தெய்வமாய்ப்**
**பார்வையிலே சேவகனாய்[6]**

என்று இருந்த அரங்கசாமி ரெட்டியாருக்கு,

**திறந்தெறிந் தறிவால் வழக்கினை ஆய்ந்து**
**திறழ்பெறு வெற்றியே கண்டோர்;**
**அரம்பொரு கூர்த்த மதியினர்; எதையும்**
**அறிவினில் புடமிட வல்லார்;**
**பரம்பொருட் கன்பர்; உயர்ந்தகல் லூரி**
**பண்பொடெற் களித்தநன் னண்பர்;**
**தரம்பெறும் அரங்க சாமியாம் அன்பர்**
**சால்பிற்குப் படையலிந் நூலே!**

என்ற பாடல் மூலம் அன்புப் படையலாக்கி மகிழ்கின்றேன்.

1985-அடியேன் விதைபோட்டு வளர்த்த திருவேங்கடவன் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையின் வெள்ளிவிழா ஆண்டு (1) இந்த நூலையும் (2) Collected Papers (3) வைணவ உரைவளம் (4) தம்பிரான் தோழர் என்ற நான்கு நூல்களையும் வெள்ளிவிழா வெளியீடுகளாக அரங்கசாமி ரெட்டியாரின் நான்காவது மகன் திரு. R. சுந்தர ராஜ் I.P.S வெளியிட ஏற்பாடு செய்தேன். இது இறைவனது திருக்குறிப்பாக அமைந்தது என்பது அடியேனின் நம்பிக்கை. விழாவன்று திரு. R. சுந்தரராஜ் தம் பெற்றோர் P. அரங்கசாமி ரெட்டியார் திருமதி த. சத்தியபாமா நினைவாக தமிழ்த்துறையில் ரூ. 25,000,ல் ஓர்

6 பா.க. கண்ணன்பாட்டு (கண்ணன் என் சேவகன்)

அறக்கட்டளை நிறுவுவதாக அறிவித்து ரூ 5000/= க்கு ஒரு வரைவோலையை (D.D) முன் பணமாக வழங்கித் தமது குடும்பத்தின் பெருமையைப் புலப்படுத்திக் கொண்டார்

**மைஆடு கண்ணியும் மைந்தரும்**
**வாழ்வும் மனையும் செந்தீ**
**ஐயாநின் மனையை உருவெளித்**
**தோற்றம் அகிலத்து உள்ளே**
**மெய்யா இருந்தது நாள்செல**
**நாள்செல வெட்டவெறும்**
**பொய்யாய்ப் பழங்கதை யாய்க்கன**
**வாய்மெல்லப் போனதுவே**[7]

என்ற பாடலுடன் இந்நினைவுகள் அடங்குகின்றன.

7 பட்டினத்துப்பிள்ளையார் பாடல் பொது-52

# 4

# பேராசிரியர் மு. நடேச முதலியார்

'நோயும் வெங்கலிப் பேயும்' தொடரநின்
　　நூலிற் சொன்ன முறைஇய மாதிநான்நான்
தோயும் வண்ணம் எனைக்காக்கும் காஉறும்;
　　தொழும்பு கொள்ளும் சுவாமியும் நீகண்டாய்!
"ஓயும் சன்மம்; இனி அஞ்சல் அஞ்சல்" என்று
　　உலகம் கண்டு தொழஓர் உருவிலே
தாயும் தந்தையும் ஆனோய்! சிரகிரித்
　　தாயும் ஆன தயாபர மூர்த்தியே![1]

என் அருமைப் பேராசிரியர் மு. நடேச முதலியாரை எழுதத் தொடங்கும் போது இந்தப் பாடல் என் மனத்தில் குமிழியிடுகின்றது. என் கல்லூரி வாழ்வில் இடைநிலை வகுப்பில் பயிலும்போது இரண்டாண்டுகள் (1934-36) இவரிடம் தமிழ் கற்கும் பேறு பெற்றேன். இவர் திருச்சி - மலைக்கோட்டை யானைக் கட்டித் தெருவில் உள்ள ஓர் இல்லத்தில் வாழ்ந்தவர். அவரைப் பார்க்கப் போகும் போதெல்லாம் தாயுமானவரையும் வணங்கிவிட்டு வருவதால் அப்பெருமான்பற்றிய பாடல் என் மனத்தில் எழுந்தது.

**நினைவு - 1 :** இப்பெருமகனாரிடம் நெருக்கமான உறவு ஏற்பட்டதே ஒரு விநோதமான நிகழ்ச்சியின் காரணமாகும் "தமிழ் அய்யா முதலியார் நன்றாகத் தமிழ் கற்கவில்லை; வை.மு. கோபால கிருஷ்ணமாச்சாரியார் குறிப்பேட்டிலிருந்து எழுதி வைத்துக் கொண்டு கதை அளக்கின்றார். அவருடைய பாடநூலில்

1. தா.பா - எடுத்த தேகம்-2

ஏடுகளுக்கிடையில் வெள்ளைத்தாள்கள் வைத்துக் கட்டமைத்துக் கொண்டிருப்பதால் நூல் பருமனாகக் காணப்படுகிறது. இதைக் கொண்டே அவர்தம் இரகசியம்பற்றித் தெளியலாம்" என்பது குறும்புக்கார மாணாக்கர்களுள் ஒரு சாரார் பேச்சு. இவர்களில் மற்றொரு சாரார், "நாம் இவரிடம் வாலாட்ட முடியாது. சாமியார்களிடம், (Fathers) இவருக்கு நல்ல செல்வாக்கு. எவனாவது வாலாட்டினால் சாமியார்களிடம் வத்தி வைத்து அவனைத் தொலைத்து விடுவார்" என்று கிசுகிசுப்பர்.

வகுப்பு முடிந்ததும் அவரைச் சுற்றி ஒரு சிலர் நின்று கொண்டு மரியாதையுடன் கொஞ்சும் பாவனையில் "கால் கை" (காக்கை) பிடிப்பர். இந்தக் குழுவில் அடியேனும் சில சமயம் நிற்பதுண்டு. ஒரு சமயம் நான் "தமிழய்யாவின் பாடநூல் பருமனாகக் காணப்படுகிறதே! என்னக் காரணமோ?" என்று வாய்தவறி உளறிவிட்டேன். திரு. முதலியார் "அதிகப் பிரசங்கி, உன் பெயரென்ன? தனியாக என் அறையில் வந்து பார்" என்று ஆணையிட்டார். "சுப்புவுக்குச் சனிபார்வை" ஏற்பட்டுவிட்டது. என்ன ஆகுமோ?" என்று சில நெருங்கிய நண்பர்கள் கவலைப்பட்டனர். எனக்குக்கூட அதிர்ச்சிதான். மிகவும் கவலைப்பட்டேன். ஆனால் அந்த ஆணை "குரு பார்வை" என்பதைப் பின்னர்தான் அறிய முடிந்தது. ஆனால் அவரை அறையில் காண அஞ்சி அவர் இல்லத்திற்கே சென்று மன்னிப்புக் கோரினேன்.

இல்லத்திற்குச் சென்றபோது அவர் மாணாக்கர்கள்பால் அதிக அக்கறையும் பாசமும் கொண்டிருந்ததை அறிய முடிந்தது. இல்லத்தில் சௌலப்பியமே வடிவு கொண்டிருப்பதைக் காண முடிந்தது. என்னைப்பற்றிச் சுருக்கமாக அறிமுகம் செய்து கொண்டேன். வகுப்பில் உளறியதைக் குறிப்பிடாமல், "தம்பி நீ நாட்டுப்புறத்திலிருந்து வருபவன். சிறு வயதில் தந்தையையும் இழந்து நிற்கின்றாய். அன்னையார் சிரமப்பட்டு பணம் அனுப்புகின்றார். நகரச் சாயை உன்மீது படியாது காத்துக் கொள்க. மாணாக்கர் உலகைத் தொற்றுநோய்போல் பரவும் சிறுசுருட்டுப் (Cigarette) புகைக்கும் பழக்கம் உன்னைப் பற்றாது பாதுகாத்துக் கொள்க. அடிக்கடி

படக்காட்சிகளைக் காண்பதைத் தவிர்க்க; அதிகாலையில் எழுந்து படிக்கும் பழக்கத்தை மேற்கொள்க. சனிக்கிழமை கல்லூரி நடைபெறுவதால் ஞாயிறுதோறும் எண்ணெய்க் குளியலைத் தவறாது கடைப்பிடிக்க. "சனி நீராடு" என்பது பாட்டியின் வாக்கல்லவா? அது கண்ணுக்கும் நல்லது. "இணக்கம் அறிந்து இணங்கு" என்பதையொட்டி நல்லாரோடு பழகு. "நல்லிணக்கம் அல்லது அல்லற்படுத்தும்" என்பதைப் படித்திருப்பாய்" என்பன போன்ற அறிவுரைகளைத் தருவார். நன்றாக வளரும் செடிகளில் நோய்கள் தாக்குவனபோல் கல்லூரி வாழ்வில் முன் - குமரப்பருவம், பின் - குமரப்பருவத்திலிருக்கும் மாணாக்கர்கள் தீய பழக்கங்களாலும் தீயோர் கூட்டுறவாலும் கெட்டழிவது இயல்பு என்பதை நன்கு அறிந்த பேராசிரியர் முதலியார் கூறிய அறிவுரை இன்றளவும் என்னைக் காத்து நிற்கின்றது. சிறுசுருட்டுப் பழக்கம் என்னை நாடவில்லை. தீயோர் கூட்டுறவும் என்னைத் தீண்டவில்லை. உயர்நிலைப் பள்ளி வாழ்க்கையில் என்னைக். கட்டிக் காத்த திரு. கே.ஆர். போல், கல்லூரி வாழ்க்கையில் என்னைப் பட்டி மேயவிடாது காத்தவர் பேராசிரியர் முதலியார் என்பதை இன்றும் (என் 83வது அகவையில் 1998) நன்றியுடன் நினைவு கூர்கின்றேன். இவர் ஊட்டிய அறவுணர்வும் அடிக்கடிக் காணும் போதும் என்னைத் தமிழிலும் சிறிது கவனம் காட்டச் செய்தன. மதுரைத் தமிழ்ச்சங்கத் தேர்வையும் எழுதச் செய்தது. கலைமகள் அருளால் முதல் வகுப்பில் தேர்ச்சியும் பெற்றேன். "சார்ந்ததன் வண்ணமாதல்" என்ற சித்தாந்த உண்மையையும் இப்போது காண முடிகின்றது.

**நினைவு - 2 :** வடை சாப்பிட வந்தவன் வடையைச் சாப்பிட வேண்டுமேயொழிய அதன் துளையை எண்ணக் கூடாது என்ற தத்துவத்தை அறிந்து கொண்டேன். பேராசிரியர் நடேச முதலி யாரின் புலமையை எடைபோட நான் யார்? என்று என்னையே கேட்டுக்கொண்டு அமைதியுடன் அவர் கற்பித்தலில் ஆழங்கால் பட்டேன். அதன் பயனையும் அடைந்தேன். பேராசிரியர் நடேச முதலியாரின் மூடிய வெண்ணிறக் கோட்டு, பஞ்ச கச்சம், வெண்ணிறத் தலைப்பாகை இவர்தம் கருமையான கனத்த

திருமேனிக்குப் பொலிவூட்டும். இவர்தம் தலைப்பாகை அழகாக அமைவதில்லை; கலையுணர்வுடன் கட்டத் தெரியாத மனிதர் என்று கருதுகின்றேன். மூட்டைத் தூக்குபவனின் சும்மாடுபோல் தோன்றும். நெற்றியில் சமயக் குறி ஒன்றும் இல்லாததால் இவர் முகப்பொலிவு எங்களைக் கவர்வதில்லை உயர்நிலைப் பள்ளியில் என்னைக் கவர்ந்த குமார வீரய்யர், ஜம்புலிங்கக் குருக்கள் இவர்களது புறத்தோற்றம் என்னைக் கவர்ந்ததுபோல் இவர்தம் புறத்தோற்றம் மாணவர்களின் மனத்தைக் கவர்வதில்லை. அக்காலத்தில் இயற்பியல் துறையில் பணியாற்றிய திரு. பி.எஸ். சுப்பிரமணிய அய்யர், திருமண்டலம் அய்யர், வேதியியல் துறையில் பணியாற்றிய திரு. சேஷ அய்யங்கார், திரு. கோவிந்தராவ், கணிதத் துறையில் பணியாற்றிய திரு T. தோதாத்திரி அய்யங்கார், திரு கே. சீநிவாசன் (கால்குலஸ் சீநிவாசன்), திரு. இராமச்சந்திரன் (நான் படித்தபோதே திருநாடு அலங்கரித்தவர்), திரு. சூரிய நாராயணன் இவர்கள் திருமேனி, முகப்பொலிவு இவற்றை அநுபவித்த எங்கட்குப் பேராசிரியரின் புறத்தோற்றம் கவர்வதில்லை.

வகுப்பில் இவர் உட்கார்வதில்லை. நின்றவண்ணமே பாடம் நடைபெறும் இஃது கற்பித்தலில் மிகவும் வேண்டப் பெறுவது. தமிழ் கற்பித்தலில் கவிதைப் பகுதியும் இலக்கணப் பகுதியும் மிகவும் முக்கியமானவை. இடைநிலை வகுப்புகளில் நான் கற்ற கவிதைப் பகுதிகள் இப்போது நினைவில் இல்லை. ஆனால் மிக்க சிரமத்துடன் கற்ற "**காண்டவவன தகனச் சருக்கம்**" (வில்லிபாரதம்) இன்றும் நினைவு கூரமுடிகின்றது. வடசொற்கள் அதிகமாக விரவி வருவதால் கற்பித்தலும் சிரமம்; கற்போர்கள் மனத்தில் நிலைநிறுத்தல் அதனிலும் சிரமம் பேராசிரியர் இப்பகுதியை மிக நன்றாகக் கற்பித்தார். கவிதையின் கருத்துகள் மனத்தில் நன்கு பதியுமாறு கற்பித்தாரேயன்றி கவிதையை அநுபவித்து மகிழும் பாங்கில் கற்பிக்கவில்லை "கவிதையநுபவம்", "பாட்டுத்திறன்", "கவிதை கற்பிக்கும் முறை" போன்ற நூல்களை எழுதிய எனக்கு, டி.கே.சி, ஜஸ்டிஸ் மகராசன், கலெக்டர் தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான் ஆகிய பெரியோர்களின் கவிதை விளக்கம் கேட்ட எனக்கு,

இப்போது பின் நோக்கிப் பார்த்தால், பேராசிரியரின் கற்பித்தல் எங்கட்குக் கவிதையநுபவம் தரவில்லை என்பதை நினைவுகூர முடிகின்றது. காண்டவவன தகனச் சருக்கப் பாடம் மெதுவாகவே நடைபெற்றது இச்சருக்கத்தில் இப்போது மூன்று பாடல்களை நினைவுகூர முடிகின்றது

தொழுதரு விசயன், தாலுஏ முடையோன்
சுடர்முடி நனைந்திடு வதன்முன்,
எழுமுகில் இனமும் பொழிதரு மாரி
யாவையும் ஏவினால் விலக்கி,
முழுதுல கமும்தன் னிடத்தடக் கியவான்
முகடுற முறைமுறை அடுக்கி
குழுமுவெங் கணையால் கனல்கட வுளுக்குக்
கொற்றவான் கவிகையும் கொடுத்தான்.

ஆழ்திரு பரவை ஏழும்வற் றிடுமா(று)
அமிழ்த்தகார் உமிழ்ந்திடு நெடுநீர்
தாழ்தரு சரத்தால் மேய்ந்ததற் கிடையோர்
தனித்திவ லையும்பொசி யாமல்
வீழ்தரும் அருவி பாவகன் தனக்கு
விசயன்அன் றளித்தபொற் குடைக்கு
சூழ்தர நிரைத்துத் தூக்கிய முத்தின்
சுடர்மணித் தொலையல்போன் றனவே.

மண்டிமீ தெழுந்த வன்னியின் சிகைகள்
இந்திரன் மதலைவா ளிகளால்
கண்டகூ டத்திற்கு அமைத்தசெம் பவளக்
காண்தரு தூண்திரள் காட்ட
அண்டகூ டத்திற்கு இந்திரன் பளிங்கால்
அமைத்தபல் ஆயிரம் கோடி
கண்டதூ ணங்கள் போன்றன, பரந்து
தனித்தனி முகில்மொழி தாரை.

என்பவை. இந்திரன் ஏவலால் மேகங்கள் பொழிந்த மழையைத் தடுக்க அருச்சுனன் சரக்கூடம் அமைத்தலைக் காட்டுபவை.

பாடலில் உள்ள காட்சிகளைப் பேராசிரியர் முதலியார் மாணாக்கர் மனத்தின் முன் நிறுத்தினது மிக அற்புதமாக இருந்தது உயர்நிலைப் பள்ளியில் ஜம்புலிங்கக் குருக்கள்போல் பாடல்களைப் பலமுறை இசையூட்டிப் படித்திருப்பாரேயானால் காண்டவவன தகனமே - கற்பனையில் - வகுப்பிற்குமுன் வந்திருக்கும். என்ன செய்வது? பேராசிரியருக்கு அத்தகைய குரல் அமையவில்லை.

கதையைச் சுருக்கமாகக் கூறி வகுப்பையே பாவனை ஆற்றல் மூலம் காண்டவ வனத்தினருகில் இட்டுச் சென்று விடுவார். தீயை மழை அணைக்காமல் குழுமுவெங்கணையால் கொற்றவான் கவிகை கொடுத்தல், குடையில் வீழும் நீர் சிறிதும் குடைக்குள் கசியாமல் பக்கங்களில் வழிதல், பொன் குடைக்கு முத்து மாலைகள் அமைந்தனபோல் காணப்பெறுதல், அக்கினி கொழுந்து விட்டெரிதல், பார்த்தன் அமைத்த சரக்கூடத்திற்குப் பவளத் தூண்கள் அமைத்தாற்போல் காணப்பெறுதல், மழை தாரைதாரையாகப் பொழிதல், நான்முகன் படைத்த அண்டத்திற்கு இந்திரன் பளிங்கால் அமைத்த பல்லாயிரங் கோடி தூண்கள்போல் காணப்பெறுதல் ஆகிய காட்சிகளை மானசீகமாகக் காணச் செய்து மாணாக்கர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துவார்.

பாடல்களை இசையூட்டிப் படித்திருப்பாரேயானால் - இல்லை. பாடியிருப்பாரேயானால் - காண்டவவன தகனமே வகுப்பிற்கு வந்திருக்கும்; அல்லது வகுப்பே சுற்றுலா செல்வதுபோல் மானசீகமாகக் காண்டவவன தகனம் நடைபெற்ற களத்திற்கே சென்றடைந்திருக்கும். அழகாக அமைக்கப்பெற்ற நாட்டிய அரங்கொன்றில் உறுப்பு நலன்கள் அமையப்பெற்ற நாட்டிய நங்கையொருத்தி அழகிய கோலம் புனைந்து ஆடினால் காண்போர் கருத்தில் அக்காட்சி ஆழப் பதியும். காண்போருக்கு நாட்டிய இலக்கணம், தாளம் முதலியன தெரிய வேண்டிய கட்டாயம் இல்லை. இங்கு "ரசனை"(சுவை)தான் முக்கியம். மைசூர் பாகையோ,

ஜாங்கிரியையோ சுவைப்பதற்கு அவற்றைச் செய்யும் முறை, தெரிந்திருக்க வேண்டுமா? என்ன? அதுபோல் என்க. பாட்டை பாடும் போது கேட்போருக்கு ஓசைநயம் யாப்பு முறை முதலியவை தெரிந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை.

இந்தக் காட்சிகளைக் காண்பதற்கு வகுப்பில் அமைதி நிலவுதல் இன்றியமையாதது இசையுடன் பாடினால் அமைதி தானாக நிலவும். ஆனால் இஃது இல்லாமல் பேராசிரியரின் மந்திர ஆற்றலால் அமைதி நிலவும். ஒரு குண்டூசி விழுந்தால் கூட அதன் ஒலி கேட்கும் அளவிற்குத் தமிழ் வகுப்பில் அமைதியை நிலைநாட்டுவார். பாடற் பகுதியிலுள்ள வடமொழிச் சொற்களின் பொருளைப் பல முறை விளக்கிக் கூறி மனத்தில் அவற்றை பசுமரத்தாணியெனப் பதியச் செய்துவிடுவார்.

**நினைவு - 3** : கட்டுரை எழுதுதல் தமிழ் கற்பித்தலில் முக்கியமான ஒரு கூறு. பேராசிரியர் இதனைக் கற்பித்தல் அவருக்கே உரிய தனிப்பாணியாக அமைந்திருந்தது. இந்த வகுப்பு பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை நடைபெறும். பெரும்பாலும் இந்த வகுப்பு பிற்பகலில்தான் அமைக்கப் பெற்றிருக்கும். இந்தக் கட்டுரைகள் துணைப்பாட நூல்களிலும் அமையும்; பொதுத் தலைப்புகளில் எழுதவேண்டியும் இருக்கும். இன்னவகைக் கட்டுரைதான் எழுதவேண்டும் என்பதைப் பேராசிரியர் முதலியார் அவர்களே வரையறை செய்வார். தலைப்பை உறுதி செய்து கொண்டு கட்டுரைப் பொருளை வகை செய்து காட்டுவார், முன்னுரை, கட்டுரை உடல் (பல பகுதிகள்), முடிவுரை என்று வகுத்துக்காட்டி, ஒவ்வொரு தலைப்பிலும் என்ன எழுதவேண்டும் என்று மனத்தில் ஆணித்தரமாகப் பதியும்படி விளக்குவார். அரைமணி நேரம் இவ்விளக்கம் நடைபெறும். பிறகு எல்லோரும் “லாலி மண்டபம்” (Lawly Hall) என்ற இடத்திற்குச் சென்று எழுதவேண்டும். எழுதுவதற்கு வேண்டிய தாள்கள் மேசைமீது வரிசையாக விநியோகித்து வைத்துக் கொண்டு திரு. கிருட்டிணசாமி அய்யங்கார் காத்துக் கொண்டு இருப்பார் ஐந்து அல்லது ஆறு பக்கங்களில்

அழகிய முறையில் எழுத வேண்டும் ஒன்றரை மணிநேரம் இருப்பதால் பொருளை நன்கு நிரல்பட அமைத்து நிறுத்தி எழுதலாம். அழகான முறையில் இங்ஙனம் தரப்பெற்ற பயிற்சியை நன்முறையில் பயன்படுத்திக் கொண்டதால் இன்றும் மணிமணியாக முத்துக் கோத்தாற்போல் அழகாக எழுத முடிகின்றது.

**நினைவு - 4 :** என்னுடைய எல்லா நலன்களுக்கும் காரணராக இருந்த திரு. முதலியார் அவர்கள் இன்றும் அடிக்கடி நினைவிற்கு வருகின்றார் கட்டுரைப் பயிற்சிகள் தருவதில் கல்லூரிப் பேராசிரியர்களுள் இவர் அத்திபூத்தமாதிரி. இவர் தந்த பயிற்சியே என்னை எழுத்துப் பணியில் வாழ்வித்துக் கொண்டுள்ளது. இதனை நினைவுகூரும் வகையில் அண்மையில் வெளியிட்ட (ஸ்டார் பிரசுரம், 72, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005 தொ.பே : 844740) "பாட்டுத்திறன்" என்ற திறனாய்வு நூலை, (திசம்பர் - 1988),

**நற்றவர் பராவும் சிவத்தையே பேணும்**
**நலத்தினர்; செந்தமிழ் உயர**
**உற்ற சஞ்சீவி அளித்தவர்; தமிழின்**
**ஒளியினை எனக்கருள் சீலர்;**
**கற்றவர் வியக்கும் புலமையே வடிவாம்**
**கண்ணியர்; திண்ணிய உளத்தர்;**
**கொற்றமார் நடேச முதலியார் அன்பிற்**
**குலாவுக இத்திரு நூலே**

என்ற பாடலிலின்மூலம் அன்புப் படையலாக்கிப் பேராசிரியர் அவர்களை நீங்காத நினைவாக என் உள்ளத்தில் நிலைத்த இடத்தை நல்கி மகிழ்கின்றேன்; புளகாங்கிதம் கொள்ளுகின்றேன். இந்த நூலின் படியொன்றினை டாக்டர் சஞ்சீவியின் கையில் செல்வதற்குமுன் அவர் திருநாடு அலங்கரித்து விட்டார்

பேராசிரியரைப் பார்க்கப் போகும் போதெல்லாம் தாயுமானப் பெருமானை வழிபடுவதை வழக்கமாகக் கொண்டிருந்ததனால் அவர்

பற்றிய கட்டுரையையும் சிரகிரிப் பெருமான் பற்றிய பாடலுடன் நிறைவு செய்கின்றேன்.

தந்தை தாயும்நீ; என்னுயிர்த்
துணையும்நீ; சஞ்சல மதுதீர்க்க
வந்த தேசிக வடிவும்நீ;
உனையலால் மற்றொரு துணைகாணேன்;
அந்தம் ஆதியும் அளப்பெருஞ்
சோதியே! ஆதியே! அடியார்தம்
சிந்தை மேவிய தாயுமா
னவன்எனும் சிரகிரிப் பெருமானே[2]

2. தா.பா. ஆசையெனும்-10

# 5

# தலைமையாசிரியர் V. சொக்கலிங்கம் பிள்ளை

குலன்அருள் தெய்வம் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலமலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
உலகியல் அறிவோடு உயர்குணம் இனையவும்
அமைபவன் நூல்உரை ஆசிரி யன்னே[1]

என்ற நன்னூல் நூற்பா ஆசிரியரின் இலக்கணத்தைக் கூறுவது. ஆசிரியரிடம் உயர்குடிப் பிறப்பு, சீவகாருண்யம், இறைவழிபாடு, பெருந்தகைமை, நூல்களில் நல்ல தேர்ச்சி, மாணாக்கர் எளிதில் உணரும்படி தொகுத்துச் சொல்லுகின்ற கற்பிக்கும் திறன், நிலம்,மலை நிறைகோல், மலர் இவற்றை ஒக்கின்ற குணங்கள் உலக நடையையொட்டிய அறிவு இவை போன்ற பிற உயர்ந்த குணங்கள். இவை அமைந்திருக்கப்பெற்றவரே நூலைக் கற்பிக்கும் ஆசிரியராகத் தக்கவர் என்பது பவணந்தியாரின் கருத்து.

**நிலம்** - காணுதற்கரிய உருவப் பரப்பின் பெருமை, பெரிய பாரம் ஏற்றினாலும் கலங்காத வலிமை, தோண்டுதல் முதலிய குற்றங்களைச் செய்தாலும் பொறுக்கின்ற தன்மை, தக்க பருவத்தில் உழவர் செய்கின்ற முயற்சி அளவிற்குத் தகுதியாகப் பயன் தருதல் - ஆகியவை நல்ல நிலத்தினிடத்துப் பொருந்திய குணங்களாகும். **ஆசிரியர்** பிறரால் வகுத்தறியப் படாத கல்வியறிவின் பெருமை, பெரிய வாதம் செய்து தன்மேல் நெருங்கினவரால் கலங்காத

1 நன்னூல் - 26

வலிமை, பிறர் தன்னை இகழ்தல் முதலிய குற்றங்களைப் புரியினும் பொறுக்குந் தன்மை மாணாக்கர் செய்யும் முயற்சியளவிற்குத் தக அவர்க்குப் பயனைத் தருதல் - இவை ஆசிரியரிடத்துப் பொருந்தும் குணங்கள் ஆகவே நிலம் ஆசிரியருக்கு உவமையாயிற்று.

**மலை** - அளவு செய்தற்கு அரிய வடிவத்தின் அளவு, பலவகைப் பொருள்களை உடைமை, வலிமையுடையவர்களாலும் அசைக்கப்படாத உருவத்தின் நிலைமை, தொலைவிலுள்ளார்க்கும் காணப்படுகின்ற உயர்ச்சி, மாரி வளங்குன்றினும், நீர் வளத்தைத் தருகின்ற வள்ளண்மையும் மலைக்குரிய நற்குணங்கள். **ஆசிரியர்** - அளவு காணக் கூடாத கல்வியின் அளவு, பலவகை நூற்பொருள்கள், புலமையுடையோராலும் அசைக்கப்படாத கல்வியறிவின் நிலை, நெடுந்தொலைவிலுள்ளாராலும் அறியப்படும் உயர்ச்சி, பொருள் வருவழி வறந்தாலும் தன்னைச் சார்ந்த மாணாக்கர்க்குக் கல்விப் பொருளைத் தரும் கொடை ஆகியவை ஆசிரியர்க்குரிய குணங்களாதலால் மலை ஆசிரியருக்கு உவமை ஆயிற்று.

**நிறைகோல் (தராசு)** : நிறுக்கப்பட்ட பொருளை ஐயந்தீர உணர்த்தல், உண்மைபெறுவதற்கு இரண்டு தட்டுக்கும் நடுவே ஒருபால் கோடாமல் நிற்றல் - ஆகியவை தராசின் நற்குணங்கள், **ஆசிரியர்** : சொற்பொருளின் இயல்பை ஐயந்தீர அறிவித்தல் புலவர் இருவர் மாறுபட்டாராயின் உண்மை பெறத்தான் அவ்விருவர்க்கும் நடுவே ஒருபால் கோடாது நிற்றல் ஆகியவை ஆசிரியரது குற்றங்களாக அமைதலால் நிறைகோல் ஆசிரியர்க்கு உவமையாக அமைந்தது.

**மலர்** - சுபகாரியங்கட்கு இன்றியமையாது இருத்தல், கண்டாரெல்லாம் விரும்பித் தன்னைச் சூடிக் கொள்ளல், மென்மைக் குணமுடையதாய் இருத்தல், மலர்தற்குரிய காலத்தில் முக மலர்ச்சியுடைமை - பூவின் குணங்கள். **ஆசிரியர்** - சுபகாரியத்திற்கு இன்றியமையாதவராக இருத்தல், கண்டாரெல்லாரும் தம்மை விரும்பி வைத்துக் கொள்ளல், மென்மைக் குணமுடையவரா யிருத்தல், பாடம் சொல்லும் போது முகமலர்ச்சியுடையவராயிருத்தல் ஆகியவை ஆசிரியர் குணமாதலால் மலர் அவருக்கு உவமையாய் அமைந்தது

இக்கூறியவற்றுள் பெரும்பான்மையானவை சொக்கலிங்கம் பிள்ளையிடம் அமைந்து கிடந்தன

**நினைவு - 1 :** 1940-41 இல் சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயின்றபோது ஒரு சாலை மாணாகர்களில் மிகவும் நெருங்கிப் பழகியவர் நான் துறையூரைச் சார்ந்தவன் என்பதை அவர் நன்கு அறிவார்;அவர் காரைக்குடியைச் சார்ந்தவர் என்பதை யான் நன்கு அறிவேன். சைதையை விட்டபிறகு பத்தாண்டுக் காலம் இருவரிடையே எந்தவிதத் தொடர்பும் இல்லை கடிதத் தொடர்பு கூட இல்லை. யான் அழகப்பா பயிற்சிக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியனாகப் பணியேற்றதும் (ஜூலை 1950) பலரிடம் உசாவி அவர் நகராண்மைக் கழக உயர்நிலைப் பள்ளியில் தற்காலிகத் தலைமையாசிரியராக இருந்ததை அறிந்து அளவளாவி மகிழ்ந்தேன் சொக்கலிங்கம் பிள்ளை அமைதியான போக்குடையவர்; பழகுவதற்கு மிகவும் இனிமையானவர், அவரது இல்லற வாழ்க்கை சரியாக அமையவில்லை என்பதை அறிந்து மிகவும் மனம் கவன்றேன் இறுதிவரை அவர் மனைவியுடன் சேர்ந்து வாழவில்லை

> **மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை**
> **எனைமாட்சித் தாயினும் இல்**[2]

என்ற நிலைதான் சொக்கலிங்கம் பிள்ளையின் இல்வாழ்க்கை. "கல்யாணம் செய்தும் பிரம்மச்சாரி" என்ற முதுமொழிக்கிணங்க அவருக்கு மாணிவாழ்க்கையே தலைவிதியாக அமைந்து விட்டது! "இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை"[3] என்ற ஔவைப் பாட்டியின் அமுதவாக்கின் உண்மையை அறிவதற்கு வாய்ப்பில்லாது வாழ்ந்த உத்தமச் சான்றோர்

**நினைவு - 2 :** நாங்கள் இருவருமே எளிய குடும்பத்தில் பிறந்து இருந்தாலும் "வறிஞர்க்கு அழகு வறுமையில் செம்மை"[4]

2 குறள் = 52

3 வாக்குணடம்-21

4 வெற்றிவேற்கை, 15

என்ற அதிவீரராமபாண்டியரின் அமுதவாக்கின்படியொழுகி கடுமையாக உழைத்துப் படிப்படியாக முன்னேற்றம் அடைந்தவர்கள். ஏழை பங்காளராக இருக்கவேண்டும் என்ற குறிக்கோளைக் கடைப்பிடித்து வாழ்ந்தோம். நான் பயிற்சி பெறும் ஆசிரியர்களை உயர்நிலைப் பள்ளிகட்கு இட்டுச் செல்லும் போதெல்லாம் சொக்கலிங்கம் பிள்ளை பூ. அமிர்தலிங்கம் (தமிழாசிரியர்) குமாரவேலு (தமிழாசிரியர்) இவர்களுடன் உரையாடித் திரும்புவதுண்டு. உரையாடல், இலக்கியம்பற்றியும், கவிதை, இலக்கணம் கற்பித்தல் பற்றிதான் இருக்கும்.

கணநாதன் என்ற சிறுவன் சிறு வயதில் பர்மாவிலிருந்து நடையாக வந்தவன். மாமன் வீட்டில் வளர்ந்தவன். மாமன் ஆறுமுகம் பிள்ளை என்பவர் அழகப்பா பயிற்சிக் கல்லூரியில் உதவியாளராகப் பணியாற்றி வந்தார். இந்தச் சிறுவனை நகராண்மைக் கழக உயர்நிலைப் பள்ளியில் சேர்த்தார் ஆறுமுகம் பிள்ளை. சாதிச் சலுகை மூலம் சொக்கலிங்கம் பிள்ளையவர்களின் உதவியால் அரைக் கட்டணச் சலுகை பெற முடிந்தது. மீதி அரைக் கட்டணத்தை நான் கட்டி உதவினேன். சொக்கலிங்கம் பிள்ளையும் நானும் கணநாதன்மீது தனிக்கவனம் செலுத்தினோம். கணநாதனும் பள்ளியிறுதித் தேர்வில் வெற்றி பெற்றான்.

பல்வேறு சாணக்கியங்கள் செய்து. சா.க. மூலம் (கம்பன் அடிப்பொடி) மாதிரி உயர்நிலைப் பள்ளி அறிவியல் துறை உதவியாளராகவும் (ரூ. 28/= ஊதியத்தில்), பின்னர் தட்டச்சு இரு தேர்வுகளிலும் வெற்றியடைந்ததும், பயிற்சிக்கல்லூரி அலுவலக தட்டச்சு செய்வோராகவும் (ரூ. 150/= ஊதியத்தில்) சேர்த்து அவனுக்குச் சரியான வாழ்க்கை அமைக்க ‘(பகீரதப் பிரயத்தனம்)’ செய்ய வேண்டியிருந்தது. நானும் சொக்கலிங்கம் பிள்ளையும் இதில் பெருமகிழ்ச்சி அடைந்தோம். நாங்கள் சொற்படி நடந்து, கடுமையாக உழைத்ததாலும் நல்லோர் கூட்டுறவாலும் கணநாதன் வாழ்க்கை சிறப்புற அமைந்தது.

**அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்**
**பேணித் தமராக் கொளல்**

என்ற வள்ளுவர் வாக்கைக் கடைப்பிடித்து உயர்ந்தவன் கணநாதன். சில ஆண்டுகட்கு முன்னர் (1985) குருதிப்புற்று நோயால் துன்பப்பட்டு மீளா உலகம் அடைந்தான்

பள்ளி தொடங்கிய நாள் தொட்டு சொக்கலிங்கம் பிள்ளை தற்காலிகத் தலைமையாசிரியராக இருந்தார். அவரை முதல் உதவியாசிரியராக்கி அவர் இடத்திற்கு விளம்பரம் செய்து ஆரோக்கியசாமி என்பவரைத் தலைமையாசிரியராக நியமனம் செய்தது நகராண்மைக் கழகம். இஃது அடாத செயல். இது தொடக்கத்திலிருந்து பள்ளியைத் "தாயினும் சாலப்பரிந்து" வளர்த்தவரை நீக்கிவிட்டுப் புதிய ஒருவரைக் கொண்ர்வது அநியாயம். ஆரோக்கியசாமி மிகவும் நல்லவர். நிலைமையை நன்கு புரிந்து கொண்டு சொக்கலிங்கம் பிள்ளைக்கு நல்ல மதிப்பு தந்து மரியாதையுடன் நடத்தினார். ஐந்தாண்டுகள் பணியாற்றிய ஆரோக்கியசாமி ஓய்வு பெற்றபின் சொக்கலிங்கம் பிள்ளை நிரந்தரத் தலைமையாசிரியராக நியமனம் பெற்றார்.

**நினைவு - 3** : காரைக்குடியில் இருந்த காலத்தில் முதலில் பழக்கமானவர் M.S. இராசமாணிக்கம் செட்டியார் சொக்கலிங்கம் பிள்ளை அவர் கடையில் அடிக்கடி அமர்ந்திருப்பது கண்டு அங்குப் போனேன். அவரால்தான் நகைக்கடைத் தொடர்பு ஏற்பட்டது என் தொடர்பு ஏற்பட்ட காலத்தில் செட்டியாரின் நகைத்தொழில் படுத்து விட்டது. பெயருக்கு ஏதோ நடத்தி வந்தார்; 2 ரூபா, 3 ரூபா மாதாந்திர சீட்டுகளும் ஒன்றிரண்டு 50 ரூபா சீட்டுகளும் நடத்தி வந்தார். நான் ரூ. 2000/= கடனாகக் கொடுத்தேன்; வட்டி 9 சதவிகிதமே. அந்தக் காலத்தில் ரூ. 2000/= பெரிய தொகை; 9 சத்விகித வட்டி மிகக் குறைவானது. காரைக்குடியில் அப்போது, 12, 15, 18, 24 சதவிகிதங்கள் புழக்கத்தில் இருந்தன. அரிசி விலை ரூபாய்க்கு ஒரு படி. (ஒன்றரை கிலோ) அடிக்கடி அக்கடையில் உட்கார்ந்ததால் ஏற்பட்ட விளைவு

5 குறள் - 443

இது. சொக்கலிங்கம் பிள்ளையும் சீட்டுப் போட்ட வகையில் ரூ 2000/= அவரிடம் நிலுவையாக வைத்திருந்தார்; அதற்கும் வட்டி 9 சதவிகிதம் தருவதாக ஒப்பந்தம். செட்டியாரிடம் உரையாடுவதே ஒரு தனிச் சுவை. முன்னர் நடைபெற்ற நிகழ்ச்சிகளையெல்லாம் நினைவிற்குக் கொணர்வார். இப்படி எத்தனையோ சுவையான அநுபவ நிகழ்ச்சிகள். சொக்கலிங்கம் பிள்ளையும் நானும் ஒத்த மனமுடையவர்கள் இருவரும் அவரிடம் ரூ 2000/= வீதம் இழந்தோம். மென்மைக் குணம் உடையவர்கட்கு வட்டித் தொழில் பொருந்தாதது. நெஞ்சைக் கல்லாக வைத்துக் கொள்பவர்கட்கே ஏற்ற தொழில் இது.

**நினைவு - 4 :** சொக்கலிங்கம் பிள்ளை தற்காலிகத் தலைமையாசிரியராக இருந்த போது இவரும் அறியாமல் ஒரு "தவறு" நிகழ்ந்து விட்டது. பொறுப்பில்லாத ஒரு செயலுக்கு இவர் பொறுப்பாளியாக இருக்க நேர்ந்தது. சிறப்புக் கட்டணத்தில் சேரும் தொகையைச் செலவிடும் பொறுப்பு தலைமையாசிரியருடையது. சொக்கலிங்கம் பிள்ளைக்குத் தெரியாமல் நகராண்மைக் கழக ஆணையர் அவர் இச்சைப்படி செவிப்புலக் கட்புலக் கருவிகள் வாங்கி அதற்குரிய தொகையை வாங்கப் பெற்ற கம்பெனியாருக்கு அனுப்புமாறு ஆணைப் பிறப்பித்து விட்டார். அதிகாரம் அவருக்கு இல்லையானாலும் "தகாத" காரியத்தை செய்துவிட்டார். ஒரு குறிப்பிட்ட கம்பெனியில் உற்பத்தி செய்யப் பெற்றவைதாம் வாங்கவேண்டும் என்பது கல்வி இயக்குநரின் சுற்றறிக்கைக் கடிதம். நகராண்மைக் கழக ஆணையர் அவர் இச்சைப்படி வேறொரு கம்பெனியார் உற்பத்தி செய்த கருவிகளை வாங்கிவிட்டார். இது தவறு. மேல்மட்டத்தில் இருப்பவர்கள் இவ்வாறு தவறிழைத்து தமக்கு கீழ்நிலையிருப்பவர்களை பலிகடாக்குவது அரசு நியதிபோல் நடைபெறுவது காலத்தின் கோலம். இதனால் நகராண்மை ஆணையருக்குக் கம்பெனியார் ஏதாவது "சன்மானம்" வழங்கியிருக்க வேண்டும். பாவம், சொக்கலிங்கம் பிள்ளை என்ன செய்வார்? "மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல், வாயும் பேசாமல், எதிர்ப்பும் தெரிவிக்காமல்" தொகையை அனுப்பி விட்டார்.

தலைவரை எப்படி மீற முடியும்? ஆணையருக்குக் கிடைத்த சன்மானம் சங்கப்பாடல்களில் அடங்கிய "இறைச்சிப் பொருள்" போல் இருந்தது என்பது சொல்லாமல் போதரும்!

அந்த ஆண்டு மாவட்டக் கல்வி அதிகாரி பள்ளித் தணிக்கையின்போது இதனைக் கண்டறிந்தார். ஆய்வு அறிக்கையில் இதனைக் குறிப்பிட்டதோடன்றி தலைமையாசிரியர் சுற்றறிக்கையைக் கவனியாமலோ அல்லது வேண்டுமென்றோ வாங்கியமைக்காக அவர்தம் பொறுப்பில் பன்னிரெண்டாயிரம் ரூபாய் பள்ளிக்கு தண்டக் கட்டணமாகக் (Sur charge) கட்டவேண்டும் என்ற ஆணை பிறப்பித்தார். இந்த ஆணையின் நகல்களைக் நகராண்மைக் கழக ஆணையர், கல்வி இயக்குநர், மண்டலப் பள்ளிக் கல்வி ஆய்வாளர் இவர்கட்கெல்லாம் அனுப்பி வைத்து விட்டார். சொக்கலிங்கம் பிள்ளையிடத்தில் நான் இருந்திருந்தால் கம்பெனிக்குப் பணம் தருமாறு நகராண்மைக் கழக ஆணையர் எழுதிய கடிதத்திற்கு மறுமொழி தரும்வகையில் அரசு சுற்றறிக்கைக் கடிதத்திற்கு மாறாக வேறு கம்பெனியார் உற்பத்தி செய்ததை வாங்கியது தவறு என்றும், அவர் ஆணைப்படிக் கம்பெனிக்குப் பணம் அனுப்புவது தம் பொறுப்பல்ல என்றும், ஆணைக்குக் கீழ்ப்படிவது தம் கடமையாதலால் பணம் அனுப்புவதாகவும் பின்னர் தணிக்கையின் போது மாவட்டக் கல்வியதிகாரி இந்தத் தவற்றைக் கண்டறிந்து தம்மைப் பொறுப்பாளியாக்கினால் அது தம்மைக் கட்டுப்படுத்தாது என்றும் சுட்டிக் காட்டி ஆணையருக்கு மரியாதை தவறாமல் கடிதம் எழுதியிருப்பேன். இதன் நகல்களை மாவட்டக் கல்வியதிகாரி, மண்டலப் பள்ளிக் கல்வி ஆய்வாளர், கல்வி இயக்குநர் இவர்கட்கெல்லாம் அனுப்பி வைத்திருப்பேன். பின்னர் வரும் குற்றச்சாட்டிற்கு இக்கடிதம் தற்காப்பு அரணாகவும் அமையும். சொக்கலிங்கம் பிள்ளை ஒரு வெகுளி; துணிவு இல்லாதவர். ஆதலால் அவ்வாறு எழுதவில்லை.

மாவட்டக் கல்வியதிகாரி பன்னிரெண்டாயிரம் பள்ளிக்குச் செலுத்துமாறு எழுதிய கடிதத்தை எடுத்துக் கொண்டு என்னிடம் வந்தார். நான் மேற்குறிப்பிட்டவாறு கடிதம் எழுதியிருந்தால் அஃது

இப்போது அரணாக இருந்து காக்கும் என்றும் சுட்டிக் காட்டினேன். சொக்கலிங்கம் பிள்ளை அவ்வாறு எழுதத் தோன்றவில்லையென்றும், அப்படித் தோன்றினாலும் தமக்கு எழுதத் துணிவு இல்லையென்றும் தெரிவித்தார். எனக்கும் அச்சமயம் கழுவாய் ஒன்றும் தோன்றவில்லை. மனம் குழம்பியது. நான் துறையூரை விட்டுக் காரைக்குடி வந்த பிறகும் (1950) ஒரு சில ஆண்டுகள் பள்ளியின் நினைப்பும் இருந்தது. கல்வியதிகாரிகளின் மாற்றங்களைப் பற்றி நாளிதழ்களில் பார்த்துக் கொண்டு இருந்தேன். இது பூர்வ வாசனையின் உறைப்பால் ஏற்பட்டதன் விளைவு. இப் பழக்கம் சொக்கலிங்கம் பிள்ளை விஷயத்தில் துணை செய்வதாக அமைந்தது.

நான் துறையூரில் இருந்தபோது (1944) நெருங்கிப் பழகிய மாவட்டக் கல்வி அதிகாரியின் நேர்முக அலுவர் (Personal Assiatant) எஸ். வீராசாமிப் பத்தர் மதுரை மாவட்டக் கல்வியதிகாரியாகப் பணியாற்றியதை அறிந்திருந்தேன். ஆகையால் சொக்கலிங்கம் பிள்ளையை அழைத்துக் கொண்டு ஒருநாள் மாலை (1953) மதுரை சென்றேன். கல்லூரி இல்லத்தில் (College House) தங்கினோம். இன்றிருப்பதுபோல் அஃது அன்றில்லை. பின்பக்கம் காலியிடம்; அதனையடுத்து ஒரு சிறு உணவு விடுதி. தங்கும் அறைக்கு இருவருக்கும் மூன்று ரூபாய்க் கட்டணம் வாங்கியதாக நினைவு. அப்போது இட்டலி விலை மூன்று காசு; தோசை ஆறு காசு; காபி ஒன்பது காசு என்பதாக நினைவு அதிகாலையில் எழுந்து நீராடி மீனாட்சி சொக்கலிங்கப் பெருமானைச் சேவித்தோம். வந்த காரியம் வெற்றியடைய வேண்டும் என்று அம்மையப்பரை வேண்டிக் கொண்டோம். தரிசனம் முடிந்து ஏழரை மணிக்குத் திருக்கோயிலை விட்டு வெளி வந்தோம். அறைக்கு வந்து உட்புறமாக இருக்கும் உணவு விடுதியில் சிற்றுண்டி கொண்டோம். எல்லாம் சாவகாசமாக நடைபெற்றன. அறைக்கு வரும்போது மணி ஒன்பது.

மதுரை மாவட்டக் கல்வி அதிகாரியின் அலுவலகம் மதுரை நகரப் பேருந்து நிலையத்திற்கு எதிரில் உட்புறமாக இருந்தது.

காவலாளியை விசாரித்து அதிகாரி ஊரிலிருப்பதை அறிந்து கொண்டோம். இரண்டு சாத்துக்குடி வாங்கிக் கையில் வைத்துக் கொண்டோம். சற்றேறக் குறைய முற்பகல் பத்தரை மணிக்கு வீராசாமி பத்தர் அலுவலகத்தில் நுழைவதைப் பார்த்தோம். பதினைந்து மணித்துளிகள் கழிந்த பிறகு இருவரும் பெயர்களை ஒரு தாளில் எழுதி உள்ளே அனுப்பினோம். அதிகாரி வருமாறு பணிக்கவே இருவரும் அலுவலகத்திற்குச் சென்று திரு பத்தருக்கு வணக்கம் தெரிவித்தோம். சுமார் ஏழு ஆண்டுகளாகத் திரு பத்தரைச் சந்தித்துப் பேசும் வாய்ப்பு இல்லாததால் மிக அன்புடன் உரையாடினோம். நான் துறையூரிலிருந்து காரைக்குடி வந்தபோதும், அதற்கு இரண்டு மூன்று ஆண்டுகட்கு முன்னரேயும் பத்தர் தஞ்சைக்குப் போய்விட்டதால் சந்திக்கும் வாய்ப்பு ஏற்படவில்லை. நான் கல்லூரியில் பணியாற்றுவது குறித்து மகிழ்ச்சியடைந்தார் பத்தர்.

பிறகு வந்த வேலையைக் குறித்துப் பேசினேன். சொக்கலி ங்கம்பிள்ளையை அறிமுகப்படுத்தி வைத்தேன். நாங்கள் 1940–41 சைதையில் பயிற்சிக் கல்லூரியில் பயின்ற நாள் முதல் நெருங்கிய நண்பர்கள் என்று குறிப்பிட்டுப் பேசினேன். எந்தத் தவறும் செய்யாமல் சிக்கல் ஏற்பட்டிருப்பது குறித்து விளக்கினேன். இதற்கு வருந்த வேண்டா என்றும், இம்மாதிரி தொல்லைகள் நேரிடுவது சர்வசாதாரணம் என்றும், இதனை எளிதாகச் சமாளிக்கலாம் என்றும், இதற்கரிய வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் தெரிவித்தார் பத்தர். பின்னர் மாவட்டக் கல்வி அதிகாரிக்கு எழுதும் கடிதம் பற்றியும் குறிப்புகள் தந்தார். பிறகு விடைபெற்றுக் கொண்டு அறைக்குத் திரும்பினோம். அறையிலேயே கடிதத்தை நல்லமுறையில் தயாரித்தோம். மதுரையிலேயே அதனைத் தட்டச்சு செய்வித்து இராமநாத மாவட்டக் கல்வி அதிகாரிக்கு அனுப்பினோம்: இதன் நகல் மண்டலப் பள்ளிக் கல்வி ஆய்வாளர், கல்வி இயக்குநர் இவர்கட்கு அனுப்பப் பெற்றது; காரைக்குடிக்குத் திரும்பியதும் நகராண்மைக் கழக ஆணையருக்கு கடித நகல் ஆள் மூலம் அனுப்பப் பெற்றது. இவ்வாறு செய்தது எங்கட்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தந்தது.

மூன்று திங்களில் கட்ட வேண்டிய 12 ஆயிரத்தில் 9 ஆயிரம் தள்ளுபடி செய்யப் பெற்றது. 3 ஆயிரம் ரூபாய் (ஒலி பெருக்கி செட் வாங்கியது) கட்ட வேண்டும் என்றும் கடிதத்தில் குறிப்பிடப் பெற்றிருந்தது ஒரு மாதம் ஆறப்போட்டு இக்கடிதத்திற்கும் சரியான மறுமொழி தரப்பெற்றது பழைய பல்லவியே புதிய முறையில் சென்றது மற்றும் மூன்று மாதத்தில் இத்தொகையும் தள்ளுபடி செய்யப் பெற்றது சொக்கலிங்கம் பிள்ளையின் கவலை ஒழிந்தது. புதிய தெம்புடன் திகழ்ந்தார். இப்படிச் சிலருக்கு எதிர்பாராத தொல்லைகள் தோன்றுகின்றன.

**நினைவு - 5 :** இரண்டு ஆண்டுகள் கழிந்து (1956 என நினைக்கிறேன்) இவர் வாழ்வில் மீண்டும் ஒரு புயல் எழுந்தது. பன்னிரண்டு ஆண்டுகட்கு முன்னர் இவரை விட்டுப் பிரிந்து சென்ற இவர் மனைவி ஒரு வக்கீல் நோட்டீஸ் அனுப்பியிருந்தார். இவர் மனைவியின் தந்தையார் செட்டி வீட்டுக் கணக்குப்பிள்ளை. நீதிமன்ற வழக்குகளை நன்கு அறிந்தவர். மருமகனிடம் சுரப்பு இருக்கிறதென்பதை நன்கு அறிந்து கொஞ்சம் கறந்து பார்க்கலாம் என்பது அவரது நினைப்பு. நோட்டீஸ் கண்டதும் சொக்கலிங்கம் பிள்ளை பதறிப் போனார்.

இவரை மணந்து கொண்டபோது கட்டில், மெத்தை, பீரோ, மேசை, நாற்காலி முதலியவை கொண்டு வந்ததாகவும், அவை இவர்பொறுப்பில் இருப்பதாகவும், முப்பது சவரன் மதிப்புள்ள நகை வகையறா இவர் வசத்திலிருப்பதாகவும், இவற்றைத் தம் வசம் ஒப்படைக்க வேண்டும் என்றும், இவை தவிர, திங்களொன்றுக்கு வாழ்க்கைப்படியாக (Maintenance) ரூ. 150/= தரவேண்டும் என்றும், தவறினால் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து இவற்றைப் பெற நடவடிக்கைகள் எடுக்கப் போவதாகவும் நோட்டீஸில் குறிப்பிடப் பெற்றிருந்தது. தம் தம்பி வீட்டில் உணவு கொண்டு அமைதியாகப் பள்ளிப் பணியில் ஈடுபட்டு வாழ்ந்து வரும் தம் துறவு வாழ்க்கையில் ஒரு புயல் எழுந்தது போன்ற அச்சம் கிளர்ந்தெழுந்தது இவரிடம். நோட்டீசை எடுத்துக் கொண்டு என்னிடம் வந்தார்; இதில் எப்படியாவது தமக்கு உதவவேண்டும் என்று வேண்டினார்.

நான் யோசித்தேன். திருச்சி வக்கீல் திரு அரங்கசாமி ரெட்டியாரைக் கலந்து பேசி இதற்கு வழிவகைகள் காணலாம் என்று எண்ணி அவருக்குக் கடிதம் எழுதினேன் இந்த வக்கீல் நண்பர் சதா வெளியூர்ப் பயணத்தில் இருப்பதால், இவர் திருச்சியில் இருக்கும் நாள் குறிப்பிட்டு எழுதினால் நானும் சொக்கலிங்கம் பிள்ளையும் அந்நாளில் வருவதாக எழுதினேன். எங்கள் வருகை ஒரு "வாழ்க்கைப்படி வழக்கு" பற்றியது என்றும் குறிப்பிட்டு எழுதியிருந்தேன் திரு அரங்கசாமி ரெட்டியார் ஒரு நாள் குறிப்பிட்டுத் தாம் அந்நாளில் புதுக்கோட்டைக்கருகிலுள்ள ஓர் ஊருக்கு ஒரு முக்கிய அலுவல் நிமித்தம் வருவதாகவும் (ஊர்ப் பெயர் இப்போது நினைவில் இல்லை) நாங்கள் அங்கு வந்தால் உதவுவதாகவும் பதில் தந்திருந்தார்.

வக்கீல் குறிப்பிட்டிருந்த அந்நாளில் அந்த ஊருக்குச் சென்று அவரைச் சந்தித்தோம் சொக்கலிங்கம் பிள்ளை தம் கதையை வக்கீலிடம் ஆதியோடந்தமாக விவரித்து விளக்கித் தமக்கு வந்த நோட்டீசையும் அவரிடம் தந்தார். உடனே வக்கீல் பதில் நோட்டீசுக்குத் திட்டமிட்டு அதில் பன்னிரண்டு அண்டுகட்கு முன்னர்த் தம்மை நட்டாற்றில் விட்டதுபோல் கைவிட்டுச் சென்றபோது தான் கொண்டு வந்த சாமான்களை எடுத்துப் போனதுமன்றி தாம் இல்லாதபோது தாம் போட்ட நகை தாலிக்கொடி இவற்றையும் (சுமார் நாற்பது சவரன் மதிப்பு), வேறு பல சாமான்களையும் எடுத்துச் சென்று விட்டதாகவும், தாம் பல தடவை தம் இல்லத்திற்கு வந்து வாழுமாறும் நேரில் கேட்டும் கடிதம் எழுதியும் சில பெரியோர்களை அனுப்பி வருமாறு வேண்டியும் வராமல் அலட்சியம் செய்துவிட்ட படியால் இனி முதுமைக் காலத்தில் தாம் அவளுடன் வாழ விரும்பவில்லை என்றும், அப்படி வாழ்ந்தால் நஞ்சு வைத்துத் தம்மைக் கொன்றுவிடும் அச்சம் இருப்பதாகவும், இந்நிலையில் வாழ்க்கைப்படி கேட்பது நியாயம் அல்ல என்றும், அப்படி ஏதாவது வழக்கு தொடர்ந்தால் தக்க வக்கீலைக் கொண்டு எதிர்க்கப்படும் என்றும் குறிப்பிட்டு பதில் நோட்டீசு அனுப்பினார். இந்த நோட்டீசைக் கண்டதும் அவர்கள் அடங்கிப் போனார்கள் எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

**நினைவு - 6 :** இதன் பிறகு சொக்கலிங்கம் பிள்ளை தம் மனைவியுடன் வாழ்ந்தபோது நேரிட்ட பல திடுக்கிடும் செய்திகளைச் சொன்னார் தம் மாமனார் தம் மகளைக் கொண்டு வசிய மருந்தை உண்ணச் செய்தாராம். மந்திரவாதியைக் கொண்டு பில்லி சூனியம் வைத்தாராம். இவற்றால் தம் உடல்நலம் மிகவும் சீரழிந்து பணிசெய்யும் திறன் இல்லாதும் போயிற்றாம். உடனே தம் வீட்டார் வேறொரு மந்திரவாதியைக் கொண்டு இந்தச் செய்தியை அறிந்தார்களாம். அவரைக் கொண்டு மாவினால் ஒரு பதுமை செய்வித்து அதில் பல ஊசிகளைக் குத்தினார்களாம். ஒவ்வொரு ஊசி குத்தப்படும்போதும் இவர் வயிற்றிலிருந்த மருந்து சிறிது சிறிதாக வெளிப்பட்டதாம். இன்னும் என்னென்னவோ செய்ததாகவும் சொன்னார். அவற்றை இப்போது நினைவுகூர முடியவில்லை. இரண்டாண்டுகளில் உடல்நிலை சீர் அடைந்ததாம். இக்கதை எனக்கு **"அரபு இரவுகள்"** நூலில் படித்த கதைகள் போலிருந்தது. இப்படியும் ஓர் அரக்கத் தன்மையுள்ள மாமனார் இருப்பாரா என்ற வியப்பும் திகைப்பும் எழுகின்றன.

நான் காரைக்குடி வந்ததும் (1950) அவரைக் காணும்போது அவரிடம் சிறிது மாற்றம் காணப்பட்டது. 1940-41 இல் சைதையில் அவரிடம் கண்ட உற்சாகம், சிரித்த முகத்துடன் பேசுவது போன்றவற்றில் சிறிது மாற்றம் காணப்பெற்றது. சற்று வயது முதிர்ந்தமையால் இம்மாற்றம் இருக்குமோ என்று நினைத்து வாளா இருந்துவிட்டேன். குடும்ப வாழ்க்கை சரியாக அமையாததற்குக் காரணம் வினவினேன். மனைவியுடன் மனம் ஒத்து வாழமுடியவில்லை என்று மட்டிலும் சொன்னார். அதற்குமேல் நானும் குடைந்து கேட்கவில்லை. இப்போதுதான் கிணறு வெட்ட பூதம் புறப்பட்டதுபோல் உண்மைக் காரணம் விசுவரூபம் போல் தெளிவாகப் புலனாயிற்று.

**நினைவு - 7 :** தமிழகத்தில் எந்தப் பல்கலைக்கழகத்திலும் **Ph.D.** பட்டத்திற்குப் பதிவு செய்து கொள்ள விதிகள் தடையாக இருந்தமையால் திருப்பதி சென்றேன். நான்கு ஆண்டுகள் முயன்றும்

அங்கும் பதிவு பெற முடியவில்லை. ஒருநாள் (1964) துணை வேந்தரிடம், "ஐயா, தாங்கள் பல்வேறு விதமாகப் பேசி Ph.D.க்குப் பதிவு செய்து கொள்ள மறுத்தால் நான் கும்பகோணம் வழியைக் கையாள வேண்டியதுதான்." என்று சொல்லி வைத்தேன் கும்பகோணம் ஹோமியோதிபதி ஆராய்ச்சி நிறுவனத்திற்கு ரூ. 100/= (அக்காலத்தில் இதுதான் கட்டணம்) அஞ்சல் வழி கற்றேன். இத்தேர்வு ஓர் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியரின் பார்வையில் நடைபெற வேண்டும் என்பது விதி.

1960-66 வரை குடும்பம் காரைக்குடியில் இருந்தது நான் ஆண்டிற்கு மூன்று முறை திருப்பதியிலிருந்து வந்து போய்க் கொண்டிருந்தேன். சொக்கலிங்கம் பிள்ளையின் பார்வையில் தேர்வு எழுத ஏற்பாடு செய்து கொண்டேன். ஒரு விடுமுறையில் தேர்வு எழுதி விடைத்தாள்களை கும்பகோணத்திற்கு அனுப்பச் செய்தேன். ஓரிரண்டு திங்களில் முடிவு தெரிந்தது. "டாக்டர்" பட்டமும் பெற்றேன். இந்த "நகைச்சுவையான ஏற்பாடு" இன்றும் என் மனத்தில் நீங்காத நினைவாக உள்ளது. இது பல்கலைக் கழகத்தில் Ph.D.க்குப் பதிவு செய்து கொள்ள வழி அமைத்ததால்[6]

**நினைவு - 8 :** காரைக்குடியில் இலக்குமிபுர அக்கிரகாரத்தின் அருகில் தம், சொந்த வீட்டில் தம் தம்பியுடன் வாழ்ந்திருந்தார் சொக்கலிங்கம்பிள்ளை. இவர் தம்பிக்கு சினிமா கொட்டகையில் ஏதோ ஒரு சிறுவேலை அவர் அங்குப் பெறும் ஊதியம் வாழ்க்கை நடத்துவதற்குப் போதாது. இவர் உதவியால்தான் தம்பியின் வாழ்க்கை நன்கு அமைந்திருந்தது. இவர் வீட்டுக்கருகில் அக்கிரகாரத்தில் நான் ஒரு வீடு வாங்கினேன். (1966). இதில் பெருவாரியான சாமான்களைப் போட்டுவிட்டுத் திருப்பதி சென்றேன் சிறிதளவு சாமான்களுடன். கடைத் தெருவில் சிறிது கொடுக்கல் - வாங்கல் இருந்ததாலும் தேவகோட்டை சார் நீதிபதி மன்றத்தில் ஒரு வழக்கு இருந்தமையாலும் சில சமயம் காரைக்குடி வர நேரும்.

6 1942இல் சிந்தனையில் எழுந்த "டாக்டர் பட்ட ஆசை" (Ph.D) வேங்கடவன் அருளால் 1968 இல் நிறைவேறியது.

ஆனால் சொக்கலிங்கம் பிள்ளை வீடு இருக்கும் இடம் தெரியாது. ஒரு சமயம் நானும் ஆறுமுகம் பிள்ளையும் (பயிற்சிக் கல்லூரி உதவி ஆள்) வீட்டைத் திறந்து பார்த்து வீட்டின் நிலையைத் தெரிந்து கொண்டு திரும்பும்போது (1972) வழியில் சொக்கலிங்கம் பிள்ளையின் வீட்டைக் காட்டினார் ஆறுமுகம் பிள்ளை அப்போது சொக்கலி ங்கம் பிள்ளை ஓய்வு பெற்றிருப்பதாகவும் தெரிவித்தார் அப்போது முற்பகல் 10 மணி இருக்கும். தெருவில் ஒருவர் வண்டியில் ஆப்பில் பழம் விற்றுக் கொண்டிருந்தார். ஓர் ஆறு பழங்கள் வாங்கிக் கொண்டு அவரைப் பார்க்கச் சென்றேன். தளர்ந்த நிலையில் காணப்பட்டார் உடல் நிலையும் குன்றியிருந்தது. "மலங் கழிக்க முடியவில்லை - இதுதான் பெருங் குறை" என்றார். இராஜாஜி போல் நிரந்தரமாக குடல் கழுவும் கருவி (Enema) வைத்துக் கொள்ளுமாறு அறிவுரை கூறினேன். முகத்தில் சோகக் களை தட்டியிருந்தது. சிரமப்பட்டுப் புன்முறுவலை ஏறிட்டுக் கொண்டு பேசியதால் இது புலனாயிற்று. 15 மணித்துளிகள் உரையாடித் திரும்பினேன். ஆறு திங்கள் கழித்து காரைக்குடி சென்றபோது அவர் திருநாடு அலங்கரித்த செய்தியை அறிந்தேன்

**நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை யுடைத்து இவ்வுலகு**[7]

என்ற குறள் நினைவுற்கு வந்து நிலையாமை உணர்வால் சிறிது நேரம் தம்பித்துப் போனேன் இறக்கின்றவர்கள் 'கியு' வரிசையில் நின்று கொண்டு இருப்பது போன்ற காட்சி என் மனத்தில் தோன்றியது. ஆனால் நான் நிற்கும் இடம் தெரியவில்லை

**இதுவென வரைந்து வாழுநாள் உணர்ந்தோர்**
**முதுநீர் உலகில் முழுவதும் இல்லை**[8]

என்று மாடல மறையோன் செங்குட்டுவனுக்கு உணர்த்திய பொன்மொழி என்னை ஆட்கொண்டது

7 குறள் - 336

8 சிலம்பு வஞ்சிக்காண்டம் - நடுகல் அடி 181-2

# 6

# திரு. P. முத்துவேங்காடசல துரை

திருச்சி மாவட்டத்தில் துறையூர் புகழ் வாய்ந்த ஊர்; பேரூர். இந்த ஊர் பெருநிலக் கிழவர் பிரசன்ன வேங்கடாசல துரை என்பவர்; கல்வியறிவு இல்லாதவர் அரண்மனையைவிட்டு வெளியில் வராதவர். இவர்தம் மூன்றாவது திருக்குமாரர்தான் பிரசன்ன முத்து வேங்கடாசல துரை என்பவர் இரண்டாவது குமாரர் பிரசன்ன விசய வேங்கடாசல துரை என்பவர். முதல் குமாரர் (பெயர் தெரியவில்லை) ஒரு மகனை விட்டு இளமையிலேயே திருநாடு அலங்கரித்து விட்டார். பெருநிலக் கிழவர் தம் துணைவியாரையும் மக்களையும் பேரனையும் அரண்மனையைவிட்டு விரட்டி விட்டு அரண்மனையில் தனிக்கட்டையாகக் கிடந்தார். ஏன் அப்படிக் கிடந்தார் என்பதற்கு துறையூருக்குக் கிழக்கேயுள்ள பெருமாள் மலையில் எழுந்தருளியிருக்கும் பிரசன்ன வேங்கடாசலபதிக்கே வெளிச்சம்! மனைவியாரும் பிள்ளைகளும், பேரனும் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து பிழைப்புத் தேவைக்காக (Maintenance) ஒவ்வொருவரும் திங்கள் ஒன்றுக்கு ரூ 250/= வீதம் தொகை பெற்று வாழ்ந்து வந்தனர். பேரனுக்குச் சிற்றப்பன்மார் இருவரும் பாட்டியும் உதவியாக இருந்தனர். பேரன் பத்தாவது வகுப்புகூட தாண்டவில்லை.

**நினைவு - 1** : திருமகளின் கடைக்கண் நோக்கு இருக்குமிடங்களில் கலைமகளின் கடைக்கண் நோக்கு பெரும்பாலும் இருப்பதில்லை பிழைப்புத் தேவையாக ஒவ்வொருவரும் ரூ. 250/= பெற்றநிலையில் கலைமகளின் கடைக்கண் நோக்கினால் விசய வேங்கடாசல துரையும், முத்து வேங்கடாசலதுரையும் உயர்கல்வி பெற்று, இளங்கலை பட்டமும் பெற்றனர்; சட்டம் பயின்று

அத்துறையிலும் பட்டம் பெற்றனர் அந்தக் காலத்தில் (1941) ரெட்டியார் குலத்தில் பட்டம் பெற்றவர்கள் ஐவரே. மூன்றாமவர் நாமக்கல் வட்டத்தைச் சார்ந்த அலங்காநத்தம் மிட்டாதார் பொன்னுசாமி ரெட்டியார். இவரும் சட்டம் பயின்று பட்டம் பெற்றவர். நான்காமவர் வழக்குரைஞர் P. அரங்கசாமி ரெட்டியார் ஐந்தாவதாக பட்டம் பெற்றவன் அடியேன். ஆசிரியப் பயிற்சி பெற்று எல்.டி. பட்டம். பெற்றவன். அக்காலத்தில் "வக்கற்றவனுக்கு வாத்தி" என்ற பொன்மொழிக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தவன் ரூ. 40/= ஊதியத்தில் நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியன்: குறைந்த ஊதியத்திலும் ரூ. 5/= வெட்டு. பிச்சைக்காரன் சோற்றில் சனீஸ்வரன் புகுந்தார் போல ரூ 5/= பிடித்தம்.

**நினைவு - 2 :** முத்து வேங்கடாசல துரை எனக்கு அறிமுகமானது 1936 மே திங்களில். நான் இடைநிலைத் தேர்வில் முதல் வகுப்பில் தேறித் தேர்வு முடிவுகள் செய்தித்தாளில் வெளிவந்த அன்று கோட்டாத்தூரில் இருந்தேன். அப்போது முத்து வேங்கடாசல துரை சட்டமன்ற மேலவைத் தேர்தலில் உறுப்பினர் பதவிக்குப் போட்டியிடும் காட்டுப் புத்தூர் பெருநிலக் கிழவர். திரு சப்தரிஷி ரெட்டியாருக்காக வாக்களார்களை நாடிக் கோட்டாத்தூருக்கு வந்திருந்தார். அப்போது இவருக்கு அறிமுகமானேன் என் ஒன்று விட்ட தமையன் திரு. ஞானி சதாசிவ ரெட்டியார் என் தேர்வு முடிவைச் சொல்லி இவருக்கு அறிமுகம் செய்துவைத்தார்.

நான் இடைநிலை வகுப்பில் இரண்டாம் ஆண்டுப் பயின்று வந்தபோது "ரெட்டி ஜனசங்கம்" ரெட்டி குல இளைஞருக்கு மாணவர் படிப்புதவிக் கட்டணம் (Scholarship) தருவதாக சிலர் சொல்லக் கேட்டிருந்தேன். செய்தித் தாளிலும் இந்தச் செய்தி வெளி வந்திருந்தது என் வினைப் பயனால் நோய்வாய்ப்பட்டு ஓராண்டுப் படிப்பு (1936-37) தடைப்பட்டது. அப்போது திருமணமாகி என் மாமனார் இல்லத்தில் (பொட்டணம்) தங்கியிருந்தேன். ஒருநாள் கோட்டாத்தூர் வந்து திரு ஞானிசதாசிவ ரெட்டியாரை இட்டுக் கொண்டு துறையூர் சென்று திரு. முத்து வேங்கடாசல துரையைச்

சந்தித்து எனக்குப் படிப்புதவிக் கட்டணம் பெறுவதற்குரிய எல்லாத் தகுதிகளும் இருப்பதாகச் சான்றிதழ் ஒன்றையும், அக்காலத்தில் சென்னையில் மிகவும் புகழ் வாய்ந்த வழக்குரைஞராக இருந்த (மயிலை அப்பர்சாமிக் கோயில் தெரு) திரு E.V. சுந்தரரெட்டி என்பவருக்கு ஒரு பரிந்துரைக் கடிதமும் பெற்றேன் கல்லூரியில் சேர்ந்ததும் இந்தப் பரிந்துரைகளோடு ரெட்டி ஜன சங்கத்திற்கு முதல்வர் சான்றிதழுடன் விண்ணப்பம் அனுப்பினேன். இரண்டு திங்களில் ஆண்டொன்றுக்கு ரூ. 100/= வழங்குவதாகவும், அது திங்களொன்றுக்குப் பத்து ரூபா வீதம் வழங்கப்படும் என்றும், இரண்டாவது ஆண்டில் வேண்டுகோளைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும் என்றும் ரெட்டி ஜனசங்கத்திலிருந்து கடிதம் வந்தது அக்காலத்தில் இஃது எனக்குப் பேருதவியாக இருந்தது

அந்தக் காலத்தில் கல்லூரியில் ஆண்டுக் கட்டணம் ரூ. 96/= (மூன்று பருவகாலத்தில் கட்ட வேண்டியது) தான். இதைத்தான் ரெட்டி ஜன சங்கம் வழங்கி வந்தது. சங்கத்தின் மூலம் மாதம் ரூ. 10/= வீதம் பத்து மாதத்திற்கு வழங்கி வந்தது. இளங்கலை வகுப்பில் (B.Sc) பயின்று வந்தபோது இரண்டாண்டுகட்கு இத்தொகை பெற்றேன் இக்கால நிலையை வைத்துப் பார்க்கும்போது இத்தொகை மிகக் குறைவாகத் தோன்றினாலும், அக்காலத்தில் இது பேருதவியாக இருந்தது உணவு விடுதியில் உண்போருக்கு இத்தொகை இரண்டு வேளை உணவுக்குப் போதுமானதாக இருந்தது மாதா மாதம் முதல் வாரத்தில் பணவிடை மூலம் ரூ 9-14-0 வரும்; இரண்டணா அஞ்சல் சேவகனுக்குத் தருவேன். ரூ. 9-12-0 என் செலவுக்கு ஆகும்

**காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்**
**ஞாலத்தின் மாணப் பெரிது**[1]

என்ற குறளையும் "அக் கால நோக்குவதல்லது பொருள் நோக்கலாகாக தென்பதாம்" என்ற பரிமேலழகர் உரையையும் சிந்தித்துப் பார்க்கின்றேன். இதற்குப் புருஷகாரமாக நின்று உதவிய முத்து வேங்கடாசல துரையையும் நன்றியுடன் நினைவுகூர்கின்றேன்

1 குறள - 102

**நினைவு - 3** : "ஞானியார்" மரபில் பிறந்து வளர்ந்து மேற்கல்வி பயின்ற எனக்கு இறைவன் திருவுள்ளப்படி ஆசிரியர் பணி என் வாழ்க்கைத் தொழிலாக அமைந்தது; கீதையின் கருத்துப்படி சுதர்மமாகவும் அமைந்தது. 1941-ஜூன் முதல் நாள் பெருநிலக்கிழவர் நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியராகப் பணி ஏற்றேன். கீதாசாரியன் "ஆணைப் படி" இதனையே என் சுதர்மமாகப் போற்றி வேறு பணிக்கு மாற்றிக் கொள்ளாமல் "பத்தினித்தனத்துடன்" இருந்து ஓய்வு பெற்றேன்.[2]

புதிதாகத் தொடங்கப் பெற்ற நடுநிலைப் பள்ளியின் மேலாளராகத் திரு விசய வேங்கடாசல துரை (நடுத்துரை)யும், தாளாளராகத் திரு முத்து வேங்கடாசல துரையும் (சின்னதுரை) இருந்து வந்தனர் இருவரும் பி.ஏ., பி.எல். படித்த வழக்குரைஞர்கள். இவர்கள் தாம் மேற்கொண்ட தொழிலுக்கு - அலங்கார புருஷர்களாக எங்காத்துக்காரரும் கச்சேரிக்குப் போய் வருகின்றார்' என்ற உலகப் பழமொழிக்கு எடுத்துக்காட்டுகளாக - இயங்கி வந்தவர்களாக என் சிற்றறிவுக்குப் புலனாயிற்று. ஏதாவது ஒன்றிரண்டு புரோ நோட்டு வழக்குகளைக் கையாண்டிருக்கலாம் இவர்தம் தந்தையார் பெருநிலக் கிழவரின் ஒளி மங்கிக் கிடந்தாலும், இவர்கள் "பெருநிலக் கிழவரின் மக்கள்" என்ற ஒளியால் சமூகத்தில் ஓரளவு மதிப்புடன் திகழ்ந்து வந்தனர் என்று சொல்லாம். தொழிலில் இவர்கள் இருவருக்கும் எந்தவித முன்னேற்றமும், இல்லை; கணிசமான அளவுக்கு வருவாயும் இல்லை இருவருமே ''நாணயத்திற்குப்'' பேர் போனவர்கள் என்று சமூகத்தினரால் போற்றப் பெற்றனர் என்பதற்கு எள்ளளவும் ஐயம் இல்லை

இவர்கள் தலைமையில் யான் பணியாற்றி வந்தபோது எனக்குப் பாஞ்சாலங் குறிச்சி வீரபாண்டியன் கட்டபொம்மன், ஊமைத்துரை என்ற இருவர் பெயர்களும் நினைவிற்கு வந்தன கட்டபொம்மன் செந்நிற மேனியையுடையவராதலால் "சிவத்தய்யா"

2 திருப்பதி திரு வேங்கடவன் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் துறைத் - தலைவர் - பதவியிலிருந்து (1977)

என்றும், ஊமைத்துரை கருமை நிறமுடையவராதலால் "கருத்தய்யா" என்றும் வழங்கி வந்தனர். என்று படித்ததாக நினைவு. இந்த இரு துரைமார்களும் சிவப்பாகவும் கறுப்பாகவும் இருந்தனர்; பாஞ்சாலங் குறிச்சி வீரர்களுடன் ஒப்பிடத் தக்கவர்களாக அமைந்தனர். பாஞ்சாலங்குறிச்சியைச் சார்ந்த இருவரும் மாவீரர்கள். மானமே உயிரினும் பெரிது என்ற கொள்கையையுடையவர்கள் ஆனால் எனக்குத் தலைவர்களாக அமைந்த பெருநிலக் கிழவரின் மக்கள் இருவரும் பெருங்கோழைகள்; எந்த முன்னேற்றப் பாதையிலும் துணிவாக இறங்கிச் செயற்பட அஞ்சுபவர்கள். ஆயினும் இவர்கள் இருவரும் மானம் காத்து வாழ்ந்தவர்கள்; நேர்மை தவறாதும் வாழ்ந்தவர்கள்

மூத்தவர் பள்ளிக்கு ஒரு நாளும் வந்ததில்லை. அவருக்குப் பள்ளியைப்பற்றி எதுவும் தெரியாது "உலகியலும் தெரியாது" என்பது என் கணிப்பு; பலரது அநுபவமும் இந்த முடிவுதான் இளையவர் முத்து வேங்கடாசல துரை கல்வித் துறையில் ஊக்கமும் ஆர்வமும் இல்லாதவராக இருந்தாலும், சட்ட நுணுக்கம் அறியாதவராக இருந்தாலும், உலகியல் அறிந்த சதுரர் இல்லாவிட்டால் பள்ளியை ஒரு வாணிகம்போல் - ஒரு தொழில்போல் - நடத்த முடியுமா? வெல்லப் பிள்ளையார் ஒன்றைச் செய்தானாம் ஒருவன் அதன் நைவேத்தியத்திற்குச் செலவு செய்ய அவனுக்கு மனம் இல்லை. ஆனால் அவனது "கூர்த்த மதியில்" ஓர் அற்புதமான எண்ணம் உதித்தது பிள்ளையார் வெல்லத்தால் ஆனவர் என்பதை உணர்ந்த அவன் அதன் தலையிலேயே கொஞ்சம் வெல்லத்தைக் கிள்ளி எடுத்து அதனையே நைவேத்தியப் பொருளாக அந்தப் பிள்ளையாருக்கு வைத்துப் படைத்தானாம்! இந்த வெல்லப் பிள்ளையார் செய்தவனைப் போன்றவர் முத்து வேங்கடாசலம் துரை; பள்ளியை நடத்திய விதமும் அவன் நைவேத்தியம் செய்த கதையைப் போன்றதுதான். இப்படிப் பள்ளி நிர்வாகம் அற்புதமாக - நிர்வாகத்தினரின் கையைக் கடிக்காமல் - நடைபெற்றது. ஆசிரியர்களின் உழைப்பின்மீது கட்டடங்கள் கட்டப் பெற்றன; எஞ்சியிருந்த பணம் கற்பனைச் செலவுக்காகத் தயாரிக்கப் பெற்ற

பற்றுச்சீட்டுகளில் மறைந்து நிர்வாகத்தினர் கையில் மூலதனமாயிற்று அந்தக் காலத்தில் பெரும்பாலான தனியார் பள்ளிகளின் நிர்வாகம் ஆசிரியப் பெருமக்களின் குருதியை அட்டைபோல் உறிஞ்சிக் கொண்டிருந்தது இந்தப் பெரிய குற்றத்திற்கு அடியேன் ஒரு கைப் பாவையாகப் பயன்படுத்தப் பெற்றேன்.

இந்தப் பாவங்கள் செய்ததற்காகத்தான் திருவேங்கடாசலபதி என்னைத் திருத்திப் பணிகொண்டு என்னைப் பல்லாண்டுகள் எந்தவித சொந்த முன்னேற்றமும் இல்லாமல் கசக்கிப் பிழிந்தான் போலும்!

**தெரியேன் பால கனாய்**
**பலதீமைகள் செய்து விட்டேன்;**
**பெரியேன் ஆயினபின்**
**பிறர்க்கேயுழைத்து ஏழையானேன்;**[3]

என்று மனம் நொந்து அழுகின்றேன்; என்றாலும் இந்தத் தெய்வப் பணியில், துறையூரில் எண்ணற்ற ஏழைப் பிள்ளைகட்கு உதவி செய்ய வாய்ப்பிருந்தது திருப்பதியிலும் தமிழ் வளர்ச்சிக்குக் கருவியாகப் பயன்பட்டேன். "பைந்தமிழ்ப் பின்சென்ற பசுங்கொண்டல்" இப்படியெல்லாம் என்னை ஆட்டிப் படைத்ததை எண்ணி இறும்பூது அடைக்கின்றேன்; செம்மாத்து நிற்கின்றேன். மனமும்,

**தொண்டே செய்து என்றும்**
**தொழுது வழியொழுகப்**
**பண்டே பரமன்**
**பணித்த பணிவகையே**[4]

என்று நம்மாழ்வாரின் திருவாக்கை நினைந்து அமைதி பெறுகின்றது

**நினைவு - 4 :** அல்லும் பகலும் பள்ளி முன்னேற்றத்தையே கருத்தில்கொண்டு உழைக்கும் அடியேனைச் சிறிதும் கலக்காமல்

3 பெரி திரு 1.9 : 7

4 திருவாய் 10.4 : 5

இரண்டாம் ஆண்டில் நான்காம் பாரம் தொடங்க விண்ணப்பம் கல்வி இயக்குநருக்கு அனுப்பப் பெற்றது ஆனால் கல்வித்துறை மறுத்துவிட்டது அப்போது கல்வி உலகக் கோள்களின் நிலை இது: திருச்சி மாவட்டக் கல்வி அதிகாரி சி இரகுநாதன்; பார்ப்பனர் கோவையில் மண்டலக் கல்வி ஆய்வாளர் V.R. அரங்கநாத முதலி யார்; பார்ப்பனரல்லாதாருக்கு உதவுபவர் என்ற புகழ் பெற்றவர். சென்னையில் கல்வித்துறை இயக்குநர் ஆர் எம். ஸ்ட்ராத்தம் துரை (வெள்ளைக்காரர்) துறையூர் தொடக்க உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் T.S. இராசகோபாலய்யரைக் கேட்டு அவர் யோசனைப்படி விண்ணப்பம் அனுப்பியிருக்க வேண்டும் திருச்சி மாவட்டக் கல்வி அதிகாரி அலுவலகத்தில் பார்ப்பனச் சூழ்நிலை. எல் கணபதி அய்யர் தலைமை எழுத்தர். விநாயகப்பெருமான்போல் அனைவரையும் ஆட்டவல்ல ஆற்றல் படைத்தவர். இவரை அக்காலத்தில் L.G. பெருங்காயம் என்ற சாட்டுப் பெயரால் பள்ளி நிர்வாகம் வழங்கியது. இவரை நம்பித்தான் இராசகோபாலய்யர் துரைமார்கட்குத் துணிவு கொடுத்து நம்பிக்கை ஊட்டியிருக்க வேண்டும். துரையை விட மூத்தவர்; அதனால் அவர் சொல்லுவதை நம்பி நான்காவது பாரம் திறக்க விண்ணப்பம் அனுப்பியிருக்க வேண்டும் தொடக்க நிலைப் பள்ளித் தலைமைசிரியருடைய சிந்தனைக்கும், விண்ணப்பம் தயாரிக்கும் திறனுக்கும் ஓர் எல்லை உண்டு என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். தவிர, வெள்ளையர் ஆட்சிக்கார வர்க்கம் 90 விழுக்காடு பார்ப்பனர். அதனால் ஆணவம் மண்டைக் கொழுப்பாக இருந்தது. அதனைப் புரிந்து கொண்டு அவர்களை அணுகும் முறையில் சமாளிக்க முடியும் நிலைமையும் இருந்தது. ஒரு சில அலுவலகத் தமிழர்கள் அதற்குள்ள வழி முறைகளையும் தெரிந்து வைத்திருந்தனர்.

இரண்டு துரைமார்களும் கோடையில் ஊட்டிக்குச் சென்றிருந்தபோது கோவையில் இருந்த V.R. அரங்கநாத முதலி யாரைப் பார்த்து நான்காவது பாரம் தொடங்குவதுபற்றிப் பேசி அநுமதி வழங்கப் பரிந்துரைக்குமாறு கேட்டுக் கொண்டார்கள். பார்ப்பனரல்லாதர்க்குரிய பள்ளிகட்குச் சலுகை காட்டுவார் என்று

நம்பிக்கையில்தான் சந்தித்தனர் போலும் முதலியார் கூர்த்தமதி யுடையவராதலால் இவர்களைப் பற்றி நன்கு அறிந்திருந்தார்; எடை போட்டும் வைத்திருந்தார் இவர்கள் நிர்வாகத்திலிருந்த உயர்நிலைத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களின் நிலை, சம்பளத் திட்டங்கள் கட்டட வசதிகள் ஆகியவை பற்றி நன்கு அறிந்திருந்தவராதலால் "இவர்கட்கா உயர்நிலைப் பள்ளி" என்று நினைத்துவிட்டார். "பெருநிலக் கிழவர்" என்ற பெயரிலோ "வழக்குரைஞர்கள்" என்ற பதவியிலோ மயங்கவில்லை இவர்களுடைய குறைபாடுகள் அவர்தம் புதிர்க்கதிர்ப் பாவைக்குத் (X - ray vision) தப்பவில்லை.

நடுநிலைப் பள்ளித் திறக்கப்படும் போதே (1) ஓராண்டிற்குள் ரூபாய் பத்தாயிரம் வங்கியில் போட வேண்டும் (2) பதிவு பெற்ற குழு ஒன்று அமைத்து அதன்கீழ்ப் பள்ளி நிர்வாகம் அமைய வேண்டும் (3) மாணாக்கர்கள் விளையாடுவதற்கு ஐந்து ஏக்கர் பரப்புள்ள ஆடுகளம் (Play ground) இருத்தல் வேண்டும். (4) அரசுத் திட்டப்படி ஆசிரியர்களின் ஊதியத் திட்டங்கள் அமைதல் வேண்டும் என்ற நிபந்தனைகள் விதித்திருந்தது கல்வித்துறை. இவற்றுள் ஒன்றுகூட நிறைவேற்றப்பெறாமல் உயர்நிலைப் பள்ளியாக வேண்டும் என்று நினைத்தால் அஃது எப்படிச் சாத்தியமாகும்?

**நினைவு - 5** : பள்ளி வளர்ச்சியில் முத்துவேங்கடாசலத் துரைக்கிருந்த அக்கறையை விட என்னுடைய அக்கறைதான் அதிகமாக இருந்தது என்பதை அப்போதே நான் அறிந்திருந்தேன். அவருடைய கவனம் எல்லாம் பெருநிலக்கிழவர் அரண்மனைக்குள் புகுந்து எப்படிச் சொத்துக்களைக் கைப்பற்றுவது என்பதில்தான் இருந்ததால், பகலெல்லாம் அரண்மனைக்கெதிரிலுள்ள பள்ளியின் மேல்மாடியில் உள்ள ஓர் அறையில் தங்கியிருந்தார். மரத்தில் மேல் அமர்ந்து கொண்டிருக்கும் பருந்தொன்று தரையில் நடமாடும் இரைகளை நோக்கிக் கொண்டிருப்பது போல் மாடி அறையிலிருந்து அரண்மனையை நோக்கிக் கொண்டிருந்தார்.

இரண்டாம் ஆண்டு (1942) பள்ளியின் தூல வளர்ச்சிக்குரிய பல செயல்களை மேற்கொண்டேன். ஒவ்வொரு செயலையும்

முற்றுவிப்பது கடாமாட்டில் பால் கறப்பது போன்றிருக்கும் பால் கறப்பவன் பசுவிற்குச் சொரிந்து கொடுப்பது, புண்ணாக்குக் குழம்பு கொண்ட தவிடு, பருத்திக் கொட்டைக் கலவை ஊட்டுவது போன்ற செயல்களை மேற்கொள்வான். (1) கெஞ்சிக் கூத்தாடி ரூ 5000/= வைத்தமா நிதியாக (Fixed Deposit) வங்கியில் போடச் செய்தது பெரும் பாடாயிற்று (2) திருச்சி துறையூர் நெடுஞ்சாலைக்குக் கீழ்ப்புறம் பத்து ஏக்கர் நிலம் வாங்கச் செய்தேன். இதற்கு செல்லி பாளையம் பெருமாள் ரெட்டியார் போன்ற அந்தரங்க அமைச்சர்களைக் கொண்டு இச்செயல் நிறைவேறியது சின்னதுரை சிக்கனக்காரர்; கஞ்சப்பிரபு; பிசுநாரி என்று சொல்லும் அளவுக்கு மட்டமானவர், நான்கு சுவர்கட்குள் அடங்கியிருந்தாலும் இலௌகிகம் தெரிந்தவர்

**இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து**
**அதனை அவன்கண் விடல்**

என்ற திருக்குறள் கருத்தை நடைமுறைப் படுத்திக் காட்டியவர்.

ஆசிரியர் ஊதியத் திட்டத்தினால் மாற்றங்கள் செய்யப் பெற்றன. தலைமையாசிரியர் 65-2½-100, இடைநிலைப் பள்ளி ஆசிரியர் 30-2-40-1-50, தமிழாசிரியர் 35-3-45-1-50, ஓவிய ஆசியரியர் 25-2-35-1-40, உடற்பயிற்சி ஆசிரியர் 30-2-50 என்ற ஊதியத் திட்டத்தில் அமர்த்தப்பட்டனர். இத்திட்டத்தில் தலைமையாசிரியர், இடைநிலை ஆசிரியர்கள் இருவர், தமிழாசிரியர்கள் வாங்கும் ஊதியத்தில் பிடித்தம் இருந்தது - பிச்சைக்காரன் சோற்றில் சனீஸ்வரன் புகுந்தது போல இனி நிர்வாகக் குழு அமைப்பது ஒன்றுதான் செய்யப்படாதது.

**நினைவு - 6 :** கல்வித்துறை விதித்த நிபந்தனைகளில் பெரும்பாலும் நிறைவேற்றப் பெற்றமையால், நான்காம் படிவம் தொடங்க முயற்சி எடுக்கும் திட்டத்தை சின்னதுரை முன் வைத்தேன் அவர் தயங்கினார் "நாங்கள் இருவரும் முயன்றபோதே

5 குறள் 517

கிடைக்கவில்லை; இன்றும், அந்த நிலைதான் இருக்கும்" என்று மறுதலித்தார் "நடுநிலைப்பள்ளித் தொடங்குவதற்குக் கல்வித்துறை விதித்த நிபந்தனைகளில் ஒன்றுகூட நிறைவேற்றப்படாமல் முயன்றது தவறு: முயன்றது எனக்குத் தெரிந்திருந்தால் தடுத்து நிறுத்தியிருப்பேன்" என்றேன் "ஆம் நீங்கள் சொல்வதுதான் சரி, T.S. இராசகோபால அய்யரைக் கேட்டு அவர் சொல்படி விண்ணப்பம் அனுப்பினோம்; அவர் மாவட்டக் கல்வி அதிகாரியின் அலுவலகத்தில் பார்த்துக் கொள்வதாகச் சொன்னதன் பேரில் அனுப்பினோம்" என்றார் "நான் இளைஞனாக இருந்தாலும் ஓராண்டு அநுபவத்தில் பல செய்திகளைத் தெரிந்து வைத்துள்ளேன்; மாவட்டக் கல்வியதிகாரியின் அலுவலகத்தில் நடந்து கொள்ள வேண்டிய நெளிவு சுளிவுகளையெல்லாம் ஓரளவு தெரிந்து வைத்துள்ளேன்" என்றேன். "நும் யோசனைப்படி எதையாவது செய்யும்: உரியவர்களைப் பார்க்க வேண்டுமானாலும் பாருங்கள்" என்று பச்சைக்கொடி காட்டி விட்டார்

என் மூளை செயற்படத் தொடங்கியது நடுநிலைப் பள்ளித் தொடங்குவதற்குக் கல்வித் துறையினர் போட்ட நிபந்தனைகள், அவை எந்த அளவுக்கு நிறைவேற்றப் பெற்றுள்ளன? என்பவற்றை முன்வைத்துக் கொண்டு திரு. கணபதி அய்யர் சொன்ன யோசனைகளையும் நினைவிற் கொண்டு அழகான முறையில் விண்ணப்பத்தை தயாரித்துக் கொண்டு முசிறி உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் திருவேங்கடம் பிள்ளையிடம் காட்டினேன். அவரும் அதில் இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சொற்களை மாற்றி அமைத்தும், பணித்துறை சார்ந்த பொருளற்ற சொற்களைப் புகுத்தியும் நகாஸ் வேலை செய்து சரியான விண்ணப்பமாக்கினார். அவரே தட்டச்சரை வரவழைத்து நல்ல தாளில் ஐந்து படிகள் எடுத்து உதவினார். அவற்றைச் சின்னதுரை (தாளாளரிடம்)யிடம் காட்டிக் கையொப்பம் வாங்கி முதற்படியை முறைப்படி சென்னைக் கல்வித்துறை இயக்குநருக்கும், நகல்களை, திருச்சி மாவட்டக் கல்வி அதிகாரிக்கும், கோவை மண்டல ஆய்வாளர் அகியோருக்கும் அனுப்பி வைக்கப் பெற்றன. தாளாளர் இரண்டாண்டுகட்கு முன்னர்

அனுப்பிய விண்ணப்பத்துடன் இதனை ஒப்பிட்டுப் பார்த்து மகிழ்ந்திருக்க வேண்டும்

**நினைவு - 7** : திருச்சி மாவட்டக் கல்வியதிகாரியின் தனி அலுவலர் திரு எஸ். வீராசாமிப் பத்தரை இட்டுக் கொண்டு கோவை சென்று உரியவர்களைப் பார்க்க வேண்டும் என்ற திட்டத்தைத் தாளாளர்முன் வைத்தேன் அவரும் ரூ 60/= தந்து அனுப்பினார். நானும் வீராசாமிப் பத்தரும் ஏப்ரல் முதல் வாரத்தில் கோவை சென்றோம் மண்டல ஆய்வாளர் அலுவலக மேலாளருக்கு ரூ 25/= தந்தது, தெய்வாதீனமாகக் கோவை மாவட்டக் கல்வியதிகாரி திரு சாம்பசிவம் பிள்ளை நட்பு கிடைத்தது, அவருடன் கூனூர் சென்று அங்கு முகாமிட்டிருந்த V.R. அரங்கநாத முதலியாரைப் பார்த்துப் பேசியது போன்றவை யாவும் ஒரு நீண்ட கதை. திரு பிள்ளையவர்கள் இரவு எட்டுமணிக்குத் திரு முதலியாருடன் நேர்காணலுக்கு ஏற்பாடு செய்தார். நானும் என் கோரிக்கையை அவர் முன் வைத்தேன்.

**வி.ஆர்.ஆர்** : நீங்கள் ஏன் அங்குப் போய் மாட்டிக் கொண்டீர்கள்? உயர்நிலைத் தொடக்கப் பள்ளியியையே நடத்தத் தெரியாதவர்கள்; கஞ்சப் பிரபுக்கள் ஆசிரியர்க்குப் பத்தும் பன்னிரண்டுமாக ஊதியம் தருகின்றனர். நாங்கள் தரும் மானியத்தையேனும் தந்து விடுகின்றார்களா? அதிலும் (உள்கணக்கில்) ஏதாவது பிடித்தமா? தெரியவில்லை

**நான்** : நான் பணியைக் கோரித் தலைமையாசிரியர் பதவியை ஏற்றேன். நன்கு படித்து முதல் வகுப்பில் (மூன்றாவது நிலை) தேர்ச்சி (அறிவியல் - வேதியியல்) பெற்றிருக்கின்றேன். துறையூருக்கு அருகிலுள்ள சிற்றூர் என் சொந்த ஊர், திருமணமாகி விட்டது, போர்த் துறையைத் தவிர, வேலை வாய்ப்பு எங்கும் இல்லை. ஊதியம் குறைவாக இருந்தாலும், நில வருவாயைக் கொண்டு காலம் தள்ளுவேன் காலத்தை வீணடிக்காமல் மேலும் படித்துத் தகுதியாக்கிக் கொண்டு சில ஆண்டுகளில் கல்லூரியில் பணி ஏற்க முயல்வேன். என் ஊழ் எம்.ஏ. அல்லது எம்எஸ்சி. பட்டம் பெறமுடியாது செய்துவிட்டது.

**வி.ஆர்.ஆர்** : உற்சாகமுள்ள இளைஞராகக் காணப்படுகின்றீர்கள். உங்கள் எதிர்காலம் சிறக்க வாழ்த்துகின்றேன் நான்காம் படிவம் தொடங்கப் பரிந்துரை செய்தால் உங்களுகாகத்தான் செய்ய வேண்டும். உங்கள் பள்ளி நிர்வாகம் காலத்திற் கொவ்வாதது. உயர்நிலைத் தொடக்கப் பள்ளியிலேயே ஆசிரியர்கட்குச் சரியான ஊதியம் இல்லை அரசு, ஆசிரியர்கட்குத் தரும் மானியத்திற்குமேல் சிறிது கூடத் சேர்த்துத் தருவதில்லை. தலைமையாசிரியர்க்கே ரூ. 40/= எட்டவில்லை என்பதை அறிவேன். தொடக்கநிலைப் பள்ளியிலேயே அணா கணக்கில் கட்டணம் தண்டுகின்றனர் உயர்நிலைப் பள்ளியில் ரூபாய்க் கணக்கில் தண்டுவார்கள். கணக்கில் ஊழல் செய்து கொள்ளையடிப்பார்கள். இதைத்தான் நான் இன்று தனியார் பள்ளிகளில் காண்பது. உங்கட்குக்கூட ரூ. 65/= தர மாட்டார்கள். அது தருவதுதான் நியாயம். நான்காம் படிவம் வந்தால் ரூ. 110/= தருவார்களா? இப்போது உங்கள் ஊதியம் ரூ. 35/=க்கு மேல் இருக்காது என்பதை நான் ஊகித்து அறிவேன். நீங்களும் உண்மையை மறைப்பீர்கள். அப்படி ஏதாவது ரூ. 40/= அல்லது ரூ. 45/= ஆகத் தந்தால் ரூ. 10/= ஆவது நீங்கள் திருப்பித்தரும் திட்டம் இருக்கும் உண்மைதானே! ஏன் விழிக்கிறீர்கள்?

**நான்** : புன்முறுவல் செய்து வாளா இருந்தேன்.

**வி.ஆர்.ஆர்** : உங்களுக்காகவாவது நான்காவது பாரம் தொடங்கப் பரிந்துரைக்கின்றேன். மகிழ்ச்சியாகத் திரும்புங்கள்.

"வணக்கம் ஐயா, மிகவும் நன்றி" என்று கூறி விடைபெற்றேன் திரு. சாம்பசிவம் பிள்ளை உணவுக்கும் ஏற்பாடு செய்திருந்தார். அவர் வி.ஆர்.ஆரிடம் பேசி இரவு ஒன்பது மணிக்கு வெளி வந்தார், அவரிடம் பதினைந்து மணித்துளிகள் பேசிக் கொண்டிருந்தேன். "பள்ளி நிர்வாகம் அவருக்கு மனநிறைவுதராவிடில், பரிந்துரை செய்யார் இனிமையாகப் பேசியது உங்கட்கு மகிழ்ச்சி ஊட்டுவதற்காக. எதற்கும் நீங்கள் சென்னை சென்று அங்கும் முயற்சி செய்வது நல்லது. இஃது என் தனிப்பட்ட கருத்து. நீங்கள் துடிப்புடன் செயற்படுகின்றீர்கள் உங்கள் எதிர்காலம் சிறக்கட்டும்" என்று

வாழ்த்தினார் "அதிகாலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு, சிற்றுண்டி உண்டு ஊர் திரும்புங்கள், கோவையில் காத்திருக்க வேண்டா. அது பயன்படாது நல் இரவு" என்று கூறி விடைகொடுத்தார்

திரு சாம்பசிவம் பிள்ளையின் அறிவுரைதான் பயன்படத் தக்கது உலகியலை யொட்டியது என்று நினைந்தவண்ணம் நான் தங்கும் இடத்தை அடைந்தேன் மறுநாள் கோவை வந்து துறையூர் திரும்பினேன். மறுநாள் சின்னதுரையைச் சந்தித்துப் போய் வந்த வரலாற்றை விரிவாக உரைத்தேன். நிர்வாகத்தை வி.ஆர் ஆர் குறைவாகப் பேசியதை முற்றிலும் மறைத்து விட்டேன் அப்போது தாளாளர் சின்னதுரை பெருநிலக்கிழவர் அரண்மனைக்கு எதிரிலுள்ள உயர்நிலைத் தொடக்கப் பள்ளியின் மேல் மாடியிலுள்ள அறையில் தங்கியிருந்தார். தந்தையார் உடல் நிலை குன்றியிருந்தது. அரண்மனையில் புகுந்து நிர்வாகத்தைக் கைப்பற்றும் திட்டத்தில் இருந்தார். அதற்கேற்ற வாய்ப்பை எதிர் நோக்கிக் கொண்டிருந்த காலம் அது அவர் செலவுக்கு என்னிடம் தந்த ரூ. 60/=க்கு சல்லிக்காசு விடாமல் ஒரு சிறிய குறிப்பேட்டில் கணக்கு எழுதி வைத்திருந்தேன் அதைக் காட்டினேன் அதில் ரூ. 1-10-0 மீதி இருந்தது தெரிந்தது. அதை மட்டும் கவனித்துக் கொண்டார் வாய்மட்டிலும், "சரிதான் போங்கள். இஃது என்ன பெரிய கணக்கு?" என்று அசட்டையாக ஒலித்தது "இன்னும் ஒரு வாரத்தில் சென்னை சென்று வரவேண்டும்" என்ற திட்டத்தைக் கூறி விடைபெற்றேன்.

**நினைவு - 8 :** மே திங்கள் முதல் வாரத்தில் (1943) சென்னை பயணத்திற்கு ஆயத்தமானேன். ரூ. 60/= செலவுக்குத் தந்தார் தாளாளர் பன்மொழில் புலவர் வேங்கடாராஜுலு ரெட்டியார் இல்லத்தில் தங்கி நடவடிக்கைகளைக் கவனித்தேன். என் ஆசிரியர் கே. இராமச்சந்திர அய்யர் (அப்போது அவர் குழித்தலை கழக உயிர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்) ஒரு பரிந்துரைக் கடிதத்தை "எய்ப்பினில் வைப்பியாக இருக்கட்டும்" என வாங்கி வைத்துக் கொண்டிருந்தேன்

முன்பு முசிறியில் பள்ளியின் துணை ஆய்வாளராக இருந்த சி சிங்காரவேலு முதலியார் அப்போது சைதாப்பேட்டை மாவட்டக் கல்வி அதிகாரியின் தனி அலுவலராகப் (Personal Assistant) பணியாற்றி வந்தார். அவரைச் சந்தித்து அவரை இட்டுக் கொண்டு கல்வி இயக்குநர் அலுவலகத்திற்குச் சென்று நான்காம் படிவம் திறக்கும் நிலைபற்றி ஆய்ந்ததில் வி.ஆர்.ஆர். பரிந்துரைக்காததுமன்றிக் கடுமையாக எழுதியதும் தெரிந்தது சிங்காரவேலு முதலியாரும் "வி ஆர்.ஆர் எழுதியவற்றை எவராலும் மாற்ற முடியாது அலுவலகத்தில் அதைப்புறக்கணித்துக் குறிப்பு வைக்க எவருக்கும் துணிவு இருக்காது. இயக்குநர் ஆர்.எம்.ஸ்ட்ராத்தம் துரையும் முதலியார் பரிந்துரைக்கு விரோதமாகச் செய்ய மாட்டார். என்ன செய்வது? இறைவன் விட்ட வழி இதுதான்" என்று சொல்லித் தம் இயலாமையைக் கூறித் தம்மைக் கழற்றிக் கொண்டார்.

திரு. சிங்காரவேலு முதலியாரிடம், "ஐயா, நான்காம் படிவம் திறப்பதற்கு மறுத்துவிடும் ஆணை எங்கள் தாளாளருக்குப் போகாமல் என் கையில் கிடைக்க ஏற்பாடு செய்யுங்கள். அதற்கு மேல் இறைவன் ஆணையால் நான் முயல்கின்றேன்." என்று கேட்டுக் கொண்டேன். அவரும் உரிய பகுதியின் தலைவரை எனக்கு அறிமுகம் செய்து ஆணையை என்னிடம் தருமாறு வேண்டினார் அவரும் இதற்கு ஒருவாரம் தவணை சொன்னார் இதற்கிடையில் கே. இராமச்சந்திர அய்யர் தந்த பரிந்துரைக் கடிதத்துடன் (இதுவே நான் வைத்திருந்த மலரவன் கணை) V.S. இராமச்சந்திர அய்யரைச் (Section Officer) சந்தித்து அவரிடம் நல்ல உறவு கொண்டேன். அவரும் மறுப்பு ஆணை துறையூருக்குப் போகாமல் என் கையிலேயே கிடைக்க ஏற்பாடு செய்தார் ஆணையும் கிடைத்து விட்டது

**நினைவு - 9** : எப்படியாவது உடன்பாட்டு ஆணையைப் பெற்றுக் கொண்டுதான் துறையூர் திரும்ப வேண்டும் என்று V.S. இராமச்சந்திர அய்யரிடம் சொன்னேன். நாள்தோறும் படியாய்க்கிடந்தேன் அவர் வீட்டு வாசலில். 15 நாட்கள். இந்தநிலை.

சென்னையில் அப்போது உணவு பங்கீட்டு நிலை காலை உணவு மட்டிலும் (Lunch) தம் வீட்டில் உண்ணுமாறு கட்டளை; உணவு விடுதி உணவால் என் உடல் கெடும் என்பது அவர் தாயுள்ளம் நினைத்தது போலும். 15 நாட்கள் உணவு கொண்டதும் அவருடன் அலுவலகம் போவேன்; இந்தப் பிரச்சினை தீரும் வழியை அவர் மனம் ஆய்ந்து கொண்டிருந்தது பல நாட்கள் கவனித்ததில் "என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்ற குறிக்கோளுடன் செயற்பட்டதைக் கண்டேன். மாவட்ட ஆட்சியின்கீழ் உள்ள பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் பலர் அவரைச் சந்தித்ததையும், அவர்கட்கு வேண்டிய உதவிகளைச் செய்ததையும் நேரில் கண்டமையால் அவர் பெருங்குணம் உறுதியாயிற்று.

ஒன்றிரண்டு நாட்களில் நான்காம் படிவம் திறக்க மறுத்த ஆணையை மறு ஆய்வு செய்து புதிய ஆணை பிறப்பிக்கக் கோரி ஓர் அழகிய விண்ணப்பத்தை நன்முறையில் நான்கு படிகளைத் தட்டச்சு செய்ய ஏற்பாடு செய்தார் அதில் தாளாளருக்குப் பதிலாக என் கையெழுத்திடச் செய்தார். முதற்படி (1) திருச்சி மாவட்டக் கல்வி அதிகாரி (2) கோவை மண்டலக் கல்வி ஆய்வாளர் ஆகியோர் மூலம் சென்னைக் கல்வி இயக்குநருக்கு அனுப்பச் செய்தார். அடுத்து, விண்ணப்பத்தின் இரண்டாவது, மூன்றாவது படிகளை முறையே சென்னைக் கல்வி இயக்குநருக்கும் கோவை மண்டல ஆய்வாளருக்கும் நேராக அனுப்பப் பெற்றன.

கல்வி இயக்குநருக்கு நேராக அனுப்பப்பெற்ற விண்ணப்பத்தின் நகலைக் கொண்டே விரைவில் காரியத்தைச் சாதிக்க வேண்டும் என்பது திரு. V.S.இராமச்சந்திர அய்யரின் திட்டம் தனியார் பள்ளிகளைப்பற்றிக் கவனிக்கும் அலுவலகப் பகுதியில் பணியாற்றும் எழுத்தர், தலைமை எழுத்தர் இவர்களிடம் தொடர்பு கொண்டு உரிய முறைகளில் விண்ணப்பத்தின்மீது நல்ல பரிந்துரைக் குறிப்புகளை எழுதச் செய்தார். அவசரப்படாமல் நான்கு ஐந்து நாட்கள் அலுவலகத்திலேயே இதைச் சுற்றிவரச் செய்து இயக்குநரின் தனி எழுத்தர் (இவர் வயோதிகவைணவர்) மூலம் கோப்பில் இயக்குநரின் கையெழுத்துப் பெற வேண்டும் என்பது ஒரு முயற்சி.

இயக்குநர் பெரும்பாலும் பொஸொட்டோ விடுதியில் (இப்போது அந்த இடத்தில் கன்னிமேரா விடுதி உள்ளது) குடி, கூத்து முதலியவற்றில் ஈடுபட்டு அங்கேயே தங்கியிருப்பது வழக்கம். முக்கியமான கோப்புகளை அங்குத்தான் பார்ப்பது, அவற்றின்மீது ஆணைபிறப்பிப்பது என்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இந்தச் சூழ்நிலையில்தான் எங்கள் பள்ளியைப்பற்றிய கோப்பின்மீது ஆணை பிறப்பிக்கப் பெற்றது. இந்தச் செய்தியை மகிழ்ச்சியுடன் எனக்குத் தெரிவித்தார் திரு. இராமச்சந்திர அய்யர். ஒன்றிரண்டு நாட்களில் ஆணையையும் எனக்குக் கிடைக்கச் செய்தார்.

இந்த மகிழ்ச்சிச் செய்தியைச் சின்னதுரைக்குத் தந்தி மூலம் தெரிவித்துவிட்டு ஒன்றிரண்டு நாட்களில் சென்னையில் தங்கிவிட்டேன். உமாபதி ரெட்டியார், P. மாதுர்பூதம், T.S. இராமய்யா (இளம் நிலை ஆசிரியர்கள்) இவர்கட்குத் கடிதங்கள் எழுதித் துறையூரிலுள்ள மூன்று சினிமாக் கொட்டகை உரிமையாளர்களிடம் தொடர்பு உண்டு. ஜூன் முதல் நான்காவது படிவம் திறக்கப்படுகிறது என்ற செய்தியை விளம்பரப் படுத்த ஏற்பாடு செய்தேன்; பத்து நாட்கள் இந்த விளம்பரம் வந்து கொண்டிருந்தது. நழுவம் (Slide) எழுதுதல் முதல் விளம்பரம் போடும் வரை அன்புதானமாகவும் பெறச் செய்தேன். சினிமாக் கொட்டகை உரிமையாளர்களும் இந்தக் கைங்கரியத்தை உவப்புடன் செய்து மகிழ்ந்தனர். இரண்டு நாட்கள் கழித்து துறையூர் திரும்பினேன். இதில் நான்பட்ட துன்பங்களையும் சாணக்கியத்தையும் ஆதியோடந்தமாக எடுத்துரைத்தேன் துரை கேட்டாரேயொழிய பாராட்டு மொழியே இல்லை. சின்னதுரை கொடுத்த ரூ. 60/= விரிவான கணக்குகளைக் காட்டினேன். இப்போதும் ரூ. 1-6-0 மீதி இருந்தது. இந்தத் தொகையையும் கவனித்துக் கொண்டார்.

நான் சென்னையில் தங்கியிருந்த இடம் வாடகையின்றி அமைந்தது. ஒரு நாளில் ஒருமுறை உணவு திரு. இராமச்சந்திர அய்யர் இல்லத்தில் பெற்றேன். இன்னும் ஒரு நாற்பது ரூபாய் செலவு பலவிதங்களில் இலவசமாகவே நடைபெற்றது. இவற்றையெல்லாம் துரைக்குத் தெரிவித்தேன். எதைப்பற்றியும் மகிழாவிட்டாலும்

சிக்கனத்துடன் செயலாற்றியதையாவது உள்ளூற மகிழ்ந்திருக்க வேண்டும் என்பதை அறிவேன்.

**நினைவு - 10 :** பதினைந்த நாட்கள் திரு. இராமச்சந்திர அய்யர் வீட்டில் தங்கியிருக்கும் போது அவர் வறிய குடும்ப நிலை, கைத்தறி வேட்டியை உடுத்தும் பழக்கம், அதனைத் தாமே குழாயில் துவைத்து நீர்க்காவி ஏறிய நிலையில் உடுத்திய நிலை இவற்றை அறிந்தேன். சட்டை, கோட், அங்கவஸ்திரம் இவை மட்டிலும் லாண்டரிக்குப் போட்டு வாங்கப்படுபவை. இவருக்கு ஏதாவது அன்பளிப்பு செய்ய வேண்டும் என்று நினைவில் வைத்திருந்தேன். திரு. இராமச்சந்திர அய்யர் வறுமைநிலையை விட என்நிலை மிகவும் கொடுமையாக இருந்தது. ரூ. 40/= மாத ஊதியத்தில் எதைத்தான் செய்யமுடியும்?

100க்கு 80 நம்பர் நூலில் நெய்யப் பெற்ற சிவராயர் கரை போட்ட வேட்டி 6 சோடி அனுப்ப நினைத்தேன். துரையிடம் இதைச் சொன்னேன். அவரும் தம் 'வெளியுறவு அமைச்சர்'[6] இலிங்கையர் மூலம் தாத்தையங்கார்பேட்டையிலிருந்து 6 சோடி வேட்டிகளைத் (பச்சை, சிவப்பு, ஊதா, கறுப்பு கரைகள்) தருவித்துத் தந்தார். இவற்றை இராமச்சந்திர அய்யர் வாங்கிக் கொள்ளார் என்பதை அறிந்த நான் அவற்றை அவர் துணைவியார் பெயருக்கு பதிவு அஞ்சலில் அனுப்பி வைத்தேன்

**நினைவு - 11 :** இது நினைவுச் சிதறல்களாக வடிவெடுகின்றது. பள்ளிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது முதல் பள்ளியிலேயே ஒரு சிறிய இல்லம் கொடுக்கப்பட்டது. சம்பளம் ரூ. 40/=; அதிலும் ரூ. 5/= பிடித்தம். உழைப்பதற்கு வசதியாக இருக்கும் என நினைத்து மகிழ்ச்சியாக அதில் வசித்தேன். மாதம் ரூ. 8/= என்று வாடகை விதித்தார். இதற்கு மேல் அவர் பையன், மகள் இவர்கள் படிப்பையும் கவனித்துக் கொள்ள வேண்டும். புதுப்பள்ளியாததால்

6 இவர் துரை மேற்கொண்டிருக்கும் கந்து வட்டித் தொழிலுக்கும், சரிகை வணிகத்திற்கும், உடந்தையாக இருந்து பணிபுரியும்உணர்நிலைத் தொடக்கப்பள்ளி ஆசிரியர்; விரசைவர்.

கட்டட வேலைகளையும் மேற்பார்வை பார்க்க வேண்டும். இதில் எனக்கு மகிழ்ச்சியே என் வாழ்க்கை மாணவர்கட்கென்றே அர்ப்பணித்துக் கொண்டதால் உழைப்பிற்கு அஞ்சவில்லை. "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பது அப்பர் பெருமான் வாக்கன்றோ?

..... ..... ..... ..... ..... .....

இரண்டாம் ஆண்டுத் தொடக்கக் காலத்தில் சி. இரகுநாதன் (மாவட்டக் கல்வியதிகாரி) எங்கோ செல்கின்றவர் பள்ளிக்கு வந்து பார்வையிட்டார். ஆய்வுக்காக வரவில்லை. இது திடீர் வருகை. புதுப் பள்ளியாதலால் தாளாளரைப் பார்க்க வேண்டும் என்றார். ஏற்பாடு செய்தேன். இருவரும் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார்கள். நான் சற்று ஒதுங்கி நின்று தோட்டத்தில் செடி கொடிகளை நோட்டம்விட்டுக் கொண்டிருந்தேன். சி. இரகுநாதன் பல்வேறு வகைகளில் (!) ஆர்.எம்.ஸ்.டராத்தம் துரைக்கு வேண்டப்பட்டவராக இருந்தார். இஃது ஒரு மாயத் தோற்றம் என்பதை ஒரு சிலரே அறிந்திருந்தனர். அநுபவமுள்ள ஒருவரைத் தலைமையாசிரியராக நியமிக்க யோசனை கூறியதாகத் தெரிந்தது பின்னர் துரையே என்னிடம் சொன்னார், அரைமனத்துடன். திரு. சிங்கார வேலு முதலியார் திரு. கே.எல். பழநிசாமிப் பிள்ளை இவர்கள் துணையால் இந்த யோசனை முறியடிக்கப் பெற்றது. இறைவன் அருளும் துணை செய்தது. புதிதாக வருபவர் சம்பளப் பிடித்தம் முதலிய உள்கணக்கு வகையறாக்களுக்கு துணை செய்ய வேண்டுமல்லவா? இதை எண்ணியே துரையும் இத்திட்டத்தைக் கைவிட்டார் எனத்தோன்றுகின்றது! தவிர, இறைவன் என்னைக் கசக்கிப் பிழிந்து, எனக்கு அநுபவத்தையும் தந்து, சமூகத்திற்கும் என்னைப் பயன்படுத்த வேண்டுமல்லவா? அவன் திட்டத்தை யார் கண்டார்கள்?

..... ..... ..... ..... ..... .....

இரண்டு மூன்று, நான்காம் ஆண்டுகளில் பல்வேறு அவசரப் பிரச்சினைகள் எழுந்தன. ஒவ்வோர் ஆண்டும் புதிய வகுப்பறைகள், மாணாக்கர் இருக்கை வசதிகள், மாணவ மாணவிகட்குத் தனித்தனிக்

கழிப்பறைகள், ஆசிரியர்கள் இருக்கை வசதிகள் முதலியவற்றிற்கு விடுமுறை நாட்களில் ஏற்பாடு செய்தல் வேண்டும். இவையெல்லாம் நன்முறையில் ஒழுங்குபட நிறைவேற்றுவதற்கு நான் பட்டபாட்டை அந்த ஆண்டவன்தான் அறிவான். பள்ளிகள் சாலைக்குக் கிழக்கிலும், மேற்கிலுமாக இரண்டு இடங்களில் அமைந்திருந்தமையும் மிதிவண்டியில் கோடை வெயிலில் உணவு கொள்வதையும் மறந்து அலைவதைச் சின்னதுரை உணர்வதில்லை. பார வண்டியை இழுத்துச் செல்லும் மாடுகள் படும் பாட்டை வண்டியோட்டி நன்கு அறிவான். நிலையறிந்து வண்டியை நிழலில் நிறுத்துவான். மாட்டிற்கு நீர்விடாய் இருக்குமென்று உரிய நேரங்களில் தண்ணீர் காட்டுவான். மாலை நேரத்தில் பருத்திக் கொட்டை, புண்ணாக்கு கலந்த பச்சரிசித் தவிட்டை உண்பிப்பான். இந்த வண்டியோட்டியின் இரக்கம் கூட சின்ன துரைக்கு இல்லையே என்று என்னையே நான் நொந்து கொண்டேன். பள்ளிக் கட்டட வேலையைக் கவனிக்கும் பொறுப்பெல்லாம் தலைமையாசிரியருடையது என்று நினைத்துக் கொள்வார். நான் மகிழ்ச்சியாகவே இவற்றைக் கவனித்து வந்தேன். நான் கவனிக்காவிட்டால் மாணவர்கள் வசதிக்கேற்றபடி கட்டடங்கள் அமையா. பணிச்சுமையைக் கண்டு என்றுமே நான் முகஞ் சுளித்ததில்லை. பணியாற்றும் என் திறமையைக் கண்டு சின்னதுரை ஒரு "பாராட்டுமொழி" கூட நல்கவில்லை என்பதுதான் என் குறை; பிறரிடமாவது என் உழைப்பைப் பாராட்டியிருக்கலாம். அதுவும் செய்யவில்லை. நான் படும் சிரமங்களையெல்லாம் பிறர் கண்டு அவர் காதில் போட்டதை அறிந்து கொண்டேன்; "பணியே பரமனின் வழிபாடு" (Work is worship) என்பதை அந்தப் பரமனே எனது பிறப்புரிமையாகத் தந்ததை அடிக்கடி எண்ணும்போது மெய் மயிர் சிலிர்க்கின்றது.

..... ..... ..... ..... ..... .....

இன்னும் கல்வித்துறை நிபந்தனைப்படி ரூ. 5000/= வங்கியில் போட வேண்டும். கட்டண வசூல் ஏழு மலையான் உண்டிபோல் வசூலாகி வந்தது. அதிலேயே ரூ. 10000/= போட்டு விடலாம்.

தாளாளருக்கு அதைப் பயன்படுத்த மனம் இல்லை பல கற்பனை இரசீதுகள் மூலம் அதைச் செலவுக் கணக்கில் காட்டுவதற்கு முயல்வதே அவர் திட்டமாக இருந்தது; அதுவே நடைபெற்றது (அடியேனும் இக்காரியத்திற்கு முக்கிய காரணமாக அமைந்தது இறைவனின் திட்டம் போலும். இவ்வாறு மறைந்த தொகைகள் தாம் மாறுவேடத்தில் நிரந்தர நிதியாக மாறினவோ? எப்படியோ நடைபெற்ற தில்லுமுல்லுகளினால் ரூ 5000/= வங்கியில் நிரந்தர நிதியாகப் போடப்பட்டு விட்டது! "விநாசகாலத்திற்கு விபரீத புத்தி" என்ற பழமொழியை நினைத்துக் கொள்வதைத் தவிர ஏழையேன் என்செய்வேன்?

..... ..... ..... ..... ..... .....

பதிவு பெற்ற செயற்குழு (Registered Body) அமைப்பது ஒன்றுதான் நிறைவேற்றப்படாத நிபந்தனை. "இந்தியன் கம்பெனி சட்டம்" (Indian Companies Act) அறக்கட்டளை சட்டம் (Trust Act) என்றவற்றில் மாதிரிப் படிவங்கள் இருக்கின்றனவே என்று தெரிவித்தேன் அவர் காதில் அது ஏறவில்லை முன்னதின்கீழ் அமைத்தால் குறைந்தது 20 பேர் வேண்டும் பின்னதன்கீழே அமைந்தால் 7 பேர் போதும் என்று தெரிவித்தும், சில பள்ளிகளை நெருங்கித், "தகவல்கள்" கொண்டுமாறு பணித்தபோதுதான் இவர்தம் "சட்ட நுணுக்கம்" பெரிய வட்டம், என்பது எனக்குப் புலனாயிற்று! சட்ட நூல்களில் கூட இஃது இருக்குமிடம் அறியார் போலும் என்று என் எளிய மனம் எண்ணியது.

L.G. பெருங்காயத்தை யோசனை கேட்டேன். "உங்கள் பள்ளி மேலாளரும் தாளாளரும் வழக்குரைஞர்களாயிற்றே. அவர்கட்குத் தெரியாதா என்ன?" என்று அவருக்கே உரிய பாணியில் தலையை ஒரு பக்கமாகச் சாய்த்து வாயோரப் புன்முறுவல் செய்தார். இஃது என் பள்ளித்தலைவர்களின் அறியாமையைக் கிண்டல் செய்வது போலிருந்தது அவர் நினைத்தால் இ.ஆர் உயர்நிலைப் பள்ளி, பொன்னையா உயர்நிலைப் பள்ளி, சீரங்கம் உயர்நிலைப் பள்ளிகளைப் பற்றிய கோப்புகளிலிருந்து நகல் எடுத்துத்

தந்திருக்கலாம் அலுவலகத்தில் பழைய கோப்புகளிலிருந்து இதனைத் தேடி எடுத்துத்தந்திருக்கலாம் இதைத் தேடி எடுப்பது மொகஞ்சதரோ - ஹரப்பா நாகரிகத்தைக் காண மறைத்திரு ஹெராஸ் பாதிரியார் செய்த முயற்சி போலாகிவிடும் நானும் மேலும் மேலும் அவரை நச்சரிக்க நேரிடும் என்று கருதித் தம்மை அப்பொறுப்பினின்றும் நழுவச் செய்து கொண்டார். என்னையே அப்பள்ளியை அணுகுமாறு ஆற்றுப்படுத்திவிட்டார்.

இ.ஆர் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியரை நாடினேன் இதில் அவருக்கு உதவ விருப்பம் இல்லை என்பதை அவர் பேசிய முறையினின்றும் முகத்தை ஒருவிதமாகத் திருப்பிக் கொண்டும் பேசின பாவனையிலிருந்தும் அறிந்து கொள்ள முடிந்தது. சீரங்கம் உயர்நிலைப் பள்ளித் தாளாளர் "மலை முழுங்கி மகாதேவன்" என்பதை அறிந்திருந்ததால் அவரை அசைத்து என்னால் அறிந்து கொள்ள முடியாது என்று அங்குச் செல்வதைக் கைவிட்டேன். பொன்னையா உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் மூலம் நகல் கிடைத்தும் அப்பள்ளி கம்பெனி சட்டத்தின்கீழ் பதிவாகி இருந்தமையால் (20 பேர் தேவை) அதுவும் கைவிடப் பெற்றது. கோவையிலிருந்து திரும்பும்போது ஈரோடு மகாஜன உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் M.R. பெருமாள் முதலியாரைச் சந்தித்துக் கேட்டேன். அங்குத் தாளாளர் அலுவலகம் என்று ஒன்று இருந்தது அது ஒரு பார்ப்பனச் சிறுவன் (எழுத்தர்) பொறுப்பிலிருந்தது. அவன் தாளாளரைக் கேட்காமல் நகல்தர முடியாது என மறுத்துவிட்டான் திரு முதலியாரும் தம் கையாலாகாத் தன்மையை நினைந்து வருந்தினார். அவர் பணியாற்றும் கேவலமான சூழ்நிலை எனக்குப் புரிந்தது. என் நிலை 100 மடங்கு உயர்ந்தது என்பதை நினைந்து மகிழ்ந்தேன். துறையூர் திரும்பியதும் தந்தை பெரியாருக்குக் கடிதம் எழுதினேன். மூன்றே நாளில் பத்திரத்தின் நகல் பதிவு அஞ்சலில் என்னை வந்தடைந்தது. இது அறக் கட்டளைச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப் பெற்றிருந்ததால் (7 பேர்) இது பயன்பட்டது. குடும்பத்தில் ஆறுபேரையும் தலைமை ஆசிரியர் (பதவிப் பொறுப்பு உறுப்பினராகவும்) கொண்டு ஒரு வாரத்தில் பதிவு செய்யப் பெற்றது

உடனே கல்வித் துறையினருக்கு இச்செய்தியைத் தெரிவித்து எல்லா நிபந்தனைகளும் நிறைவேற்றப்பெற்றுவிட்டனவாக எழுதினேன்.

..... ..... ..... ..... ..... .....

சின்னதுரை சிக்கனக்காரர்; கஞ்சப்பிரபு. என்னுடைய ஊழ்காரணமாக அவர்வழி பலவிதங்களில் எனக்குப் படிப்பினைகளை நல்கின.

(1) பிச்சைக்காரன் சோற்றில் சனீஸ்வரன் புகுந்தாற்போல ஏழை ஆசிரியர்களின் ஊதியத்தில் பிடித்தம் எனக்குச் சிறிதும் உடன்பாடு இல்லை. ஒரு நிலையில் அனைவரது பிடித்தங்களும் நிறுத்தப்பெற்று நான் மட்டிலும் ரூ 70/= தரவேண்டியிருந்தது. கேட்டதற்கு "உமக்குத்தான் குழந்தைகள் இல்லையே. கொடுத்தால் என்ன?" என்று சொல்லிவிட்டார். "அரண்மனைப் பிரவேசத்தால் சுக்கிரதசை வந்துவிட்டதே. இன்னும் உங்களுக்கு இந்தப் பிச்சைக்காரபுத்தி எதற்கு?" என்று உள்ளுக்குள் நானே சொல்லிக் கொண்டேன். அப்போது T.S. இராமய்யா சொன்னார் : "ஐயா, நம் காலத்திற்குள்ளயே சின்ன ஜமீந்தாரைவிடக் கேவலமான நிலை இக்குடும்பத்திற்கு வரும்" என்று உபநிடத வாக்கியம் போல்.

(2) பங்களாவிலிருந்து குழாய் மூலம் பள்ளிக்குத் தண்ணீர் வரும். காலை 6-9 மணிவரை விடப் படுவது எங்கள் வீட்டிற்குப் பயன். 9-10க்குள் முத்துசாமி எல்லா வகுப்பறையிலுள்ள பானைகளையும் நிரப்புதல் வேண்டும். மிக்க சிரமமான வேலை இது. பகல் 1-2 மணிவரை விடப்படும். இது மாணவர்கட்கு உணவு உண்பதற்கு வசதியாக இருந்தது. இவர் தண்ணீரில் காட்டிய சிக்கனம் இன்றளவும் ஒரே வாளி தண்ணீரில் குளிக்கும் பழக்கத்தை என்னிடம் ஏற்படுத்தி விட்டது!

(3) பள்ளியில் தங்கியிருத்தலினாலே இரவு பகல் எல்லா நேரங்களிலும் பள்ளிக்கு உழைக்க முடிகிறது. இதை எண்ணியாவது வீட்டு வாடகை வாங்கும் ரூ. 8/=ஐ வாங்காமல் நிறுத்தி இருக்கலாம்.

செய்யவில்லை மகன், மகள் இருவர் படிப்பையும் கவனித்துக் கொண்டேன். இதனையாவது ஆழ்ந்து கருதியிருக்கலாம். எருதின் புண் கொத்தும் காக்கைக்கு எப்படித் தெரியும்? அதுபோல என்று நினைத்துக் கொண்டேன்

(4) கே[illegible] ...ணங்களில் இருந்த ரூ. 1-10-0, 1-6-0 பற்றி ஒரு சமயம் நினைவூட்டிய போதுதான் அவருடைய சிறுமைக்குணம் வெளியாயிற்று. உடனே கவரில் போட்டு ரூ. 3/= அனுப்பிவிட்டேன

**பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்**
**கருமமே கட்டளைக் கல்**[7]

என்ற வள்ளுவர் பெருமான் பொன்மொழியை நினைத்துக் கொண்டேன்.

(5) சில சமயம் தாளாருக்கு வரும் அஞ்சலில் (அவர் நேராகப் பெருமவற்றில்) ஸ்டாம்பு குறைவாக ஒட்டியிருந்தால் due 0-2-0 என்று முத்திரையிட்டு வரும். கடிதத்தையும் உறையையும் அனுப்பிவிடுவார். நானும் 0-2-0 வை உடனே ஆள்மூலம் அனுப்பி பள்ளிக் கணக்கில் செலவு எழுதிக் கொள்வேன். தம் பணத்தில் இவ்வளவு அக்கறை காட்டும் சின்னதுரை ஆசிரியர் ஊதியத்தில் "சாத்தான் கையை" ஏன் வைக்கின்றார் என்பதுதான் தெரியவில்லை!

(6) நான் இருக்கும்போது கோலாகலமாக நடைபெற்ற பள்ளி விழாக்கள், இலக்கியச் சிறப்புக் கூட்டங்கள் - இவை நடைபெறவில்லை என்பதை நினைத்துப் பார்த்தாரா? கல்விக் கொள்கைகளின் தத்துவம் பணத்தில் குறியாக இருப்பவருக்கு எங்ஙனம் இது தெரியப் போகிறது?

..... ..... ..... ..... ..... .....

1945-46 என நினைக்கின்றேன். கோடை விடுமுறையில் தம் தமையன் மகளுக்கு மாப்பிள்ளை தேடுவதற்காகத் - தென்

7 குறள் - 505

ஆர்க்காடு மாவட்டத்தில் கடலூர் பக்கம் என்னையும் துணையாக இட்டுச் சென்றார். அப்போது இருப்பூர்தியில் இடைநிலை வகுப்பு (Intermediato Class) என்று ஒன்று இருந்தது இஃது இரண்டாம் வகுப்புக்கீழ், மூன்றாம் வகுப்புக்குமேல். (அப்பொழுது நடைமுறையில் இருந்தவை 4 வகுப்புகள்) தமக்கு இடைநிலை வகுப்புக்கும் எனக்கு மூன்றாம் வகுப்பிற்கும் பயணச் சீட்டுகள் வாங்கும்படி பணிப்பார். கடலூரில் "பீம விலாஸ்" விடுதியில் தங்கல், ஒருவர் தங்கும் அறைக்கு வாடகை 1-8-0. ஒருவேளை உணவு 0-4-0; சிற்றுண்டி 0-2-0க்கு மேல் போகாது. எனக்குத் தாழ்வாரத்தில் படுக்கை. திருமணத் தரகர்களைக் கொண்டு வலை வீசப்பட்டது. நாராயணசாமி ரெட்டியார் என்பவர் ஒரு தரகர். அவர் கேட்டார் : "கழுத்துக்கு வைர அட்டிகை, இடுப்புக்கு வைரம் பதித்த ஒட்டியாணம், காது மூக்கு அணிகள் (தொங்கல், மாட்டல் உட்பட) வைரம் பதித்தவை - இவை மணப் பெண்ணுக்குப் போட்டு ஓர் இலட்சம் ரொக்கம், பத்து ஏக்கர் நிலம் முடியுமா?" என்று. இவர் "பி ஏ. படித்த பெண் இவையெல்லாம் போட்டுக் கொள்ள மாட்டாளே" என்றார். "அது தெரியும்; இப்படியெல்லாம் பிரித்துப் பேசினால்தான் தொகை குறைவதுபோல் தெரியும்" என்றார். சின்னத்துரையை சற்றுத் தயங்கினார். "இத்தகைய பெண்கள் தடுக்கி விழுந்தால் இப்பக்கமே கிடைக்கும். இதற்குத் திருச்சிக்கு வர வேண்டுமா, என்ன?" என்று சொன்னார். திருமணச் சந்தை நிலை விவரம் துரைக்கு நன்கு புரிந்தது."

நெல்லிக்குப்பத்தில் சதாசிவ ரெட்டியார் என்பவர் ஒரு பெரும்புள்ளி; அவருக்குத் தம்பி ஒருவர் உண்டு. B.Sc.(Hons) படித்துப் பட்டம் பெற்றவர். அப்பையனைக் குறி வைத்திருந்தார். சதாசிவரெட்டியார் விருந்து கொடுத்தார். கார் அனுப்பினார்; விருந்து உண்ட பிறகு திருமணப் பேச்சை எடுத்தார் துரை "என் தம்பி கேரளாவில் ஒரு சிறியன் கிறித்தவப் பெண்ணைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டுவிட்டார்; மனத் தாங்கலால் வீட்டிற்கும் வருவதில்லை" என்று போட்ட போடு துரைக்கு அதிர்ச்சியைத் தந்திருக்க வேண்டும். பின்னர் தென்னார்க்காட்டு ரெட்டியார்களின் சம்பந்தமே வேண்டா என்று கைவிட்டார்.

பின்னர் சென்னை சென்றோம் வீட்டுச் சாமான்கள் வாங்கக் கடைகடையாக ஏறிஇறங்கினார் பிரான்ஸிஷ் ஜோஸப் தெருவில் இருந்த "ஓட்டல் எஸ்பிளனேட்" என்ற விடுதியில் தங்கினோம். அங்கும் ஒருவர் தங்கும் அறைக்கு வாடகை 1-8-0; உணவு 0-4-0. இங்கும் தாழ்வாரத்தில்தான் எனக்குப் படுக்கை.

இந்தப் பயணத்தின்போது ரூ. 10/=, ரூ. 20/= ஆக அடிக்கடி தருவார். தம்படி விடாமல் தேதி வாரியாகக் கணக்கு எழுதி வருவேன். துறையூர் வந்ததும் கணக்கையும் மீதிப் பணத்தையும் அவரிடம் ஒப்படைத்து விடுவேன். கோவை, சென்னைப் பயணங்களில் கணக்கு வைத்துக் கொள்ளும் என் திறமையை, நேர்மையைக் கண்டவரல்லவா? இந்தப் பயணத்தில் துரையின் சிக்கன முறைகள் எனக்குத் தெளிவாகத் தெரிந்தது. இன்றளவும் அவை நடைமுறையில் எனக்குத் துணை செய்கின்றன. ஆனால், அவரை விட, சற்றுப் பெருந்தன்மையுடன் இருப்பதை நினைந்து பார்க்கின்றேன்.

**நினைவு - 12 :** இதுதான் அவருடன் இறுதி நினைவு. தந்தை பெரியார் தொடர்பு, தன்மான இயக்கம் போன்றவர்களுடன் தொடர்பு வைத்துக் கொண்டிருந்தமையால் மொட்டை மனுக்கள் ஏராளமாகக் கிளம்பின. வெள்ளையர் ஆட்சி இருந்தவரை அவற்றைக் கொசுக்கள் போல் தட்டி விட முடிந்தது. நாடு விடுதலை பெற்ற பிறகு மொட்டை மனுக்கட்குப் புதிய வேகம் இருந்தது. அவை சாகும்; பிறகு பிழைக்கும். மனுப் போட்டவர்கள் அடிக்கடி உயிர்வளி (Oxygen) ஊட்டிக் கொண்டிருந்தனர் போலும். இத்தொல்லைகளைச் சமாளிக்க மூன்று மாதம் சென்னைக்குப் போவதும் திரும்புவதுமாக இருந்தேன். மார்ச்சு 31 (1950) இலிருந்து சென்னை திரும்பினேன். பள்ளி மாணவர்கள் வகுப்பு மாற்றம், பள்ளி ஆண்டு வரவு செலவுக் கணக்கு இவற்றையெல்லாம் பக்தியுடன் செய்து முடித்தேன். சில நாட்களாக என் வாழ்க்கையில் என்றுமில்லாத மனஅமைதியும், மன மகிழ்ச்சியும் நிலவின. ஏதோ நற்காலம் வருகிறது என்பதற்கு இவை உற்பாதங்களாகத் தோன்றின. ஒருநாள் திடீரென்று ஒரு தந்தி வந்தது. காரைக்குடி அழகப்பச் செட்டியார் பயிற்சிக் கல்லூரியிலிருந்து.

மறுநாள் கடிதமும் வந்தது. தமிழ்ப் பேராசிரியராக வந்து சேரும்படி. கல்லூரி சூலை 5இல் திறக்கப் பெறுகின்றது என்பதையும் அறிந்து கொண்டேன். இது வியப்பினும் வியப்பாக இருந்தது. கல்லூரிப் பணியை விரும்பி விண்ணப்பித்தாலும் கிடைப்பதில்லை. அப்பணி கனவு நிலையிலேயே இருந்தது. இது சட்டை போடாத கம்பன் அடிப்பொடி சா. கணேசனின் திருவருள் என்றே பட்டது; அதை உறுதியும் செய்து கொண்டேன். இறையருளை நினைந்து காரைக்குடிப் பணியை ஏற்றுக் கொள்ள முடிவு செய்தேன்.

**கடமைதான் எது? கரிமுகனே! வையத்து**
**இடம்நீ அருள்செய்தாய், எங்கள் - உடமைகளும்**
**இன்பங் களுமெல்லாம் ஈந்தாய் நீ யாங்களுனக்கு**
**என்புரிவேம் கைம்மாறு இயம்பு**[8]

என்று "கணபதியின் அருளை" எண்ணிஎண்ணி மகிழ்ந்தேன். கம்பன் திருநாள் காணப்போன எனக்கு (ஆற்றுப் படுத்தியவர் கே.எஸ். முத்துவேல் பிள்ளை-1947) கச்சி ஏகம்பன் தன் மூத்த பிள்ளை மூலம் இங்ஙனம் அருள் புரிந்தான் போலும் என்று நினைத்து,

**கல்லாப் பிழையும் கருதாப்**
**பிழையும் கசிந்துஉருகி**
**நில்லாப்பிழையும் நினையாப்**
**பிழையும்நின் அஞ்செழுத்தைச்**
**சொல்லாப் பிழையும் துதியாப்**
**பிழையும் தொழாப்பிழையும்**
**எல்லாப் பிழையும் பொறுத்தருள**
**வாய்கச்சி ஏகம்பனே**[9]

என்று ஏகாம்பாரநாதனைத் துதித்து தாளாளரிடம் சென்று என்னை உடனே கழற்றி விடுமாறும், ஈராண்டு விடுமுறை தொடர்புரிமையும் (Lien) தருமாறு வேண்டினேன்; என் அன்றைய நிலையை எடுத்துக்

8 பா.க. வி.நா.மா. - 21

9 ப.பா : கச்சி ஏகம்பமாலை-9

கூறியும் இரண்டாண்டுகள் கழித்துத் திரும்பி வந்து விடுவேன் என்று கூறியும் மனம் இரங்க வில்லை; மறுத்துவிட்டார்

நான் தொடங்கி வளர்த்த பள்ளியை முற்றிலும் துறந்துவிட முடிவு செய்தேன். "படமுடியாது இனித்துயரம், பட்டதெல்லாம் போதும் என்ற இந்த முடிவுக்கு வந்தேன். எது வந்தாலும் அஃது எம்பெருமானது அருள்தானே 'என்ற நம்பிக்கையைச் சிறுவயது முதற்கொண்டே என் இயல்பாகச் செய்துவிட்டான் என்னைப் படைத்த இறைவன். அவன்மீது எல்லாப் பாரத்தையும் போட்டு நிலைமையை விளக்கித் தாளாளரிடம் பேசிய அனைத்தையும் கோவைப்படுத்தி அழகான ஆங்கிலத்தில் அலுவலகக் குறிப்பாக எழுத்தர்மூலம் அனுப்பி வைத்தேன்; உடனே முடிவு தெரிய வேண்டும் என்று சொல்லியும் அனுப்பினேன். எழுத்தர் சீநிவாச அய்யங்கார் இங்கிதம் தெரிந்தவர். நீதிமன்றத்தில், அமீனாவாகப் பணியாற்றியவரல்லவா? நளினமாகப் பேசி வெற்றியுடன் திரும்ப நினைத்தார். இவர் பருப்பும் வேகவில்லை. "ஒப்பந்தத்திலுள்ள நிபந்தனைகளின்படி செய்யலாம்" (As per the terms of the Agreement) என்று எழுதியனுப்பி விட்டார் தாளாளர். நான் அவரைக் கெஞ்சிக் கூத்தாடிச் சலுகை பெறவிரும்பவில்லை. இறுதிவரைப் பணிவாகப் போவதே முறை, என்பதை ஆண்டவன் எனக்கு வழிகாட்டிக் கொண்டே இருப்பான்.

இப்போது பகல் 11 மணி ரூ. 540/=க்கு இலட்சுமி விலாஸ் வங்கிக்குப் பள்ளிப் பணியாளர் முத்துசாமிமூலம் ஒரு காசோலை அனுப்பி ஒரு Pay order வாங்கி வரும்படி செய்தேன். திரு. பிச்சுமணி அய்யரை (உதவி ஆசிரியர்) ஒரு கடிதம் தயார் செய்து தட்டச்சு செய்யும்படி பணித்தேன். "நிபந்தனைகளின்படி ரூ. 540/=க்கு (மூன்று மாத ஊதியம்) Pay order இணைத்துள்ளேன். தங்களிடம் விடுதலை பெறும் உத்தரவை கூட எதிர்பார்க்கவில்லை. பள்ளியில் நான் இருந்த காலத்தில் ஏதாவது குறைகள் இருப்பின் அவற்றை ஈடு செய்வேன்" என்ற வாசகம் இருக்குமாறு கடிதம் தயார் செய்யப் பெற்றது. பிற்பகல் 4 மணிக்குள் எழுத்தர் சீநிவாச அய்யங்கார் மூலம் கடிதத்தையும் Pay Order ஐயும் அனுப்பிக் கடிதம் பெற்றுக்

கொண்டமைக்கு ஒப்பம் வாங்கி வருமாறு பணித்தேன் இத்துடன் என் ஒன்பதாண்டு பள்ளி வாழ்வு நிறைவு பெற்றது.

1937-முதல் துரையவர்கள் எனக்கு செய்த உதவிகளையும் நான் அவரின்கீழ் பணியாற்றியபொழுது காட்டிய அன்பையும் பரிவையும் நன்றியுடன் போற்றுகிறேன். இதற்கு மேல் அவரிடம் பணிபுரிய எனக்கு ஊழ் இல்லை போலும் என்று நினைவு கூர்கின்றேன்

**வேண்டத் தக்க தறிவோய் நீ**
**வேண்ட முழுதும் தருவோய் நீ**
**வேண்டும் அயன்மாற் கரியோய்**
**வேண்டி என்னைப் பணிகொண்டாய்**
**வேண்டி நீயா தருள்செய்தாய்**
**யானும் அதுவே வேண்டினல்லால்**
**வேண்டும் பரிசொன் றுண்டென்னில்**
**அதுவும் உன்றன் விருப்பன்றே![10]**

என்ற மணிவாசகப் பெருமான் மணிவாக்குடன் இந்த நீங்காத நினைவுகள் அடங்கி விடுகின்றன.[11]

10 திருவா குழைத்தபத்து-6

11 இன்று துரை இல்லை; திருநாட்டில் வாழ்கின்றார்.

# 7

# திரு. எஸ். ஆர். நாகரெட்டியார்

**அன்பர்பணி செய்ய எனை**
**ஆளாக்கி விட்டுவிட்டால்**
**இன்பநிலை தானேவந்து**
**எய்தும் பராபரமே**[1]

என்ற தாயுமான அடிகளின் வாக்கு தொடக்கமாக இப்பெருமகன் திரு. நாக ரெட்டியார் அறிமுகமாகின்றார். இந்தப் பொன்மொழியைக் கடைப்பிடித்து இன்பங் கண்டவர் இப் பெருமகனார். இவர் திருச்சி மாவட்டம் தற்சமயம் துறையூர் வட்டம் வைரி செட்டிப் பாளையத்தில் பண்பாட்டுச் சிறப்பமைந்த நற்குடும்பத்தில் தோன்றிய பெருமகன். அடியேனைவிட 46 நாட்கள் அகவையில் மூத்தவர்.[2]

பிறந்த இடம் பெரிய குடும்பம். அகவை இரண்டில் தத்துப் பிள்ளையாகப் புகுந்த இடமும் பெரிய குடும்பமே. இரண்டு குடும்பங்களும் ஒட்டிய உறவுடன் ஒன்றாகவே இருந்து வந்தன. இரண்டு குடும்பங்கட்கும் ஒரே பிள்ளையாக இருந்தமையால் சீரும் சிறப்புமாக வளர்க்கப் பெற்றவர். இங்ஙனம் செல்லமாக வளர்க்கப் பெறுபவர்களில் பெரும்பாலோரின் வாழ்க்கை சரியாக அமைவதில்லை. ஓர் உயர்நிலைப் பள்ளிப் படிப்பு கூட இல்லாமல் போனதே இதற்குச் சான்று. எங்கள் பக்கத்தில் ரெட்டியார்கள் குடும்பங்களில் செல்வர்களாக இருப்பவர்களில் கல்லூரிப் படிப்பு வாய்ப்பு பெற்றமை அரிதினும் அரிதாக இருப்பதை இன்றுவரை

---

1. தா.பா. பராபரம் - 155

2. அவர் பிறப்பு 12.7.1916; அடியேனின் பிறப்பு 27 8.1916.

காணலாம். இன்று படித்து பட்டம் பெற்றுப் பல்வேறு அலுவல்களில் அமர்ந்து பணியாற்றபவர்கள் அனைவரும் வறிய குடும்பங்களைச் சார்ந்தவர்களே.

உயர்படிப்பு இவருக்கு வாய்க்காது போயினும் குடியொன்றும் முழுகிப் போய்விட வில்லை. உள்ளூரிலேயே சபாபதி அய்யர், நம்பெருமாள் ரெட்டியார் சுப்பிரமணிய அய்யர் இவர்கள் இவருக்கு ஆசிரியர்களாக அமைந்தமையால் இவர் நன்முறையில் உருவானார். தமிழ் இலக்கியங்களில் ஓரளவு நல்ல பயிற்சி இருந்தமைக்கு நம்பெருமாள் ரெட்டியாரே முதற்காரணமானவர் என்று கருதலாம் தெலுங்கு, ஆங்கிலம் இவற்றில் ஓரளவு பயிற்சியும் தமிழில் நல்ல பயிற்சியும் இருந்தது. கற்றறிந்த சான்றோர்களிடம் இலக்கிய சல்லாபங்களில் கலந்து மகிழும் பெருமை இவரிடம் இருந்ததை அடியேன் கண்டு மகிழ்ந்ததுண்டு. கேள்வி ஞானம் நிறைய இருந்தது. "கற்றலிற் கேட்டலே நன்று" என்ற உண்மையை இவரிடம் காணலாம். எந்தக் கூட்டங்களிலும் இவர் கலந்து கொள்ளத் தவறுவதில்லை. சிறு வயது முதற்கொண்டே சாதுக்களின் கூட்டுறவும் பெரியோர்களின் தொடர்பும் இவரைச் சிறந்த மனிதராக்கின.

**நினைவு - 1 :** அடியேன் துறையூர் உயர்நிலைப் பள்ளியின் தலைமையாசிரியர் பொறுப்பேற்றதும் சாதி வேறுபாடு கருதாமல் துறையூரிலும், அதைச் சுற்றிலுமுள்ள சிற்றூர்களிலும் உள்ள பெரும் புள்ளிகளிடம் தொடர்பை வளர்த்துக் கொண்டேன். பெரும்பாலும் அங்கெல்லாம் நடைபெறும் திருமணங்கள், பெரும்பிரிவு நிகழ்ச்சிகள், விழாக்கள் இவற்றில் கலந்து கொள்வதில் தவறுவதில்லை. அடியேனும் பள்ளியிலும், துறையூரிலும் பலபல இலக்கியக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்து பள்ளியையும் ஊரையும் கலகலப்பாக்கி வந்த நிகழ்ச்சிகளை நீள நினைந்துபார்த்து அசைபோட்டு மகிழ்கின்றேன்.

இவருடைய திருத்தந்தையாரால் தொடங்கப்பெற்ற விவேகானந்தர் வாசகசாலையின் ஆதரவில் இவர் பல இலக்கியங் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்வார். பல அறிஞர்கள்

இக்கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு அடியேன் இவருக்கு உறுதுணையாக இருந்தேன். பட்டிமன்றங்கள், கவியரங்குகள் இவற்றிற்கும் அவ்வப்போது ஏற்பாடுகள் இருந்து வந்தன. திரு தொ.மு. பாஸ்கரத் தொண்டமான், மீ.பா.சோமு, பேராசிரியர் ஆ. முத்துசிவம், திரு.வீர. உலக ஊழியனரா் போன்ற சான்றோர்கள் வைரி செட்டிப் பாளையத்திற்கு வந்து போனதுண்டு. அடியேன் துறையூர்ப் பள்ளியில் ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சிகள் எல்லாவற்றிலும் இப்பெருமகன் கலந்து கொள்ளத் தவறுவதில்லை. அடியேனும் வைரிசெட்டிப்பாளையத்தில் நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் தவறாமல் கலந்து கொள்வதுண்டு.

**நினைவு - 2 :** விதிகளுக்கு உட்பட்டு ஏழை மாணவர்கட்கு பள்ளிக் கட்டணச் சலுகை இருந்தது. இது தவிர முற்போக்குச் சமூகத்தைச் சேர்ந்த ஏழை மாணவர்கட்கும் சில விதிகளின்கீழ் கட்டணச் சலுகைக்கு ஏற்பாடு செய்தேன். இதற்குமீறி ஒவ்வொரு வகுப்பிலும் ஒன்றிரண்டு முற்போக்கு சமூகத்தைச் சார்ந்த கட்டணம் செலுத்த முடியாதவர்கள் இருந்தனர். சில செல்வர்களை நாடி ஒருவரையாவது ஆறு ஆண்டுகட்குத் "தத்து" எடுத்துக் கொள்ளுமாறு கோரியதில் பத்துப் பன்னிரண்டு மாணவர்கட்குச் சலுகை கிடைத்தது. பள்ளியிறுதித் தேர்வு முடிய தேர்வுக் கட்டணம் உட்பட திரு. நாகரெட்டியார் இரண்டு மாணவர்கட்குக் கட்டணம் செலுத்தியதாக நினைவு. "ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்" என்ற பொன்மொழியைப் பொன்னேபோல் போற்றியவர் இப்பெருமகனார்.

**நினைவு - 3 :** 1948 - சனவரி என்பதாக நினைவு : குடிமைப் பயிற்சி முகாம் ஒன்று பள்ளிக்கு வெளியில் நடத்த எண்ணம். "வெள்ளையப்பன்" வேண்டுமே. மாணாக்கர்களிடம் கட்டணமாகத் தண்ட எண்ணம் இல்லை. திட்டத்தைத் திரு. நாகரெட்டியார் முன்வைத்து "96 மாணவர்கட்கும் 6 ஆசிரியர்கட்கும் 3 நாட்கள் உணவு வசதி, தங்கும் வசதிகள் இலவசமாகத் தரமுடியுமா?" என்று எழுதிக் கேட்டேன். "ஈத்துவக்கும் இன்பம்" கண்ட வராதலால் உடனே ஒப்புக் கொண்டார். நானே என் தோழ ஆசிரியர்கள் திரு மாதுர்பூதம். திரு. உமாபதி ரெட்டியார் ஆகிய இருவருடன் சென்று திட்ட

விவரங்களை எடுத்துரைத்து இடவசதிகள் முதலியவற்றைப் பார்த்து விட்டுத் திரும்பினேன் குடிமைப் பயிற்சி முகாம் மிகச் சிறப்பாக நடைபெற்றது"

மூன்றாம் நாள் காலை சிற்றுண்டி முடிந்ததும் சுமார் மூன்று கல் தொலைவிலுள்ள "புளியஞ் சோலையில்" (கொல்லிமலை அடிவாரத்தில் உள்ளது) முகாம் அமைக்கப்பெற்றது. இந்த இடம் முகாமிற்கும் மகிழ்ச்சிச் செலவுக்கும் பொருத்தமான அற்புதமான சூழ்நிலையில் அமைந்துள்ளது.

இந்த இடத்தைப் பற்றிச் சில சொற்கள் : வானளாவும் உயர்ந்த மரங்களால் சூழப்பெற்றது. இங்குச் சென்றவுடனேயே கம்பன் காட்டும் பஞ்சவடிச் சூழ்நிலை நமது நினைவிற்கு வரும்.

**ஓங்குமரன் ஓங்கிமலை**
**ஓங்குமணல் ஓங்கிப்**
**பூங்குலை குளாவு குளிர்**
**சோலைபுடை விம்மித்**
**தூங்குதிரை யாறுதழ்**
**குழலதுஓர் குன்று**[3]

என்பது கம்பன் சித்திரித்துக் காட்டும் சொல்லோவியம். மணலுக்குப் பதிலாக சிறியனவுமான குண்டுக்கற்கள்தான் நிறைந்துள்ளன. மழைக்காலத்தில் வெள்ளத்தால் உருண்டோடி வந்தவை இவை. உருண்டு உருண்டு தேய்ந்து வழவழுப்பான மேனியைக் கொண்டவை. இவற்றின் அடியில் ஊற்றுநீர் கசிந்து ஓடிக் கொண்டிருக்கும். இந்நீரைத் தேக்கி அண்மையிலுள்ள நிலங்கட்குப் பாய்ச்சுவார்கள் குண்டுக்கற்களின்மீது ஆயிரக்கணக்கானவர்கள் கூடலாம்; மாநாடு கூட நடத்தலாம் இலக்கிய மாநாட்டிற்கு இயற்கைச் சூழல் அமைந்த இதைப் போன்ற மற்றோர் இடத்தைக் காண்டல் அரிது பகலவன் கதிர்கள் புகமுடியாதவண்ணம் மரங்கள் அடர்ந்து

3 கம்பரா. ஆரணி. அகத்திய - 57

நெருங்கி இருக்கும். மாணாக்கர்கள் எங்கள் கண்பார்வைக்கெட்டிய வரை விருப்பப்படி சுற்றலாம் என்ற அநுமதி தரப்பெற்றது அப்பொழுதுதான் மாணாக்கர்களின் தனித்தன்மையைக் கண்டறிவதற்கு வாய்ப்புகள் ஏற்படும்

நாங்கள் புறப்படுவதற்கு ஒரு வண்டியில் நீர் மோர், பகல் உணவுக்கு சித்திரான்னங்கள் இலைக்கட்டுடனும் இதர சிறு பாத்திரங்களுடனும் அனுப்பி வைத்தார். திரு. நாகரெட்டியார். பிற்பகல் 3 மணிக்கு காஃபிக்குரிய பால், சருக்கரை, காஃபிப் பொடி முதலியவை இதே வண்டியில் சென்றன. எங்கள் பள்ளியிலிருந்து வந்த முத்துசாமி என்ற உதவியாளனையும் இந்த வண்டியில் அனுப்பி வைத்தேன். மாணவர்கள் நடராஜா சர்வீஸில் செல்ல, அவர்களைத் திரு மாதுர்பூதம், மாணிக்கம், உமாபதி ரெட்டியார் ஆகியோர் நடத்திச் சென்றனர். நானும் எஞ்சிய ஆசிரியர்களும் தனி வண்டியில் சென்றோம். திரு. நாகரெட்டியார் அவர்களையும் எங்களுடன் வருமாறு வேண்டினோம். அவரும் மனமுவந்து எங்களுடன் பயணமானார். 10½மணி சுமாருக்குப் புளியஞ்சோலையை அடைந்தோம். மாணவர்கள் எங்களுக்கு முன்னதாகச் சென்றடைந்தனர். முதலில் எல்லோருக்கும் நீர் மோர் வழங்கப் பெற்றது. வெயிலில் நடந்து வந்த களைப்பு ஒருவாறு நீங்கியது பன்னிரண்டு மணிக்கு திரு நாகரெட்டியார் உரையாற்றினார் ஒன்றிரண்டு ஆண்டுகளில் தாம் வைரிசெட்டிப் பாளையத்தில் தொடங்கப் போகும் உயர் நிலைப் பள்ளி பற்றித் தாம் கற்பனையில் கண்டிருக்க வேண்டும் என்பது என் கணிப்பு. 1950-இல் உயர்நிலைப் பள்ளியும் வைரி செட்டிப் பாயைத்தில் தொடங்கப் பெற்றது.

பள்ளி உதவியாள் முகாமில் செய்த பணியை மறத்தல் முடியாது. பம்பரம்போல் சுழன்று உணவு பரிமாறுதல் போன்ற பணிகளைக் கவனித்துக் கொண்டமை மிகவும் பாராட்டத் தக்கது. எங்கள் பள்ளிக்கு முத்துசாமி சேவகனாக அமைந்தது பள்ளியின் தவப்பயனே என்று சொல்லவேண்டும். இவன் பாரதியாரின் "கண்ணன் - என் சேவகன்" போன்றவன்

**"கண்டு மிகவும் களிப்புடனே நானவனை**
**ஆளாகக் கொண்டுவிட்டேன்; அன்றுமுதற் கொண்டு**
**நாளாக நாளாக நம்மிடத்தே கண்ணனுக்குப்**
**பற்று மிகுந்துவரல் பார்க்கின்றேன்; கண்ணனால்**
**பெற்றுவரும் நன்மையெலாம், பேசி முடியாது;**
**கண்ணனை இமையிரண்டும் காப்பதுபோல் என் (பள்ளி)**
**வண்ணமுறக் காக்கின்றான் வாய்முணுத்தல் கண்டறியேன்.**
**. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .!**
**இங்கிவனை நான் பெற்றேன் என்னதவம்**
**செய்துவிட்டேன்"**[4]

என்று சொல்வது முற்றிலும் பொருந்தும் (ஆறாவது அடியில் "குடும்பம்" என்பதற்குப் பதிலாகப் "பள்ளி" என்று போடப் பெற்றது) "குடும்பம்" என்றாலும் பொருந்தும். அக்காலத்தில் பள்ளியையே என் குடும்பம் என்று பாவித்து உழைத்ததை ஊர்ப் பெருமக்கள் நன்கு அறிவர்.

**நினைவு - 4** : "திருவருட் செல்வர்கள்" என்ற வரிசையில் சைவ சமய குரவர்கள் நால்வரைப் பற்றியும் நூல்கள் எழுதத் திட்டமிட்டிருந்தேன் "**தம்பிரான் தோழர்**" (1985) ஏற்கெனவே வெளிவந்துவிட்டது. 1986-இல் "**நாவுக்கரசர்**" (ஜுன் 1986) "**ஞான சம்பந்தர்**" (நவம்பர் - 1986) இரண்டு நூல்கள் வெளிவந்தன. முன்னதை என் அன்புக்கும் மரியாதைக்கும் உரிய திரு. நாக ரெட்டியாருக்கு

**செந்தமிழ்க் கன்பர்; பண்பினில் உயர்ந்தோர்;**
**திருந்தும்எம் குலக்கதி ரானோர்;**
**சிந்தனை வளர்க்கும் விருந்தருள் அறிஞர்;**
**சீரிய வள்ளலார்க் கன்பர்;**
**நந்தலில் லாத நாமகள் பொலிய**
**நங்கலைக் கோவிலைப் படைத்தோர்;**

4 பா.க : கண்ணன் பாட்டு - கண்ணன் என் சேவகன் (40-56)

**சந்தமார் நாகரெட்டியார்க் கிந்நூல்**
**கால்புறு காணிக்கை யாமால்.**

என்ற பாடலால் அன்புப் படையலாக்கி மகிழ்ந்தேன். இவரைப் பற்றிய விவரமாக "**நூல் முகத்தில்**" பதிவு செய்துள்ளேன்.

"**ஞானசம்பந்தரை**" இன்னொரு பேரன்பர் திரு. **P.B.K. இராஜா சிதம்பர** ரெட்டியாருக்கு,

**ஒப்பிலாப் பண்பன்; நுட்பமார் அறிஞன்;**
**உறுவது தேர்ந்துணர் விறலோன்;**
**திப்பிய மிக்க கொள்கையன்; அறிஞர்**
**சிந்தனைக்கு விருந்தருள் நிறத்தன்;**
**துப்பமை உளத்தன்; எம்குல விளக்காய்த்**
**துலங்குவோன்; நியதியைத் தெளிந்தோன்;**
**செப்பமார் "இராஜா சிதம்பரம்" என்னும்**
**செம்மலுக் குரியதிந் நூலே,**

என்ற பாடலால் அன்புப் படையலாக்கியுள்ளேன்.

1908 ஆகஸ்டு 3-ஆம் நாள் தோன்றி இன்றளவும் (4-8-98) வாழ்ந்து வருபவர். பெருவளநல்லூர் இரெட்டிகுலச் செம்மல் திரு. P.B. கிருட்டிணசாமி ரெட்டியாரின் அருமந்த மகன். இலால்குடி உயர்நிலைப் பள்ளி, திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரி, தேசியக் கல்லூரி ஆகியவற்றில் பேராசிரியர் கார்டினர், பேராசிரியர் சாரநாதன் திரு ந.மு. வேங்கடசாமி நாட்டார் போன்ற நல்லாசிரியரிடம் பயின்றதால் அவர்களுடைய நற்பண்புகள் யாவும் இவரிடம் வந்தமைந்தன. நாட்டாரின் தமிழ்ப்பற்று இவரிடம் தொற்றிக் கொண்டதால் இவர் இன்றளவும் தமிழ்ப் பற்றாளராகத் திகழ்ந்து வருகின்றார்.

திரு. இராஜா சிதம்பரம் ஒரு சிறந்த தேசியவாதி; நாட்டுப்பற்றாளர். காந்தியார் வழியொழுகும் நற்பண்பினர் இன்றளவும் கதருடையே அவர் திருமேனிக்குப் பொலிவு தருவதைக் காணலாம். செல்வச் செழிப்புடைய குடும்பத்தில் பிறந்தவராயினும் எளிமை வாழ்க்கையையே விரும்புபவர்; அங்ஙனமே வாழ்பவர்.

சாதி, சமய, அரசியல் பற்றுகளைக் கடந்து மனிதநெறியில் வாழ்பவர். காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும் குறுகிய கண்ணோட்டம் இன்றி எல்லாக் கட்சியினரிடமும் நன்குபழகி அவர்கள் நட்பைப் பெற்றுத் திகழ்பவர். பேரறிஞர் அண்ணாவிடம் தம்நெஞ்சைப் பறிகொடுத்தவர்.

1949-50இல் திருச்சி மாவட்டக் கழகத் தலைவராகவும், 1952-57இல் சென்னை மாநிலச் சட்டமன்ற உறுப்பினராகவும் (M.L.A) இருந்து பணியாற்றிய காலத்தில் இவர் ஆற்றிய பணிகள் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பெற வேண்டியவை. உயர் குலத்தில் (சாதியல்ல) பிறந்தவராதலால் "குலத்தளவேயாகும் குணம்" என்ற முதுமொழிக்கு ஏற்பப் பரந்த நோக்கமும் மனிதாபிமானமும் கொண்டவராகத் திகழ்கின்றார், மூதறிஞர் அருமை இராஜாஜியிடம் நெருங்கிப் பழகி அவர்தம் ஆசியைப் பெற்றவர். திரு. சி.. சுப்பிரமணியம் இவருடைய நெருங்கிய நண்பர். மூதறிஞர். தி.மூ. நாராயணசாமிப் பிள்ளை இவர்தம் குடும்ப நண்பர்; வழிகாட்டி. சில குறுக்குவழிகளைக் கையாள விரும்பாமையால் அமைச்சர் பதவி இவருக்கு வரவில்லை. எனினும், அமைச்சருக்கு மேல் மதிப்புடன் திகழ்கின்றார். பொதுத் துறைகளில் பணியாற்றியபொழுது "பண்புடையார் பட்டுண்டு உலகம்" "உயர் திணை என்மனார் மக்கட் சுட்டே" என்ற ஆன்றோர் வாக்குகட்கு எடுத்துக் காட்டாக இருப்பவர். எவர்மாட்டும் புன்முறுவலுடன் இனிமையாகப் பேசுபவர். காண்டற் கெளியவர்; கடுஞ்சொல் அறியாதவர். நாட்டு நலனிலும், இளைஞர் கல்வியிலும் பேரூக்கம் காட்டுபவர். இத்தகைய பெரியவர்பால் நான் கொண்டுள்ள அன்பிற்கும், மரியாதைக்கும் அறிகுறியாக இந்த நூலை அவருக்குக் காணிக்கையாக்கினேன்.

**நினைவு - 5 :** இந்த இரண்டு நூல்களுக்கும் வெளியீட்டு விழா எடுத்து அதில் இந்த இரு பெரியார்களின் திருக்கைகளில் முதற்படியைக் கொடுக்க வேண்டும் என்பது என் அன்புள்ளம் கருதியது. விவேகாநந்தர் உயர்நிலைப் பள்ளியில் வெளியீட்டு விழா அமைத்துத் தருமாறு திரு. நா. அரங்கராசனுக்கு (தலைமையாசிரியர்) எழுதினேன். அவரும் என் வேண்டுகோட்கிரங்கி 24.1.1987 அன்று

விழா எடுத்தார் விழா முதுபெரும் புலவர் செவந்தாம்பட்டி திரு. பெ. இராமாநுச ரெட்டியார் தலைமையில் நடைபெற்றது. விழாவில் திருச்சியிலிருந்து வந்த இரண்டு அறிஞர்கள் பேசினார்கள்; இவர்கள் பேச்சு நூல்களைத் திறனாய்வு செய்யும் போக்கில் அமைந்தது.

பெருவளநல்லூர் க பதுமநாபன் இராஜா சிதம்பர ரெட்டியார் குணநலன்களைப்பற்றியும் அவர் பல்வேறு நிலைகளில் - பொறுப்புகளில் ஆற்றிய பெருந்தொண்டைப்பற்றியும் விரிவாக விளக்கினார். செந்தாரப்பட்டி நாராயணசாமி ரெட்டியார் திரு. நாகரெட்டியார் ஆற்றிய தொண்டுகளைப் பற்றி விரிவாக விளக்கிப் பேசினார்.

ஏற்புரை வழங்கிய இரு பெரியார்களும் அவர்களுடன் அடியேனது தொடர்புபற்றிப் பல நிகழ்ச்சிகளுடன் பொருந்திப் பேசி அனைவரையும் மகிழ்வித்தனர். இந்த விழாவிற்கு இப்பள்ளியில் பணியாற்றி ஓய்வு பெற்ற ச. கணபதி ரெட்டியார், ஒன்றிரண்டு ஆண்டுகள் பணியாற்றிய P. மாதுர்பூதம், உடற்பயிற்சி ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற L. மாணிக்கம் வந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

விழாநாயகர்களில் திரு. பி.பி.கே. இராசாசிதம்பரம் இன்றும் நம்மிடையே வாழ்ந்து வருகின்றார். திரு. எஸ்.ஆர். நாகரெட்டியார் திருநாடு அலங்கரித்து விட்டார். விழா நடைபெற்றுப் பத்துமாதங்களில் சிவப்பேறு அடைந்ததை நினைத்து வருந்தாமல் இருக்க முடியவில்லை

**நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை யுடைத்திவ் வுலகு**[5]

## திரு நாகரெட்டியார்

***தோற்றம் : 12.7.1916*** ***முக்தி : 1.11.1987***

5 குறள் - 338

# 8

# திரு. தி.சு. அவினாசிலிங்கம்

நான் கல்லூரி மாணாக்கனாக இருந்த போதே (1934-39) நேரு அவர்களின் தன் வரலாற்றைப் படித்தேன். தொடர்ந்து "நான் கண்ட இந்தியா'' ''உலக வரலாறு'' படிக்க நேர்ந்தது. இவற்றை ஆங்கிலத்திலேயே படித்தேன். தன் வரலாற்றில் முதல் வாக்கியம் "An only son of a rich parents is apt to be spoilt, especially so in India" என்பது. இந்நிலையிலிருந்து தப்பி நாட்டுப் பணிக்கே தம்மை அர்ப்பணித்துக் கொண்டதை நினைந்து மகிழ்கின்றார் நேரு. திரு. தி.சு. அவனாசிலிங்கமும் திருப்பூரில் செல்வப் பெற்றோர்கட்குப் பிறந்து, நற்கல்வி பெற்று, சிறந்த வழக்குரைஞராகத் திகழ்ந்து படோடோபமான இன்ப வாழ்க்கையை அநுபவித்திருக்க முடியும். ஆனால் அவர் "வெள்ளை வேட்டி சாமியராகவே" இருந்து நாட்டுப் பணிக்கும், கல்விப் பணிக்கும் தம்மை அர்ப்பணித்துக் கொண்டது இறைவனின் திருக்குறிப்பாகும்.[1] தம் வாழ்நாள் முழுவதும் "பணியே பரமன் வழிபாடு" என்ற கொள்கையே அவருக்கு ஒளி காட்டிக் கொண்டிருந்தது. அவரைச் சேர்ந்த நல்லோர் பலரும் அவரைக் காக்கும் வேலியாக அமைந்தனர். அவரை நல்வழியில் செல்லவும் தூண்டுகோலாக அமைந்தனர். அவரது வாழ்க்கை ஒரு பார காவியம் போல் அமைந்தது. இத்தகைய பெரியார் 1942 முதல் என் வீர வழிபாட்டிற்கு உரியவராக இருந்து வந்தார். இல்லறத்தைத் துறந்த இராமாநுசர் வைணவ உலகத்திற்குக் கிடைத்த செல்வம்போல் மாணி வாழ்க்கை வாழ்ந்த அய்யா அவர்கள் (இப்படிதான் அவர் நிறுவனங்களில் வழங்கப்படுவார்) வாழ்க்கை கல்வியுலகிற்குக்

1 The sacred Touch - என்ற தலைப்பில் Bharatiya Vidya Bhavan, Kulapathi Munshi Marg Bombay-400 007 வெளியிட்டது (1986)

கிடைத்த செல்வம்போல் அமைந்தார். இத்தகைய பெரியாரிடம் அடியேனுக்கு ஏற்பட்ட தொடர்பு "நீங்காத நினைவுகளாக" வெளிவருகின்றது

**நினைவு - 1** : 1948 - என்று நினைக்கின்றேன். நான் அப்போது துறையூர் பெருநிலக்கிழவர் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியராகப் பணியாற்றிய காலம். அப்போது - அதாவது நாடு விடுதலை பெற்ற மறு ஆண்டு - தமிழ்நாடு காங்கிரஸ் மாநாடு துறையூருகிலுள்ள திண்ணனூரில் நடைபெற்றது. யாரோ ஒரு பெரிய தேசபக்தர் விருந்தோம்புநராக இருந்தமையால் இம்மாநாடு இங்கு நடைபெற்றது. அக்காலத்தில் முதல் கல்வியமைச்சராக இருந்தவர் திரு. தி.சு. அவினாசிலிங்கம் அவர்கள். நேர்மைக்குப் பேர் போனவர்கள். தாமே பல பள்ளிகளடங்கிய ஒரு பெரிய நிறுவனத்தின் இயக்குநராக இருந்தபடியால் ஆசிரியர்களின் குறைகளையும், பள்ளிகளின் அவல நிலையையும் நன்கு அறிந்தவராக இருந்தார்.

துறையூர் ஆசிரியர் கூட்டிணைப்பு[2] மாநாடு ஒன்றைத் திண்ணனூரில் காங்கிரஸ் மாநாடு நடைபெற்றே அன்றே கூட்ட நினைத்து துறையூர் ஆசிரியர் கூட்டு இணைப்பு. மாநாடு நடத்துவது என்றால் எவ்வளவு சிரமம் என்பதை மாநாட்டை நடத்திப் பார்ப்பவர்க்குத்தான் தெரியும் இந்த மாநாட்டுத் தலைவராக இருப்பதற்குப் பேராசிரியர் A. இராமய்யர் (திருச்சி தேசியக் கல்லூரி ஆங்கிலப் பேராசிரியர்) ஒப்புக் கொண்டார். அடியேன் செயலராகப் பணியாற்றினேன். 700க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் கூடும் மாநாடு அது. துறையூரிலிருந்து புறப்படும் ஆசிரியர்கட்குத் திண்ணனூர் வரையிலும் இரண்டு பேருந்துகள் போவதும் வருவதுமாக இருந்தன. திண்ணனூருக்கு அருகிலும் சுற்றிலும் உள்ள ஆசிரியர்கள் அவரவர்கள் போக்குவரத்து ஏற்பாடுகள் செய்து கொண்டனர்

2. நான் துறையூரிலிருந்தபோது துறையூர் ஆசிரியர் கூட்டு இணைப்பு (Turaiyur Teachers Federation) என்ற ஓர் அமைப்பைத் தொடங்கி என்னை அதன் தலைவனாக்கினார்கள். அவசியமானபோது இதன். நிர்வாகக் குழு கூடி முக்கியமான செயல்களைப் பற்றி முடிவெடுக்கும்.

ஓர் இடத்தை அன்பர்கள் உதவியால் ஏற்பாடு செய்து 700க்கு மேற்பட்ட ஆசிரியர்கட்குக் காலையில் சிற்றுண்டி, காஃபி, மதிய உணவு, மாலையில் சிற்றுண்டி, காஃபிக்குச் சமையல் ஆட்களை நியமித்து வசதிகள் செய்யப் பெற்றன அவசரமாக அங்குமிங்கும் சென்று வருவதற்கு ஒரு வாடகைக் காரையும் தயார் நிலையில் வைத்திருந்தோம். காலை எட்டு மணியிலிருந்து மாநாட்டிற்கு எழுந்தருளி அரைமணிநேரம் இருக்குமாறு கல்வியமைச்சரைக் கேட்க முயன்றேன். பிற்பகல் 2 மணிவரை அவரைப் பார்க்கவே அநுமதி தரமறுத்தனர். எங்கும் கதர் உடை, கதர் குல்லாய் அணிந்த கூட்டம் திரண்டிருந்தது. அக் காலத்தில் திருச்சி மாவட்டக் கல்வி அதிகாரியாக இருந்த திரு. அப்பர் சுந்தர முதலியாரும் அமைச்சரைப் பார்க்கத் திண்டாடிக் கொண்டிருந்ததைக் கண்டேன்.

புதிதாக விடுதலை பெற்ற நாடாதலால் காங்கிரஸ்காரர்கள் சீதையைக் கண்டறிந்த அநுமன் வந்த பிறகு வானரங்கள் மதுவனத்தில் புகுந்து அட்டகாசம் செய்ததைப்போல் இவர்கள் ஆணவம் தலைக்கேறியவர்கள்போல் காணப்பெற்றனர். பணிவோ, பண்பாடோ அவர்களிடம் காணப்பெறவில்லை. ஆசிரியர்கள் பதினெட்டு ரூபாய்க்கும் இருபது ரூபாய்க்கும் மாத ஊதியத்தில் பணியாற்றுபவர்கள்தாமே என்று எண்ணியது அவர்கள் பேச்சில் தொனித்தது.

**எல்லோரும் ஓர்குலம் எல்லோரும் ஓரினம்**
**எல்லோரும் இந்தியா மக்கள்**
**எல்லோரும் ஓர்நிறை எல்லோரும் ஓர்விலை**
**எல்லோரும் இந்நாட்டு மன்னர் - நாம்**
**எல்லோரும் இந்நாட்டு மன்னர் - ஆம்**
**எல்லோரும் இந்நாட்டு மன்னர்.**[3]

என்ற பாடலில் "எல்லோரும் இந்நாட்டு மன்னர்" என்ற அடியின் கருத்தைத் "தாம் மட்டிலுந்தான்" என்று கருதிக் கொண்டிருந்த

3 பாக பாரத சமுதாயம் - 4

ஆணவம் தொனித்தது "எல்லாரும்" என்பதில் ஆசிரியர்களும் அடங்குவர் என்பது அவர் மதியில் ஒளிரவில்லை. காரணம், "தாங்கள்தாம் விடுதலை வாங்கித் தந்த மாமேதைகள்" என்று கருதிக் கொண்டிருந்தது அவர்கள் திருவாயினின்றும் "பேசாத பேச்சாகத்" தொனித்தது. "தாங்கள்தாம் மன்னர்கள்" என்று எண்ணிக் கொள்ளட்டும், அதைப் **"பட்டிமன்றம்"** அமைத்து மறுக்கவில்லை. "ஆசிரியர்களும் நாட்டின் அடிப்படைத் தொண்டர்கள்" என்றாவது நினைத்து மனிதாபிமானத்துடன் மறுமொழி கூறியிருக்கலாம்; அது செய்யவில்லை. வருங்காலத்தில் தலைக் கொழுப்பாக நிற்கும் இந்த ஆணவத்தால் என்னென்ன "திருவிளையாடல்கள்" நடைபெறப் போகின்றனவோ என்று என் சிறுமனம் எண்ணத் தொடங்கியது; உடனே அதையும் மறந்தது. தமிழகத்தில் 18 ஆண்டுகட்குமேல் காங்கிரசு ஆட்சி நிலைக்கவில்லை!

எப்படியாவது அமைச்சரை மடக்கி மாநாட்டில் பேச வைக்க வேண்டும் என்ற எண்ணம் என் மனத்தில் உதித்தது. மாநாட்டுத் தலைவர் இராமய்யரிடம் இதைத் தெரிவித்தேன். அவர் என் நோக்கத்திற்குப் பச்சைக்கொடி காட்டினார். சுமார் மாலை 4.30க்கு காங்கிரசு மாநாடு முடிந்து தலைவர்கள் கலைந்து திரும்பத் தொடங்கினர். ஆசிரியர் மாநாடு ஒரு புளியந்தோப்பில் நடைபெற்றது. சாலையின் மேல்புறம் சுமார் 4 அடி பள்ளத்தில் இந்தத் தோப்பு இருந்தது. வாகனங்களை நகரவிடாது நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் தடுத்து நின்றனர். "கல்வி அமைச்சர் வாழ்க" என்ற முழக்கம் விண்ணை எட்டியது. "ஆசிரியர் மாநாட்டில்" என்று ஒரு கூட்டம் முழங்க, மற்றொரு கூட்டம், "அமைச்சர் பேசவேண்டும்" என்று எதிரொலித்தது.

காங்கிரசு கூட்டம் தம்பித்துப் போயிற்று அமைச்சர் அவினாசிலிங்கம், காரிலிருந்து குதித்தார். ஆசிரியர் கூட்டத்தை நோக்கி ஓடி வந்தவர் வரவேற்ற என்னைக் கட்டித் தழுவிக் கொண்டார். மாநாட்டில் உணர்ச்சியுடன் பேசினார். எங்கள் கோரிக்கைகளை எழுத்துமூலம் அவரிடம் தந்தோம். அன்புடன் ஏற்றுக் கொண்டார். புன்முறுவலுடன் "கவனிக்கின்றேன்" என்றார்

"அவினாசிலிங்கம் வாழ்க" என்று முழக்கமிட்டு ஆசிரியர் மாநாடு அப்பெருமகனாரை வழியமைத்து வைத்தது.

இவர் கல்வியமைச்சராக இருந்த காலத்தில் (ஓராண்டுக் காலமே) இவர் கல்வியுலகில் மேற்கொண்ட சீர்திருத்தங்கள் பிற்காலத்தில் செய்யப்பெற்ற ஐந்தாண்டுத் திருத்தங்களைவிட அதிகமே உயர் நிலைப்பள்ளிகளில் முதற்படிவம் முதல் ஆறு படிவம் வரை மாணவர் அறிவு நிலைக்கேற்ப 50, 75, 100 குறள்கள் வீதம் தேர்ந்தெடுக்கப் பெற்றவற்றைக் கட்டாயமாக அறிமுகம் செய்து வைத்தார். மாணவர்கள் ஒழுக்க சீலர்களாக உருவாக்கப் பெறவேண்டும் என்ற நன்னோக்கத்துடன் குடிமைப் பயிற்சி (Citizenship Training) என்ற ஒரு திட்டத்தை உயர்நிலைப் பள்ளிகளில் நடைமுறைப் படுத்தினார். உயர்நிலைப் பள்ளி நிலையில் அறிவியல் பாடங்களைக் கற்பிப்பதற்கு எளிதாக இருக்கும் பொருட்டும், அறிவியல் பாடநூல்கள் எழுதுவோருக்குத் துணையாக இருக்கும் பொருட்டும் எல்லாத் துறை அறிவியலுக்கும் கலைச்சொற் பட்டியல்களை வல்லுநர்களைக் கொண்டு உருவாக்கினார்.

**நினைவு - 2 :** தமிழ் இலக்கியங்களிலிருந்து சில பாடல்களைத் தேர்ந்தெடுத்து அவற்றை அநுபவிக்கும் பாங்கில் அமைந்த 25 கட்டுரைகள் கொண்ட **"கவிஞன் உள்ளம்"** என்ற பெயரில் ஒரு நூலாக வெளியிட்டேன் (சனவரி 1949) இதுதான் என் முதல் வெளியிடு; "கன்னி முயற்சி". இந்த நூலுக்குத் திரு தி.சு. அவினாசிலிங்கம் (கல்வியமைச்சர்) அவர்களிடமிருந்து அணிந்துரை பெற எண்ணினேன். என் வீரவழிபாட்டுக்குரியவரல்லவா? அணிந்துரை வாங்குவதற்கென்றே துறையூரிலிருந்து சென்னை வந்தேன். அப்போது அமைச்சர் சென்னை சாந்தோம் பகுதியில் வசித்து வந்தார். நூலின் ஒரு படியை முன்னரே அவருக்கு அஞ்சல் வழி அனுப்பியிருந்தேன். நேராக அவர் மனமுவந்து சிறியேனை இன்முகத்துடன் வரவேற்றார். பின்னர், "மிஸ்டர் ரெட்டியார், தங்கள் நூலுக்கு அணிந்துரை தர விரும்பினேன். நூலைப் படித்துப் பார்த்ததில் அது காதற்கட்டுரைகளைக் கொண்டிருப்பதைக்

கண்டேன். என் நிலைக்கும் நான் மேற் கொண்டுள்ள இராமகிருஷ்ண வித்தியாலயப் பணிக்கும் இவை ஒவ்வாதவை. இந்நூலுக்கு அணிந்துரை வழங்க முடியாமைக்கு வருந்துகின்றேன். வேறொரு நூலுக்கு அவசியம் தருவேன்" என்று கூறி நூலை என்னிடம் திருப்பித்தந்து விட்டார். நானும் அவரிடம் நகைச்சுவையாக,

**"மாணியாம் வேடம் தாங்கி**
**மலரயற் கறிவு மாண்டோர்**
**ஆணியாய் உலகுக் கெல்லாம்**
**அறம்பொருள் நிரப்பும் அண்ணல்**[4]

என்று கம்பநாடனால் புகழப் பெற்ற அநுமனைப்பற்றி ஒரு நூல் எழுதத் திட்டமிட்டுள்ளேன். அதற்குப் பெறுவேன்." என்று கூறி விடைபெற்றுத் திரும்பினேன்.[5]

**நினைவு - 3** : காரைக்குடி வாழ்வில் (1950 - 60) ஆறு ஆண்டுகள் அரிதின் முயன்று **தமிழ்ப் பயிற்றுமுறை** என்ற அரியதொரு பெருநூலை எழுதி முடித்தேன். ஆசிரியப் பயிற்சி பெறும் மாணாக்கர்கட்குப் பயிற்றிக் கொண்டே நூல் எழுதப் பெற்றமையின் நூல் அநுபவநூலாக அமைந்துள்ளது[6] இந்த நூலுக்கு முன்னாள் கல்வியமைச்சர் திரு. தி.சு. அவினாசிலிங்கம் அவர்களிடம் அணிந்துரை பெற எண்ணினேன். நூலின் படியொன்றினை அவருக்கு அனுப்பி முன்னறிவிப்புடன் கோவை - பெரிய நாய்க்கன் பாளையம் இராமகிருஷ்ண வித்தியாலயத்திற்குச் சென்றேன்.

---

4 கம்ப சுந்தர-கடல்தாவு - 26

5 அப்படிப்பட்ட நூலை இதுகாறும் 43 ஆண்டுகளாக எழுதவில்லை. எப்படியும் எழுதுவேன். அணிந்துரை பெறுவதற்கு "அய்யா"தான் இல்லை.

6 பலர் விரும்பிப் படிக்கின்றனர்; பாராட்டுகின்றனர். இப்போது இதன் நான்காம் பதிப்பு வெளிவரும் நிலையில் உள்ளது

கோவையில் இருப்பூர்தி நிலையத்திற்கு எதிரிலிருந்த வேங்கடேசுவரா விடுதியில் குளியல், சிற்றுண்டி இவற்றை முடித்துக் கொண்டு வித்தியாலயம் சென்றேன். அய்யா அவர்களைச் சந்தித்து வணக்கம் செலுத்தினேன். எனக்கு விருந்தினர் இல்லத்தில் இடம் ஒதுக்கி வைத்திருப்பதாகவும் அங்குத் தங்கலாம் என்றும் கூறினார். நான் அனைத்தையும் கோவையிலேயே முடித்துக் கொண்டு விட்டதாகக் கூறினேன்.

பத்து மணித்துளிகளில் அணிந்துரை வழங்குவதற்குத் தயாரானார். "மிஸ்டர் ரெட்டியார், நூலைப் பார்க்கவே அச்சமாக இருக்கிறது. பெரிதாக எழுதி விட்டீர்கள். ஒன்று செய்யலாம். நீங்கள் என்னை உங்கள் மாணவனாக நினைத்துக் கொண்டு ஒவ்வொரு இயலாக எனக்கு விளக்குங்கள். ஒரு மணிநேரம் இது நடைபெறட்டும். அதன் பிறகு அணிந்துரை எழுதித் தருகின்றேன்" என்றார். முற்பகல் பத்தரை மணிக்குத் தொடங்கி பதினொன்றரை மணிக்குள் விளக்கத்தை முடித்தேன். உடனே முக்கால் மணி நேரத்தில் விரைவாக நான்கு பக்கத்தில் எழுதி முடித்து, "மிஸ்டர் ரெட்டியார், எழுத்துப் பிழைகள், வாக்கியப் பிழைகள் இருப்பின் திருத்திப் போட்டுக் கொள்ளுங்கள்" என்று கூறி அணிந்துரையை என்னிடம் தந்துவிட்டார். அணிந்துரையின் சில பகுதிகள் :

> "ஒரு நாட்டு மக்களின் மேன்மைக்கு அறிகுறியாக இருப்பது அவர்கள் மொழியின் சிறப்பு. பிறமொழிகளின் மூலம் அறிவு பெறலாம். ஆனால், மனப்பண்பும், சீரிய சிந்தையும் தம் சொந்த மொழியை ஆய்ந்து பயிலுவதனால்தான் பெறமுடியும். எனவே, நம்நாடு புதுவாழ்வு பெற்றும் பெருவாழ்வை நோக்கிச் செல்லும் இக்காலத்தில் நமது மொழியின் வளர்ச்சியைப் பற்றி அறிஞர்கள் நினைப்பதில் ஆச்சரியம் இல்லை."
>
> மொழி வளர்ச்சி என்பது வெறும் வாய்ப்பேச்சால் மட்டிலும் உண்டாவதில்லை. அதற்காக மொழியின்பால் பக்தி தூண்டப்பெற்று மொழியின் சேவையே பயனும் பண்பும் எனக் கருதி உழைப்பவர்களின் முயற்சியினால்தான் அஃது உண்டாகும். எல்லாத் துறைகளிலும் தமிழ்ப் புத்தகங்கள் வெளிவரவேண்டும்....

கல்வித் துறையில் பாடபோதனையின் தரம் உயரவேண்டும் என்பது அனைவருடைய விருப்பம் நமது உயர்நிலைப் பள்ளிகளில் பாடபோதனை தமிழில் அமைந்திருக்கின்றது ஆனால் இந்தப் பாடங்களைப் போதிக்கும் ஆசிரியர்கட்குப் பயிற்சியும் பாடமும் ஆங்கிலத்தில் அளிக்கப் பெறுகின்றன. பின்னர் அவர்கள் பள்ளியில் மேற்கொள்ள இருக்கும் பணிகளில் அவர்கள் பெற்ற அறிவும் பயிற்சியும் முற்றிலும் பயன்படாமல் போகின்றன. எனவே, முதலில் ஆசிரியர்க் கல்லூரிகளில் பாடங்கள் தமிழில் சொல்லித் தரப் பெற வேண்டியது மிகவும் அவசியம். .... இந்தக் குறையைத் தீர்ப்பதற்கு திரு. ந. சுப்புரெட்டியார் முன்வந்திருப்பது பாராட்டத்தக்கது.

அவர் எழுதியிருக்கும் "**தமிழ்ப் பயிற்றும் முறை**" பெரிய அளவு நூலாக அமைந்திருக்கின்றது.... தாய்மொழிப் பயிற்சியைத் தவிர அத்துடன் தொடர்பாக இருக்க வேண்டிய நவீன முறைகள் பற்றிய பல செய்திகள் இந்நூலில் சேர்க்கப் பெற்றுள்ளன... தாய் மொழி மூலம் கல்வி புகட்டுவதுதான் குறைந்த காலத்தில் அதிக அறிவு பெறுவதற்கேற்ற வழி என்பது உலக முழுவதிலுமுள்ள அறிஞர்களின் அநுபவம். ...

இன்றில்லையானால், நாளை அல்லது ஒன்றிரண்டு அல்லது ஐந்தாண்டுகளில் படிப்படியாக தமிழ் போதனா மொழியாவது உறுதி....

திரு. ந. சுப்பு ரெட்டியார் மிகுந்த சிரமத்துடனும், சிரத்தையுடனும், பக்தியுடனும் இப்பணியைச் செய்திருக்கின்றார் ... அவர் பணி அனைவருக்கும் பயன்படுவதாகுக அவர் மேற்கொண்டிருக்கும் முயற்சிகளில் ஆண்டவன் துணை நிற்பானாக.

– **தி.சு. அவினாசிலிங்கம்**

30.6 57

மாணவர் விடுதிக்கு ஓர் ஆள் மூலம் என்னை அனுப்பி உணவு கொள்ளச் செய்தார். திரும்பியதும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி முதல்வர், உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர், ஆசிரியர் பயிற்சிப் பள்ளித் தலைமை ஆசிரியர் இவர்கள் தயாராக வந்திருந்தனர். "அன்பர்களே, இன்று "ரெட்டியார் நாள்" பிற்பகல் வகுப்புகள் தொடங்குவதை நிறுத்திவிட்டு உங்கள் பள்ளியில் முக்கால் மணி நேரம் கூட்டம் அமைத்து இவரைப் பேசச் செய்து மாலை ஆறுமணிக்குக் கோவை செல்லும் இருப்பூர்தியில் ஏற்றி விடுங்கள்" என்று பணித்தார். மூன்று நிறுவனங்களிலும் அரை மணிநேரம் வீதம் பேசினேன். மாலை ஆறு மணிக்குக் கோவை செல்லும் இருப்பூர்தியில் ஏறிக் கோவை வந்து, மதுரை செல்லும் இருப்பூர்தியில் ஏறித் திண்டுக்கல்லில் இறங்கிப் பேருந்து மூலம் காரைக்குடிக்குத் திரும்பினேன் அன்றே அணிந்துரைக்கு நகல் எடுத்து S.R. சுப்பிரமணியப் பிள்ளை நிறுவனத்திற்கு அனுப்பி வைத்தேன். நூலும் ஆக்டோபர் முதல் தேதி (1957) வெளிவந்தது.[7]

**நினைவு - 4** : 1958 - என நினைக்கின்றேன். பல்லாண்டுகளாக அணுவைப்பற்றி ஆய்ந்த கருத்துகளைத் தொகுத்து **"அணுவின் ஆக்கம்"** என்ற அரியநூலை எழுதி முடித்தேன் இந்த நூல் (எஸ்.ஆர். சுப்பிரமணியப்பிள்ளை வெளியீடு) அணுவினை ஆக்கத் துறைகளில் பயன்படுத்தும் முறைகளை விளக்க எழுந்தது இந்நூல். அணுபற்றிய பல,ஆங்கில நூல்களைப் படிக்க வேண்டி நேரிட்டது. அமெரிக்க செய்தித் துறையைச் சார்ந்த நூலகத்தார் எனக்குப் பெருந்துணை செய்தார்கள். நூலும் பதினாறு இயல்களில் அற்புதமாக அமைந்தது இந்நூலை திரு. சி. சுப்பிரமணியம் (அக்காலத்தில் தமிழக அரசின் கல்வியமைச்சர்) அவர்களின் அணிந்துரை அணி செய்கின்றது. இந்த நூலை நமது அய்யா அவர்கட்கு,

7 அணிந்துரை அற்புதமாக அமைந்தது. "தமிழ் பயிற்றும் முறை" (மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம் - 608 001) என்ற நூலில் கண்டு மகிழத் தக்கது)

நற்குரு தேவர் திருவடிக் கன்பன்;
நாடுவாழ் வுறச்சிறை புக்கோன்;
பற்பமென் மலர்வாழ் கலைமகள் தனக்கே
பண்புயர் பொருளெலாம் அளித்தோன்.[8]
கற்பனைக் குயில்வாழ் தமிழ்ப்பொழில் நடுவண்
கலைக்களஞ் சியம்அமைத் திட்டோன்;
அற்புதன்; எங்கள் நல்அவி னாசி
ஆண்டகைக் குரியதிந் நூலே.

என்ற பாடல் மூலம் அன்புப் படையல் செய்து நாள் அய்யாமீது கொண்டிருந்த மதிப்பையும், மரியாதையையும் புலப்படுத்திக் கொண்டேன். தமிழ்ப் பணியே தம் பிறவிப் பணியாகக் கொண்ட அய்யா அவர்களின் ஆசியாலும் அணிந்துரை வழங்கிய திரு. சுப்பிரமணியம் அவர்களின் வாழ்த்தாலும், நூல் தமிழகத்தில் பெருமித்துடன் உலவுகின்றது.

**நினைவு - 5 :** 1977 செப்டம்பரில் நடைபெற்ற என் மணிவிழாவில் பல பெரியோர்களின் ஆசிச் செய்திகள் அடங்கிய மணிவிழா மலர் ஒன்று வெளியிடப் பெற்றது. அதில் அய்யா அவர்கள் ஆங்கிலத்தில் அனுப்பிய செய்தியின் தமிழ் வடிவம் இது:

> டாக்டர் ந. சுப்புரெட்டியார் நம்முடைய புகழ் வாய்ந்த தமிழ்ப் புலவர்களில் ஒருவர். தமிழ் வளர்ச்சி குறித்து அவரது உற்சாகம் பாராட்டத்தக்கது. அவர் இலக்கியம், அறிவியல் துறைகளில் புன்னூல்கள் இயற்றியுள்ளார். அவருடைய மாணாக்கர்களும், அன்பர்களும் அவருடைய மணிவிழாவைக் கொண்டாடுவது குறித்து பெருமகிழ்ச்சி அடைகின்றேன். அவர் உடல் நலத்துடனும் மன வளத்துடனும் அவர் தேர்ந்தெடுக்கும் துறைகளிலெல்லாம் பல்வேறு சிறப்புகளுடன் பணியாற்ற வேண்டும் என்று வாழ்த்துகிறேன்; இறைவனையும் வேண்டுகிறேன்.[9]

8 அக்காலத்தில் பதினைந்து இலட்சம் ரூபாயை அவினாசிலிங்கம் மகளிர் மனையியல் கல்லூரிக்கு அளித்ததாக செய்தித் தாளில் படித்தேன்.

9 மணிவிழா மலர் (1977) பக். 20

அய்யா அவர்களின் வாழ்த்தின் கனம் இன்றளவும் எனக்குப் பதிய உற்சாகத்தை ஊட்டிக் கொண்டுள்ளது.

**நினைவு - 6 :** திருப்பதியில் 1977 அக்டோபரில் ஓய்வு பெற்றேன். ஆனால் மூன்று மாத காலம் திருப்பதியிலேயே தங்கியிருந்தேன். என் இளைய மகன் டாக்டர் இராமகிருஷ்ணன் திருமணமாகி ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் எம்.டி. (பொது மருத்துவம்) படித்துக் கொண்டிருந்தான். என் மூத்த மகன் திருப்பதியில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் பணிபுரிந்து கொண்டிருந்தான். அவனைச் சென்னைக்கு மாற்றிக் கொள்ள முயன்று கொண்டிருந்தேன். சனவரி முடிய பல்கலைக் கழகக் குடியிருப்பில் தங்கிக் கொள்ள அநுமதி இருந்தது. அதற்குமேல் சென்னையில் குடியேறத் திட்டம் இருந்தது. சென்னையில் வாடகை வீடு பார்க்கும் வேலையும் இருந்தது. இதனால் பலமுறை சென்னைக்கு வரும் வாய்ப்புகள் இருந்தன. தங்கும் இடம் எஸ்.ஆர். சுப்பிரமணிய பிள்ளை பதிப்பகம், 6, பிலிப்ஸ் தெரு, சென்னை - 600 001) தான். அருகில் நல்ல உணவு விடுதிகள் இருந்தமையினாலும் நினைத்தவுடன் பல்வேறு இடங்கட்குப் போய்வர பேருந்து, இருப்பூர்தி வசதிகள் இருந்தமையினாலும் இந்த இடமே 1964 ஆண்டு முதல் தற்காலிகத் தங்குமிடமாக வைத்துக் கொண்டிருந்தேன். பதிப்பக மேலாளர் கந்தனடிமை திரு. எஸ்.பி. சண்முகம் பிள்ளை அவர்களும் ("கந்தனடிமை" அடியேன் அவருக்கு வழங்கிய "விருது")[10] பக்குவ ஜீவியாக இருந்தமையால் என் மனமொத்த தோழராக இருந்து வந்தார்[11]

10 காலையிலும் மாலையிலும் சென்னை கந்தகோட்டம் சென்று கந்தனை வழிபடத் தவறுவதில்லை இவர்.

11 1941-50 வரை துறையூரில் பணியாற்றிய காலத்திலும், 1950-60 வரை காரைக்குடியில் பணியாற்றிய காலத்திலும் பன்மொழிப் புலவர் திருவேங்கடராஜுலு ரெட்டியார் மயிலையில் தங்கியிருந்த இடங்களாகிய 12, நாட்டு சுப்பராய முதலித்தெரு; 13, வடக்கூர் செல்வ விநாயகர் தெரு; 35, இலக்கியப்ப முதலி தெரு ஆகிய இடங்களில் தங்குவது வழக்கம். வெறும் இரும்பாக இருந்த அடியேனை தமிழ்க் காந்தமாக மாற்றிய பெரிய தமிழ்க் காந்தம் இந்தப் பெருமகனார்.

ஒரு சமயம் பல்கலைக் கழகம் போய்வந்தபோது தமிழ்க் கலைக் களஞ்சிய அலுவலகம் சென்று திரு. பெ தூரனைக் கண்டு அளவளாவினேன். அப்போது அவர் 10 தொகுதிகளாக இருந்த கலைக்களஞ்சியம் 12 தொகுதிகளாகப் (இரண்டாம் பதிப்பு) பதிப்பிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார் தமக்கு உடல் நிலை சீர்கேடு அடைந்து வருவதால் தான் ஓய்வை நோக்கியிருப்பதாகத் தெரிவித்தார் என்னைத் தலைமைப் பதிப்பாசிரியர் பதவிக்கு விண்ணப்பம் தருமாறு பணித்தார். நானும் திருப்பதிக்குத் திரும்பியதும் விண்ணப்பம் அனுப்புவதாகக் கூறி அவரிடமிருந்து விடைபெற்றேன்.

6-2-78 அன்று காஸ்மா பாலிட்டன் கிளப்பில் அய்யாவையும், தொடர்ந்து பிறகு திரு. தூரனைக் கலைக் களஞ்சிய அலுவலகத்திலும் சந்தித்துப் பேசினேன். அவர்கள் கேட்டுக் கொண்டபடி ஜூன் வரையிலும் திரு. தூரன் தலைமைப் பதிப்பாசிரியராக இருக்கட்டும் என்றும், அது வரையில் நான் இணைப் பதிப்பாசிரியராக இருப்பதாகவும் அய்யாவிடம் தெரிவித்தேன் அவர் பெறுவதை விட ரூ. 50/= குறைவாக இருக்கலாம் எனவும் தெரிவித்தேன். இரண்டு திங்கள் அவர் அருகில் இருந்தால் சில வழிமுறைகளையும், அலுவலக மரபுகளையும் அறிந்து கொள்ள வாய்ப்பாக இருக்கும் எனவும் தெரிவித்தேன். அய்யா அவர்கள் எனது நேர்மைக்கும், பணிவுக்கும் பாராட்டு தெரிவித்தார்கள்.

பிப்பிரவரி 10 நாள் முதல் இணையாசிரியர் பணியையும் ஜூன், 1 திங்கள் முதல் தலைமைப் பதிப்பாசிரியர் பணியையும் ஒப்புக்கொண்டு பணியில் தீவிரமாக இறங்கினேன் என் மனநிலைக்கும் திறமைக்கும் உகந்த பணியாக இருந்தமையால் பணி மனநிறைவு (Job satisfaction) இருந்தது ஓய்வு ஊதியம் கூட இல்லாமல் சென்னைக்கு வரும் என் துணிவை வியந்து ஏழுமலையான்தான் எனக்கு இப்பணி கிடைக்கச் செய்தான் என நம்பி அவன் கருணையுள்ளத்தைப் போற்றுகின்றேன். நான் சிறிதும் முயலாமல் இந்தப் பணி எனக்கு வந்தது குறித்துச் சிந்திக்கும்போது,

வேண்டத்தக்க தறிவோர் நீ;
வேண்ட முழுதும் தருவோய்நீ;
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள் செய்தாய்;
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே[12]

என்ற மணிவாசகப் பெருமானின் மணிவாக்கு நெஞ்சில் எழுகின்றது.

**நினைவு - 7 :** பணியிலிருந்த போது (1978) ஒரு சமயம் - கோடை விடுமுறையில் என நினைக்கின்றேன். கோவையில் ஒரு வைணவ சங்க ஆண்டு விழாவில் பேச வாய்ப்பு வந்தது. "தோழி - தாய் - மகள்"[13] என்பது பற்றிப் பேசியதாக நினைவு. ஆழ்வார் பெருமக்கள் - குறிப்பாக நம்மாழ்வார் - தமிழர்களின் அகப்பொருள் தத்துவத்தை மெய்ப்பொருளியில் கையாண்ட பாங்கைப்பற்றி இம்மூன்று நிலைபற்றிய பாசுரங்களும் விளக்குகின்றன என்பதைத் தெளிவாக எடுத்துக் கூறிப் பேசினேன். பேச்சு முடிந்த மறுநாள் அய்யாவைப் பார்ப்பதற்காக முன்னறிவிப்புடன் வித்தியாலயம் சென்றேன். மிகவும் அன்பாக வரவேற்று உபசரித்தார். கலைக்களஞ்சியம் - இரண்டாவது பதிப்பைப் பற்றித்தான் அதிகமாக உரையாடினோம். ஒரு வெள்ளை வேட்டி சாமியார் உபசரித்த பாங்கு ஓர் இல்லத்தரசி உபசரிக்கும் பாங்கையும் விஞ்சும்படி இருந்தது

12 திருவா. குழைத்த பத்து - 6

13 இஃது ஆசாரிய ஹிருதயத்திலுள்ள ஒரு சூத்திரம் - 133
இதே தலைப்பில் வந்தவாசி வைணவ மாநாட்டிலும் (1993 - ஜூலை) பேசினேன் அந்தப் பொழிவை அப்படியே கட்டுரை வடிவமாக்கியுள்ளேன். (சமயம் வாய்க்கும் போது கட்டுரைத் தொகுப்பு நூல் ஒன்றில் இடம்பெறும்).

"ஒக்க உண்ட பாங்கு" - விசாரித்து உணவு வகைகளைச் சொல்லிச் சொல்லி உண்பித்த சிறப்பு சொல்லி முடியாது உணவிற்குப் பிறகு சில நிமிடங்கள் உரையாடிவிட்டுக் கோவை திரும்பினேன். கோவையில் என் மூத்த மகன் டாக்டர் இராமலிங்கத்தின் சட்டகர் திரு. நடராசன் (சரபாய் மருந்துக் கம்பெனி அலுவலர்) இல்லத்தில் தங்கியிருந்தேன் இவர் துணையால் கோவைக்கு அருகிலுள்ள மருதமலை முருகனைச் சேவித்து அவன் திருவருளைப் பெற்றேன்

**நினைவு - 8** : மூன்று திங்கள் இணைப் பதிப்பாசிரியராக இருந்த என்னை, ஜூலை 1 முதல் (1978) முதன்மை பதிப்பாசிரியராக நியமித்தனர். மிக உற்சாகமாகச் செயற்பட்டேன் சுமார் நாற்பது கோப்புகளுக்குமேல் சிறந்த துறைவல்லுநர்களிடம் தொடர்பு கொண்டேன் ஒவ்வொரு துறையிலும் கலைக் களஞ்சிய முதற் பதிப்பில் இருந்த துறைகளுக்குரிய பொருட்பட்டியலை அனுப்பி இரண்டாம் பதிப்பில் சேர்க்கப் படவேண்டிய சில தலைப்புகளைக் குறிப்பிட்டு எழுதுமாறும், எழுதக்கூடிய வல்லுநர்களில் ஆறு பெயர்களை முகவரியுடன் தருமாறும் கேட்டு எழுதினேன் அலுவலகத்திலுள்ள துணைப் பதிப்பாசிரியர்கள் உற்சாகத்துடன் செயற்பட்டனர். முதற்றொகுதி சனவரி (1980)க்குள் அச்சில் கொண்டுவர எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப் பெற்றன. ஏசியன் அச்சகம் (14, பீட்டர் சாலை, இராயப் பேட்டை, சென்னை - 14) அச்சு வேலையை முடித்துத் தருவதாக உறுதி கூறியது சுத்தமான (வேதியியல் பொருள் கலக்காமல்) மூங்கிலால் செய்யப் பெற்ற 1000 டன் தாள் தருமாறு கல்கத்தா தாள் கம்பெனியுடன் தொடர்பு கொள்ளப் பெற்றது. 18.9.97 இல் ஈரோட்டில் இரண்டாம் பதிப்பின் முதற்றொகுதியின் தொடக்க விழா கோலாகலமாக நடைபெற்றது. திரு தி சு அவினாசிலிங்கம் அவர்கள் தலைமையில் மாண்புமிகு முதலமைச்சர் எம் ஜி இராமச்சந்திரன் விழாவைத் தொடங்கி வைத்தார் மாண்புமிகு கல்வி அமைச்சர் அரங்கநாயகம் சிறப்புரை வழங்கினர் முதன்மைப் பதிப்பாசிரியராக இருந்த அடியேன் நன்றி நவின்றேன்.

**நினைவு - 9 :** இது சற்றுக் கசப்பான நினைவாக எழுகின்றது. தொடர்ந்து பெருமாள் என்பவர் கோள் சொல்லி யதனாலும், தொடர்ந்து கடிதங்கள் எழுதியதனாலும் அய்யாவின் மனம் மாறியது. 11.12.1978 கடிதத்தில் சில செய்திகளைச் தெரிவித்தார் மிக்க வருத்தத்துடன். நானும் மிகவும் வருந்தினேன். இதற்கு மேல் ஈண்டு விவரிக்க விரும்பவில்லை.[14] இது பின்னால் வரப்போகும் நிகழ்ச்சியொன்றுக்கு கொடியேற்றுவது போல் அமைந்தது.

**தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்**
**தீரா இடும்பை தரும்**[15]

என்ற "தெரிந்து தெளிதல்"பற்றிய வள்ளுவரின் வாக்கு அய்யாவின் நினைவிற்கு வரவில்லை போலும். திரு தூரன் தமிழ் வளர்ச்சிக் கழகச் செயலராக இருந்தபோது திரு. பெருமாள் என்பவர் துணைப் பதிப்பாசிரியர் பணியைத் தவிர அலுவலக மேலாளராகவும் பணியாற்றினர். அதனால் தூரனை மீறி அய்யாவுக்குக் கடிதம் போக வாய்ப்பில்லை. (இரகசியமாகப் போவதைத் தவிர). நான் முதன்மைப் பதிப்பாசியராக நியமனம் பெற்றபோது செயலாளர் பொறுப்பு எனக்குத் தரப்பெறவில்லை. நானறியாமல் பெருமாள் அய்யாவுக்கு எத்தனையோ கடிதங்கள் எழுதி அய்யாவின் உள்ளத்தைக் கெடுத்திருக்கலாம் என்பது துணைப் பதிப்பாசிரியர்கள் அனைவரின் ஊகம். இஃது தான் உண்மை என்பது பின்னர் எனக்கு உறுதிப்பட்டது.

**நினைவு - 10 :** கழகச் செயலராக இருந்த ரா. குழந்தைவேலு IAS அரசுச்செயலாள்ர் பதவியிலிருந்து ஓய்வு பெறும் கட்டம். அவரைக் கலைக் களஞ்சிய நிர்வாகத் தலைமைப் பதிப்பாசிரியராக நியமிக்க அய்யாவின் எண்ணம்; பிறரது எண்ணமாகவும் இருக்கலாம். ஆகவே நாள் குறிப்பிடப் பெறாமல் என்னுடைய பதவிக்காலம் 9.2.79 நாளுடன் முடிவு பெறுகிறதென்றும், முதன்மைப் பதிப்பாசிரியர் பொறுப்பைச் செயலர் ரா. குழந்தை வேலுவிடம்

---

14 விவரம் நினைவுக்குமிழிகள் - 5 என்ற நூலில் தெளிவாகத் தரப் பெற்றுள்ளது.

15 குறள். 510

தந்துவிடவேண்டும் என்றும் அய்யாவிடமிருந்து ஓர் ஆங்கிலக் கடிதம் வந்தது[15] அதனுடன் 29.1.79 நாளிட்ட தமிழ்க் கடிதம் ஒன்றும் வந்தது அதில் "தங்களை நியமித்த போது தங்களைத் தொடர்ந்து இப்பணி பூர்த்தியாகும் வரை நீங்கள் தொடர்ந்து இருக்க வேண்டும் என்று நினைத்து நியமனம் செய்யப்பட்டது. ஆனால் வேறுவிதமாக முடிந்தது பற்றி வருத்தந்தான் தங்கள் அநுபவத்தை வேறு விதமாகப் பயன்படுத்தி அதன்மூலம் தங்களுக்கும் கலைக்களஞ்சியப் பணிக்கும் பயன்படுமானால் மிகவும் சந்தோஷமாக இருக்கும். ஆண்டவன் வழிகாட்ட வேண்டும்" என்ற வாசகம் இருந்தது.

இதனை என் தோழ ஆசிரியர்கட்குத் தெரிவித்ததும் அவர்கள் வெகுண்டெழுந்து 31179 அன்று எல்லோரும் கையெழுத்திட்டுத் திரும்ப யோசிக்குமாறு வேண்டுகோள் கடிதம் அனுப்பினார்கள் நானும் அன்றே "நானறிந்த வரையில் தமிழ் வளர்ச்சிக் கழகம், நிர்வாகக் குழு, அய்யா என்ற வேறுபாடு இல்லை; எல்லாம் அத்வைத நிலையில் அய்யாதான். ஆகையால் புனராலோசனை செய்து முடிவை மாற்றிக் கொள்ள வேண்டுகின்றேன்" என்று எழுதினேன் அறிஞர்கள் பலர் இவ்வாறே எழுதினதாகக் கேள்வி. பலன் இராது என்று கருதி, ஐஸ்டிஸ் மகராசனைக் கலந்து ஆணையிலுள்ள தவறுதலைச் சுட்டிக்காட்டி "பழைய ஆணை 9.2.1979 இன்படி என் பதவி முடிகிறது என்பது தவறு; அதனை 3061979 என்று மாற்றிக் கொள்ள வேண்டியது" என்று முறையான ஆங்கிலக் கடிதம் (31179) எழுதி வாளா இருந்து விட்டேன்.

**நினைவு - 11 :** "பெருமாள் - பிச்சாண்டி நிர்வாகம்" தவறு என்பதை அய்யா உணர்ந்திருக்க வேண்டும். கண்மூடித் தனமாகக் கையெழுத்திட்டது தவறு என்பதையாவது நினைந்து பார்த்திருக்க

16. திரு பெருமாளும் கணககர் பிசசாண்டியும் தயாரித்த டிராப்ட் கடிதத்தில் அய்யா கண்மூடித்தனமாகக் கையெழுத்திட்டதால் விளைந்த நிலை இது. தமிழ்க் கடிதம் அய்யாவின் வாசகம் என்பது எனக்குப் புரிந்தது பெருந்தமையும் பண்பாடும் அதில் ஒளிர்ந்தமையால்

வேண்டும். 6.2.79 அன்று பல்கலைக் கழக மெரீனா வலகைத்திலுள்ள விருந்தினர் மாளிகையில் வந்து தங்கினார்கள் (அவர் அனுப்பின பயண அறிக்கையின்படி) 7ஆம் தேதி அன்று முதலில் வை.அ பொன்னையா அவர்களைக் கூப்பிட்டனுப்பினார்கள். அவர் திரும்பிய பிறகு என்னை வருமாறு பணித்தார்கள் 30.6 79 வரை நான் பணியில் இருக்கலாம் என்றும் அதன்பிறகு தொடர்ந்து நீடிக்கலாம் என்றும் கூறினார்கள். அக்கருத்தினை ஒப்புக்கொண்டு கலைக்களஞ்சிய அலுவலகத்தில் இரட்டையாட்சி நடை பெறுகின்றதென்றும், கோள் சொல்லும் பெருமாளை ஊழியர்கள் ஒருவரும் விரும்பவில்லையென்றம், ஒன்று பெருமாளை மேலாளர் பதவியிலிருந்து நீக்கி துணையாசிரியர் பணியுடன் நிறுத்த வேண்டும் என்றும், அஃதில்லையெனில் என்னை கழகத்தின் செயலாளராக (தூரன் இருந்தது போல்) பொறுப்பினைத் தரவேண்டும் என்றும், இரட்டையாட்சி கலைக் களஞ்சியப் பணிக்குக் கேடு விளைவிக்கும் என்றும், பெருமாள் தரும் தகவலுக்கு மதிப்பு தாராதிருக்க வேண்டும் என்றும் வற்புறுத்திக் கூறினேன் "இரட்டையாட்சி" என்று குறிப்பிட்டபோது அவர் முகக்குறிப்பினால் தவறுதலை உணர்ந்ததாகத் தெரிந்தது. அவர் சொன்னபடி 7ஆம் நாள் இட்ட கடிதம் வந்தது. 30.6.79 நாள் வரை பதவி நீடிக்கும் என்று குறிப்பிட்டு.

பொன்னையா என்னிடம் தம்மை 30.6.79க்குப் பிறகு முதன்மைப் பதிப்பாசிரியராக இருக்குமாறு தன்னைக் கேட்டார் என்றும், அவர் என் திறமைக்கும் அறிவு நிலைக்கும் அணுகுமுறைக்கும் தாம் முன் நிற்க முடியாததால் மறுத்து விட்டதாகவும் கூறினார்.

**நினைவு - 12 :** 1979 ல் மேகங்கள் மின்னாது இடித்தது போல், ஒரு நல்ல தேன் கூட்டத்தைக் கலைத்ததுபோல், கலைக் களஞ்சியப் பணி நிறுத்தப் பெற்றது என்றும், ஒரு மாத அறிவிப்பிற்குப் பதிலாக ஒரு மாத ஊதியம் காசோலை மூலம் அனுப்பப் பெறுகிறது என்றும் எனக்குப் பதிவு அஞ்சல் மூலம் கடிதம் வந்தது எல்லோருக்கும் இப்படியே அனுப்பப் பெற்றிருக்க வேண்டும் என ஊகித்துக் கொண்டேன். திருவேங்கடவன் ஒரு நல்ல

பெரியாரின் தலைமையில் ஒரு நற்பணியில் ஈடுபடுத்தினான் என்றும், அவனே இப்போது கழற்றிவிட்டான் என்றும் நினைத்துக் கொண்டேன் ஒருசில ஆண்டுகள் கலைக் களஞ்சியப் பணி தொடர்ந்திருக்குமானால், ஒரு பெரிய தமிழ்க் கருவூலம் தமிழன்னையில் திருவடியில் வைத்து அவள் ஆசி பெற்று மகிழ்ந்திருக்கக் கூடும் என்றும் ஒரு பெரியவரின் மனம் உகக்குமாறு பணியாற்றிப் பேரும் புகழும் பெற்றிருக்கக் கூடும் என்றும் கருத இடம் இருந்தது. இறையருள் அதற்கு துணைசெய்ய வில்லை.

**நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்**
**அல்லற் படுவ தெவன்**[17]

என்ற வள்ளுவர் வாய்மொழி எனக்கு உறுதுணையாக இருந்து மன அமைதியைக் கொடுத்தது. 10 ஆண்டுகள் கலைக் களஞ்சியப் பணி தொடர்ந்து நடைபெற்றிருக்குமானால் கலைக் களஞ்சியம் 12 தொகுதிகளும் வெளிவந்து இருக்கும். அய்யாவுக்கும் அடியேனுக்கும் ஊழியர்கட்கும் பேரும் புகழும் மனநிறைவும் கிட்டியிருக்கும். இதனை எழுதும்போது (29 4 93) அய்யா இல்லை.

**நெருநல் உளன்என ஒருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை உடைத்துஇவ் வுலகு**[18]

*பிறப்பு : 8.5.1909* *சிவப்பேறு : 21.11.91*

**பிற்குறிப்பு** : கலைக்களஞ்சியப் பணி நின்றதற்கு என் மனத்திற்குப் படும் காரணங்கள் :

(1) நிர்வாக அமைப்பில் நல்லமுறை இல்லை. திரு. பெ. தூரன் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் செயலராகவும் கலைக் களஞ்சியத் தலைமைப் பதிப்பாசிரியராகவும் இருந்தார். அலுவலக நிர்வாகப் பொறுப்பு அவரிடம் இருந்தது.

---

17 குறள். 379

18 மேலது 336

(2) நான் கலைக்களஞ்சியத் தலைமைப் பதிப்பாசிரியர் பொறுப்பில் இருந்தபோது அலுவலகப் பொறுப்பு என்னிடம் இல்லை

(3) இரட்டை ஆட்சி நடைபெற்றது திரு பெருமாள் என்பவர் வித்தியாலயத்திலிருந்து அனுப்பப்பட்டவர். அலுவலக மேலாளர்; திரு. பிச்சாண்டி என்பவர் கணக்கர் திரு. வச்சிரவேலு என்பவர் தட்டச்சு செய்பவர். திரு. பெருமாள் என்கீழ் துணைப் பதிப்பாசிரியராகவும் இருந்தார். இவருக்குத் தமிழ் தெரியாது. ஆங்கிலமும் சுமார்; இங்கிதமே தெரியாத அபூர்வ மனிதர். இவரிடம் கோள் சொல்லும் பண்பையும், புறங்கூறும் தன்மையையும், எந்தவித ஆற்றலின்மையையும் கண்ட பிற ஊழியர்கள் இவரை அடியோடு வெறுத்தனர்.

**கோட்செவிக் குறளை**
**காற்றுடன் நெருப்பு**[19]

என்ற ஔவைப் பாட்டியின் வாக்கை நினைத்துக் கொண்டேன். வாரந்தோறும் அய்யா அவர்கட்கு "வீண் புகார் கடிதங்கள்" எழுதி வருபவர் என்று கருத்துக் கொண்டிருந்தனர். "அலுவலகப் பிடிப்பு" தமக்கு இருந்த மாயத் தோற்றத்தினால் எவரையும் இவர் மதிப்பதில்லை.

(4) இவரது புகார் கடிதங்களின் பலனாக அடியேனது பணி "ஐயக் கண்ணுடன்" நோக்கப்பட்டது. இதனை நன்கு அறிந்தும் அய்யாவின்மீது கொண்டிருந்த மதிப்பு, மரியாதை இவற்றின் காரணமாக வாளா இருந்து விட்டேன்.

(5) கலைக்களஞ்சியப் பணி எனக்கு இல்லாமல் செய்த ஏழுமலையான் வேறு தெய்வப் பணியை எனக்கு நல்கியுள்ளான். இதுகாறும் (களஞ்சியப் பணி துறந்த பிறகு) 52 நூல்களை வெளியிட்டு தமிழ்ப்பணி புரிவதற்கு

19 கொன்றை வேந்தன் - 24

வாய்ப்பும், அதற்கு ஏற்ற உடல்நிலையையும் பொருளுதவியையும் அருளி வருகின்றான். "என் கடன் பணிசெய்து கிடப்பதே"

(6) நிரந்தரமான பழைய துணையாசிரியர்கள், பிழை திருத்துபவர் ஆகியவர்கள் மூவர் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின்மீது வழக்கு தொடுத்தனர் ஒன்றிரண்டு ஆண்டுகள் வழக்கு இழுபறியாகக் கிடந்து பிறகு ரூ. 18,000/= நட்டஈடு தருமாறு முடிவு ஏற்பட்டதாகக் கேள்வி. நான் என் வழியில் சென்றதால் எதையும் உசாவி அறிவதில்லை. இவர்களில் திரு சிறுவை மோகன சுந்தரம் மட்டிலும் இன்று இல்லை. சில ஆண்டுகட்கு முன்னர் திருநாடு அலங்கரித்துவிட்டார் ஏனையோர்பற்றி அறியக்கூடவில்லை. திரு. வச்சிரவேலு மட்டிலும் தட்டச்சராக இன்றும் இருந்து வருகின்றார் திரு. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் சில பணிகள் நடைபெற்றுவருகின்றன.

# 9

# தாமரைச் செல்வர் டாக்டர் நெ.து. சுந்தர வடிவேலு

பயிர்போன்றார் உழவருக்குப்
பால் போன்றார் குழந்தைகட்குப்
பசும்பால் கட்டித்
தயிர்போன்றார் பசித்தவர்க்குத்!
தாய்போன்றார் ஏழையர்க்குத்
தகுந்த வர்க்குச்
செயிர்தீர்ந்த தவம்போன்றார்,
செந்தமிழ்நாட் டிற்பிறந்த
மக்க ளெல்லாம்
உயிர்போன்றார் இங்குவந்தார்
யாம்கொண்ட மகிழ்ச்சிக்கோர்
உவமை உண்டோ?[1]

என்ற பாடலுடன் சுந்தரவடிவேலுபற்றி என் நீங்காத நினைவுகள் தொடங்குகின்றன இது தந்தை பெரியாருக்குப் பாவேந்த பாரதிதாசன் சூட்டிய பாமாலை. ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு மலர்; ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு மாலை என்பது அறியப்படும். இவை தவிர, மக்களின் "புகழ்சொல் மாலை" எண்ணற்றவை. மூடப் பழக்கங்கள், சாதி வேற்றுமை, தீண்டாமைப் போக்கு முதலிய வேண்டாத சமூகநோய் கணிசமாய்க் குறைந்தமைக்கு இந்தப்

---

1 நாள் மலர்கள் - பக். 88

பெருமானின் அவதாரமே காரணம் என்று சொல்லுவது எள்ளளவும் மிகை படக் கூறுவதாகாது.

**சீடர்கள்** : தந்தை பெரியாருக்கு எண்ணற்ற சீடர்கள் - கற்றவர்கள், கல்லாதவர்கள், பொதுமக்கள் என்ற வகையினர். இவர்கள். இருபதாம் நூற்றாண்டடில் சமூக அமைப்பில் பல மாற்றங்கட்குத் தந்தை பெரியாரும், தேசத் தந்தை மகாத்மா காந்தியும் ஆவார்கள் என்று கூறுவதில் கருத்து வேற்றுமை இருக்க முடியாது. இவர்களின் தொண்டை மதிப்பிட்டுக் கூறும் பாவேந்தரின் மொன்மொழிகள் ஈண்டுச் சிந்திக்கத் தக்கவை.

**பெரியாரைப் பற்றியது :**

**மக்கள் நிகர்எனும் மாத்தமிழ் நாட்டில்**
**மக்களில் வேற்றுமை வாய்க்கவும் ஆனதே!**
**உயர்ந்தவன் நான்என் றுரைத்தனன் பார்ப்பான்**
**அயர்ந்தனன் நான்என் றுரைத்தனன் தமிழன்**
**இப்படி ஒருநிலை காணுகின் றோமே?**
**இப்படி ஏங்குண் டிந்த உலகில்?**
**. . . . . . . . . . . . . . . . . . . . . . . . .**
**இழிநிலை நோக்கி இறங்குந் தோறும்**
**பழிநீக் கிடஎவன் பறந்தான் இதுவரை?**

**இதுவரை எந்தத் தமிழன் இதற்கெல்லாம்**
**பரிந்துபோ ராடினான்? எண்ணிப் பார்ப்பீர்**
**தமிழ்மனம் தவிடுபொடி ஆகையில்**
**வாழாது வாழ்ந்தவன் வடுசுமந்து சாகையில்**
**"ஆ"என்று துள்ளி மார்பு தட்டிச்**
**"சாவொன்று வாழ்வொன்று பார்ப்பேன்! என்று**
**பார்ப்பனக் கோட்டையை நோக்கியே**
**அருஞ்செயல் செய்வார் அல்லால்**
**பெரியார் எவர்?நம் பெரியார் வாழ்கவே![2]**

2 வேங்கையே எழுக - பக். 48-49

இன்னும்,

மக்கள் நெஞ்சில் மலிவுப் பதிப்பு
வஞ்ச கர்க்கோர் கொடிய நெருப்பு
மிக்க பண்பின் குடியி ருப்பு
விடுத லைப்பெரும் படையின் தொகுப்பு
. . . . . . . . . . . . . . . . . . . . . . . .
கல்லா ருக்கும் கலைவி ருந்து
கற்ற வர்க்கும் வண்ணச் சிந்து

தொண்டு செய்து பழுத்த பழம்
தூய தாடி மார்பில் விழும்
மண்டைச் சுரப்பை உலகு தொழும்
மனக்கு கையில் சிறுத்தை எழும்

தமிழர் தவம்கொ டுத்த நன்கொடை
தன்மானம் பாயும் தலைமேடை[3]
. . . . . . . . . . . . . . . . . . . . . . . .

என்று கூறுவதைக் காணலாம்.

**காந்தியடிகளைப் பற்றிக் கூறுவது :**

. . . . . . . . . . . . . . . . . . . . . . . .
துயர்நீக்கும் விடுத லைப்போர்
தொடங்கிட வேண்டி நாட்டை
நயமுற அழைத்தார் அன்றே;
நாற்பது கோடி மக்கள்
புயலெனக் கிளம்பக் கண்டோம்;
தனித்ததோர் புலமை கண்டோம்.[4]

என்று காட்டுவார்.

---

3 புகழ் மலர்கள் - பக். 50

4 மேலது - பக். 47

இத்தகைய பெரியார் இருவர்பாலும் மிக்க ஈடுபாடு கொண்டார் சுந்தரவடிவேலும் ஆனால் அணுக்கத் தொண்டராகத் திகழ்ந்தார் தந்தை பெரியாரிடம்.

நடுத்தர வகுப்பு மேட்டுக்குடியில் பிறந்தவர் செங்கற்பட்டு மாவட்டம் நெய்யாடிவாக்கத்தில் அக்டோபர் 12, 1912இல்[5] பிறந்த குடியில் அவருக்கு ஈடுபாடு இல்லை. சாதியற்ற பேருலகில் வாழவிரும்பியது அவரது பரந்த திருவுள்ளம். தம் சாதியைச் சார்ந்த பெண்ணைக்கூட திருமணம் செய்து கொள்ள விரும்பிற்றிலது அத்திருவுள்ளம்.

அடியேனுக்கு இளமையில் நல்லாசிரியர்கள் அமைந்தது போல் இவருக்கும் நல்லாசிரியர்கள் அமைந்தமையால் கல்வியில் சிறப்பாகத் திகழ்ந்ததுபோல் பண்பாடு, ஒழுக்கம், யாரிடமும் சகோதர மனப்பான்மை, எழை எளியவர்கள்பால் பாச-நேசம் முதலியவையும் இவர் உள்ளத்தில் ஆழப்பதிந்தமையால் இவர் பிற்காலத்தில் வகித்த பதவிகலெல்லாம் இவரை அவை நேர்மையில் கொண்டு செலுத்தின. இவர் வகித்தமையால் பதவிகட்கும் புகழும் ஏற்பட்டது.

இடைநிலை வகுப்பில் கணிதம் இயற்பியல், வேதியியல் விருப்பப் பாடங்களாக எடுத்துப் படித்து முதல் வகுப்பில் தேர்ச்சியடைந்தாலும், பொறியியல் துறைக்குப் போக இவர்தம் உள்ளம் விரும்பிற்றிலது. பொருளியல் பி.ஏ. (சிறப்பு) பட்டத்திற்காக இவர் மாநிலக் கல்லூரியில் இடம் பிடிக்கப் பட்டபாடும், விக்டோரியா உணவு விடுதியில் சேர்வதற்குப் பட்டபாடும் காவியத்தில் இடம்பெறத்தக்கவை 1939இல் B.A. (Hons) பட்டம் பெற்றார். ஏதோ ஓரளவு பிண்ணனி இருந்தமையால் பல இடர்ப்பாடுகளைத் தாண்டி வெற்றி பெற முடிந்தது.

வேலை தேடும் படலமும் காவியத்தில் இடம் பெற்றத் தக்கது. "தமிழ் நாடு" இதழில் உதவியாசிரியராக ரூ. 35/= மாத ஊதியத்தில் சில ஆண்டுகள் பணியாற்றினார் இதழின் பொருளாதார

5 3 ஆண்டு 10 திங்கள் 15 நாள் என்னை விட மூத்தவர்.

நெருக்கடியால் பதவி இழப்பு நேரிடுகின்றது பல்வேறு சாணக்கியத்திற்குப் பிறகு நல்லோர் உதவியால் உதவிப் பஞ்சாயத்து அலுவலர் ஆகின்றார். மாத ஊதியம் ரூ 75/= இப்பதவிகாலத்தில் விடுப்பு எடுத்துக் கொண்டு சைதை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் (1939) சேர்ந்து பயின்று எல்.டி. பட்டம் பெறுகின்றார்[6]

தொடக்க காலத்திலிருந்து இவர்தம் மனம் கல்வித்துறையில் அவாவி நின்றதால் எல்.டி. பட்டத்தின் கனத்தால் கல்வித்துறை உதவி ஆய்வாளராகத் (Deputy Inspector of Schools) தேர்ந்தெடுக்கப் பெறுகின்றார் இப்பதவிக் காலத்தில் அரசு விதித்த தேர்வுகளிலெல்லாம் (Departmental tests) தேர்ச்சி அடைகின்றார். இதனால் மாவட்டக்கல்வி அலுவலராக (District Educational Officer) தேர்ந்தெடுக்கப் பெறுகின்றார். இவரது நெடுநாளைய ஆசை நிறைவேறுகின்றது. இக்காலத்தில் காந்தம் அம்மையாரைக் கலப்பு மணம் புரிந்து கொள்ளுகின்றார் பதிவுத் திருமணம் மூலம். இவர்தம் துணைவியார் B.Sc (Hons), M.Sc பட்டம் பெற்றவர். அம்மையாரும் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்து பயின்று எல்.டி. பட்டம் பெறுகின்றார். சில நாட்களில் அவருக்கும் ஆசிரியை பதவி மகளிர் பள்ளியில் கிடைக்கின்றது. மனம் போன்ற மாங்கல்யம் என்று இருவரும் இனிய இல்லற வாழ்வில் புகுகின்றனர்.

நாளடைவில் அவருடைய திறமை நேர்மையின் காரணமாக சென்னை மாநகராட்சிக் கல்வி அதிகாரி, பொதுக் கல்வி உதவி இயக்குநர், இயக்குநர், உயர் கல்லூரிக் கல்வி இயக்குநர், நடுவண் அரசின் இணைக்கல்வி ஆலோசகர், சென்னைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் என்ற பதவிகள் இவரை வந்தடைகின்றன. அனைத்தலும் நற்பெயர் எடுத்து நானிலம் புகழ நிறைவாழ்வு வாழ்ந்தார்; இந்த வாழ்வில் எண்ணற்றவர்கட்கு நியாயப்படி உதவிகள் செய்து அவர்களின் பாராட்டுதலையும் வாழ்த்தையும் பெறுகின்றார். இந்த நல்லோரிடம் என்னுடைய தொடர்புகள் நீங்காத நினைவுகளாகப் பதிவு பெறுகின்றன.

---

6 அதே கல்லூரியில் பயின்று 1941 இல் நானும் எல்.டி. பட்டம் பெறுகின்றேன்.

**நினைவு - 1** : 1941-50 வரை நான் தோற்றுவித்த துறையூர் ஜமீந்தார் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியராகப் பணியாற்றிய காலம் 1945க்குப் பிறகு நாமக்கல் கழக உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியராகப் பணியாற்றிய திரு. P.R. சுப்பிரமணியத்தின் நட்பு கிடைத்தது. இவர் திருநெல்வேலி சைவப்பிள்ளைமார் குலத்தைச் சேர்ந்தவர். இவர் ஆத்தூர் கழக உயர்நிலைப் பள்ளியிலிருந்து மாற்றப்பட்டு நாமக்கல் பள்ளிக்கு வந்தவர். அக்காலத்தில் திரு. சுந்தரவடிவேலு சேலம் மாவட்டக் கல்வி அதிகாரியாகப் பணிபுரிந்து வந்தார். திரு. சுப்பிரமணியப் பிள்ளையும் நேர்மையாகவும் திறமையாகவும் பணியாற்றி வந்த உத்தமர் ஆகவே இருவரிடையே ஏற்பட்ட நட்பு முதிர்ந்து வளர்ந்தது.

அக்காலத்தில் அடியேனும் மனச்சான்றுடன் திறமையாகவும் நேர்மையாகவும் பணியாற்றுபவன் என்ற நற்பெயர் எடுத்தவன் இதனால் திரு. சுப்பிரமணியத்திடம் எற்பட்ட என் நட்பு இருநிலம் பிளக்க வேர் வீழ்த்தது. எனக்குத் திருச்சி மாவட்டக் கல்வியதிகாரி திரு. சாம்பசிவம் பிள்ளையின் நட்பு கிடைத்தது இறைவனது திருக்குறிப்பாகும். எங்கள் நட்பும் நன்கு வளர்ந்து உரமாயிற்று. நான் சாம்பசிவம் பிள்ளையின் திருக்குணங்களைப் பெருமையாகப் பேசும் போதெல்லாம் திரு. சுந்தர வடிவேலுவின் அருங்குணங்களைப் பெருமையுடன் எடுத்துக் கூறி மகிழ்வார் திரு. சுப்பிரமணியம். என்னையறியாமல் திரு சுந்தரவேலுவிடம் ஈடுபற்றேன்.

> **புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்**
> **நட்பாம் கிழமை தரும்**[7]

என்ற குறள்மணி அடிக்கடி நினைவில் எழும். நான் துறையூரி லிருந்த வரை திரு. சுந்தரவடிவேலுவை நேரில் சந்தித்துப் பேசும் - பழகும் வாய்ப்பினைப் பெறவில்லை.

**நினைவு - 2** : 1950-ஆம் ஆண்டு ஜூலை 5-ஆம் நாள் காரைக்குடி அழகப்பர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அழைப்பின்

7 குறள். 785

பேரில் துறையூர் பணியைத் துறந்து கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியனாகப் பணியில் அமரும் பேறு கிட்டுகின்றது குன்றக்குடி அடிகளாரின் அருள் தொடர்பும் ஏற்படுகின்றது. அடிக்கடிக் குன்றக்குடி போய்வரும் வாய்ப்புகள் நேரிடுகின்றன. அடிகளாருக்கும், தந்தை பெரியாருக்கும் நல்ல தொடர்பு. இக்காலத்தில் திரு. சுந்தரவடிவேலு பொதுக்கல்வி இயக்குநராகப் பதவியில் உயர்ந்திருந்தார்.

என் உயர்நிலைப் பணிக்காலத்தில் தொடர்புள்ள பொதுக் கல்வி இயக்குநர்கள் R.M. ஸ்ட்ராத்தம் துரை (வெள்ளையர்) திருமதி O.C. சீநிவாசன், திரு. D. சதாசிவரெட்டி ஆகியோர். இவர்கள் பெரும்பாலும் ''மூலவர்''போல் அலுவலகத்தில் முடங்கிக் கிடப்பவர்கள் உலகோரிடம் - பள்ளி கல்லூரி ஆசிரியர்களிடம் - அதிகம் பழகாமல் தன் முனைப்புடன் திகழ்ந்தவர்கள். திரு. சுந்தரவடிவேலு அவர்கள். திரு. இராஜாஜி முதல் அமைச்சராக இருந்த காலத்தில் தந்தை பெரியார் பரிந்துரையால் பொதுக் கல்வி இயக்குநராக உயர்ந்தவர்கள்; தம் பதவிக்காலத்தில் தமக்கு முன்னிருந்தவர்களைப்போல் "மூலவர்களாக" முடங்கிக் கிடந்ததற்கு மாறாக "உற்சவர்"போல் நாடு நகரம் எல்லாம் வலம் வந்து பள்ளி கல்லூரிகளின் நிலைமை, மக்களின் நிலைமை, ஏழை எளியவர்களின் வாழ்க்கை நிலைமை முதலியவற்றை நன்கு அறிந்து தெளிந்தவர். இவற்றால் தம் பணியின் பொறுப்பை நினைந்து, உணர்ந்து, சிந்தித்துக் கடமைகளை ஆற்றுவதற்கு வாய்ப்புகள் கிடைத்தன. இந்த நிலையில்தான் திரு சுந்தரவடிவேலு குன்றக்குடி வந்திருந்தபொழுது அடிகளார் முன்னிலையில் (1953) அறிமுகம் ஆனேன். பழைய நினைவுகள் படலம் படலமாகத் தோன்றின. திரு. சுப்பிரமணியத்தின்[8] பெருமையைப்பற்றிய பேச்சுகளும் இடையிடையே எழுந்தன. திரு. சுப்பிரமணியத்தின் நேர்மை, துணிவு, திறமை, முதலியவற்றை நினைவு கூர்ந்து மகிழ்ந்தோம்

8. இவர் 1953இல் இராசிபுரத்தில் கழக உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியராகப் பணியாற்றியபொழுது அகால மரணம் அடைந்தார்.

**நினைவு - 3** : 1955இல் இராஜாஜியின் அமைச்சரவை மாறியது. இது வேண்டும்போது காலைப் பிடித்து வேண்டாத போது காலை வாரிவிடுவது போன்ற நிலையாக இருந்தது. கட்சி அரசியலில் தோன்றும் எத்தனையோ கயமைத் தனங்களில் இஃதும் ஒரு வகை. நன்றிகெட்ட நிலைமைகளை அரசியல்வாதிகளிடம் அதிகமாகக் காணலாம். மக்கள் மனத்தைக் கொள்ளை கொண்ட காமராசர் தலைமையில் அமைச்சரவை அமைந்தது. திரு. சி. சுப்பிரமணியம் கல்வி - நிதியமைச்சராகப் பணியாற்றியகாலம். இராஜாஜியின் யோசனையின்பேரில் இவர் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டு தம் பக்கம் 43 சட்டசபை உறுப்பினர்கள் இருப்பதாக மெய்ப்பித்தமையால் இவருக்கு அமைச்சரவையில் இடம் கிட்டியது என்பதாக அக்காலத்தில் பேச்சு அடிபட்டது. எதிர்த்து நில்லாதிருப்பாரேயானால் இவர் இன்றிருக்கும் நிலையை எட்டிப் பிடித்திருக்க முடியாது என்பது என் கணிப்பு. காமராசர் காலத்தில் தந்தை பெரியாரின் ஆசி சுந்தரவடிவேலுக்கு நிறைய இருந்தமையாலும், நல்ல காரியங்களுக்குத் திரு. சி. சுப்பிரமணியம் குறுக்கே தடைக்கல்லாக நிற்கும் இயல்பு அற்றவராக இருந்தமையாலும், கல்வித்துறையில் திரு. சுந்தரவடிவேலுக்கு அதிகச் சுதந்திரம் இருந்தது. காமராசரும் திரு. சுப்பிரமணியமும் இயல்பாகவே ஏழைபங்காளர்கள். இதனால் திரு. சுந்தரவடிவேலு அவர்களின் செயற்பாட்டிற்குத் தடையாக இருக்கவில்லை; மாறாக ஊக்குவித்து ஆதரவு அளித்தனர். திரு. சுந்தரவடிவேலு அவர்களின் மதிய உணவு, சீருடைத் திட்டங்களை நாடாளுமன்றமும் பாராட்டிப் பேசியது. நூற்றுக்குத் தொண்ணூறுக்குமேல் இலவசக் கல்வி பெற்றிருந்த நிலையைக் கருதினார் காமராசர். மீதி நூற்றுக்குப் பத்துப் பேர்களின் சாதிகள் முற்போக்குச் சாதியின் பட்டியலில் இருந்தமையால், அவர்கள் பரம ஏழையாயிருப்பினும், அவர்கட்கு எந்தவிதச் சலுகையும் இல்லாதிருந்தது. இந்நிலை காமராசர் கவனத்திற்கு வந்தது; சிந்தித்தார், சிந்தித்தார். நிதி நிலைமையையும் சிந்தித்தார். ஆராய்ந்தார். ஏதோ ஒரு மூலையில் தொடுபடாத நிதிப்பகுதி இருப்பதைக் கண்டார். உடனே எல்லோருக்கும் இலவசக் கல்வி என்று அறிக்கை

வெளியிட்டுத் தாம் உண்மையிலேயே ஏழை பங்காளர் என்பதை மக்கள் அறியச் செய்தார். இது நடைபெற்றது 1962இல் என்பதாக நினைவு.

நான் திருப்பதியில் பணியாற்றிக் கொண்டிருந்த காலமும் அது. தமிழகத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளை அதிகமாகக் கவனிப்பது என் வழக்கம். தவிர, அறிவியலில் ஆழங்கால் பட்டு விண்வெளிப் பயணம், குடிவழி, கால்வழி, தொலைக்காட்சி, வானொலி முதலி யவற்றைப்பற்றி நன்கு பயின்று கொண்டிருந்த காலம். காமராஜர் "இலவசக் கல்வி எல்லோருக்கும்" (உயர் நிலைப்பள்ளி வரை) என்ற அறிவிப்பு வந்தபோது **"இளைஞர் வானொலி"** (கழகம்) அச்சாகி வெளிவரும் நேரமாக இருந்தது. (1962). அதனை,

**பயிர்காக்கும் உழவரென உயிர்கள் காக்கும்**
**பான்மையிலே முதலமைச்சர்; வறியர் தாமும்**
**மயல்போக்கும் கல்வியினால் மேன்மை பெற்று**
**வாழ்வுபெற வழியமைத்தேன்; பார தத்தை**
**உயர்வாக்க உழைப்பதிலே முதன்மைத் தொண்டர்;**
**ஒருநலமும் தாம்நாடா காம ராசர்;**
**பெயர்வாழ்த்தி அவர்பிறந்த நன்னாள் வாழ்த்திப்**
**பெரிதுவந்து படைக்கின்றேன் இந்த நூலை.**

என்ற பாடலால் அன்புப் படையலாக்கி மகிழ்ந்தேன். அந்த நூல் அவர்தம் ஒளிப்படம் தாங்கிய நிலையில் தமிழகத்தில் வலம் வந்து கொண்டுள்ளது; இதுகாறும் பல பதிப்புகள் வெளிவந்து விட்டன. 40க்கு மேல் விளக்கப் படங்கள் கொண்ட நூல் அது.

அடுத்த ஆண்டு **"அதிசய மின்னணு"** (Electronics for the Young) என்ற நூல் பல்வேறு விளக்கப் படங்களுடன் வெளிவரும் தருணம் (1963). அந்த நேரத்தில் சுந்தரவடிவேலுவின் மதிய உணவுத் திட்டமும் சீருடைத் திட்டமும் நாடாளுமன்றத்தில் புகழப்பட்டன. அதனை நினைவுகூறும் வகையில்,

**நற்றவ வடிவாம் வள்ளுவன் கம்பன்**
**நல்லிளங் கோவுயர் கபிலன்**

கொற்றமார் கீரன் பாரதி தங்கிக்
குலவிய செந்தமிழ்த் தாயின்
பற்றுறு வயிற்றில் திருவோடு தங்கிப்
பண்பொடு தோன்றிய செல்வர்;
கற்றவர்க் கினியர்; சுந்தர வடிவேல்
கண்ணியர்க் குரியதிந் நூலே.

என்ற பாடல்மூலம் இந்தநூலை அன்புப் படையலாக்கி மகிழ்ந்தேன். இதுவும் கழக வெளியீடாக வந்து பல பதிப்புகளைக் கண்டு புகழ் பெற்றிலங்குகின்றது.

**நினைவு - 4** : தேர்வுகளில் ஊழல் மலிந்த காலம் இது நான் பள்ளியில் படித்த காலத்திலேயே (1930-34) இந்த ஊழல் வாமனன் நிலையிலிருந்து படிப்படியாக வளர்ந்து இன்று திரிவிக்கிரமன் நிலைக்கு வளர்ந்துள்ளது. பணத்தாசை பிடித்த இன்றைய சமூகத்தில் பணத்தின் திருவிளையாடலால், விடைத்தாள்கள் திருத்துவோர், பல்கலைக்கழக அலுவலகத்தில் மதிப்பெண்களைப் பதிவோர் பேயாட்டம் ஆடுகின்றனர். தேர்வு மண்டபத்தில் நடைபெறும் தில்லுமுல்லுகளைச் சொல்லி முடியா. ஒரு கல்லூரியில் உண்டிப் பெட்டி வைத்திருந்ததாகவும், தேர்வு எழுதுவோர் அவரவர் தம் பொருளாதார நிலைக்கேற்பப் பணம் அதில் போடலாம் என்ற ஏற்பாடுகள் இருந்ததாகவும், மாணவர்கள் புத்தகங்கள் குறிப்பேடுகள் இவற்றை வைத்துக்கொண்டு பார்த்தெழுதலாம் என்றும், அன்றாடம் சேரும் தொகைகளைக் கல்லூரி முதல்வரும் தேர்வுமண்டப மேற்பார்வையாளர்களும் பகிர்ந்து கொள்ளுகின்றார்கள் என்றும் ஒரு வரலாற்றைக் கேட்டதுண்டு. இன்னும் ஒரு கொடுமையான செயலும் நடைபெறுவதாகவும் கேட்டதுண்டு. பிற்பகலில் நடைபெறும் தேர்வுக்குரிய விடையேடுகள் அஞ்சலில் சேராமல் நிறுத்தி வைக்கப் பெறும். ரூ. 500/= செலுத்துவோர் புதிய விடைத்தாளில் இரவில் சரியான விடைகள் எழுதி அந்த ஏட்டை முன்னர்ப் பகலில் மண்டபத்தில் எழுதிய விடையேட்டை நீக்கி அந்த இடத்தில் இதனைச் செருகும் ஏற்பாடும் இருப்பதாகவும் வரலாறு உண்டு

என் மகன் திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் 1966-69இல் பி.எஸ் சி வகுப்பில் கணிதம், இயற்பியல், வேதியியல் பாடங்களை எடுத்துப் படித்தான். முதல் இரண்டாண்டுகளில் மொழிப் பாடங்களின் தேர்வுகள் முடிந்து விடும். விருப்பப் பாடங்களின் தேர்வுகள் மூன்றாவது ஆண்டுகள் நடைபெறும். ஒவ்வொரு பாடங்கட்கும் மும்மூன்று தாள்கள் உண்டு; அறிவியல் பாடங்கட்குச் செய்முறைத் தேர்வுகள் உண்டு. ஆனால் புதிய முறைப்படி ஒவ்வொரு ஆண்டும் தேர்வுகள் நடைபெறும். விருப்பப் பாடங்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு தாள்கள்; முதல் இரண்டு ஆண்டுகளில் ஒவ்வொரு தாளும் மூன்றாம் ஆண்டு ஒவ்வொரு பாடங்களிலும் இரண்டு தாள்கள் வீதமும் நடைபெறும். ஒவ்வொரு தாளிலும் 30 மதிப்பெண்களுக்குக் குறையக் கூடாது; மொத்தம் நான்கு தாள்களிலும் 160 மதிப்பெண்கள் இருக்க வேண்டும் என்பது விதி. மூன்றாம் ஆண்டு வேதியியலில் ஒரு தாளில் 29 மதிப்பெண் வழங்கினார் ஒரு தேர்வாளர்; இன்னும் ஒரு மதிப்பெண் வழங்கியிருந்தால் முதல் வகுப்பில் முதலாவதாகத் தேறியிருப்பான். கணிதத் தாள்கள் நாலிலும் 100% அறிவியல் தாள்கள் அனைத்திலும் 100க்கு எண்பதுக்கு மேல்.

இந்தத் தேர்வாளருக்கு செய்முறைத் தேர்வுகட்குப் பல கல்லூரிகட்குப் போய், வரும் பணியுடன் 153 விடைத்தாள்கள் திருத்தும் பணியும் இருந்தது. இவற்றைக் குறிப்பிட்ட காலத்தில் மதிப்பீடு செய்ய வில்லையாதலால் பல்கலைக் கழகம் பல கடிதங்கள் எழுதியது; தந்தியும் அடித்தது. அதனால் இந்தத் தேர்வாளர் "அவசர கோலத்தில் அள்ளித் தெளித்த மாதிரி" கவனமின்றி விரைவாக மதிப்பிட்டு 153 பேர்களின் தாள்களைக் கெடுத்தார். இவர்களில் ஒருவன் என் மகன். இந்தத் தாளை மட்டிலும் எழுதித் தேர்வு பெற்றால் வகுப்பு வரையறுப்பதில்லை. பொதுவாக வெற்றி என்றுதான் சான்றிதழ் இருக்கும் விதிப்படி மறு மதிப்பீடு இல்லை; மதிப்பெண்களைக் கூட்டிப் பார்க்கும் உரிமைதான் உண்டு. நான் வேதியியல் படித்தவன்; என் மதிப்பீடு 53%. அன்று பதிவாளராக இருந்தவர் ஒரு வேதியியல் பேராசிரியர். என் வேண்டுகோள் அவர் மதிப்பிட்டதில் 56% வழங்கினார்.

இதனால் என் மகனுக்கு திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் எம்எஸ்சிக்கு இடம் மறுக்கப் பெற்றது. பெங்களூர் முதலான இடங்களிலும் நிலை இதுதான். நிலையை விளக்கி சுந்தர வடிவேலுவைக் கேட்டதில் அவர் கோவை பூ சா.கோ. கல்லூரியில் இடம் கிடைக்கச் செய்தார். சென்னை அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரியில் இயற்பியல் முதுகலைப் பட்டையத்திற்குப் பயிலும் போது (ஓராண்டுப் படிப்பு) மாதம் ரூ. 250/= வீதம் பத்து மாதத்திற்கு படிப்பூதியமும் கிடைக்கச் செய்தார்.

இங்ஙனம் பிரச்சினைகளைக் கூர்ந்து ஆய்ந்து நூற்றுக்கணக்கான மாணவர்கட்கு உதவிய பெருமை திரு சுந்தர வடிவேலுக்கு உண்டு. அக்காலத்தில் மாணவர் உலகமே இவரை வாழ்த்தியது.

**நினைவு - 5 :** திரு. சுந்தர வடிவேலு ஆறாண்டுகள் சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தராக இருந்த காலம் பொற்காலம். எல்லாத் துறைகளிலும் கருத்தரங்குகள் நடைபெற்றன எங்கும் "தூங்கு மூஞ்சிகள்" துறைத் தலைவராக இருக்கும்போது நடைமுறைச் செயல்களைத் தவிர புதியனவாக ஒன்றும் நடைபெறுவதில்லை. பயணப்படி கிடைத்தால் வெளியே சுற்றுவதற்கு எவரும் தயாராக இருப்பர் என்பது எங்கும் காணப்பெறும் அதிசயம்!

திருப்பதியில் பெரும்பாலான துறைகளில் நான் கண்ட உண்மை. சென்னைப் பல்கலைக் கழகத்தில் 1972இல் முதன்முதலாக முதல் பத்துநாள் பொதுநிலைக் கருத்தரங்கும், 1973இல் இரண்டாவது பத்துநாள் பொதுநிலைக் கருத்தரங்கும் நடைபெற்றன தமிழ்த்துறையில். ஆதரவு நல்குவதற்குப் பரந்த நோக்கமுடைய துணைவேந்தர் சுந்தர வடிவேலு. எடுத்து நடத்துவதற்குச் செயல்திறம் மிக்க டாக்டர் சஞ்சீவி. இரண்டாவது முறை நடைபெற்ற கருத்தரங்கு **"தெய்வத் தமிழ்"** பற்றியது இதில் சமணம், பௌத்தம், சைவம், வைணவம் சார்ந்த நூல்கள் ஆராயப் பெற்றன. வைணவ சமய நூல்கள்பற்றி ஆய்வுக் கட்டுரை படிக்க அடியேனுக்கு வாய்ப்பு கிடைத்தது. ஜஸ்டிஸ் N. கிருட்டிணசாமி ரெட்டியார் தலைமையில்

பத்தாம் நாள் கருத்தரங்கு நடைபெற்றதாக நினைவு. என் ஆய்வுக் கட்டுரையும், அவையோர் எழுப்பிய வினாக்களும் அவற்றிற்கு யான் அளித்த விடைகளும் **"தெய்வத் தமிழ்"** என்ற நூலில் இடம் பெற்றுள்ளன.

**நினைவு - 6 :** நிலைமையையும், கோரிக்கை விடுப்போர் சங்கடங்களையும் பரிதாப நிலையையும் இயன்ற அளவு விதிகளையும் புரிந்து கொண்டு செயலாற்றுபவர் திரு. சுந்தர வடிவேலு. 1950 முதல் தேர்வளார் பணிக்கு முயன்றேன். 1953-56 காலத்தில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் கல்விக்குழு பேரவை இரண்டிலும் உறுப்பினராக இருந்தேன். 12 + 2 முறை டாக்டர் ஏ.எல். முதலியராவர்களைப் பார்த்தேன். மரியாதைக்காக (காரைக்குடியில் இருந்தபோது). காரைக்குடியில் ஒருமுறை பார்த்தேன் சில நூல்களைத் தந்தேன். இத்தனை முறை பார்த்தும் புதிதாகப் பார்ப்பதுபோல் பாவனை கொள்வார். நிர்வாகத்தில் இப்படி இருக்க வேண்டும் போலும் என்று நினைத்துக் கொண்டேன். பலமுறை முயன்றும் தேர்வாளர் பணி, பாடத்திட்டக் குழு உறுப்பினர் பதவி கிடைக்கவில்லை. எனக்குப் பரிந்துரைக்க ஆளில்லாமையால் நானே பார்க்க நேரிட்டது 1958இல் பேராசிரியர் ஆ. சீநிவாச ராகவன் மூலம் முயன்று ஐந்தாண்டு வித்துவான் தேர்வுக்குத் தேர்வாளராக இருந்தேன். மூப்புடைமைப் (Seniority) படிவரும் என்று கூறியே தட்டிக் கழித்தார் திரு முதலியார். செல்வர், அரசியலார் இவருக்குத்தான் உதவுவர் என்றுபலர் பேசிக் கொண்டதை அநுபவத்தால் அறிய முடிந்தது. என்னுடன் காரைக்குடியில் பணியாற்றிய இருவருக்கு இருமுறை தேர்வாளர் பணி வந்தது; பரிந்துரைக்கும் பெரியவர்கள் இருந்தமையால்.

1971 இல் திரு. சுந்தரவடிவேலுவைப் பார்த்து எனது முப்பதாண்டு வாழ்வில் ஒருமுறை கூட தேர்வுப் பணி கிடைக்கவில்லை என்றும் சிலருக்கு இக்காலப் பகுதியில் ஏழு, எட்டு முறை வந்துள்ளது என்றும் கூறி வேண்டியபோது, "அப்படியா?" என்றார்கள். அதற்குமேல் பேச்சில்லை. எம்.ஏ. தாள் குறிப்பதிலும்

விடைத்தாள்கள் திருத்துவதிலும் ஐந்தாண்டுகள் வாய்ப்பு தந்து உதவினார். எனக்குப் பெண் பிள்ளை இன்மையால் வறுமைத் துன்பத்தால் பாதிக்கப் பெறவில்லை "வருவது தானே வரும்" "பருவத்தால் கன்றில் பழா" என்ற பொன் மொழியின் பொருள் தெளிவாயிற்று.

**நினைவு - 7** : திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் தமிழ் எம்.ஏ. தொடங்குவதற்காக நான் தமிழக அரசுக்கு அனுப்பிய விண்ணப்பம் (1960) பல்வேறு இடர்ப்பாடுகளைத் தாண்டி[9] 1969-இல் (அக்டோபர்) ஆண்டிற்குப் பத்தாயிரம் ரூபாய் வீதம் (ஐந்தாண்டுகட்கு) மானியம் பெற்றது காலம் தவறி வந்தமையால் (1970-71)இல் எம்.ஏ. தொடங்கலாம் என்று கருதியது பல்கலைக் கழகம் அந்தக் காலத்தில் பிஎச்.டி. பட்டம் பெற்றிருந்தவர்கள் மூவரே. ஒருவர் ஓய்வு பெற்றிருந்தார்; மற்றொருவர் ஆறு திங்களில் ஓய்வு பெறும் நிலையில் இருந்தார். மூன்றாமவர் (டாக்டர் மு வ) சென்னைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தார் இச்செய்தியைத் துணைவேந்தர் டாக்டர். D. சகந்நாத ரெட்டிக்கு எடுத்துச் சொல்லி விளக்கி இருந்தேன். எனினும், பேராசிரியர் பதவிக்குத் தக்கவர் ஒருவரைப் பரிந்துரைக்குமாறு சென்னை, அண்ணாமலை, மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர்கட்கு வேண்டுகோள்கள் விடுத்திருந்தார் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் துணைவேந்தர் டாக்டர் ஆதி நாராயணா "தக்கவர்" ஒருவரும் இல்லை என்று கைவிரித்து விட்டார். மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் தெ.பொ மீ. நால்வர் பெயர்களைக் குறிப்பிட்டு எழுதியிருந்தார். (டாக்டர் மனத்தில் அழுக்கின்மையால் தெ.பொ.மீயின் கடிதத்தை எனக்குக் காட்டி விவரம் கேட்டதில் விளம்பரத்தில் குறிப்பிட்ட தகுதிப்படி ஒருவரும் தக்கவர் இல்லை என்று விளக்கி விட்டேன்) தாமரைச் செல்வர் நெ.து. சுந்தரவடிவேலு, "இப்பல்கலைக் கழகம் எம்.ஏ., கற்பிப்பதில்லை; பிஎச்.டி, எம்.லிட். பட்டங்கட்கு மட்டிலும் ஆய்வுகள்

9 நினைவுக் குமிழிகள்-4 என்ற என் நூலில் விரிவாக விளக்கப் பெற்றுள்ளது. இந்தநூல் 16-வது கட்டுரையிலும் ஓரளவு சுருக்கமாகக் காணலாம்.

நடைபெறுகின்றன பிஎச்.டி பட்டம் பெற்றவர் ஒருவரும் இலர். அங்குள்ள டாக்டர் ரெட்டியார்தான் தக்கவர். பல துறையில் தரமான நூல்களை எழுதியவர் நல்ல புலமையுடையவர். நிருவாகத் திறமையும் உண்டு. அவரைத் தலைவராக வைத்துக் கொண்டு காலத்தை ஓட்டுங்கள்'' என்று எழுதிவிட்டார்[10] எனினும் முறைகேடான பேட்டிதான் நடைபெற்றது. இறையருளால் எனக்குப் பதவி வந்தது.[11]

**நினைவு - 8 :** 1972 அக்டோபரில் திரு. சுந்தர வடிவேலு அவர்கட்கு மணிவிழா நடைபெற்றது. அவர் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக இருந்த சமயம். வேலூர் கண்டர் உயர்நிலைப் பள்ளி கல்லூரி நிர்வாகம் இவர் மணிவிழாவையொட்டி **"மணிவிழா மலர்"** ஒன்று வெளியிடத் திட்டம் இட்டது. பல அறிஞர்களைக் கட்டுரை வழங்குமாறு கேட்டதுபோல அடியேனையும் கேட்டது. அடியேன் **''பெரியாரைத் துணைக்கோடல்''**[12] என்ற தலைப்பில் எழுதி அனுப்பியதாக நினைவு. "பெரியாரைத் துணைக்கோடல்" என்ற அதிகாரத்தில் வள்ளுவர் கூறியுள்ள கருத்துகளைத் தந்தை பெரியார் வாக்காகக் கொண்டு விளக்கியதாக நினைவு. மலர் கையில் இல்லை. (அதனைப் 19 மலர்களுடன் திருவேங்கடவன் பல்கலைக் கழகத்திற்கு அன்பளிப்பாக வழங்கி விட்டேன்) அதனால் கட்டுரைபற்றி விரிவாக ஈண்டுக் குறிப்பிட முடியவில்லை.

"சுந்தர வடிவேலு சுயமரியாதைக் கட்சிக்காரர் அல்லர்; சுயமரியாதைக் கொள்கைக் காரர்" என்பதைப் புரிந்து கொள்ளாத

---

10 தாம் வேலை தேடும் படலத்தில் பட்ட துன்பத்தை அறிந்தவராதலால் விளக்கமாக எழுதிவிட்டார். (நினைவு அலைகள் - முதற் பகுதி காண்க)

11 "நினைவுக் குமிழிகள்" - பகுதி 4 என்ற என் நூலில் விவரம் காண்க.

12 "பெரியாரைத் துணைக்கோடல்" என்று வள்ளுவர் பெருமான் குறிப்பிட்டது நாடளாவிய பெரியோர்களை. இரட்டுற மொழிதலால் தந்தை பெரியாருக்கும் போய்ச் சேரட்டும் என்ற தலைப்பை வேண்டுமென்றே தேர்ந்தெடுத்தேன்.

உலகம். பெரியார் சுந்தர வடிவேலுவைத் தன் பிள்ளைபோல் பாதுகாத்தார் அவர் ஆசியால்தான் படிப்படியாக உயரவும் முடிந்தது தொடக்கக் காலத்தில் பெரியார் தொடர்பு பல மொட்டைக் கடிதங்கள் பிறக்கக் காரணமாயிற்று.[13] நாளடைவில் அதுவே அவரைக் காக்கும் சிறந்த கவசமும் ஆயிற்று. இன்று தந்தை பெரியார் உலகப் பெரியாராகத் திகழ்கின்றார் சுந்தர வடிவேலுவும் அரிமாபோல் பீடு நடை போட்டு வகித்த பதவிகளிலெல்லாம் சிங்கமாகவே திகழ்ந்து வாழ்ந்து மறைந்தார்.

**நினைவு - 9 :** எம்.ஏ. வகுப்பு, பி.எச்.டி. ஆய்வு தொடங்கப் பெற்ற பிறகு எனக்கு அளவு கடந்த உற்சாகம். அறிஞர்களைக் கொண்டு சிறப்புக் கூட்டங்கள், வகுப்புக் கருத்தரங்குகள், தேசிய மட்டத்தில் கருத்தரங்குகள் இவற்றை அற்புதமாக நடத்தி வந்ததைத் தமிழ் கூறு நல்லுலகம் நன்கு அறியும். முதல் கருத்தரங்கு (1973-74) திருக்குறளைப் பற்றியது

வழக்கமாக நான் திருப்பதியில் நடத்தும் கருத்தரங்குகள் மூன்று நாள் நடைபெறும். முதல் நாள் முற்பகல் முதல் அமர்வு துணைவேந்தர் தலைமையில் நடைபெறும் அறிஞர் ஒருவர் கருத்தரங்கைத் தொடங்கி வைப்பார் மற்றோர் அறிஞர் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார். மூன்றாவதாக ஒருவர் படம் (இருந்தால்) திறந்து வைப்பார். துறைத் தலைவர் வரவேற்புரை நிகழ்த்துவார் இந்தத் திருக்குறள் கருத்தரங்கில் சிறப்புரைக்கு ஒருவரையும் அமர்த்த வில்லை. திருவள்ளுவர் படத்தைத் திரு P. அரங்கசாமி ரெட்டியார் (திருச்சி வழக்குரைஞர்) திறந்து வைத்தார் வள்ளுவர் கூறும் நெறிப்படி வாழ்ந்தவர் திரு. சுந்தரவடிவேலு தம்முடைய ஒரே மகனுக்குத் "**திரு வள்ளுவன்**" என்று திருநாமம் இட்டுச் சிறப்பித்தவர். தம் துணைவியார் காந்தம் அம்மையார் மனைத்தக்க மாண்புடைவராக வாசுகி அம்மையார்போல் கணவருடன் இணைந்து

13 அடியேன் துறையூரில் பணியாற்றியபொழுது (1941-50) தந்தை பெரியார், அறிஞர் அண்ணா தொடர்புகள் இருந்தபோது பல மொட்டைக் கடிதங்கள் பிறந்து அவற்றில் தொல்லைப்பட்டதை நினைவு கூர்கின்றேன்.

வாழ்ந்தவர் இவ்வாறு ஒரு திருவள்ளுவர் குடும்பமே சென்னை - செனாய் நகரில் இருந்து வந்தது. சுந்தர வடிவேலு அப்போது சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராகவும் இருந்தார் இவரைக் கொண்டு திருக்குறள் கருத்தரங்கைத் திறந்து வைத்தும் சிறப்புச் சொற்பொழிவாற்றவும் வேண்டிக் கொண்டோம். அவரும் மனமுவந்து ஒப்புக்கொண்டு கருத்தரங்கைத் திறந்து வைத்து சிறப்புச் சொற்பொழிவும் நிகழ்த்தினர். தவத்திரு குன்றக்குடி அடிகளார் வாழ்த்துரை வழங்கினார். முதல் அமர்வு நிகழ்ச்சிகள் மட்டிலும் ஆங்கிலத்தில் அமையும். திருப்பதியில் தமிழ்த் துறையில் நடைபெறும் நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் அழைப்பிதழ் ஆங்கிலத்தில்தான் இருக்கும்.

இந்தக் கருத்தரங்கின் ஏனைய ஐந்து அமர்வுகள் (1) திருக்குறள் - கலைகளும் அறிவியல்களும் (2) தமிழ் இலக்கியத்தில் திருக்குறள் (3) திருக்குறளும் சமயமும் (4) திருக்குறளும் பிறமொழி இலக்கியங்களும் (5) நிறைவு அமர்வு. ஒவ்வோர் அமர்விலும் தலைவர் ஒருவர் இருப்பார்; ஐவர் ஆய்வுக் கட்டுரைகள் படிப்பர். கருத்தரங்கின் நிகழ்ச்சிகள் யாவும் நூல் வடிவம் பெற்றுத் திகழ்கின்றன.

**நினைவு - 10** : சென்னைப் பல்கலைக் கழகத்தில் "டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை வெள்ளிவிழாச் சொற்பொழிவு அறக் கட்டளையின்" 1973-74 ஆண்டிற்குரிய சொற்பொழிவு நிகழ்த்தும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது (1) சங்ககால வேங்கடம் (2) இடைக்கால இலக்கியத்தில் வேங்கடம் (3) வேங்கடத்தின்மீது எழுந்த நூல்கள் என்ற மூன்று பொழிவுகளை நிகழ்த்தினேன். மூன்று பொழிவுகளும் பாரிநிலையம் (184, பிரகாசம் சாலை, சென்னை-108) நூல் வடிவாக வெளியிட்டுள்ளது. இந்த அரிய நூலுக்கு திரு. சுந்தரவடிவேலு அணிந்துரை வழங்கிச் சிறப்பித்துள்ளார் அதில் ஒரு பகுதி :

> "டாக்டர் ந. சுப்புரெட்டியார் முறையாகத் தமிழைக் கற்றுத் தேறிய அறிஞர். ஆழ்ந்த புலமையும் கட்டுரைத் திறனும் சொல்லாற்றலும் மிக்கவர்."

"திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்" என்னும் தலைப்பில் டாக்டர் ரெட்டியார் ஆற்றிய சொற்பொழிவுகள், நம்மைச சங்ககாலத்திற்கு அழைத்துச் செல்லுகின்றன; இடைக்காலத்திற்கு இட்டு வருகின்றன; பிற்காலத்திற்கும் கொண்டு வந்து நிறுத்துகின்றன

விரிந்த தமிழ் இலக்கியத்தின் பல்வேறு இடங்களை அறிமுகப்படுத்தும் இச்சொற்பொழிவுகள் தமிழ்ப் பற்றாளர்கட்குத் தித்திக்கும். அது மட்டுமா? பெரிதும் சமயத் தொடர்புடைய திருவேங்கடத்தைப்பற்றிய சொற்பொழிவுகள் பக்தர்களுக்கும் பரவசமூட்டும்.

இந்த அரிய நூல் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் 52-வது பிறந்தநாள் விழாவின் நினைவாக,

**பொற்புறு தமிழ்த்தாய் மலரடி பிணித்த**
**புல்லிய விலங்கினைத் தகர்த்து**
**நற்புகழ்த் தமிழர் இதயமாம் அணையில்**
**நாவலர் போற்றிட அமர்த்திச்**
**சிற்பவண் குறளாம் ஆணை யெப்புறத்துக**
**திகழ்ந்திடத் தமிழ்ப்பணி புரியும்**
**அற்புதக் கருணா நிதியெனும் தலைவர்**
**அன்பினுக் குரியதிந் நூலே.**

என்ற பாடல்மூலம் அன்புப் படையலாக்கப் பெற்றுள்ளது. கலைஞருக்கும், திரு. சுந்தரவடிவேலுக்கும் உள்ள நெருக்கத்தை உணர்ந்தமையால் இப்படையல் எனக்குப் பெருமகிழ்ச்சியை அளித்தது.

**நினைவு - 11** : 1972 - அக்டோபர் 24ஆம் நாள் திருப்பதித் தமிழ்ப் பணியிலிருந்து ஓய்வு பெற்றேன். என் இளைய மகன் டாக்டர் இராம கிருட்டிணன் சென்னை ஸ்டான்லியில் M.D. வகுப்பில் சேர்ந்து படிக்கின்றான். திருப்பதியில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் பணியாற்றும் மூத்தமகன் இராமலிங்கத்தைச் சென்னைக்கு மாற்றிக்

கொண்டு சென்னையில் குடியேறினேன். 1978 சனவரி 14ஆம் நாள் பொங்கல் விழாவை முடித்துக் கொண்டு. ஓய்வு ஊதியம் இல்லாத நிலை. 1977 டிசம்பரில் சென்னை வந்தபோது U.G.C உதவிக்காக சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு வந்தேன். தமிழ் கலைக் களஞ்சிய முதன்மை ஆசிரியர் திரு. பெ. தூரனையும் சந்தித்தேன். :ஓய்வு பெற்று நான் சென்னையில் குடியேறும் திட்டத்தை அவரிடம் சொன்னேன். தானும் ஓய்வு பெறப் போவதாகக் கூறி தன் பதவிக்கு ஒரு விண்ணப்பம் அனுப்புமாறு பணித்தார். வேங்கடவாணனின் கருணைப் பெருக்கை வியந்து போற்றுகின்றேன். திருப்பதியில் பணியாற்றிய என்னை சென்னையிலும் தமிழ்ப்பணி ஆற்றத் திருவுள்ளம் கொள்ளுகின்றான் போலும் எனவும் வறுமைத் துன்பத்தைப் போக்க ஏதோ படி அளக்க எண்ணுகின்றான் போலும் எனவும் எண்ணினேன். திருப்பதி திரும்பியதும் அழகிய முறையில் விண்ணப்பம் தயாரித்து அஞ்சல் வழி அனுப்பி வைத்தேன்.

திருப்பதிக்கு வந்த நாள் முதல் எனக்குக் குழி தோண்டிக் கொண்டிருக்கும் என் அரிய நண்பர் திரு G. தாமோதரன் (தான் முன்னரே பழகிய) திரு. தி.சு. அவினாசிலிங்கம் அவர்கட்கு நான் பல்கலைக் கழகத்தின்மீது வழக்குத் தொடுத்தவன் என்றும் எனக்குக் கலைக் களஞ்சியப் பணி நல்கினால் தொந்தரவு கொடுப்பேன் என்றும் எழுதியதாகப் பின்னர் பணியில் சேர்ந்தபின் அறிந்தேன்.

டாக்டர் சுந்தரவடிவேலு தமிழ் வளர்ச்சிக் கழக நிர்வாகக் குழுவில் இருப்பது எனக்குத் தெரியாது. திரு. சி. சுப்பிரமண்ணியமும் பொள்ளாச்சி வள்ளல் திரு. நா. மகாலிங்கமும் குழுவில் இருந்தனராகப் பின்னர் அறிந்தேன். "உடம்பு உருவில் மூன்று ஒன்றாய் மூர்த்தி வேறாய் உலகுய்ய நின்றான்."[14] அடியேனுக்குத் துணை நிற்கும்போது திரு தாமோதரனின் கடிதமோ பிற எதிரான செயல்களோ என்னை என்ன செய்ய முடியும்? நிர்வாக சபை கூட்டத்தில் என் நியமனம் பற்றிய பொருளை ஆயும்போது திரு. செட்டியார் நான் திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தின்மீது

14 பெரி. திரு 2.5:3

வழக்குத் தொடுத்ததைக் குறிப்பிட்டாராம். அப்போது திரு சுந்தர வடிவேலு, ";எனக்கு அந்தப் பல்கலைக் கழகத்தைப்பற்றி நன்கு தெரியும். ஊழல் மலிந்த நிர்வாகம். சட்டத்திற்குப் புறம்பாகச் செயற்படுவது. டாக்டர் ரெட்டியாரைப் போன்ற நேர்மையாளரைக் காண்டல் அரிது "தமிழன்" என்ற பார்வையில் - கருத்தில் - நோக்கப்படுவதாக இருந்தால், எல்லா மட்டங்களிலும் ஏதோ ஒரு வகையில் தொல்லைகளை அநுபவித்தவர் டாக்டர் ரெட்டியார் நன்றாக உழைப்பவர். பலதுறை அறிவினர்; அத்துறைகளிலெல்லாம் நூல்கள் எழுதி தமிழை வளப்படுத்தி வருபவர். கலைக் களஞ்சியப் பணிக்கு அவரைப் போல் பொருத்தமாகப் பொறுப்பு வகிப்பவரைக் காண்டல் அரிது." என்று சொன்னாராம். திரு. நா. மகாலிங்கம் இதனை ஆமோதித்தாராம்; திரு. சி.சுப்பிரமணியமும் "ஆமாம்" என்று தலை அசைத்தாராம். குழு ஒருமனதாக என் நியமனத்தை - முதன்மைப் பதிப்பாளர் பணியை - ஒப்புக் கொண்டதாம். எனக்கு ஆணையும் வந்தது பணியில் சேர்ந்ததேன். இங்கு எம்பெருமான் ஏழுமலையான் மூன்று சான்றோர்களின் உருவமாக நின்று தாமோதரன் எழுப்பிய தடைக்கல்லை நீக்கினான் என்பது என் அதிராத நம்பிக்கை இங்ஙனம் எனக்கு திரு. சுந்தர வடிவேலு உதவியது என் நீங்காத நினைவாக இங்குப் பதிவு பெறுகின்றது.

**நினைவு - 12** : 1978 இல் சென்னை வந்து ஐந்தாண்டுகள் வாடகை இல்லத்தில் என் இருமக்களுடனும் அவர்தம் குடும்பங்களுடனும் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்தேன். இடையில் அக்குடும்பங்கள் தனித்தனியாகப் பிரிந்தன. "வீட்டைக் கட்டிப்பார்" என்ற முதமொழிக்கிணங்க பல்வேறு இடர்ப்பாடுகளுடன் காலிமனை வாங்கி (1980) வீடு கட்டி (1983) "வேங்கடம்" என்று பெயரிட்டு வாழ்ந்து வருகின்றோம். வீடு எம்பெருமானுடையது. அதில் ஒண்டுக் குடியாக நாங்கள் மாறிமாறி ஒவ்வொரு மகனுடனும் வாழும் நிலை; மன அமைதி சற்றுக் குறைந்த நிலைதான். காலச் சக்கரம் ஓடிக்கொண்டுதான் உள்ளது. பொருளாதார நெருக்கடியால் **"புது வீடு புகும்விழா"** வைக்கவில்லை. ஆயினும் ஒருமுறை தமிழ் இயக்க நண்பர்கள், ஜஸ்டிஸ் N. கிருட்டிணசாமி ரெட்டியார் குடும்பம்

இவர்கட்கு மாலைச் சிற்றுண்டி விருந்து அளித்து மகிழ்ந்தேன். பிறிதொருமுறை டாக்டர் சுந்தரவடிவேலு அவர்கட்கு (அருமைத் துணைவி காந்தம் அம்மையார் மறைந்த பிறகு) பகல் விருந்து அளித்தேன். சுமார் முற்பகல் 10 மணிக்கு வந்தவர்கள் சில மணி அளவளாவிக் கொண்டிருந்து மதியம் 2 மணிக்கு விருந்திற்குப் பின் விடை பெற்றுக் கொண்டார்கள். ஆண்டுதோறும் (அக்டோபர் 12-ஆம் நாள்) அவர்தம் பிறந்த நாள் அன்று காலையில் வாழ்த்து கூறி வருவது வழக்கமாக இருந்து வந்தது. 1992, 1993 ஆண்டுகளில் மிகவும் தளர்ந்து (சிறிது நோய்வாய்ப்பட்டு) இறுதியில் மறைந்தார்கள். இறுதிக் காலத்தில் மூன்று மாதத்திற்கொருமுறை சென்று நலம் விசாரித்துத் திரும்புவதுண்டு. முக்தியுலகில் அவர்தம் ஆன்மா தந்தை பெரியாரின் ஆன்மா, துணைவி காந்தம் அம்மையாரின் ஆன்மா, அருமை மகன் திருவள்ளுவனின் ஆன்மா இவர்களுடன் அளவளாவி மகிழ்ந்து கொண்டிருக்கும் என்பது என் நம்பிக்கை. "நான் யார்?" மொழியால் தமிழன்; நாட்டால் இந்தியன்; இன வழி மனித இனத்தவன்.... நீர்த்துளி எப்போது பெருமை பெறுகின்றது? எப்போது பெரும் பயன் விளைவிக்கின்றது? கோடி கோடி நீர்த்துளிகளோடு இரண்டறக் கலந்துவிடும்போது குளமாகின்றது; ஏரியாகின்றது; கடலாகின்றது. பெருங்கடலும் ஆகின்றது. இந்நிலையில் பெருமையோடு பயனும் விளைவிக்கின்றது"[15]. யான், எனது என்னும் செருக்குள்ள நிலையில் வாழ்ந்து தம் புகழ் நிறிஇத்தாம் மாய்ந்த பெரியோர்களில் ஒருவராகி விடுகின்றார் டாக்டர் சுந்தர வடிவேலு.

**நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை யுடைத்துஇவ் உலகு**[16]

*பிறப்பு : 12.10.1912* *சிவப்பேறு : 12.04.93*

---

15 நினைவு அலைகள் - முதற்பகுதி - முன்னுரை (பக் Vii)

16. குறள். 336

# 10

# செம்மல் டாக்டர் வ.சுப. மாணிக்கம்

**எல்லா விளக்கும் விளக்கல்ல; சான்றோர்க்குப்**
**பொய்யா விளக்கே விளக்கு**[1]

என்ற வள்ளுவத்துடன் வள்ளுவம் கண்ட சான்றோரின் "நீங்காத நினைவுகள்" எழுகின்றன. சின்னஞ்சிறு வயதில் திண்ணைப் பள்ளிக் கூடப் படிப்பை முடித்துக் கொண்டு செட்டி நாட்டைச் சேர்ந்த ஒருவன் பர்மாவில் வட்டிக்கடையொன்றில் கணக்குப் பிள்ளையின் கையாளாகப் பணியில் அமர்கின்றான். வறுமையின் கொடுமையால். வேலையோ கடையைத் துப்புரவு செய்தல், வேறு சில எடுபிடிவேலைகள் செய்தல் போன்ற சாமானியமான வேலைதான். அக்காலத்தில் ஒரு நாள் கடை முதலாளி, "சிறுவா, நான் மாடிக்கு செல்கிறேன். யாரும் தேடி வந்தால் நான் இல்லையென்று சொல்லி விடு" என்று கட்டளை யிடுகின்றார். "அப்படியெல்லாம் நான் பொய் சொல்லேன்" என்று சிறுவன் மறுமொழி பகர, முதலாளி அன்றே சிறுவனின் பிழைப்புச் சீட்டைக் கிழித்து விடுகின்றார். இறைவனின் கருணை வெள்ளம் பணியிழந்த இவன்மீது பாய்கின்றது. இப்படி இறைவன் திருவருள் துன்பமாகவும் வருவதுண்டு. சிறுவனும் தாயகம் அனுப்பப் படுகின்றான்.

**யாவன் அவனென வினவின் தீவினை**
**செய்யாச் செம்மல் செந்தமிழ்ப் பெம்மான்**
**பொய்யா மாணிக்கப் புலவன் அவனே**

---

1 குறள் 229

என்று கூறுவார் கவிஞர் முடியரசன். அக்கால முதல் செட்டிநாட்டுச் சிற்றூர்ப் பகுதிகளில் **"பொய் சொல்லா மாணிக்கம்"** என்றே வழங்குகின்றனர் ஊர்ப் பெருமக்கள் மேலைச் சிவபுரி இவர்தம் சொந்த ஊர். தந்தையார் சுப்பையா செட்டியார்; தாயார் தெய்வயானை ஆச்சி. பிறந்தநாள் 14.7.1917 மிக்க இளமையிலே பெற்றோரை இழந்தவர். தம்பாட்டனாரால் புரக்கப் பெற்றுப் பர்மாவுக்குச் சென்றவர். என்னைவிட பத்து திங்கள் பதினேழு நாட்கள் இளையவர். தாயகம் திரும்பியவர் மேலைச் சிவபுரியில் தமிழ் பயின்றார் பண்டிதமணியின் பரிந்துரையால் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் புலவர் வகுப்பில் பயின்று முதல் வகுப்பில் முதன்மையாகத் தேர்ச்சி பெற்றார். சில திங்கள் ஆய்வு மாணவராக இருந்து பின்னர் ஏழாண்டுகள் அங்கேயே விரிவுரையாளராகப் பணியாற்றினார். பணிக்காலத்தில் தனிமையாகப் படித்துப் பி ஓ.எல்., எம்.ஏ. எம்.ஓ.எல் பட்டங்கள் பெற்றார். 1948 முதல் புதிதாகத் தொடங்கப் பெற்ற அழகப்பர் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகச் சேர்ந்து பணியாற்றிக் கொண்டிருந்தார் அப்போது பேராசிரியர் ஆ முத்துசிவம் தமிழ்த்துறைத் தலைவர்.

**நினைவு - 1** : நான் 1950- ஜூலை 5 ஆம் நாள் முதல் காரைக்குடி அழகப்பர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியர் பதவி ஏற்றேன். தெய்வ சங்கல்பம்போல் நான் விண்ணப்பிக்காமலும் முயலாமலும் இப்பதவி கற்பக விநாயகப் பெருமான் திருவருளால், கம்பன் அடிப்பொடி சா கணேசன் ஆதரவால், கிடைத்தது. வள்ளல் அழகப்பர், உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களோ அல்லது பத்தாண்டுகள் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர்களாக இருந்தவர்களே பேராசிரியர்களாக இருக்கவேண்டும் என்று விரும்பினமையாலும் தமிழ்ப் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பங்கள் இல்லாததாலும் அடியேன் தலையில் "அட்சதை" விழுந்தது. அக்காலத்தில் தமிழ் எம்.ஏ. பட்டங்கள் பெற்றவர்கள் அரியராகவே இருந்தனர்; பி.டி. அல்லது எல்.டி பட்டம் பெற்றவர்கள் (தமிழ் எம்.ஏ.க்கள்) அரியவர்களினும் அரியவராகவே இருந்தனர். ஜூலை 5 ஆம் நாள் கல்லூரி தொடங்கின அன்றே

அனைவரும் (அறிவியல் ஆசிரியரைத் தவிர) வந்து பதவியில் அமர்ந்தனர். திருச்சூர் அரச பரம்பரையைச் சேர்ந்த ஐ. நாராயணமேனன் (ஐ.என். மேனன்) முதல்வராக இருந்தார். கலைக் கல்லூரி வளாகத்தில் நிலஉட்கூற்றியல் துறையின் மேல் மாடியில் கல்லூரி தொடங்கப் பெற்றது. கலைக் கல்லூரியின் முதல்வர் ஏ. நாராயணத் தம்பி (ஏ.என்.தம்பி) என்பார். திருவனந்தபுரம் அரச. பரம்பரையைச் சேர்ந்தவர். இருவரது ஒற்றுமை கீரியும் பாம்பும்போல. ஓராண்டுக் காலம் ஒண்டுக் குடியாக இருந்து வந்தது.

அலுவலில் சேர்ந்ததும் கலைக்கல்லூரித் தமிழ்த் துறைக்குச் சென்று தமிழாசிரியர்கள் அனைவரையும் பார்த்து என்னை அறிமுகம் செய்து கொண்டேன். இங்ஙனமே தொடர்ந்து சமயம் நேரும்போதெல்லாம் அறிவியல் துறைகளிலும் ஆசிரியர்கள் பலரை அறிமுகம் செய்து கொண்டேன். காரணம், அறிவியல் கல்வியில் நாட்டம் கொண்டிருந்தேன். திருப்பதியிலும் அறிவியல் துறை ஆசிரியர்களிடம் அதிக நெருக்கமாகப் பழகி வந்தேன். அறிவியல் துறைகளில் புதியவற்றையும் முன்னர் அறிந்தவற்றில் நுண்பகுதிகளையும் ஆழ்ந்து கற்றுக் கொண்டிருந்தேன். அறிவியல் கருத்துகளை அழகிய எளிய தமிழில் அறிவியல் கற்காதவர்கட்கு அறிமுகம் செய்து வைக்கவேண்டும் என்ற உந்தல் என் கல்லூரி வாழ்க்கைக் கால முதற்கொண்டே என்னிடம் இருந்து வந்தது. ஐயங்கள் எழும்போது அறிவியல் ஆசிரியர்கள் துணையாக இருப்பதற்காகவே இவர்களிடம் அறிமுகமானேன். இவர்களில் முக்கியமானவர்கள் பேராசிரியர் K.G. கிருட்டிணன் (இயல்பியல்) பேரா. V.V. சுப்பிரமணியம் (வேதியியல்). பின்னவர் திருச்சி புனித சூசையப்பர் கல்லூரியில் (1937-39) என் வகுப்புத் தோழர். பதினோர் ஆண்டுகட்குப் பிறகு முதன் முதலாகச் சந்தித்ததால் பெரும் மகிழ்ச்சி அடைந்தேன்.

இடவசதிக் குறைவினால் அறிவியல் அல்லாத பிறபாட ஆசிரியர்கள் தங்குவதற்கு சீமைக்கரைத் தரையோடு இருக்கை வசதிகளோடும் கூடிய கீற்றுக் கொட்டகைகளில் தங்கும் வசதிகள் அமைக்கப்பெற்றிருந்தன.

கெட்டிக் கட்டடத்தில் தமிழ், பொருளியல், வரலாறு, வணிக இயல், கணிதம் இவற்றின் பேராசிரியர்கட்கு (துறைத் தலைவர்கள்) மாடியிலும் தங்கும் இட வசதிகள் செய்யப் பெற்றிருந்தன திரு. வ.சுப. மாணிக்கத்திற்கு (அவர் துறைத் தலைவரல்லராயினும்) கெட்டிக் கட்டடத்தில் தனி அறை தரப்பெற்றிருந்தது. கல்வி, உளவியல், அணுவியல்பற்றி நூல்கள் எழுதியதாலும், கலைச் சொற்களைத் தமிழாக்கம் செய்யும்போது மாணிக்கமும் நானும் முடிவெடுப்பது உண்டு. **"Atomic Energy for Peaceful Uses"** என்ற தமிழ் நூலுக்குத் தலைப்பு தரும்போது **"அணுவின் ஆக்கம்"** என்ற தலைப்பைத் தேர்ந்தெடுத்தது இன்றும் என் நினைவில் பசுமையாகவே உள்ளது.

**நினைவு - 2 :** பேராசிரியர் ஆ. முத்துசிவம் 1954 இல் காலமாகவே மாணிக்கம் தமிழ்த் துறைத் தலைவரானார். நான் பல்லாண்டுகளாகக் கல்லூரி, பல்கலைக் கழகம் ஆகியவற்றின் பல தமிழ்த்துறைத் தலைவர்களின் அறைக்குச் சென்று உரையாடியதுண்டு. பேராசிரியர் முத்துசிவத்துடன் பேசும்போது கவிதை, திறனாய்வுபற்றி மேனாட்டாரின் கருத்துகள் எங்கள் பேச்சில் எழும். வ.சுப.மா விடம் பேசும்போது இலக்கியத்திலும், இலக்கணத்திலும் பல நுண்ணிய கருத்துகள் உதிரும். "இன்னும் சற்று நேரம் பேசவேண்டும்" என்ற ஆசை இருந்து கொண்டே இருக்கும். சங்க இலக்கியத்தில் எந்தவித ஐயம் ஏற்பட்டாலும் அதனை எளிதாகப் போக்கிவிடுவார். இந்தக்காலத்தில் மதுரையிலிருந்து வெளிவந்த "தமிழ்நாடு" என்ற நாளிதழின் ஞாயிறு மலருக்கு அகப் பாடல்களின் சிலவற்றிற்கு விளக்கம்போல் சிறுகதை பாணியில் கட்டுரைகள் எழுதி வெளியிட்டு வந்தேன். பொது மக்களின் பாராட்டு எனக்குக் கிடைத்தது. இவற்றுள் 25 கட்டுரைகளைத் தொகுத்து **"காதல் ஓவியங்கள்"** என்ற தலைப்பில் ஒரு நூலாக வெளிவந்து, சங்க இலக்கியம் படிப்போருக்கு தூண்டுவிசை போல் உதவி வந்தது[2]

2 வெளியிட்டவர் பழநியப்பா பிரதர்ஸ், திருச்சி-2. இதன் இரண்டாம் பதிப்பு வெளிவர உள்ளது

இவர் காலத்தில் இவரால் ஆர்வமுடன் அமைக்கப் பெற்ற இலக்கியக் கூட்டங்கள் ஒன்றில் இளசைக் கிழார் எஸ். சோமசுந்தர பாரதியார் எழுந்தருளி பேசியதை நினைவுகூர்கிறேன். நான் (1934-39) இல் திருச்சி புனித சூசையப்பர் கல்லூரியில் பயின்றபோது திரு. பாரதியார் பேச்சைக் கேட்டு மகிழ்ந்ததுண்டு. தமிழறிவு என்னிடம் நிரம்பப் பெறாத காலம் அது. அவர் மேடை ஏறி பேசும்போது சிங்கம் கர்ச்சனை செய்வது போலிருக்கும். நீதிமன்றத்தில் சிறந்த வக்கீல் ஒருவர் வாதம் செய்வது போலவும் இருக்கும். கம்பீரமான தோற்றம், செந்நிறத் திருமேனி, முறுக்கு மீசையுடன் திகழும் முகப்பொலிவு முதலியவை இவர்தம் ஆவேசப் பேச்சுக்குக் களைதட்டும். காரைக்குடி எழுந்தருளின இப்போது தளர்ந்த திருமேனி, நரைத்த மீசை, சுருங்கிய முகம் கொண்டபாங்கில் பேசிய பேச்சில் கங்கையின் வேகம் இல்லையாயினும் யமுனையின் ஆழமும் தெளிவும் இருந்தன. தம்முடைய தொல்காப்பிய சில படலங்கள் அச்சேறி அதிக அச்சுப் பிழைகளுடன் வெளிவந்ததைக் கண்டு வருந்தி "பிழை மலிந்த சருக்கங்களாக" வெளிவந்துள்ளன என்று நகைச்சுவையாகக் குறிப்பிட்டது இன்றும் என் மனத்தில் பசுமையாக உள்ளது.

**நினைவு - 3** : தமிழில் கலை நூல்களனைத்தையும் கொண்டு வரவேண்டும் என்ற முயற்சியில் செயற்பட்ட இராஜாஜி, தி.சு. அவினாசிலிங்கம், சி. சுப்பிரமணியம் போன்ற ஆர்வலர்களைக் காண்டல் அரிதாகவே உள்ளது. 1938இல் வெளிவந்த கலைச்சொல்லாக்கப் பணியில் செலவானது போக எஞ்சிக் கேட்பாரற்றுக் கிடந்த ரூபாய் இரண்டாயிரத்து சில்லறை வள்ளல் அழகப்பரின் அறக்கட்டளையிடம் (Algappa Trust) ஒப்படைத்தார் இராஜாஜி. இப்பணி தொடர்ந்து நடைபெறுவதற்கு இதுவே சரியான நிறுவனம் என்று கருதினார் அப்பெருமகன். 1958 என நினைக்கின்றேன். வ.சுப. மாணிக்கம் தலைமையில் இதற்காக ஒரு சிறு குழுவும் அமைக்கப்பெற்றது. இதில் என்னையும் ஓர் உறுப்பினராகச் சேர்த்தார்கள். நானும் 1960இல் திருப்பதியில் பணியேற்று என் முயற்சி வேறு திசையில் சென்றதால் அதுபற்றிய

நினைவே இல்லாது போயிற்று. உசாவியதில் அது மாய்வுற்றுப் போனது (Defunct) என்பதை அறிய முடிந்தது.

திரு சி சுப்பிரமணியம் கல்வியமைச்சராக இருந்த காலத்தில்[3] **"கல்லூரித் தமிழ்க் குழு"** (1958) என்ற குழு அமைக்கப் பெற்று அதன்கீழ் பல் உட்குழுக்கள் அமைக்கப் பெற்றுப் பல்வேறு துறைகளில் கல்லூரி மட்டத்தில் - துணைப்பாடங்கள் (Minor) நிலையில் கலைச்சொற்கள் தொகுக்கப் பெற்றன. இதற்குமேல் பொதுக்குழு ஒன்றிருந்தது 35 பேர் அதன் உறுப்பினர்கள். அழகப்பர் மறைந்த பிறகு சி. சுப்பிரமணியம் அழகப்பர் அறநிலையத்தின் தலைவராக இருந்தார் என் உழைப்பை நன்கு அறிந்தவர். **"அணுவின் ஆக்கம்"** என்ற நூலுக்கும் அணிந்துரை வழங்கியவர். என்னைப் பொதுக் குழுவிலாவது ஓர் உறுப்பினர் பதவி வழங்குமாறு வேண்டினேன். "எல்லாம் முடிந்தது; இனி வாய்ப்பில்லை" என்று கையை விரித்துவிட்டார். வாளா இருந்துவிட்டேன். சில திங்கள்களில் மேலும் எழுவர் நியமிக்கப்பட்ட செய்தி வெளிவந்தது. இதைச் சுட்டிக்காட்டினேன். அவர் முகம் சுருங்கியதை உணர முடிந்தது. "என்ன செய்வது ரெட்டியார்? ஏதோ கோப்புகள் வருகின்றன. முக்கியமானவை தவிர பெரும்பாலானவற்றில் கையெழுத்துதான் போடுகிறேன். நிர்வாகம் அப்படியாய் விட்டது. கவலைப்படாதீர்கள். வேறு சந்தர்ப்பங்களில் வாய்ப்பு தர முயல்கின்றேன்" என்று ஆறுதல் கூறி அனுப்பினார். "வருவதுதானே வரும்" என்ற பொன்மொழியை நினைத்துக் கொண்டேன்.

**நினைவு - 4 :** 1948-ஆம் ஆண்டு அழகப்பர் கல்லூரி தொடங்கப்படும் போது பி.ஏ.யில் சிறப்புத் தமிழ் இல்லை. ஒவ்வொரு துறைக்கும் பேராசிரியர் விரிவுரையாளர் என்ற வகையில் நியமனம் செய்ய வேண்டும் பட்டப் படிப்பில் மூன்றாவது பகுதியில் சிறப்புப் பாடம் இருந்தால்தான் பேராசிரியர் பதவி உண்டு. தமிழில் அப்படி

3 திரு அவினாசிலிங்கம் கல்வியமைச்சராக இருந்த காலத்தில் கலைச் சொல்லாக்கக் குழு அமைக்கப் பெற்று உயர்நிலைப்பள்ளி மட்டத்தில் அது செயற்பட்டு, பல துறைகளில் கலைச் சொற்பட்டியல்கள் வெளியிடப் பெற்றுள்ளன (ஏப்பிரல்-1947)

இல்லாதிருந்தும் தவறுதலாகப் பேராசிரியர் பதவிக்கு ஆணை அனுப்பப் பெற்று விட்டது. இந்த ஆணையைப் பெற்றவர் திரு ஆ. முத்துசிவம்; அதிர்ஷ்டசாலி. இறையருளால் அவர் நினையாதது முன்வந்து நின்றது. ஆணையைத் திருத்த நிர்வாகம் முயன்றபோது நிர்வாகத்தில் முக்கிய உறுப்பினரான கம்பன் அடிப்பொடி குறுக்கிட்டு அதைத் தடுத்து நிறுத்தினார். அது போலவே 1950-இல் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி தொடங்கப்பெற்றபோதும் தமிழ்ப் பகுதிக்கு விண்ணப்பங்கள் இல்லை. அக்காலத்தில் தமிழ் எம்.ஏ படித்தவர்கள் அரியர்; எல்.டி. படித்த தமிழ் எம்.ஏ.க்களும் அரியர். தொடங்கும் போதே தமிழ்ப் பகுதியும் இருக்க வேண்டும் என்று வற்புறுத்தியவர். விளம்பரம் வந்தபோது துறையூரில் உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியராக இருந்த நான் அஃது என்கண்ணில் படாததால் விண்ணப்பிக்கவில்லை. டாக்டர் வள்ளல் தமிழ்ப் பகுதிப் பொறுப்பை கம்பன் அடிப்பொடிக்கு விட்டுவிட்டதால் அவர் எனக்குத் தந்தி அடித்து நியமனம் பெற்றேன். என் படிப்பைப்பற்றிய விவரம் சா க.வுக்குத் தெரியாது. எனக்கும். எம்.ஏ பட்டம் இல்லை எல்.டி. பட்டம் இருந்தது பி.எ., பி.எஸ்சியில் முதல் வகுப்பில் தேர்ச்சி இருந்தது. பயிற்சிக் கல்லூரிக்கு இத்தகுதி போதும். அதிகபட்சமாக வித்துவான் பட்டமும் இருந்தது. பத்து ஆண்டுகள் உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியர் அநுபவத்திற்கு முன்னுரிமையும் இருந்தது. இவை எல்லாம் பேராசிரியர் தகுதிக்கு வலிவூட்டின இவ்வளவுக்கு மேலாக நான் விண்ணப்பிக்காமலே, முயலாமலே, எனக்குப் பதவி வந்தது இறையருள் இருந்தமையால் - என் எதிர்காலம் சிறக்க வேண்டும் என்ற ஊழ் இருந்தமையால். நான் சேர்ந்த அடுத்த ஆண்டே எம்.ஏ.யிலும் தேர்வு பெற்றேன்.

பேராசிரியர் முத்துசிவனார் மறைந்ததும் வ.சுப.மா. பேராசிரியரானார்; தமிழ்த்துறைத் தலைவரானார். தம்முடைய தனிப்பட்ட பிஎச்.டி. ஆராய்ச்சியில் மூழ்கி இருந்தாலும், துறை வளர்ச்சியில் கவனம் செலுத்தினார். பி ஏ.யில் சிறப்புத் தமிழ் (பகுதி மூன்றில்) இடம் பெறச் செய்தார் தமிழ் எம்.ஏ. வகுப்பு தொடங்குவதற்கும் முயன்று கொண்டிருந்தார். இக்காலத்தில் திரு

ஏ என் தம்பி முதல்வர் திரு தம்பிக்குப் பிறகு திரு அலெக்ஸாண்டர் ஞானமுத்து முதல்வரானார் இவர் சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக்குழு உறுப்பினராகவும் இருந்தமையால் இவர் காலத்தில் தமிழ் எம் ஏ வகுப்பு தொடங்கப்பெறுவது எளிதாயிற்று. அக்காலத்தில் அழகப்பர் நிறுவனங்கள் பல புகழ் பெற்றிருந்தமையால் அவற்றின் வளர்ச்சியும் தடைபடுவதில்லை Tamil Concept of Love என்ற வ சுப மாவினால் சமர்ப்பிக்கப்பெற்ற ஆங்கில ஆய்வுக் கட்டுரை அவருக்குப் பிஎச்.டி. பட்டத்தையும் ஈட்டித் தந்தது துறையில் ஆசிரியர்களின் எண்ணிக்கையும் உயர்ந்தது.

**நினைவு - 5** : ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இருந்தபோது நானும் என் தோழ ஆசிரியர் திரு. S. திருவேங்கடாச்சாரி அவர்களும் ரூ. 50/= வீதம் செலுத்தி பிஎச்.டி பட்டத்திற்கு ஆய்வு செய்யப் பதிவு செய்து கொள்ள சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு விண்ணப்பங்கள் அனுப்பினோம். கல்லூரியில் எம்.எட் கற்பிக்க வாய்ப்பு இல்லாதிருந்தாலும் அவர் எம் எட் பட்டம் பெற்றிருந்தமையால் அவருக்கு இசைவு வழங்கியது. எனக்கு வழங்க மறுத்தது - நான் எம்.எட்டு பட்டம் பெறாதவனாதலால். ரூ. 50/= உம் திரும்ப வந்து சேர்ந்த்து திரு. தி.மூ. நாராயணசாமி பிள்ளை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் துணை வேந்தராக இருந்தபோது என்னுடைய அறிவியல் நூல்களும், தமிழ்ப் பயிற்றும் முறை போன்ற நூல்கள் எனக்கு ஈட்டித் தந்த புகழால், என்னை 1958 கோடை விடுமுறையில் புகுமுக வகுப்புகளில் அறிவியலைத் தமிழில் கற்பிக்கும் முறைகளை ஆராயவும் அதற்கேற்ற கலைச்சொற்கள் பட்டியலைத் தொகுக்கவும் ஏற்படுத்தப் பெற்ற ஆறு வாரக் கருத்தரங்கில் தகுவழிகாணும் அறிஞராக (Resource person) நியமித்தார் இதனை இறைவன் இட்ட பணி எனக் கொண்டு என்னால் இயன்றவரை மனநிறைவுடன் கடமைகளை ஆற்றினேன்.

இந்த ஆறுவாரக் காலத்தில் நாடோறும் விருந்தினர் இல்லத்திலிருந்த நான் காலை 8.30 மணி சுமாருக்கு துணைவேந்தரின் திருமாளிகையிலிருப்பேன். 9.45 மணி வரை அவரோடு

அளவளாவுவேன். உலகியல், அறிவியல், சமயஇயல், இலக்கியம் இவை பேச்சுகளின் சாரமாக அமையும் 945க்குப் புறப்பட்டு தாம் அலுவலகத்தில் இறங்கிக் கொண்டு என்னை கருத்தரங்கு நடைபெறும் இடத்தில் இறக்கி விடச் சொல்லுவார் காரோட்டியை. தந்தையனைய பாசத்துடன் குழைந்து பேசுவார் இரண்டாண்டுகள் ஏதாவது பணியில் அமர்த்தினால் யான் விடுமுறை பெற்றுக் கொண்டு என் ஆய்வினை முடித்து பிஎச்.டி பட்டத்துடன் காரைக்குடி திரும்புவதாகக் கூறினேன். அவரால் இந்த வேண்டுகோளை நிறைவேற்ற முடியவில்லை. ஏழுமலையான் தடைகல்லை எழுப்பினான் என்று எனக்குத் தோன்றுகின்றது

காரைக்குடி திரும்பியதும் திரு. அலெக்ஸாண்டர் ஞானமுத்துவைச் சந்தித்து வாரம் இரண்டுமணி எம்.ஏ. வகுப்புக்குப் பாடம் எடுக்க வாய்ப்புத் தந்தால் பிஎச்.டிக்குப் பதிவு செய்து கொள்ள வாய்ப்பாக இருக்கும் என வேண்டினேன். சென்னையில் கல்லூரிகளுக்குள்ளேயே போதித்தல் (Inter Collegiate Teaching) அ.நு.சரித்ததாக அமையும் என்று சொல்லியும் அவர் என் வேண்டுகோளை மறுத்துவிட்டார். வ.சுப.மா. மூலம் முயன்றிருந்தால் ஒருகால் வாய்ப்பு கிடைத்திருக்கக் கூடுமா? என்று இப்போது என் மனம் எண்ணுகின்றது. திருப்பதியில் பணியாற்ற ஊழ் இருக்கும்போது எந்த முயற்சியும் பலன் அளித்திராது என்று என் மனம் அமைதி கொள்ளுகின்றது பிஎஸ்சி. பட்டதாரியாகிய யான் எம்.ஏ. தேர்வுக்குப் போக சுமார் ஐந்தாண்டுகள் (1942-1947) நான் துறையூரிலிருந்த போது) பல்கலைக் கழகத்துடன் மேற்கொண்ட போராட்டம் இப்போது நினைவிற்கு வருகின்றது.

**நினைவு - 6** : பிஎச்.டி. காதலினால் 1960 ஜூலையில் காரைக்குடியில் பேராசிரியர் பதவியைத் துறந்து மாதம் ஒன்றுக்கு ரூ. 153/= இழப்பில் திருப்பதிச் சென்று விட்டேன். திரு. அலெக்ஸாண்டர் ஞானமுத்து பதவி விலகியதும், டாக்டர் வ.சுப.மா. முதல்வரானார். என் குடும்பம், பிள்ளைகளின் கல்விநிமித்தம் 1966 வரை காரைக்குடியிலிருந்து வந்தமையால் விடுமுறைக் காலங்களில் காரைக்குடியிலிருப்பேன். அப்போது வாய்ப்பு நேரும்பொதெல்லாம்

டாக்டர் வ.சுப.மா.வைப் பார்ப்பதுண்டு இந்தக் காலப்பகுதியில்தான் மூன்றாண்டுக்காலம் தமிழ்க்கடல் ராய.சொ. அழகப்பர் கல்லூரியில் தமிழ் ஆய்வுத் துறைத் தலைவராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

இவர் முதல்வராக இருந்த காலத்தில் கல்லூரி வளாகத்தில் ஆயிக்கணக்கான தென்னை மரங்களை வளர்க்க ஏற்பாடு செய்தார்; கல்லூரிக்கு ஓரளவு வருவாய். இதனால் ஏற்பட்டது; கல்லூரி நிதி நிர்வாகத்தில் மிக்கக் கவனம் செலுத்தி வழக்கமாக எங்கும் நடைபெறும் "தில்லுமுல்லுகட்கு" ஒரு முடிவு கட்டினார்.

இவர் காலத்தில்தான் எங்கும் நடைபெறும் "மாணவர் வேலை நிறுத்தம்" அழகப்பர் கல்லூரியிலும் தலைகாட்டத் தொடங்கியது. பெரும்பாலும் சம்பளச் சலுகையும், இலவச உணவுச் சலுகையும், பெறும் மாணவர்கள் மூலம்தான் இந்த அடாவடி வேலைநிறுத்தம் தொடங்குவதாக அறியக் கிடக்கின்றது. 1965-66. ஆண்டுகள் அதிகநாட்கள் கல்லூரி மூடிக்கிடந்தது. இந்த ஆண்டுதான் கல்லூரியின் விதிகளுக்கு மாறாக நடந்து கொண்ட தம் மகனை ஓராண்டுக் காலம் கல்லூரியினின்றும் தற்காலிக நீக்கம் செய்து வைத்திருந்தார். இது நிர்வாகத்தில் அவர்தம் நேர்மைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது. என் மகன் இராமலிங்கம் அப்போது புகுமுக வகுப்பில் (P.U.C) படித்துக் கொண்டிருந்தான். மூன்றுமுறை 25 நாட்கள் வீதம் திருப்பதியில் விடுமுறை வாங்கிக்கொண்டு காரைக்குடி வந்து இயற்பியல், வேதியியல் பாடங்களை ஆதிமுதல் அந்தம்வரை சொல்லிக் கொடுக்க வேண்டியதாயிற்று. கணிதத்திற்கு வேறு ஓர் ஆசிரியரைக் கவனித்துக் கொள்ளுமாறு ஏற்பாடு செய்துவிட்டேன். 1966-ஜூன் திங்கள் குடும்பத்தைக் காரைக்குடியிலிருந்து திருப்பதிக்கு மாற்றிக் கொண்டதால் காரைக்குடி தொடர்பு அரிதாயிற்று.

**நினைவு - 7 :** 1969-இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் விளம்பரம் வந்தது விண்ணப்பம் அனுப்புமாறு திரு. தி.மூ. நாராயணசாமி பிள்ளையும் திரு. C.V.CT.V வேங்கடாசலம் செட்டியார் அவர்களும் என்னை அதிகமாகத் தூண்டினார்கள்.

தமிழகத்தில் எந்தப் பதவிக்கும் முயல்வதில்லை என்ற சூளுரையோடு 1960-இல் சென்ற நான் சூளுரைக்கு மாறாக விண்ணப்பித்தேன். பேட்டியும் நடந்தது பேட்டிக்கு வந்த பலர் "எனக்குத்தான் பதவி" என்று உறுதி கூறினார்கள். குழுவில் இருந்த திரு. நெ.து. சுந்தரவடிவேலும் "வெற்றி" என்று கைகுலுக்கினார் கிடைக்கவில்லை யாரைக் குறை கூறுவது? ஏன் ஊழையே குறை கூறி, அமைதியடைந்தேன் அடுத்த ஆண்டு (1970) டாக்டர் வ.சுப மா அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பதவி ஏற்பதையும் 1970இல் திருப்பதியில் தமிழ் எம் ஏ தொடங்குவதற்குத் தமிழக அரசு மானியம் வழங்குவதையும்[4] யார் அறிவார்கள்? தில்லைச் சிற்றம்பலவனின் அருள் டாக்டர் வ.சுப.மா.வுக்கு இருந்தது வேங்கடவன் தடுத்தாட்கொண்ட திருவருள் எனக்கு இருந்தது என்று கொள்வதுதான் முறை; உண்மையும் அதுதானே! இதன்பிறகு தில்லை நடராசனும், திருப்பதி வேங்கடவனும் எங்கள் இருவரையும் நெருக்கமாக இணையச் செய்தனர். திருப்பதிப் பல்கலைக் கழகத்தில் டாக்டர் வ சுப.மா இல்லாமல் நிகழ்ச்சிகள் நடைபெறுவதில்லை என்பது மரபாகி விட்டது! பருப்பு இல்லாத திருமணமா? என்றாகி விட்டது! ஆனால் எனக்குத்தான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் எந்தவிதமான வாய்ப்புகளும் இல்லாமல் போய்விட்டது தில்லைச் சிற்றம்பலவன் அருள் இல்லை போலும் என்று நினைத்துக் கொண்டேன்

**நினைவு - 8** : தமிழ் எம் ஏ.க்கு "அகத்திணைக் கொள்கைகள்" என்பதை விருப்பப் பாடமாக்கினேன் நான் சங்க இலக்கியங்களில் எம்.ஏ மாணவர்கட்கு அழுத்தமான அறிவு ஏற்படவேண்டும் என்ற அழுத்தமான கொள்கையுடையவன் சங்க இலக்கியங்களில் அழுத்தமான அறிவுயையடவனே சிறந்த புலவன்

4 1969-அக்டோபரில் இரண்டும் கெட்டான் காலத்தில் தமிழக அரசு மானியம் கிடைத்தது அண்ணாமலைப் பதவி எனகககு இலலை என்று தெரிந்த 4 மாத காலத்தில் இது பத்தாண்டுகள் தலைமைச் செயலகத்திற்குக் காவடி எடுத்ததால் ஏற்பட்ட விளைவு கலைஞர் முதல்வராக இருந்த காலத்தில்தான் இது வந்தது

என்பது என் அதிராத நம்பிக்கை. பிற்கால இலக்கியங்களைப் பின்னர் படித்துக் கொள்ளலாம் என்பது என் கருத்து.

"சங்கப் பாடல்களின் தொகை 2381 என்றும், அவற்றுள் அகத்திணை நுதலியவை 1862 என்றும்[5] நாம் அறிவோம். இவற்றைப் பாடிய 473 சங்கச் சான்றோர்களுள் அகம் பாடியவர்கள் மட்டிலும் 378 பேர்களாவர். அகப் பாடல்களின் மிகுதியான எண்ணிக்கையும் அப்பாடல்களைப் பாடியவர்களின் மிகுதியான தொகையும் அகத்திணையின் சிறப்பைப் புலப்படுத்திகின்றன அகத்திணைப் பாடல்களின் தொகையும், பாடினோர் தொகையும் புறத்திணைப் பாடல்களின் தொகையினும் பாடினோர் தொகையினும் மும்மடங்கு மிக்கிருத்தலை நோக்குங்கால், சங்கப் புலவர்கள் அகம்பாடுவதையே சிறந்த புலமை என் மதித்திருந்தனர் என்ற கருத்து வெளிப்படுகின்றதல்லவா?"[6]

இதனால் டாக்டர் வ.சுப.மா. வை அழைப்பித்து அகத்திணைக் கொள்கைகளை மாணவர்கட்கு அறிமுகப் படுத்தவேண்டும் எனத் திட்டமிட்டேன். அதற்காகப் பல்கலைக் கழகத்திற்கு எழுதி அதற்காகும் நிதி உதவியும் கிடைக்கச் செய்து கொண்டேன்.

டாக்டர் வ.சுப.மா. (1) தோழி, (2) தாய், (3) தலைவி என்ற தலைப்புகளில் மூன்று பொழிவுகள் நிகழ்த்தினார். இந்த மூன்று பொழிவுகளும் அக இலக்கியத்தின் உயிர்நாடியையேப் பிடித்துக் காட்டிவிட்டார். ஒவ்வொரு பாடலில் வரும் தோழி, தலைவி, தாய், பாங்கன், பாங்கி முதலியோர் வேறுவேறு என்று எடுத்துக் காட்டி விளக்கினார். இவர்கள் யாவரும் "நாடக வழக்காகக்" கவிஞர்கள் படைத்துக் காட்டும் கற்பனை மாந்தர்கள் என்று எடுத்துக் காட்டினார். தொல் காப்பியத்தில் குறிப்பிடப் பெறும் தோழி, தலைவன், தலைவி முதலியோர் கவிமாந்தர்கள் அல்லர். புலவர்கள் கருத்துகள் (Concept) என விளக்கினார்.

---

5 அகம்-400; குறுந்-401; ஐங்.500, (129, 130 கிடைக்கவில்லை). கலி.149; பரிபா-8, பத்துப்பா-8, ஆகமொத்தம் 1862 ஆனமை காண்க.

6 சுப்பு ரெட்டியார், ந: அகத்திணைக் கொள்கைகள் - பக். 4-5

இக்கூட்டங்கட்கு வேறு துறைகளிலிருந்தும் அறிஞர்கள் செவிமடுத்து மகிழ்ந்தனர். இவர்களில் குறிப்பிடத் தக்கவர் துணைவேந்தரின் துணைவியார் இலக்குமி சகந்நாத ரெட்டியாவார் சாதாரணமாக தமிழ்த்துறை ஏற்பாடு செய்யும் அனைத்துச் சிறப்புக் கூட்டங்கட்கும் இவர் தவறாது வந்திருந்து கேட்டு மகிழ்வார்கள். துணைவேந்தர் டாக்டர் சகந்நாத ரெட்டியின் கிண்டல் பேச்சுகளையும் இவர் பொருட்படுத்துவதில்லை[7]. தமிழ்ப் பெண் அகத்திணைக் கொள்கைகளை அறிந்து கொள்வது பொருத்தமல்லவா?

டாக்டர் மா.வின் பேச்சை என் கருத்துப்படி விளக்கினால் மொச்சை, பயிறு, கொள்ளு, காராமணி, உளுந்து, இவற்றில் உள்ள சத்து புரதமாயினும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையான புரதங்கள் என்று கூறுவேன். இவை அக இலக்கியங்களில் வரும் கற்பனை மாந்தர்கள் போலாவர். அறிவியலறிஞர்கள் உணவு வகைகளில் புரதம் (protein) ஒருவகை சத்து என்று கூறுவது தொல்காப்பியத்திலுள்ள கவிமாந்தர்கள் போலாவர். தொல்காப்பியர் கூறுவன இலக்கணக் கருத்துகள், அறிவியலார் கூறும் புரதம் பற்றிய அறிவியல் கருத்து இவை சிந்தித்து உணர்ந்து அறியப் பெறுபவையாகும். நான் திருப்பதியில் இருந்தவரை அனைத்துக் கருத்தரங்குகளிலும் கலந்து கொள்ள வாய்ப்பளிப்பதுண்டு. பாடத் திட்டக் குழுவிலும் நிரந்தரமாக இருக்கச் செய்தேன். குழுவில் இவர் கூறும் கருத்துகள் உருப்படியானவைகளாக இருக்கும்.

**நினைவு - 9 :** எளிய வாழ்க்கையுடைவர். திருப்பதிக்கு வரும்போது தம் துணைவி ஆச்சியுடன் ஒருமுறை வந்தார்.

7 "ஏண்டி, தமிழ்த்துறைக்கு அடிக்கடி ஓடுகிறாயே என்ன ஆராய்ச்சி செய்கிறாயா?" என்று கிண்டல் செய்யும்போது "ஆமாம்; போகத்தான் செய்வேன். திருப்பதியில் அங்கு மட்டுந்தானே தமிழ் இலக்கியப் பேச்சுகள் நடைபெற்று வருகின்றன? உங்களுக்குச் சுவைக்கத் தெரியாது; சும்மா இருங்கள்" என்று பதில் சொல்வாராம் (டாக்டர். ரெட்டி தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். இடைநிலை வகுப்புவரை தெலுங்கு படித்தவர். சில நுட்பங்கள் புரிந்து கொள்ள முடியும்)

தேவஸ்தான சத்திரத்தில் தங்கும் அறைக்கு ஏற்பாடு செய்தேன். திருப்பதியிலுள்ள கோவிந்தராச சுவாமி, இராமர் கோயில், கபிலதீர்த்தம் முதலியவற்றை அவர்களே பார்த்துக் கொள்ள வசதியாக இருக்கும் பொருட்டுச் சத்திரத்தில் ஏற்பாடு செய்தேன். திருச்சானூருக்கு - அடிக்கடிப் பேருந்து இருப்பதால் அவர்களே சென்று வந்தனர். ஒருமுறை இருவருக்கும் என் இல்லத்தில் விருந்து அளித்தேன். இருவரையும் கல்லூரி வளாகத்தில் பல இடங்களையும் சுற்றிக் காட்டினேன். திருமலைக்கு இட்டுச் சென்று தரிசனம் செய்துவைத்தேன்.

தனியாக வரும்போது எல்லாம் என் இல்லத்தில் தங்கி என் விருந்தினராக வைத்துக் கொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்தேன். தனியாக வரும்போது நானும் திருமலைக்குச் சென்று வருவதுண்டு. தரிசனம் செய்யும் போதும் கோயிலைச் சுற்றி வலம் வரும்போதும் டாக்டர் மா. பேசவே மாட்டார். மனத்தில் ஏதோ இறைவனைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருப்பதாக கருதிக் கொள்வேன். மிக்க பக்தியுடன் வழிபாடு செய்து கொண்டு வருவதைக் கண்டு மகிழ்வேன். பலதடவை வேங்கடவன் வழிபாட்டை மிக்க கருத்துடனும், கவனத்துடனும் செய்து வந்தது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும்.

**நினைவு - 10 :** பெங்களூர், திருவனந்தபுரம் பல்கலைக் கழகங்களில் தமிழ்பற்றிய பாடத்திட்டக் குழுக்களின் கூட்டங்களில் நாங்கள் இருவரும் கலந்து கொள்ளும் சந்தர்ப்பங்களும் இருந்தன பெங்களூரில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்தபோது (1972 என்பதாக நினைவு) அவர் தங்கின எவரெஸ்டு விடுதியில் நடைபெற்ற நிகழ்ச்சி சுவையானது; அருவருக்கத்தக்க சுவையுடையது.அதிகாலையில் சுமார் ஐந்து மணிக்கு இருப்பூர்தியிலிருந்து இறங்கி நிலையத்திற்கு அருகிலுள்ள எவரெஸ்டு விடுதியில் அறையொன்று வாடகைக்கு எடுத்து அதில் தங்குகின்றார். கைப்பெட்டியிலிருந்து பல்பசை, தூரிகை (Brush), சோப்பு இவற்றை எடுத்துக்கொண்டு குளியலறைக்குப் போகத் தயாராகும்போது எதிர் வரிசை அறையொன்றிலிருந்து ஓர்

இளம்பெண் கையைப் பற்றிக் கொண்டு முறுவலிக்கின்றாள் டாக்டர் வ.சுப. மா கையை உதறி சினத்துடன் அவளை நோக்கிக் கடிகின்றார். அவள், "நீ ஓர் ஆண்பிள்ளையா?" என்று கொஞ்சும் பாவனையில் கூறிக்கொண்டு எதிர்வரிசை அறைக்கு ஏகிவிடுகின்றாள் - ஆடும் அரவம் பெட்டியில் புகுந்து கொள்வதுபோல்!

பெங்களூரில் பெரும்பாலான சிறிதும் பெரிதுமான தங்கும் விடுதிகள் இங்ஙனம் விபசார விடுதிகளாகச் செயற்பட்டு வருகின்றன என்பதை திருப்பதியில் பணியாற்றும் நான் நன்கு அறிவேன். திருப்பதியில் என் நண்பர்கள் எச்சரித்தனர். என்னை இருப்பூர்தி நிலையத்திற்கு சுமார் அரை கி.மீ. தொலைவிலுள்ள ஆனந்தராவ் வட்டம் (Ananda Rao circle) என்ற இடத்திலிருக்கும் "மாடர்ன் ஓட்டல்" என்ற விடுதியில்[8] தங்கும்படி பரிந்துரைத்தார்கள். அக்காலத்தில் ஒருவர் தங்கும் (குளியலறையுடன் கூடியது) அறை ஒருநாள் வாடகை ரூ.15/=; குளியலறை இல்லாதது ரூ. 10/= இது தவிர நான்கு அல்லது ஐந்து படுக்கை உள்ள அறை படுக்கையொன்றுக்கு ரூ. 5/= வீதம் தங்கும் வசதியும் இருந்தது. பொதுக் குளியலறையில் வெந்நீர் வசதியுடன் நீராடலாம். பெரும்பாலும், நான் திருப்பதியிலிருந்து முதல்நாள் இரவுக்கு 7 மணிக்கு பெங்களூர் வந்து சேரும் பேருந்தில் வருவேன். மறுநாள்பணியை முடித்துக் கொண்டு இருப்பூர்தியில் காட்டுபாடி வழியாக (வண்டி மாற்ற வேண்டும்) அதிகாலை 5 மணிக்கு வந்து சேர்வதை வழக்கமாகக் கொண்டிருந்தேன்.

நாங்கள் இருவரும் ஆனந்தராவ் வட்டத்திற்கு அருகிலுள்ள (சுமார் அரை கி.மீ. தொலைவு) மகாராணி மகளிர்க் கல்லூரியில் வழக்கமாக நடைபெறும் பாடத் திட்டக் குழுக் கூட்டத்தில் சந்தித்தோம். உள்ளூர் அரசுக் கல்லூரியிலிருந்த (கெம்ப் கைடா சாலையிலுள்ளது) ஒருவரும் புனித சூசையப்பர் கல்லூரியிலிருந்து எங்கள் நெருங்கிய நண்பர் தண்.கி. வேங்கடாசலம் என்பாரும்

8 இங்கு மதிய உணவு மட்டும் உண்டு. சிற்றுண்டி இவ்விடுதிக்கு எதிரிலுள்ள கவிதா என்ற தரமான விடுதியில் கிடைப்பதாக இருந்தது.

வந்திருந்தனர் கூட்டம் வழக்கமாக பகல் ஒரு மணிக்கு முடிந்துவிடும். நாங்கள் அறைக்குத் திரும்பி விடுவோம்.

இந்தக் கூட்டம் முடிந்து அறைக்குத் திரும்பும்போது டாக்டர் வ.சுப.மா மிக்க வருத்தத்துடன் அதிகாலை அநுபவத்தைக் கூறினார். டாக்டர் மா வை. அறைக்குப் போகாமல் என் அறையில் நிறுத்திக்கொண்டேன். தண்.கி.வே யும் எங்களுடன் இருந்தார். மாலை 6 மணிக்குக் கிளம்பும் இருப்பூர்தியைப் பிடிப்பதற்கு முன் டாக்டர் மா. அறையைக் காலி செய்வதற்கு அவருக்குத் துணையாக எவரெஸ்டு விடுதிக்குச் சென்றோம். தரை தளத்திலுள்ள அறைகள் யாவும் குடும்பத்துடன் வருபவர்களுக்காகவும், முதல் தளத்திலுள்ள ஒருவர் தங்கும் அறைகள் யாவும் தனியாக ஒற்றையாக வருபவர்க்குமாக இருந்ததைக் கண்டோம். வரவேற்புப் பகுதியில் கடாமீசை, ஓணான் மீசை, கொடுவாள் மீசையுடன் இரண்டு மூன்று பேர் இருப்பதையும் கண்டோம். இவர்கள் விடுதியார் உடன்பாட்டுடன் மாடியிலுள்ள பெண்கட்குத் துணையாக இருப்பவர்கள் என்று எங்கள் கருத்திற்குப் பட்டது. மகளிர் வேட்டை நோக்கத்துடன் வரும் ஏமாறக் கூடிய இளைஞரை மடக்கி கடிகாரம், பணம் முதலியவற்றைப் பறிப்பவர்கள் இவர்கள் என்றும் எங்கள் மனத்திற்குப் பட்டது. இச்செயல்கட்கெல்லாம் காவல் துறைச் சேவகர்களும் உடந்தையாக இருக்க வேண்டும் என்றும் முடிவுக்கு வந்தோம். "போகாத இடந்தனிலே போக வேண்டாம்" என்ற பாட்டியின் வாக்கை நினைத்துக் கொண்டோம். அடுத்த ஆண்டு முதல் டாக்டர் மா. என்னுடன் தங்க ஏற்பாடு செய்து கொண்டதால் இத்தகைய நிகழ்ச்சிகள் எழுவதற்கே இடம் இல்லாது போயிற்று.

**நினைவு - 11 :** மதுரை சென்னைப் பல்கலைக் கழகங்களில் பிஎச்.டி. பட்டத்திற்குப் பதிவு செய்யும் மாணாக்கர்களைச் சோதிப்பதற்காகவும் வழிகாட்டுவதற்காகவும் அமைக்கப் பெற்றிருந்த மூதறிஞர் குழுக்களில் (Doctoral Committees) நானும் டாக்டர் மா.வும் பலமுறை சந்திக்கும் வாய்ப்புகள் இருந்தன. ஒருமுறை (1973 என்பதாக நினைவு) சென்னை மாநிலக் கல்லூரியில் பணியாற்றிய திரு. வெள்ளையன், திரு முத்துசாமி, திரு நன்னன் ஆகியோர்

பிஎச்.டிக்குப் பதிவு செய்து கொண்டிருந்தனர். இவர்கள் செய்திருக்கும் ஆய்வுப் பணிகளின் முறையைச் சோதிப்பதற்காக நாங்கள் வந்திருந்தோம். திரு. வெள்ளையன் தம் ஆய்வுப் பணிகளை நாங்கள் மனநிறைவு கொள்ளும் அளவுக்குச் செய்யவில்லை. டாக்டர் மா. அவர்கள் சற்றுக் கண்டிப்பானவர் என்பதை அனைவரும் அறிவர். அன்று திரு. வெள்ளையனிடம் "வருகிற கூட்டத்திற்கும் இட்ட பணிகளைச் சரிவரச் செய்யாமல் இன்று வந்தது போல் அரைகுறையாகச் செய்து வந்தால் பதிவைத் தள்ளுபடி செய்யுமாறு பல்கலைக்கழகத்திற்குப் பரிந்துரைக்க நேரிடும்'' என்று சற்றுக் கடுமையாக எச்சரித்தார். இந்த அதிர்ச்சியாலோ, வேறு ஏதோ காரணத்தினாலோ அன்றிரவே திரு வெள்ளையன் காலமானார்.[9] என்று செய்தி திருப்பதிக்கு எட்டியது. டாக்டர் மா.வுக்கும் (அண்ணாமலைநகர்) எட்டியிருக்க வேண்டும். அவரும் மிகவும் வருந்தி இருக்க வேண்டும்.

**நினைவு - 12** : 1976 ஆகஸ்டு திங்கள் திருமலை ஏழுமலையான் சந்நிதியில் என் மணிவிழா அவன் திருமண விழாவாகக் கொண்டாடப் பெற்றது. 1977 செப்டம்பர் 24இல் என் மணிவிழாவைத் திருவேங்கடவன் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையில் மாணவர்களும், ஆசிரியர்களும் கொண்டாடினர். இதனையொட்டி சமயப் பெரியார்கள், பல்கலைக் கழக மானிய ஆணையத் தலைவர், துணைத் தலைவர்கள், துணை வேந்தர்கள், என்னுடைய ஆசிரியர்கள், உச்ச நீதிமன்ற உயர்நீதிமன்ற

---

9 திரு வெள்ளையனின் துணைவியார் திருமதி. சுந்தரி சென்னை - அடையாறு அரசு Polytechnicஇல் முதல்வராக இருந்து ஓய்வு பெற்றவர். இவருடைய பெண் மாதவி எம்.பி.பி.எஸ் ஸுக்கும் புகழ்சான்ற வழக்குரைஞர் V.C. பழநிசாமியின் மகன் V.P. ஆனந்தன் எம்.பி.பி.எஸ்ஸுக்கும் சென்னை குசலாம்பாள் திருமண மண்டபத்தில் 29.8.93 இல் திருமணம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட எனக்கு திரு. வெள்ளையன் ஒளிப்படத்தைப் பார்த்ததும் பழைய காட்சிகள் படலம் படலமாக என் மனத்தில் எழுந்தன அதுவரை மணப்பெண் யார் என்பதே எனக்குத் தெரியாது.

நீதியரசர்கள் அரசியல் தலைவர்கள், என் உயர்நிலைப் பள்ளித் தோழ ஆசிரியர்கள், நண்பர்கள், சான்றோர்கள், திருவேங்கடவன் பல்கலைக் கழகப் பலதுறைப் பேராசிரியர்கள், முன்னைய - அன்றைய மாணவர்கள் - இவர்தம் வாழ்த்துச் செய்திகள் அடங்கிய மலர் ஒன்று பீகார் மாநில முன்னாள் அளுநர் திரு எம். அனந்த சயனம் அய்யங்கார் தலைமையில் வெளியிடப் பெற்றது. டாக்டர் வ.சுப. மாணிக்கம் அனுப்பிய செய்தி :

## அறிவுத் தமிழ்ப் பேராசிரியர்.

"டாக்டர் சுப்பு ரெட்டியார் கல்வித் துறையில் உழைப்பால் உயர்ந்த பேராசிரியர். தமிழோடு, பலதுறையறிவு வாய்க்கப் பெற்றவர் தமிழில் உயரிய அறிவியல் நூல்கள் எழுதி ஆக்கம் செய்தவர். தமிழ் இலக்கண இலக்கியங்களையும் அறிவியல் நோக்கில் ஆய்ந்தவர், அரும் பொருள்களை அயராது எழுதி வழங்கும் ஆற்றலர்.

திருவேங்கடத்துத் திருப்பதி பல்கலைக் கழகத்தில் தமிழை நிறுவி வளர்ப்பதற்கென்றே வந்த பெருந்தகை தமிழ் முதுகலை வகுப்பைக் கொண்டு வந்தும், ஆய்வுத் துறை நிறுவியும் பட்ட ஆய்வாளர்களை உண்டாக்கியும் பன்முறையில் தமிழை அகலமாகவும் ஆழமாகவும் பரப்பியவர்.

சுவைபட உரையாடும் தன்மை வாய்ந்தவர் டாக்டர் ரெட்டியார். மனந்திறந்து உரையாடும் இயல்பினர். எண்ணியதை எதிர்த்தேனும் முடிக்கவல்ல திண்ணியர், மாணவர்பால் நன்மதிப்புக் கொண்டவர். மாணவர்தம் முன்னேற்றமே தம் முன்னேற்றமாகக் கருதுபவர். வள்ளுவர் விரும்பியபடி வாழ்வாங்கு வாழ்ந்துவரும் இல்லறத் தலைமகனார்.

தமிழ் வளர்க்கும் டாக்டர் ரெட்டியார்தம் வாழ்நாள் இருமடங்கு பெருகுக."[10]

---

10 மணிவிழாமலர் - பக் 46

இங்ஙனம் வாழ்த்திய என் அருமை நண்பர், என்னைவிட சில திங்கள் இளையவர் எனக்கு முன் இறைவனடி சேர்ந்தார்.

**நினைவு - 13** : நான் ஓய்வு பெற்றதற்கு (அக்டோபர் - 24, 1977) சற்று முன்னோ பின்னோ டாக்டர் மா. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலிருந்து ஓய்வு பெற்று காரைக்குடி சுப்பிரமணியபுரத்திலுள்ள "கதிரகம்" என்ற தம் குடிலிலிருந்து கொண்டு தமிழ்ப் பணியும், பொதுப்பணியும் ஆற்றிக் கொண்டிருந்தார். நானும் 1978 பிப்பிரவரி 10 முதல் சென்னையில் தமிழ்க் கலைக்களஞ்சிய (இரண்டாம் பதிப்பு) முதன்மைப் பதிப்பாசிரியராகப் பணியாற்றி வந்தேன். மிகச் சிறந்த முறையில் திட்டம் இட்டு சுறுசுறுப்பாக வேலை நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதில் பணியாற்றிய ஒருவர் தொடர்ந்து கோள் மூட்டியதாலும், ஆசிரியர்கள் ஊதியத்தை உயர்த்த வேண்டும் என்று போராடியதாலும் நிர்வாகத்தில் ஆட்டம் கண்டது.

முதலில் என்னை வெளியில் அனுப்பத் திட்டம் இடப்பெற்றது. (பிப்பிரவரி - 1979) எனக்கு அனுப்பிய ஆணையின் தவறுதலைச் சுட்டிக்காட்டியதால் நிர்வாகம் என் பதவியை நீட்டித்தது. அப்பொழுது நிர்வாகத்திற்கு நீண்ட கடிதம் ஒன்று எழுதினேன். அதன் நகல் ஒன்றை டாக்டர் மா.வுக்கு அனுப்பி வைத்தேன். அதற்கு டாக்டா மா. அவர்கள் அனுப்பிய மறுமொழி : "5-2-79 - பேரன்புடைய டாக்டர் ரெட்டியார் அவர்கட்கு; நலம், சென்னை வந்திருந்தபோது ஒரு செய்தி கேள்விப் பட்டேன். கலைக்களஞ்சியத்தில் தங்களின் ஓராண்டுப் பணி அவ்வளவில் முடிவுற்றதாக அறிந்தேன். அன்றே அவருக்கு (திரு. அவினாசி லிங்கம்) நீங்கள் நீண்ட மறுமொழி எழுதியபோது விளைவு சுவைப்படாது என்று எனக்குப் பட்டது. களஞ்சியத்தார் உண்மையாக உழைக்கும் ஒருவரைப் பெற்றும் போற்றிக் கொள்ள வில்லை என்பதும் வருத்தம் தருகின்றது. ஆதலின் அவ்வளவில் அதனை விட்டொழியுங்கள். "பெரிதே உலகம் பேணுநர் பலரே" தங்கட்கு நெடிய தமிழ்ப்பணி உண்டு. உடல் நலத்தைப் போற்றிக் கொள்ளுங்கள் - அன்பன் வ.சுப. மாணிக்கம்."

ஏழுமலையான் திருவருளால் உடல்நலம் நன்கு உள்ளது அவனருளால் ஆய்வுப்பணி எழுத்துப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. "தீதும் நன்றும் பிறர் தரவாரா" என்பது சங்கச் சான்றோர் பொன்மொழி.

**நினைவு-14 :** இறையருளால் டாக்டர் வ.சுப.மாணிக்கத்திற்கு மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் பதவி வந்தது. டாக்டர் மு.வ விற்குப் பிறகு அதன் பன்முக வளர்ச்சியில் இவருக்குப் பெரும் பங்கு உண்டு. வாழ்க்கையில் மிகவும் சிக்கனத்தைக் கடைப்பிடித்த பெருமகன் பல்கலைக் கழக வளர்ச்சியில் பணத்தை வாரி இறைத்தார். கம்ப்யூட்டர், எம்.பி.ஏ., வணிகஇயல், எனர்ஜி போன்ற பல துறைகள் இவர் காலத்தில் உருப்பெற்று வளர்ந்தன. ஆசிரியர்களும் ஊழியர்களும் வீடுகள் கட்டிக் கொள்வதற்குப் பல்கலைக் கழகத்தின் மூலம் கடனுதவி பெற ஏற்பாடு செய்தார். சொந்த வசதிகளில் கவனம் செலுத்தாது பல்கலைக் கழக வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருந்த மு.வ.வுக்கு அடுத்தவராகத் திகழ்ந்தவர் டாக்டர். மாணிக்கம்

அஞ்சல் வழிக் கல்வியில் பாடங்களை அனுப்புவதில் அஞ்சல் விதிகளைக் கவனியாமல் பணம் அதிகமாக விரயம் ஆகிக் கொண்டிருந்தது. அச்சிட்ட படிகளை அனுப்புவதற்குத் தனிச் சலுகை உண்டு. கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்கு சலுகை இருப்பதை அறியாமல் செலவாகிக் கொண்டிருந்தது. டாக்டர் வ.சுப.மா. இதனைக் கண்டறிந்து சரியானை விதியைக் கடைப்பிடிக்கச் செய்தார். இதனால் பல்லாயிரக் கணக்கான வெண்பொற்காசுகள் பல்கலைக்கழகத்திற்கு மீதமாயின. இவர் காலத்தில்தான் மதுரையில் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது.

இவர் காலத்தில் பல்கலைகழத்தில் ஓரிரு பணிகள் இடப்பெற்றன. அவற்றை மனநிறைவுடன் ஆற்றினேன்.

**நினைவு - 15 :** திருப்பதியிலிருந்தபோது மாணவர்கட்காக நடைபெறும் வாராந்திரக் கருத்தரங்குகளில் அக இலக்கியமும் இடம் பெற்றது. மாணவர்கட்காக அக இலக்கியத்தில் பல ஆய்வுக்

கட்டுரைகள் எழுதி அவர்களைக் கொண்டு படிக்கச் செய்தேன் இவற்றையெல்லாம் தொகுத்து வைத்திருந்தேன். ஓய்வு பெற்று சென்னைக்கு வந்தபிறகு காஞ்சி மணிமொழியார் தமிழ்க் கல்லூரியில் (கோடம்பாக்கம்) அக இலக்கியம் பற்றி ஆறு பொழிவுகள் நிகழ்த்தினேன். இவற்றையெல்லாம் தொகுத்து முறைப்படுத்தி **"அகத்திணைக் கொள்கைகள்"** என்ற தலைப்பில் ஒரு பெருநூலாக வெளியிட்டேன்.[11] இந்தப் பெருநூலுக்கு டாக்டர் மா.வின் அணிந்துரை பெற்றேன். அதில் அவர் கூறுவது.

"நண்பர் பேராசிரியர் டாக்டர். ந. சுப்புரெட்டியார் துறை பல வல்ல ஒரு பெருந்தமிழ்ப் பேராசிரியர் என்பதனை நாடறியும். ஐம்பூத நுட்பவியலை அழகான தமிழில் ஆற்றலுடன் எழுதமுடியும் எனத் தமிழின் மொழியாண்மையைக் காட்டி மூன்று பரிசு பெற்றவர் பாட நூலாகப் பழைய அறிவியலை எழுதித் தமிழைப் பிற்படுத்தாமல் புத்தம் புதிய அறிவியற் பிடிப்புகளை வளரும் தமிழில் வரையாது எழுதிவரும் ஆக்க எழுத்தாளர்; இத் தனிச்சிறப்பு இத்தமிழ்ப் பேராசிரியர்க்கே உண்டு.

எழுதுந்துறை எதுவாயினும் அறிவியல் உறவாடுவதை இவர்தம் கைவண்ணத்திற் காணலாம். "அகத்திணைக் கொள்கைள்" என்ற இந்த அகல நூலிலும் அறிவியல் உண்மைகள் படிந்துள கபிலரின் ''குறிஞ்சிப்பாட்டு'' பிறப்பினைக் கூறுங்கால் ''அறிவியலாசிரியர் தாமே தம் செய்திறனால் கருவியொன்று சமைத்துச் சில அறிவியல் மெய்ம்மைகளை விளக்குவதுபோல் ஆசிரியப் பெருந்தகையான கபிலரும் தாமே பாவியற்றி அதனைக் கொண்டே அகத்திணை நெறியின் உயிரணையை கருத்தினை அவ்வரசனுக்குத் (ஆரிய வரதன் பிரகத்தனுக்குத்) தெளிவுறுத்தினார்." என்று உவமங்காட்டுவர். கண்ணும் கண்ணும் சேர்வதால் காமத்தீ பிறப்பதைச் சிக்கிமுக்கிக் கற்கள் இரண்டும் சேர்ந்து தீ உண்டாகும் அறிவியல் கருத்துக்கு ஒப்பிடுவர். ஆண்-பெண் பாலியல்புகளை

11. இந்தப் பெருநூல் வெளியிட ரூபாய் இருபதாயிரத்திற்கு மேல் செலவு. இதற்குத் தமிழக அரசு ரூ. 5000/= நிதி உதவியது

எடுத்துத் தந்து அகத்திணைமைகளை விளக்கும் இடங்கள் இந்நூலில் பல உள இவையெல்லாம் ஆசிரியரின் அறிவியல் பயிற்சியையும் பயன் கோளையும் காட்டுவதோடு கழகச் சான்றோர்களின் இலக்கியப் படைப்புகள் இன்றைய அறிவியலுக்கும் வாழ்வுக்கும் பொருந்துவன என்றும் மெய்ப்பிக்கின்றன.

அகத்திணை ஆய்வு, அறிஞர் ரெட்டியார்க்குப் பழகிய துறையாகும் "தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை", "காதல் ஓவியங்கள்", "முத்தொள்ளாயிர விளக்கம்", "இல்லற நெறி", "கவிதையநுபவம்" என்ற இவர்தம் முன்னைய நூல்கள் இப்பொருள் சார்ந்தன. எனினும் "அகத்திணைக் கொள்கைகள்"[12] என்ற இப்புதிய உரைநடைப் பனுவல் அகவிருவிசும்பு போல அனைத்து அகக் கூறுகளையும் தன்னுள் அடக்கியும் சித்திரக் கம்பளம் போல மடிப்பின்றி வனப்புற விரித்துக் காட்டும் பெரு நூலாகும்.

இந்நூலைக் கற்பவர் தொன்மை முதல் இன்றுவரை எழுந்த அகத்திணைக் கோட்பாட்டின் தொகைகளையும் உடன்பாடுகளோடு மறுப்புகளையும் மறு மறுப்புகளையும் ஒருங்கே கற்கலாம்; சங்க இலக்கியத்தோடு பின் வந்த இலக்கியங்கள் அகத்துறையில் உறவாடுவதையும் வழிமாறுவதையும் கற்கலாம். ஆசிரியர்க்கு அன்பிலும் ஆய்விலும் பிறப்பிலும் ஈடுபாடான ஆழ்வார் பிரபந்தங்களில் அகத்துறைகள் தெய்வச் சாயல் பெறுவதையும் கற்கலாம். "மத்தளம் கொட்ட வரி சங்கம் நின்றூத" என்ற நாச்சியார் திருமொழி தமிழ் நாகரிகத்துடன் காரணச் சான்றாதலையும் காணலாம்.

நூலின் தலைப்புகள் மரபான வரிசையான கோவைத் தலைப்புகளாக இருந்தாலும் ஒவ்வொரு பகுதியின்கீழும் விரிந்த விளக்கமும், பரந்த மேற்கோளும், முரண் அறுக்கும் சான்றும் காலச் சாயலும் நீரோட்டம்போல் தொடர்ந்து வருகின்றன.

"தமிழ்" என்ற சொல்லுக்கு அகத்திணை என்ற பொருள் உண்டெனின், "தமிழன்" என்ற சொல்லுக்கு என்ன பொருள்?

12 கிடைக்கும் இடம் : சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 159, டி.டி.கே. சாலை, சென்னை-600 018.

பாரதத்திற்கே உரிய தனிமலை இமயமலை என்று அறிபவன் "பாரதன்" ஆவான். தமிழுக்கே உரிய தனி இலக்கியம் அகத்திணை என்று அறிபவன் "தமிழன்" எனப்படுவான் தமிழின் பெருமையும் அருமையும் உணர்ந்த புலவர்கள் தமக்காக எழுதுவதில்லை: தமிழர்க்காக எழுதுகின்றனர். பிறப்பால் தமிழர்களைச் சிறப்பாலும் தமிழாக்க எழுதுகின்றனர் இச்சிறந்த நோக்கத்தோடு எழுதிய இனிய பெரிய இந்நூலைக் கற்றுப் பயனடைய வேண்டுகின்றேன். -வ.சுப. மாணிக்கம் மதுரை - 625 021. 7-12-1981

**நினைவு - 16** : டாக்டர் மா. துணைவேந்தர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு காரைக்குடி "கதிரக்கத்தி"லிருந்து கொண்டுதம் வழியில் தமிழ்ப் பணியாற்றிக் கொண்டிருந்தார். நான் சென்னை அண்ணாநகர் "வேங்கடத்தி"லிருந்து கொண்டு என் வழியில் பணியாற்றிக் கொண்டுள்ளேன் எங்கட்குத் தமிழ்ப் பணி என்பது மூச்சை உள்ளுக்கு வாங்கி வெளியிடுவது போல இயல்பாக அமைந்த பண்பு என்பதைப் பலரும் அறிவார்கள்

இந்நிலையில் பாண்டிச்சேரி மத்திய பல்கலைக் கழகம் டாக்டர். வ.சுப.மாணிக்கத்தைத் தலைவராகவும், டாக்டர் ஆறு. அழகப்பன் (அண்ணாமலைப் பல்கலைக்கழகம்), டாக்டர் M. சண்முகம் பிள்ளை (மதுரை), டாக்டர். ந. சுப்புரெட்டியார் (சென்னை), டாக்டர் த. கோதண்டராமன் (புதுவை), திரு. ந சவரிராசன் (புதுவை), புலவர் ஆ. அருணகிரி (புதுவை) என்று அறுவரை உறுப்பினர்களாகவும் கொண்ட ஓர் உயர்மட்டக் குழுவை அமைத்து சுப்பிரமணிய பாரதி தமிழ்மொழி, இலக்கியத்துறை ஆராய்ச்சி மையம் அமைப்புபற்றி ஆழமான - அகலமான திட்டம் ஒன்றை வகுத்துத் தரக் கேட்டுக் கொண்டது. இந்தக் குழு ஏப்பிரல் 4-5 ஏப்பிரல் 25, மே 19-20 (1986) நாட்களில் மூன்று முறை கூடி நான்கு புலங்களையும் (Faculties) பதினேழு துறைகளையும் (Departments) 24 பேராசிரியர்கள், 31 துணைப் பேராசிரியர்கள், 40 விரிவிரையாளர்கள் ஆகியோர் அடங்கிய ஆசிரியர்களையும் கொண்ட திட்டம் ஒன்றைச் சமர்ப்பித்தது. இப்பொழுது தமிழ்

வளர்ச்சி பற்றி டாக்டர் மா கொண்டிருந்த எண்ணங்களை இக்குழு அறிந்து கொள்ள வாய்ப்புகள் ஏற்பட்டன; தமிழ்நாடு, தமிழ்மொழி, தமிழ் இனம், தமிழ் அரசு, தமிழ் சமுதாயம், தமிழ் சமயம், தமிழ் கல்விபற்றிய இவர்தம் சிந்தனைகளை "தமிழ்க் கதிர்" என்னும் நூலில் தெளிவாக விளக்கியுள்ளதைக் காணலாம். பிள்ளையார் சுழிக்குப் பதிலாக "த" (தமிழைக் குறிப்பது) போடும் அளவுக்கு இவர்தம் தமிழ்ப்பற்று முற்றியிருந்தது.

**நினைவு - 17** : இவரால் தோற்றுவிக்கப் பெற்ற தமிழ் வழிக் கல்வி இயக்கம், "எல்லாம் தமிழ், எதிலும் தமிழ்" என்ற கொள்கைகள் போற்றத்தக்கவை செயற்படுத்தினால் அவற்றின் விளைவு - பலன் ஆகியவை தெரியும். இவை மக்கள் இயக்கமாக இருக்கும் வரையில் பெரும் புகழ் தருவதாக இருக்கும். அரசியல் வாதிகள் துணை கொண்டு அரசு இதில் பங்கு கொண்டால் நாட்டில் கொந்தளிப்புதான் ஏற்படும் ஆங்கிலப் பள்ளிகளைத் தமிழ்ப் பள்ளிகளாக மாற்ற வேண்டும் என்று பேசி வரும் போக்கு நன்மை விளைவிப்பதில்லை ஆயிரக்கணக்கான வெண்பொற்காசுகளை நன்கொடையாக வழங்கி "யானைக்குத் தீனி போடுவது போல்" கட்டணம், ஆடையணிச் செலவு, இருப்பூர்திக் கூலியாள்போல் புத்தக மூட்டை - உணவு - குடிநீர் மூட்டை சுமத்தல் போன்ற வீண் வேலைகளைச் செய்யச் செய்யும் பெற்றோர்களை எதிர்த்துப் பயன் என்ன? இத்தகைய பள்ளிகட்கு நடுவண் அரசு அங்கீகாரம் இருப்பதால் அவை மழைகாலத்துக் காளான்கள்போல் எங்கும் தோன்றி வளர்கின்றன எந்தப் பெற்றோரும் தம் பிள்ளைகள் அறிவு பெறுவதற்காகப் படிக்கும் போக்கைக் கருதுவதில்லை. எப்படியாவது நல்ல வேலையில் அமர வேண்டும் என்பதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளனர். இந்த மனப்பான்மையை நல்லமுறையில் பயன்படுத்திக் கொண்டு "வாணிகம்" போல் பள்ளிகளை நடத்தி கோடீசுவரர்களாகின்றனர் என்பதை எல்லோரும் அறிவர். இன்றைய மழலைப் பள்ளிகள் விழலைப் பள்ளிகளாவதைக் காலம்தான் காட்டும். தமிழ்வழிக் கல்வி இயக்கத்தினர் பிரசாரத்தால் மக்களைத் தம் வழிக்குத் திருப்பி தமிழ்ப்பள்ளிகளைத் தோற்றுவித்து சிறப்பாக

நடத்திடக் காட்டுவது அறிவுடைமையாகும். அரசு நடத்தும் பள்ளிகள், கல்லூரிகளில் தமிழ்வழிக் கல்விக்குச் செல்வாக்கு இல்லை என்பது தெளிவு அங்கும் அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளி கல்லூரிகளிலும் கையூட்டால் ஆங்கில வழிக்கல்வி வகுப்புகளில் இடம் பிடிப்பது கண்கூடு. மதிப்பெண் பெறுவதில் பண விளையாட்டால் முறைகேடுகள் "இலைமறை காய்களாக" நடைபெறுவது எல்லோருக்கும் தெரியும் புகைபிடித்தல், மது அருந்துதல் தீமை பயக்கும் என்பதை எல்லோரும் அறிவர். சட்டத்தாலும் கட்டுப்படுத்த முடியாத நிலையாகி விட்டது. இவற்றிற்கெல்லாம் ஆண்டவன்தான் வழிகாட்ட வேண்டும். இந்த விளைவுகளையெல்லாம் எல்லோரையும்போல டாக்டர் மாணிக்கமும் அறிவார். எல்லோரும் விலகியிருக்க, டாக்டர் மாணிக்கமும் அவரோடு இணைந்த ஒரு சிலரும் தாம் பிறப்பெடுத்ததன் பயன் என்று கருதித் தமிழ் வழிக்கல்வியினை ஊக்குவிக்கின்றனர்.

இங்ஙனம் தமிழுக்காகவே வாழ்ந்து, ஒல்லும் வகையெல்லாம் தமிழ்ப்பணியே தெய்வப்பணி எனப் போற்றி வாழ்ந்து காட்டியவர் டாக்டர் மாணிக்கம். நாடு சுதந்திரம் பெறுவதற்காக அமைக்கப் பெற்றது காங்கிரஸ். எத்தனையோ தலைவர்கள் அதில் பங்குகொண்டு பலன் காணாமல் மறைந்தனர். மகாத்மா காந்தி அந்த இயக்கத்தில் பங்கு கொண்டு உழைத்த காலத்தில் சுதந்திரம் கிடைத்தது. அதுபோலத் தமிழ் வழிக் கல்வி இயக்கம் ஒரு காலத்தில் வெற்றி பெறும். தொடக்கக்காலத்தில் பங்குகொண்ட காங்கிரசுத் தலைவர்கட்கு சுதந்திரம் கிடைக்கும் நாள் தெரியாதிருந்தது போல, இப்போது தமிழ். வழிக்கல்வி இயக்கத்தில் உழைப்போருக்கு வெற்றிகிட்டும் நாள் தெரியவில்லை; அவ்வளவுதான்.

இன்னொரு முக்கியமான கருத்து, நம் நாட்டை ஆண்டவர் அந்நியர். வெள்ளையர்; எப்படியோ அவர்களை ஒருவாறு விரட்டிவிட முடிந்தது. ஆனால் ஆங்கிலவழிக் கல்வியை ஆதரிப்பவர்கள் நம்மவர்கள். இவர்கள் மனப்பான்மையை அவ்வளவு எளிதாக மாற்றிவிட முடியாது என்பதைக் கருத்தில்

இருத்திச் சிந்திக்க வேண்டும். தம் காலத்தில் இந்த இயக்கம் வெற்றி பெறாது என்பதை நிலவும் சூழ்நிலை அவருக்கு அறிவித்திருக்கும்.

எத்தனையோ அறிவியல் உண்மைகள் கொள்கை யளவிலேயே உள்ளன. காலப்போக்கில் ஒன்றிரண்டு செயற்பட்டு வருகின்றன. அணுவைச் சிதைக்க முடியாது என்று கருதிய காலமும் ஒன்று இருந்தது. எத்தனையோ ஆண்டுகட்குப் பின்னர் நம் காலத்தில் அணு உடைபட்டது. ஆற்றல் வெளிவந்தது. தொடக்கத்தில் அதன் பலன் அழிவாக இருந்தது; தற்காலத்தில் அணுவாற்றல் வேறு வழிகளில் ஆக்கத்திற்குப் பயன்பட்டு வருகின்றது என்றாலும் இன்னும் ஒரு சில வல்லரசுகள் அணு குண்டுகளைத் தம் கையில் வைத்துக் கொண்டு பூச்சாண்டிக் காட்டி வருகின்றன. - வரம் பெற்ற பத்மாசுரன் "உன் தலையில் கை வைப்பேன்" என்று சொல்லிக் கொண்டு திரிந்ததுபோல!

ஏதோ பல்கலைக் கழகப் பணியாற்றுவதற்குப் புதுச்சேரி சென்றார். எதிர்பாராத வகையில் மாரடைப்பால் காலமானார். "இரட்டைக் காப்பியங்கள்" "எந்தச் சிலம்பு?" போன்ற நூல்களை எழுதியவர்தாம். நுகர்வினை முடிந்தது; மறைந்து விட்டார்

**இதுவென வரைந்து வாழுநாள் உணர்ந்தோர்**
**முதுநீர் உலகில் முழுவதும் இல்லை**[13]

என்று மாடலன் செங்குட்டுவனுக்கு உணர்த்திய உண்மையை அறியாதவரா டாக்டர் மாணிக்கம்? இறைவனின் அவதாரங்கள் கூட சில ஆண்டுகள் உலகில் நடமாடி சில கடமைகளை ஆற்றிவிட்டு மறைகின்றன. நம்முடைய பிறப்பும் இறப்பும் அதுபோலத்தானே.

இன்று வள்ளல் அழகப்பர் இல்லை; மூதறிஞர் டாக்டர் வ.சு.மா.வும் இல்லை. ஆனால் ஆண்டுதோறும் கல்லூரி வளாகத்தில் நடைபெறும் வள்ளலின் பிறந்தநாள் விழாவில்,

13 சிலப். நடுகல்காதை - அடி. 181-82

கோடி கொடுத்த கொடைஞன்; குடியிருந்த
வீடும் கொடுத்த விழுச்செல்வன்; - தேடியும்
அள்ளிக் கொடுத்த அழகன்; அறிவூட்டும்
வெள்ளி விளக்கே விளக்கு[14]

என்ற மாணிக்கனாரின் பாடல் வள்ளலின் புகழை ஒலிபரப்பிக் கொண்டுள்ளது.

*பிறப்பு : 17.04.1917* *சிவப்பேறு : 24.04.1989*

14 கொடை விளக்கு - 17

# பின்னிணைப்பு

## பயன்பட்ட நூல்கள்


| | | |
|---|---|---|
| அதிவீரராம பாண்டியர் | : | **வெற்றிவேற்கை** |
| அருணகிரிநாதர் | : | **கந்தரங்காரம்** |
| ஆழ்வார்கள் | : | **நாலாயிரத்திவ்வியப்பிரபந்தம்** (திரு வேங்கடசாமி ரெட்டியார் பதிப்பு) |
| இளங்கோ அடிகள் | : | **சிலப்பதிகாரம்** (உ.வே.சா.பதிப்பு) |
| இளவழகனார் (பதிப்) | : | **நீதிநூற் கொத்து - II**<br>**நீதிவெண்பா** (கழகம்) |
| ஔவையார் | : | **நல்வழி** |
| கம்பர் | : | **கம்பராமாயணம்**<br>அயோத்தியா காண்டம்,<br>ஆரணிய காண்டம்,<br>சுந்தரகாண்டம், யுத்தகாண்டாம்<br>(வை.மு.கோபாலகிருஷ்ணமாச்சாரியார் பதிப்பு) |
| குமரகுருபரர் | : | **மீனாட்சியம்மை குறம்** |
| குருஞானசம்பந்தர் | : | **சிவபோகசாரம்** |
| சங்கப்புலவர்கள் | : | **குறுந்தொகை** (உ.வே.சா பதிப்பு)<br>**புறநானூறு** (உ.வே.சா.பதிப்பு)<br>**அகநானூறு** |
| சமண முனிவர்கள் | : | **நாலடியார்** |

சுப்பு ரெட்டியார் ந : **மலைநாட்டுத்திருப்பதிகள்**
**அகத்திணைக்கொள்கைகள்**
**பாண்டிநாட்டுத் திருப்பதிகள்,**
**நினைவுக்குமிழிகள் - 4,**
**முத்தொள்ளாயிரவிளக்கம்**

சுந்தர வடிவேலு,நெ து : **நினைவுஅலைகள்** (முதற்பகுதி)

தாயுமான அடிகள் : **தாயுமானவர் பாடல்கள்**

திருவள்ளுவர் : **திருக்குறள்** பரிமேலழகர் உரை

தொல்காப்பியம் : **தொல்காப்பியம் பொருளதிகாரம்** (இளம்பூரணம்)

நாயன்மார் மூவர் : **தேவாரம் அடங்கன் முறை** (சமாஜப் பதிப்பு)

பட்டினத்தார் : **பட்டினத்தார் பாடல்கள்**

பவணந்தி முனிவர் : **நன்னூல் காண்டிகை** (வை.மு.கோ.பதிப்பு)

பாரதியார் : **பாரதியார் கவிதைகள்** (எஸ்.ஆர். சுப்பிரமணிய பிள்ளை பதிப்பு)

பாரதிதாசன் : **புகழ்மலர்கள்**

பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் : **அஷ்டப் பிரபந்தம்** (வை மு கோ பதிப்பு)

மணவாளமாமுனிகள் : **ஆர்த்திப் பிரபந்தம்**

மாணிக்கம், வ சுப. : **கொடைவிளக்கு**

மாணிக்கவாசகர் : **திருவாசகம்** (தருமபுரப் பதிப்பு)

வேதாந்த தேசிகர் : **தேசிகப் பிரபந்தம்**

# பேராசிரியர் டாக்டர்
# ந. சுப்புரெட்டியாரின் நூல்கள்

## ஆசிரியம் உளவியல்:

1 தமிழ் பயிற்றும் முறை

2 கவிதை பயிற்றும் முறை

3. அறிவியல் பயிற்றும் முறை

4. கல்வி உளவியல் கோட்பாடுகள்

5. யுனெஸ்கோ: அறிவியல் பயிற்றும் மூல முதல் நூல் (தமிழாக்கம்)

## இலக்கியம்:

6. கவிஞன் உள்ளம்

7. காலமும் கவிஞர்களும்

8 காதல் ஓவியங்கள்

9. அறிவுக்கு விருந்து

10. முத்தொள்ளாயிர விளக்கம்

11. பரணிப் பொழிவுகள்

12 அறிவியல் தமிழ்

13 திருக்குறள் கருத்தரங்கு மலர்-1974(பதிப்பு)

14. கம்பனில் மக்கள் குரல்

15 காந்தியடிகள் நெஞ்சுவிடு தூது (பதிப்பு)

16 புதுவை(மை)க் கவிஞர் சுப்பிரமணியபாரதியார் ஒரு கண்ணோட்டம்

17 திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்

18 தமிழ் இயக்கியத்தில் - அறம், நீதி, முறைமை

19 பண்பாட்டு நோக்கில் கம்பன் காவியம்

20. அறிவியல் நோக்கில்-இலக்கியம், சமயம், தத்துவம்.

21 இலக்கிய வகையின் வளர்ச்சியும் இலக்கால இலக்கியமும்

22 பாவேந்தர் பாரதிதாசன்-ஒரு கண்ணோட்டம்

23 திருக்குறள் தெளிவு

24 வாய்மொழியும் வாசகமும்

25 பல்சுவை விருந்து

**சமயம், தத்துவம்:**

***(அ) விளக்கநூல்கள்***

26 முத்திநெறி (த அ.பரிசுபெற்றது)

27. சில நோக்கில் நாலாயிரம்

28 வைணமும் தமிழும்

29. சைவமும் தமிழும்

30. சைவசமய விளக்கு

31. ஆன்மிகமும் அறிவியலும்

32. வைணவ உரைவளம் (ஐதிகம், இதிகாசம் சம்வாதம்)

33 கலியன்குரல்

34 கீதைக்குறள் (பதிப்பு)

35 கண்ணன் எழில் காட்டும் கவிதைப் பொழில் (பதிப்பு)

36. ஆண்டாள் பாவையும் அழகுதமிழும் (பதிப்பு)

37 கீதைப் பொழிவுகள்

38. கண்ணன் துதி

39 இராமர் தோத்திரம்

40 முருகன் துதியமுது

41 நவவித சம்பந்தம்

42 திருமழிசையாழ்வாரின் பாசுரங்கள்-ஓர் ஆய்வு (பதிப்

43 திருப்பாவை விளக்கம் (முதற்பகுதி)

44. திருப்பாவை விளக்கம் (இரண்டாம் பகுதி)

45 ஐந்து இரகசியங்கள்

46. அர்ச்சிராதி

47. அர்த்த பஞ்சகம்

## (ஆ) திருத்தலப் பயணநூல்கள்

48. மலைநாட்டுத் திருப்பதிகள்

49 தொண்டை நாட்டுத் திருப்பதிகள்

50. பாண்டிநாட்டுத் திருப்பதிகள்

51. வடநாட்டுத் திருப்பதிகள்

52. சோழநாட்டுத் திருப்பதிகள்-1 (த.அ.பரிசுபெற்றது)

53. சோழநாட்டுத் திருப்பதிகள்-2 (த.அ.பரிசுபெற்றது)

54. தம்பிரான் சோழர்

55. நாவுக்கரசர்

56. ஞானசம்பந்தர்

57. மாணிக்கவாசகர்

## திறனாய்வு:

58. கவிதையநுபவம்

59. பாட்டுத் திறன்

60. கம்பன் படைத்த சிறு பாத்திரங்கள்

61. அகத்திணைக் கொள்கைகள்

62. புதுக்கவிதை - போக்கும் நோக்கும்

63. கண்ணன் பாட்டுத்திறன்

64 பாஞ்சாலிசபதம் - ஒரு நோக்கு

65 பாரதீயம் (த அ பரிசுபெற்றது)

66. குயில்பாட்டு ஒரு மதிப்பீடு

67. உயிர்தந்த உத்தமன் (பதிப்பு)

68. ஆழ்வார்கள் ஆரா அமுது

69. விட்டுசித்தன் விரித்தமிழ்

70. பரகாலன் பைந்தமிழ்

71. சடகோபன் செந்தமிழ்

72. தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை

73. பாவேந்தரின் பாட்டுத்திறன்

74. பாண்டியன் பரிசு - ஒரு மதிப்பிடு

75. புதுக்கவிதையில் கவிஞர் வாலியின் அவதாரபுருஷன்-ஒரு மதிப்பிடு

76. வாழும் கவிஞர்கள்

77. தமிழ்க்கடல் இராய சொ.

**வரலாறு - தன்வரலாறு:**

78. நினைவுக் குமிழிகள் -1

79. நினைவுக் குமிழிகள் -2

80. நினைவுக் குமிழிகள் -3

81. நினைவுக் குமிழிகள் -4

82. நினைவுக் குமிழிகள் -5

83. மலரும் நினைவுகள்

84. நீங்காத நினைவுகள்

85. வேமனர்

86. குரஜாட

87. சி.ஆர் ரெட்டி
88. தாயுமான அடிகள்
89. பட்டினத்தடிகள்
90 வடலூர் வள்ளல்
91. பிரதிவாதி பயங்கரம்
92 கவிமணி-ஒரு மதிப்பிடு

**அறிவியல்:**

93. மானிட உடல்
94 அணுவின் ஆக்கம்
95 இளைஞர் வானொலி
96. இளைஞர் தொலைக்காட்சி
97. அதிசய மின்னணு
98. நமது உடல் (த அ.பரிசுபெற்றது)
99. இராக்கெட்டுகள் (த.அ பரிசுபெற்றது))
100. அணுக்கரு பௌதிகம் (செ ப.க பரிசுபெற்றது)
101. அம்புலிப்பயணம்
102. தொலை உலகச் செலவு
103. தமிழில் அறிவியல் - அன்றும் இன்றும்
104. வாழையடி வாழை
105. அறிவியல் விருந்து (த.வ.க.பரிசுபெற்றது)
106. வானமண்டலக்காட்சி
107. விண்வெளிப்பயணம் (த.அ.பரிசுபெற்றது)
108. தமிழில் அறிவியல் செல்வம்

**ஆராய்ச்சி :**

109. கலிங்கத்துப் பரணி ஆராய்ச்சி
110. வைணவச் செல்வம் - 2 பகுதிகள் (தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு)
111. வடவேங்கடமும் திருவேங்கடமும்
112. Religion and Philosophy of Nalayiram with Special Reference to Nammalvar (S.V. University)
113. Studies in Arts and science (61st Birthday Commemoration volume)
114. Collected Papers.

1

# நீங்காத நினைவுகள்

டாக்டர் ந.சுப்புரெட்டியார்

